# பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
ச. லலீசன்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

## கருத்தரங்கக் கட்டுரைகள்

தொகுப்பு

கலாநிதி மனோன்மணி சன்முகதாஸ்
ச. லலீசன், M.A., M.Ed.

University of Peradeniya
27 JUL 2011
Library

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2010

648883
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண்: 434

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் - கருத்தரங்கக் கட்டுரைகள்
தொகுப்பு: மனோன்மணி சண்முகதாஸ், ச. லலீசன்

பதிப்புரிமை © 2010

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
B 3 - G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு-10, தொ.பே. 0112 421388, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
B 3 - G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு-10

Periyapurāṇam Kāṭṭum Vaḷviyaḷ
Edited by Dr. Manonmani Sanmugadas & S. Laleesan

© 2010

Published by Kumaran Book House
B 3 - G 3, Ramya Place, Colombo -10, Tel. - 0112 421388, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
B 3 - G 3, Ramya Place, Colombo -10

ISBN 978 - 955 - 659 - 248 - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
27 JUL 2011
Library



**சமர்ப்பணம்**

அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை,

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களுக்கு

648883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வுரை

கருத்தரங்கக் கட்டுரைகள் காற்றில் கரைந்துபோகாமல் அச்சில் வெளிவருவதற்கான ஏற்பாடுகளில் யாரும் இறங்குவதில்லை. முனைவர் மனோன்மணி சண்முகதாசு, திரு ச. லலீசன் ஆகிய இருவரும் விதிவிலக்கானவர்கள்.

திங்கள் தோறும், பல்கலைக்கழகம், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் பெருமக்கள் பெரியபுராணம் பற்றிச் சிந்தித்துச் செதுக்கிய கட்டுரைகள் இவை. இக்கட்டுரைகள் மேலோட்டமாக வரையப் பெறவில்லை. பெரியபுராணத்தை மீள்பார்வை செய்து புதிய வெளிச்சங்களைக் காட்டுவதற்காக முனைந்துள்ளவை. தேய்ந்து கொண்டு வரும் பக்தி உணர்வை வலுப்படுத்தவும் சமயம் பற்றி அறிந்து கொள்ளவும் இவை மிகவும் உதவும். வாழும் தலைமுறைக்கும் வளருந்தலைமுறைக்கும் இவை பொலிவூட்டும் என்பது உறுதி.

ஐந்து நாயன்மார்களைப் பற்றிய அருமைமிகுந்த செய்திகளே இக் கட்டுரையின் உள்ளடக்கங்கள். இலக்கியம், சமயம் இரண்டையும் ஒருசேர வழங்கும் இவ்வெழுத்துரைகளைத் தீட்டிய அனைவரும் பாராட்டிற்குரியவர்கள். தொகுப்புப் பணியினைச் சிறப்புற மேற் கொண்ட இருவரும் நன்றிக்கு உரியவர்கள். இதுபோன்று மேலும் பல தொகுப்புகள் வெளிவருதல் நலந்தரும். இனிமையான நல்வாழ்த்துகள்.

*அ. அறிவுநம்பி*
பேராசிரியர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 605 014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழில் எழுந்த புராணங்களில் திருத்தொண்டர் புராணம் தனித்துவச் சிறப்பு வாய்ந்தது. அனுபூதிமான்களின் பக்திச் சுவையை அழகு தமிழில் எடுத்துரைத்த பக்தி இலக்கியம் எனப் இப்புராணத்தை சிறப்பிப்பர். சேக்கிழார் சுவாமிகள் அனுபூதிமான்களின் வரலாற்றை மங்கலச் சொற்களால் பாடி மகிழ்வித்தார். பெரியபுராணம் முழுவதிலும் எந்தவொரு அமங்கலச் சொல்லையும் பயன்படுத்தாது பாடிய தன்மை போற்றுதலுக்குரியது. அடியவர்களின் வரலாற்றைக் கூறிய சேக்கிழார் ஒவ்வொரு இடத்திலும் அற்புதமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தினார். அடியவர்களை ஈரநெஞ்சுடையார் என்றும் 'கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' எனவும் குறிப்பிடும் வார்த்தைகள் அற்புதமானவை. மனையறத்தின் மாண்பினையும் இல்லாளின் இனிய பண்பையும் விளக்க முனைந்த சேக்கிழார் 'மனையறத்தின் வேர் போன்றார்' என மகத்தான வார்த்தையால் எடுத்துரைத்தார். மெய்ப்பொருள் நாயனாரை கொல்ல வந்த முத்தநாதனைக் கூட மிகவும் பக்குவமாக அறிமுகம் செய்தார். மெய்ப்பொருளைக் கொன்றான் என்ற சொல்லை விடுத்து மெய்ப் பொருளை வென்றார் என்று சேக்கிழார் பாடினார். இத்தகைய கருத்துச்சுவை நிறைந்த, கற்பனைக்கு அப்பாற்பட்ட உண்மை வரலாற்றை உலகுள்ளவரை நிலைக்கச் செய்தவர் சேக்கிழார் சுவாமிகள்.

பெரியபுராணத்திற்கு உன்னத மதிப்புக் கொடுப்பவர்கள் ஈழத்துச் சைவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி வாழ்வித்தவர் நாவலர் பெருமான். பன்னிரு திருமுறைகளையும் பாடிப் பரவிப் பயன் சொன்னவர்கள் எம் முன்னோர்கள். நல்லூர் வீதியில் அறுபத்துமூவர் மடம் அமைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது படைத்து குருபூசை வைத்து துதித்தவர்கள் எம் மூத்தோர். அவ்வகையில் பெரியபுராணத்தை எழுத்தெண்ணிக் கற்று வாழும் வழியை வகுத்துக் கொண்ட பாரம்பரியம் வீண்போகவில்லை. கற்றறிந்த சான்றோர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் பெருமுயற்சியால் கடந்த ஆண்டில் இம்மண்ணில் நடைபெற்ற ஆய்வரங்கின் பயனால் இந்நூல் உருவாகப் பெற்றுள்ளது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ் பிராந்திய மண்டபத்தில் இவ் ஆய்வரங்கம் தொடங்கி, புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நிறை வுற்றது. பல ஆய்வாளர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பெரியபுராணத்தைப் பக்திப் பார்வையில், ஆய்வு இலக்கியப் பார்வையில் பலர் நோக்கியுள்ளனர். அவை யாவும் பயனுள்ளவை. பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள் பல நூல்களை ஆராய்வதில், அரங்கேற்றுவதில், மறுபதிப்பு செய்வதில் பெரும்பங்கு வகித்து வருகின்றனர். எங்கள் திருநாட்டில் எமக்குக் கிடைத்த புலமை மிக்க தம்பதிகள் என்றும் தமிழுக்கு அழகு செய்வதில் இவர்கள் காட்டும் ஆர்வம் எல்லையற்றது. இவர்களின் கடின முயற்சியால் உருவாகும் இந்நூல் பக்தி உலகிற்கு, இலக்கிய ஆய்வு உலகிற்கு பெருந்துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவர்கள் பணியை வாழ்த்தி என்றும் இன்பம் பெருக வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

'யாவர்க்குமாம் இன்னுரைதானே'

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
தலைவர், துர்க்காதேவி வேதஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாளர் உரை

இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் வாழ்கிறோம். இன்றைய மனித வாழிடங்களும் வாழ்வியலும் விஞ்ஞானத்தின் வேகத்தாலும் தொழில் நுட்பத்தின் துரிதமான வளர்ச்சியாலும் திசைமாறிவிட்டன. இடப்பெயர்வுகளும் புலப்பெயர்வுகளும் வாழ்வியல் நடை முறைகளையும் மாற்றிவிட்டன. உலகெங்குமே துன்பமும் அவலமும் தொடர்கின்றன. இயற்கையின் சீற்றங்களும் இடையிடையே மக்களை அச்சுறுத்துகின்றன. இந்நிலையில் எதிர் காலம் பற்றிய நம்பிக்கையின்மை எல்லோரிடமும் தோன்றியுள்ளது. குறிப்பாக இளந்தலை முறையினருக்கும் மூத்த தலைமுறையினருக்கும் இடையே வாழ்வியல் நடைமுறைகளைப் பற்றிய கருத்து முரண்பாடும் உருவாகியுள்ளது. இதனால் மனித வாழ்வின் சமநிலை ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

இத்தகைய தளம்பல் நிலை மனிதவாழ்வியலில் முற்காலங்களிலும் ஏற்பட்டுள்ளது. அக்காலங்களில் அதனைச் சீர்செய்வதற்குப் பல முயற்சிகள் நடைபெற்றுள்ளன. பண்பட்ட வாழ்வியல் ஒன்றைப் பயிற்றுவதற்குச் சமயங்கள் தோன்றியுள்ளன. அவற்றைப் பற்றிய செய்திகளை இலக்கியங்கள் பதிவுசெய்துவைத்துள்ளன. அவற்றை இன்று எடுத்துப் படிக்கும் போது எமது முரண்பட்ட வாழ்வியலைச் செம்மைப்படுத்தச் சில வழிமுறைகளைக் காண முடிகிறது. எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கையும் உண்டாகிறது.

சென்ற ஆண்டு இத்தகைய ஒரு நோக்கை இலக்காகக் கொண்டு பெரியபுராணம் என்னும் பேரிலக்கியம் பற்றிய தொடர் கருத்தரங்கு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்ப்பாணக் கிளையினரிடம் கருத்தரங்கம் வைப்பது பற்றிய கருத்தை நாம் முன்வைத்தபோது அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தின் புதிய கட்டிட மண்டபத்தில் 4 கருத்தரங்குகள் நடைபெற்றன. பின்னர் புதிய உயர் கல்லூரி மண்டபத்துக்கு இடம் மாற்றப்பட்டு 2 கருத்தரங்குகள் நடைபெற்றன. இளந்தலைமுறையினரின் நன்மை கருதியே இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டமையால் அவர்கள் பயிலும் தளத்திலே நடத்துவது இன்றியமையாததாக இருந்தது.

கருத்தரங்கின் அமைப்பு, கட்டுரை சமர்ப்பிப்பு, கலந்துரையாடல் என இருநிலைப்பட்டமைந்தது. பெரியபுராணத்தில் பேசப்பட்ட மெய்யடியார்களின் வாழ்வியல் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. முதுமையும் இளமையும் கருத்துப்பரிமாற்றம் செய்யும் ஒரு களமாகக் கருத்தரங்கம் அமைந்தமை சிறப்பாகும். கருத்தரங்கிலே சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுப்பு நூலாக வெளியிடுவது என்ற எண்ணத்தைச் செயற்படுத்துவதில் சற்றுக் காலதாமதத்தை எதிர் கொள்ள நேர்ந்தது. எனினும் கருத்தரங்க உரையைக் கட்டுரை வடிவில் அமைத்து நல்கிய கட்டுரையாளர்கள் நன்றிக்குரியவர்கள்.

இத்தொகுப்பில் 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 5 நாயன்மார்களுடைய வரலாறும் வாழ்வும் ஆராயப்பட்டுள்ளன. சுந்தரர், காரைக்காலம்மையார், திருநீலகண்டர், சிறுத்தொண்டர், கண்ணப்பர் என்னும் ஐவருடைய அன்புநெறி பற்றிக் கட்டுரையாளரின் கருத்துகள் தொகுக்கப் பட்டுள்ளன. 'பெரியபுராணம் காட்டும் இளமை' என்ற கட்டுரை பெரியபராாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இளமை பற்றிய கருத்துகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. புராணங்களின் கட்டமைப்புப் பற்றிய அறிமுகம் ஏனைய கட்டுரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இங்கு இத்தகைய தொகுப்பு நூலின் தேவை பற்றியும் குறிப்பிட வேண்டியது அவசியம் ஆகும். பெரியபுராணம் பற்றிய தேடல் தற்போது பட்டக்கற்கைநெறி என்ற அளவில் சுருங்கி விட்டது. சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றியபோது உலகிற்குப் பொதுவான ஓர் அன்பு நெறியை எடுத்துரைக்க எண்ணம் கொண்டார். அவர் வாழ்ந்த காலமும் சூழலும் அதை அவாவிநின்றன. அத்தகைய ஒரு காலத்தில் நாமும் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் சேக்கிழாரின் இலக்கியத்தை ஒரு மீள்பார்வைக்குட்படுத்துவது பயனுள்ளது. ஆனால் மூல நூலை எல்லோரும் எடுத்துப் படிக்கும் நிலை தற்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. எனவே துணைநூல் என்ற நிலையில் இத் தொகுப்பு நூல் சேக்கிழாரது கருத்துகளை அறியவும் உணரவும் ஒரு வாய்ப்பை நல்குமென நம்புகிறோம். செய்யுள் நடையில் அமைந்த சேக்கிழாரின் பெரியபுராணம் என்னும் பேரிலக்கியத்தைக் கற்க எண்ணும் இளந் தலைமுறைக்கு இத்தொகுப்பு நூல் ஒரு திறவுகோலாக அமையும். மூலநூல்களைப் பெறமுடியாத புலம்பெயர் தமிழர் தலைமுறை களுக்கும் இது ஒரு கையேடாகத் திகழும்.

இத்தொகுப்பு வெளிவர முன்னின்று உழைத்த அனைவரும் காலத்தோடு இயைந்து கடமை செய்தவர்கள். அவர்கள் அனை வருக்கும் எம் சார்பிலும் எதிர்காலத் தலை முறையினர் சார்பிலும் எமது மனமுவந்த நன்றிகள். இத்தொகுப்பு நூலை வெளியிட முன் வந்த குமரன் வெளியீட்டகத்துக்குச் சிறப்பாக நன்றி கூறுகின்றோம். உலகெலாம் உணர்ந்து ஓதும் பெரியபுராணம் இத்தொகுப்பின் மூலம் நினைவுகூரப்படவேண்டும் என்பதே இத்தொகுப்பின் இலக்கு. அதை நிறைவேற்றும் இறைவன் கழல்களில் இச்சிறு நூலைக் காணிக்கையாக்குகிறோம்.

*மனோன்மணி சன்முகதாஸ்*
*ச. லலீசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


மகிழ்வுரை iv

அணிந்துரை v

தொகுப்பாளர் உரை vii

1. பெரியபுராணம் காட்டும் இளமை 1
- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

2. தடுத்தாட்கொண்ட புராணத்தின் கட்டமைப்பு 16
- ஆர். எஸ். சந்திரசேகர்

3. பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் 32
- கலாநிதி என். கிருஸ்ணவேணி

4. காரைக்காலம்மையார் புராணக் கட்டமைப்பு 44
- ச. லலீசன்

5. காரைக்காலம்மையார் புராணத்தில் பெண்மை 58
- விக்னேஸ்வரி பவநேசன்

6. திருநீலகண்ட நாயனார் புராணக் கட்டமைப்பு 79
- சைவப்புலவர் கு. றஜீபன்

7. திருநீலகண்ட நாயனாரும் மெய்யுணர்வும் 105
- நாச்சியார் செல்வநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிறுத்தொண்டர் புராணத்தின் கட்டமைப்பு 120
- செல்வி செல்வஅம்பிகை நடராஜா

9. சிறுத்தொண்டர் புராணத்தில் அன்புநெறி 135
- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

10. கண்ணப்ப நாயனார் புராணக் கட்டமைப்பு 150
- ச. மார்க்கண்டு

11. கண்ணப்ப நாயனார் காட்டும் அன்புநெறி 165
- ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

12. கண்ணப்ப நாயனார் காட்டும் வாழ்வியல் பண்பாடு 183
- கலாநிதி கலைவாணி இராமநாதன்

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாளர்

1. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், முன்னைநாள் ஆய்வாளர், கக்சுயின் பல்கலைக்கழகம், ரோக்கியோ, ஜப்பான்.
2. ஆர். எஸ். சந்திரசேகர், பி.ஏ. (தமிழ் சிறப்பு), ஆசிரியர், யாழ். வேலணை மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
3. கலாநிதி என். கிருக்ஷ்ணவேணி, முதுநிலை விரிவுரையாளர், நுண்கலை / நாடகமும் அரங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
4. ச. லலீசன், எம். ஏ. (தமிழ்), எம். எட்., விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய்.
5. விக்னேஸ்வரி பவநேசன், எம். பில்., முதுநிலை விரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
6. சைவப்புலவர் கு. றஜீபன், எம். ஏ. (சைவசித்தாந்தம்), கலாசார உத்தியோகத்தர்.
7. நாச்சியார் செல்வநாயகம், எம். பில்., முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
8. செல்வஅம்பிகை நடராஜா, எம். பில்., விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
9. ச. மார்க்கண்டு, எம். ஏ. (தமிழ்), ஆசிரியர், டிறேபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.
10. ஈ. குமரன், எம்.பில்., விரிவுரையாளர், தமிழ்த் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
11. கலாநிதி கலைவாணி இராமநாதன், பேராசிரியர், இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# பெரியபுராணம் காட்டும் இளமை

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

### 1. அறிமுகம்

பெரியபுராணம் தமிழ் நாட்டுப் புராணமாகும். திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறுவது. சோழர் காலத்தில் வாழ்ந்த சேக்கிழாரால் இயற்றப்பட்டது. சோழமன்னர்கள் பேரரசு அமைத்து ஆண்ட காலத்தில் சைவசமயம் வளர்ச்சி பெற்றிருந்தது. ஏறக்குறைய நானூறு ஆண்டுக் காலம் அவர்களின் ஆட்சி நடந்தது. அக்காலத்தில் ஏறக்குறைய 70 சிவன் கோயில்கள் தோன்றி வளர்ச்சி பெற்றதாகக் கூறப்படுகிறது. சோழரது ஆட்சி துங்கபத்திரையாறு முதல் கன்னியாக்குமாரி வரை பரந்திருந்தது. பாடல் பெற்ற கோயில்கள் பல இந்நிலப்பரப்புள் இருந்தன. பெறாத பல கோயில்களும் இருந்தன. சோழர் இக்கோயில் களைப் புதுப்பித்தனர். கோவில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. தில்லைச் சிற்றம்பலம் பொன்னால் வேயப்பட்டது. அரசர் முதல் சாதாரண குடிமக்கள் ஈறாக எல்லோருமே கோயிலைப் பேணுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். கோவிலில் விளக்கு எரிக்கவும், பூசை செய்யவும், வழிநடத்தவும் ஏராளமான கொடைகளை வழங்கினர்.

இச்சோழ மன்னர்களில் அநபாயச்சோழன் காலத்தில்தான் பெரிய புராணம் பாடப்பட்டுள்ளது. அக்காலத்தில் சமணசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. அரசனும் சமணக் காவியமான சிந்தாமணியைப் பெரிதும் வரவேற்றான். அமைச்சரான சேக்கிழார் அவனுக்குச் சைவத் தின் பெருமையைப் புலப்படுத்தப் பெரியபுராணம் என்னும் நூலை இயற்றினார். இவருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். இவர் வரலாற்றை அறிய உமாபதி சிவாசாரியார் இயற்றிய 'திருத்தொண்டர் புராண வரலாறு' பெரிதும் உதவுகிறது. புலியூர்க் கோட்டத்திலே குன்றத்தூர் நாட்டிலே குன்றத்தூரிலே வேளாளர் மரபில் சேக்கிழார் குடியிலே அவதரித்த அருண்மொழித்தேவர் இளமையிலே ஆற்றல் பெற்று விளங்கினார். அரசனால் 'உத்தமச் சோழப் பல்லவர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப் பெற்றவர். முதன் மந்திரிப் பதவியையும் பெற்றுக் கொண்டவர். 'திருநாகேஸ்வரம்' என்ற தலத்திலே மிகுந்த ஈடுபாடு பெற்று வழிபட்டு வந்தவர். குன்றத்தூரிலும் ஒரு கோயிலமைத்து அதற்குத் 'திருநாகேஸ்வரம்' எனப் பெயரிட்டிருந்தார். இக்காலத்தில் சிற்றின்பப் பகுதிகள் நிறைந்த 'சீவக சிந்தாமணி' என்னும் நூலை அரசனும் பாராட்டுவது கண்டு அவனை நல்வழிப்படுத்தப் பெரிய புராணத்தை இயற்றினார். சேக்கிழாரின் புலமைத்திறமும் தமிழ்மொழிப் புலமையும் பெரிய புராணத்தைப் பாடுவதற்குப் பெருந்துணையாக இருந்தன.

பெரியபுராணம் இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் கொண்டமைந்தது. 4253 பாடல்களைக் கொண்டது. பாடல்களின் எண்ணிக்கை 4286 என்ற கருத்தும் உண்டு. பிற்காலத்தில் இடைச் செருகல்களாக 33 பாடல்கள் புகுத்தப்பட்டனவென C.K. சுப்பிரமணிய முதலியார் எழுதிய 'சேக்கிழார்' என்னும் நூலில் விளக்கப் பட்டுள்ளது. பெரியபுராணத்தில் பாடப்பட்ட அடியார்களின் தொகை 63 ஆகும். அவர்கள் பற்றிய விபரத்தைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| சமூகநிலை | | மரபுக்கு ஒருவர் |
|---|---|---|
| அரசர் தொகை | 12 | வேட்கோவர் - திருநீலகண்டர் |
| அந்தணர் தொகை | 12 | கண்ணப்பர் - வேடர் |
| வணிகர் தொகை | 06 | ஆனாயர் இடையர் |
| வேளாளர் தொகை | 13 | திருக்குறிப்புத் தொண்டர் - வண்ணார் |
| ஆதிசைவர் தொகை | 04 | அதிபத்தர் - பரதவர் |
| மரபுக்கொருவர் | 10 | நேசநாயனார் - சாலியர் |
| மரபு கூறாதவர் | 06 | நீலகண்ட யாழ்ப்பாணர் - பாணர் |
| | 63 | நந்தனார் - பறையர் |
| | | ஏனாதி நாதர் - ஈழவர்குலம் (சான்றார்) |
| | | சிறுத்தொண்டர் - மாமாத்திரர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகையில் பெண்ணடியார்கள் மூவர் அடங்குவர். இசை ஞானியர், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் என்னும் மூவரும் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். பாடப்பட்ட அடியார்கள் பற்றிய செய்திகளை சுந்தரருடைய திருத்தொண்டத் தொகையிலிருந்தும் நம்பியாண்டார் நம்பியினுடைய திருத்தொண்டர் திருவந்தாதியிலும் சேக்கிழார் பெற்றுள்ளார். அதனால் திருத்தொண்டத்தொகையை முதனூல் எனவும் திருத்தொண்டர் திருவந்தாதி வழிநூலெனவும் கருதப்படுகிறது. மேலதிகமான குறிப்புக்களை மூவருடைய தேவாரங்களிலும் ஏனைய திருமுறைகளிலிருந்தும் பெற்றுள்ளார். மூவரோது திருநெறித்தமிழும் அம்மையாரது அருள் நூல்களும் சேரமான் பெருமாள் நாயனாரது அந்தாதி, உலா, கோவை என்பனவும் ஐயடியார்களது திருவெண்பாவும், திருமூலர் திருமந்திர மாலையும் என்னும் நூல்களும் பெரியபுராணத்திற்கு உறுப்பாகவும் பொருள்கோள் உயிராகவும் விருத்தப்பாடல் உடலாகவும் கொண்டு நாலடியால் உலகெலாம் இந்நூல் நடந்தது என சிறப்பித்துக் கூறுவர்.

**2. வாழ்வியலில் இளமை**

இளமைப்பருவம் மிகவும் முக்கியமான காலமாகும். 12 வயதிற்கும் 36 வயதிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி இளமைப்பருவமாக கணிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்குப் பேதை, பெதும்பை, அரிவை, தெரிவை, மங்கை, மடந்தை, பேரிளம்பெண் என 7 பருவநிலைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இப்பருவங்கள் 7 ஆண்டுகளைக் கொண்டதாகவும் கருதப்படுகிறது. இப்பருவம் தோற்றப் பொலிவால் எல்லோரையும் கவரும் பருவமாகும். காம உணர்வு வெளிப்பட்டு நிற்கும் காலம். துடிப்பும் செயற்பாடும் உணர்வும் ஒருங்கமைந்த நிலை. துள்ளும் இளமை, துடிப்பான இளமை, இனிய இளமை, அழகிய இளமை, பொலியும் இளமை போன்ற தொடர்கள் இளமை யின் வகைப்பாட்டை விளக்கி நிற்கின்றன. இப்பருவத்தில் அறிவை யும் ஆற்றலையும் பண்பாட்டையும் நன்கு இணைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. எனவே இப்பருவத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பல்வேறு சிறப்பான பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. காளை, குமரன், விடலை, இளவல், செல்வன் என்னும் ஆண்பாற் பெயர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி, குமரி. பாவை, செல்வி என்னும் பெண்பாற் பெயர்களும் இதற்கு எடுத்துக்காட்டாக இன்றும் வழக்கிலுள்ளன. மேலும் பெயரிடும் போது 'இளமை' என்ற சொல்லை இணைக்கும் மரபும் இருந்துள்ளது. இளமாறன், இளஞ்சென்னி, இளங்கோ, இளங்கீரன், இளமதி, இளநிலா, இளவேணி, இளம்பிறை, இளங்குமரன், இளங் கதிர், இளஞாயிறு, இளஞ்சூரியன் என்பனவற்றைக் கூறலாம்.

நாவலடியார் என்னும் நூலில் 'இளமை நிலையாமை' என்னும் பகுதியில் இளமைப்பருவம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. பாடல்களுக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களை இங்கு தருவது பயனுடைத்து.

> பதுமனார் விளக்கம் : ஈண்டிளமையாகக் கூறப்படுகின்து குழவியும்
> வளர்ச்சியு மறியாமையு மாகிய பதினாறு வயதுகளுக்கு
> என்றி இதற்குமேல் விஷயங்களிலே மயங்கப் பண்ணும்
> யௌவன பருவத்தைப் போலும், அஃதாவது இந்திரிய கருவமும்
> புறத்தோல் மேலழகாகத் தோற்றப்பட்ட ஒளியும் இளமையும்
> கணந்தோறும் மதிக்கப்பட்டு முப்பத்திரண்டு வயதளவிற்றான்
> மிகுதி குறைந்து வேறுபட்டு வனிதையர்களானும் முதிர்ந்தார்
> எனப்படுதல்.
>
> தருமர் விளக்கம் : பதினாறு வயதுக்குமேல் முப்பத்திரண்டு வயதுக்குள் விடயங்களிலே
> முயங்கப்பட்ட காமக்குழவிப்பருவம். இந்தப்பருவத்திலே
> துறத்தல் பயனுடைத்து.

நாலடியார் இளமையைக் குற்றந்நீராத நிலைபேறற்ற இளமையெனக் கூறுகிறது.

சிறுபஞ்சமூலம் நூலில் இளமைபற்றி வருமாறு கூறப் பட்டுள்ளது.

> வடிவிளமை வாய்த்தவனப்பு வணங்காக்
> குடிகுலமென் றைந்துங் குறித்து - முடியா
> துளங்கா நிலைகாணார் தொக்கீர் பசுவால்
> இறங்காற் றுறவா தவர் (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிச் சாரம் என்னும் நூல் இளமை பற்றி வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

*மின்னு மிளமை யுளதா மெனமகிழ்ந்து*
*பின்னை யறி வென்றல் பேதமை - தன்னைத்*
*துணிந்தாறுந் தூங்கா தறஞ்செய்க கூற்ற*
*மணித்தாய் வருதலு முண்டு (106)*

இந்நூல்கள் இளமையின் நிலையாமை பற்றியே பேசுகின்றன. ஆனால் பெரியபுராணம் இளமையின் சாதனைகள் பற்றியும் ஆற்றல் பற்றியும் விரிவாகப் பேசுகின்றது. சேக்கிழார் காட்டும் இளமையை நான்கு நிலைகளில் வகுத்து நோக்கலாம்.

### 3. சேக்கிழாரின் இளமை நிலை வகுப்பு

#### 3.1. அழகு நிலையில் இளமை

பெரிய புராணத்தில் அமைந்துள்ள தடுத்தாட்கொண்ட புராணம் இளமையில் சுந்தரர் இறைவனால் தடுத்தாட்கொண்ட வரலாற்றைக் கூறுகிறது. திருமணம் நடைபெற இருந்த இளமை நிலையில் சுந்தரரின் அழகுக் கோலத்தின் மூலம் சேக்கிழார் இளமைபற்றிய செய்தியைக் கூறியுள்ளார்.

*'கண்கள் எண்ணிலா வேண்டுங் காளையைக் காண என்பார்'*

என்னும் அடியில் 'காளை' என்னும் சொல் மூலம் சுந்தரரின் இளமைப் பருவம் குறிப்பிடப்பட்டுள்ளது. இளமைக்காலம் கழிய மூப்பும் முதுமையும் ஏற்படும் என்பதை திருநீலகண்டர் நாயனார் புராணத்தில் எடுத்துரைத்துள்ளார்.

*"இளமையின் மிக்குளார்கள் இருவரும் அறிய நின்ற*
*அளவில்சீர் ஆணைபோற்றி ஆண்டுகள் பலவுஞ்செல்ல*
*வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து*
*தளர் வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார் "*

இளமைக்காலத்தின் கழிவால் ஏற்படும் உடல்நிலை மாற்றத்தை இயல்பாக ஏற்படும் மாற்றமான தோற்றத்தை இப்பாடலிலே சேக்கிழார் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையின் அழகுக் கோலங்கள் பற்றிய எண்ணத்தை பரவையார் பற்றிய கோலங்களாக எடுத்து காட்டியுள்ளார். இளமையும் அழகும் இணைந்த நிலையில் பரவையின் தோற்றத்திற்கு ஒப்பான தோற்றத் தைப் பல இளமைத் தோற்றங்களோடு விளக்கியுள்ளார்.

"மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரை இளம் பவள வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கட்கதிரிளங் கொழுந்தோ? காமன்
தானிளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ என்ன."

இப்பாடலில் 'இளம்' என்ற சொல் 8 தடவை பயன்படுத்தப் பட்டுள்ளமை சேக்கிழாரின் நோக்கத்தை நன்கு விளக்கி நிற்கிறது. மானிட இளமை அழகை மட்டுமன்றி அஃறிணைப் பொருட்களின் இளமைத் தோற்றத்தையும் அவற்றின் அழகையும் காட்டுவதற்கும் சேக்கிழார் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தியுள்ளார்.

சுந்தரரும் பரவையாரும் இளமையுணர்வால் தூண்டப்பெற்றுத் திருக்கோயிலில் வழிபடச் சென்ற விடத்து ஒருவர் அழகால் மற்றவர் ஈர்க்கப்பட்டு ஒன்றிய உணர்வில் நிற்கிறார்கள். சுந்தரரது இளமைப் பார்வையில் பரவையார் பற்றிப் பல ஐயங்கள் ஏற்படுகின்றன. அவருடைய மனவோட்டத்தைச் சேக்கிழார் வருமாறு பாடியுள்ளார். சுந்தரர் பரவையாரின் இளமையும் அழகும் கொண்ட தோற்றத்தைக் கண்டு அதிசயித்து நிற்கிறார்.

"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன் தன்பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்றதிசயித்தார்."

சுந்தரது இளமையுணர்வினால் பரவையாரைக் கண்டபோது ஏற்பட்ட வியப்பைப் பாடல் மூலம் சேக்கிழார் நன்கு சித்தரித்துள்ளார். இறைவனுடைய அருளே இவ்வாறு அழகான இளமைக் கோலங் காட்டி நிற்கிறதோ என வழிபாட்டின் சிறப்பின் மூலம் இளமையைச் சுந்தரர் நோக்குகிறார்.

இதே போலச் சுந்தரரைக் கண்ட பரவையாரும் இளமையுணர் வினால் உந்தப்பெற்று நிற்கிறார். அவருடைய எண்ண ஓட்டத்தைச் சேக்கிழார் வருமாறு பாடலில் உணர்த்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ?
என்னே என் மனந்திரித்த இவன் யாரோ என நினைத்தார்."

பரவையாரும் சுந்தரருடைய அழகான இளமைக்கோலத்திற்கு இறையருளே காரணம்; எனக் காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் 'மனந்திரித்தான்' என்ற தொடர்மூலம் இளமை வழிபாட்டு ணர்வில் வழுவி நின்றதையும் பரவையார் வெளிப்படுத்துவதாகச் சேக்கிழார் பாடலைப் புனைந்திருப்பது அவரது இளமை பற்றிய கருத்தை நன்கு உணர்த்தி நிற்கிறது. சுந்தரது உணர்வு நிலை மாற்றத் தின் மூலமே இதனை மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

"பேர் பரவை பெண்மையில் பெரும் பரவை விரும்பல்குல்
ஆர் பரவை அணிதிகழ் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மெய்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என் ஆசை எழுபரவை"

ஆண்களின் இளமைநிலையில் காமத்தின் வெளிப்பாட்டைக் காட்டும் பாங்கினை இப்பாடல் தெளிவாய் உணர்த்தியுள்ளது. 'அல்குல் பற்றிய நினைப்பும் 'ஆசை' பற்றிய குறிப்பும் இதற்குச் சான்றாக உள்ளன.

கண்ணப்ப நாயனார் புராணத்திலே பிறிதொரு இளமை அழகுத் தோற்றத்தைச் சேக்கிழார் காட்டுகிறார். திண்ணனார் என்னும் காளைப் பருவத்தினன் வேட்டைமேற் செல்லும் தோற்றத்தை வருமாறு காட்டுகிறார்.

"நாளில்வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தனையார்
வாளியோடு சாபம்மேவு கையர் வெய்ய வன்கணார்
ஆளியேறு போல ஓடும் அண்ணலார் முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்டம் மிக்குவேல் எழுந்ததே."

இங்கு ஆண்மையின் இளமைத்தோற்றத்தை வினைமேற் செலவின் வைத்துக் காட்டியுள்ளார். கன்னி வேட்டைக்குச் செல்லும் காளையின் வீரத்தோற்றம் இளமையின் இன்னொரு அழகுத் தோற்றமாக உள்ளது.

சம்பந்தரது வரலாற்றைப்பாட வந்த சேக்கிழார் அவரது திருமணக் கோலத்தின் எடுத்துரைப்புமூலம் இளமைக்கோலத்தின் தனித்துவமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகைக் காட்டுகிறார். சம்பந்தருக்குப் 16 வயதிலே திருமணம் நடக்கிறது. திருமணம் என்பது இளமையின் தேவைகளை நிறை வேற்றும் ஓர் இன்றியமையாத சடங்கு என்பதைச் சேக்கிழார் பல பாடல்களில் விரிவாக விளக்கியுள்ளார். திருமணக்கோலம் இளமை அழகை நன்கு வெளிப்படுத்தும் வண்ணம் செய்யப்படுவது. முழுமை யான ஆடை, அணிகலன்கள், மலர்கள் என்பனவற்றால் செய்யும் நிலையைத் தெளிவாக விளக்கியுள்ளார். அழகினுக்கு அணியாம் வெண்ணீறு அணியும் மரபையும் சுட்டிக்காட்டியுள்ளார். பக்தி நிலை யாக இளமையின் திருமணக் கோலத்தைச் சேக்கிழார் காட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆண்களின் இளமைக்கால ஆடை அணிகளைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கும் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

### 3. 2. பெண்மை நிலையில் இளமை

பெண்மை நிலையில் இளமைபற்றிய செய்திகளைச் சேக்கிழார் இருநிலைகளில் வைத்துக் கூறுகிறார். ஒன்று பெண்களுடைய உறவு நிலை. மற்றது பெண்களுடைய தோற்றநிலை. உறவு நிலையிலே மகள், தமக்கை, மனைவி என்கிற உறவுநிலைகளில் இளமை பேசப் படுகிறது. தடுத்தாட்கொண்ட புராணத்தில் புத்தூர் சடங்கவி மகள் இளமைப்பருவத்துக் கன்னியைச் சுந்தரருக்கு மணம் செப்பியதாகச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரின் காளைப்பருவத்திற்கு எற்ற கன்னியையே மணம்முடிக்கின்றனர். இளமையில் பொலியும் இருவரையும் கண்டு ஏனையோர் மகிழ்வதைச் சேக்கிழார் பாடலிற் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"கண்கள்எண் ணிலாத வேண்டுங் காளையைக் காண என்பார்.
பெண்களில் உயரநோற்றாள் சடங்கவிபேதை என்பார்.
மண்களிகூர வந்த மணம் கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவோர் ஆடுவார்கள்."

என இளமை அழகுக் கோலத்தைக் கண்டு எல்லோரும் மகிழ்வதை உணர்த்துகிறார். காரைக் காலம்மையார் புராணத்திலும் இத்தகைய தோர் இளமகளின் திருமணத்தைச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லிகவாப் பருவத்தில் இருக்கும் புனிதவதிக்கு நடந்த திரு மணத்தை

இணரலங்கல் மைந்தனையும் மணவணி எழில்விளக்கி
பனை முரசம் எழுந்தார்ப்ப ............
தளிரடி மென் நகைமயிலைத் தாதவிழ் தார்க்காளைக்குக்
களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணஞ் செய்தார்கள்

மகட்கொடை கொடுத்துத்தன் இளமகளுக்குத் தனதத்தன் திருமணம் செய்து வைக்கிறான்

அடுத்துத் தமக்கை என்ற இளமை உறவு நிலையில் திலகவதி யாரைக் காட்டுகிறார்.

கன்னியைத் திருத்தாதையினரின் மண இசைவு பெற்று கலிப்பைகையார் மணம் முடிக்க ஒழுங்குகள் செய்யப்படுகின்ற வேளையிலே போர்ப்பணிக்காகச் சென்ற கலிப்பகையார் போர்க் களத்திலே இறந்து விடுகிறார். ஆனால் திலவதியாரோ உடன்கட்டை ஏறாமல் தன்தம்பியை வளர்ப்பதற்காகத் துணிவோடு துறவு வாழ்க் கையை மேற்கொள்கிறார். இளமையிலே துறவு பூணும் தமக்கையைத் திலகவதி மூலம் ஒரு புதிய மரபைச் சேக்கிழார் தொடக்கி வைக்கிறார். திலகவதியார் கலிப்பகையார் இறந்த செய்தி கேட்டு உயிர்விடத் துணிகிறார். ஆனால் தம்பி மருணீக்கியாரை வளர்க்கும் கடமை அவர் முன்னே நின்றது. தன் ஆறாத துன்பத்தை அடக்கி இளமையிலே தாய்மையின் கடமையை ஏற்றுப் பணிசெய்கிறார்.

மனைவி என்ற நிலையில் இளமையைத் துறக்கத் துணிந்தவர் திருநீலகண்டருடைய மனைவியாவார். இளமைமிக்க மனைவியை விட்டுப் பரத்தைபாற் சென்ற கணவனை அறிவுறுத்த அவர் மனைவி செய்த சபதம் புதுமையானது. தன்பிழையைப் பொறுத்து மன்னிக்குமாறு திருநீலகண்டர் மனைவியை இரந்தார். அப்போது அவர் மனைவியின் சொல் அவரைத் தடுத்தது.

“மூண்ட அப் புலவி தீர்க்க அன்பனார் முன்சென்று
பூண்டயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார்தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீ ராயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபக்தியாளராய் இருந்தபோதும் பிறர்மனை நயத்தல் என்னும் பெருங்குற்றம் செய்த கணவரைத் திருத்தத் தன் இளமைச் சுகத்தை விடமுடிவு செய்த மனைவியார் இறைவன் பெயராலேயே ஆணை யிட்டுக் கூறினார். கணவனால் அந்த ஆணையை மீறவே முடிய வில்லை.

பெண்களுடைய தோற்ற நிலையிலே இளமைபற்றிச் சேக்கிழார் குறிப்பிடும் போது அவர் பயன்படுத்திய சொற்கள் அவரது தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளன. சில தொடர்களை எடுத்துக் காட் டாகத் தரலாம்.

1. வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடி - பரவை தோற்றம்
2. இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடி - பரவை தோற்றம்
3. தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார். (நீலகண்டர் மனைவி)
4. கற்பின் மேம்படு காதலி விதி மணக்குல மடந்தை (இயற்பகை மனைவி)
5. இல்லிகவாப் பருவம் (புனிதவதி)
6. செந்திரு அனைய கன்னி (சடங்கவி)
7. செம்மலர்மேல் திருவனைய திலகவதி (திலகவதி)
8. பருங்கை யானை வாழ் வளவர்கோன்பாவை (மங்கையர்க் கரசியார்)
9. ஆடும் எயிற்றியர் மகளிர்.

அழகு நிலைப்பட்ட தோற்றங்களே மேற்காட்டப்பட்டுள்ளன. அவரவர் வாழும் பிரதேசத்துக்குரிய பண்பாட்டு நிலையான இளமைத் தோற்றத்தையும் பொலிவு பெறச்செய்தவர்; முக்காலத்தையும் நினைத்து சயமப்பணி செய்த இளைஞர் சோழ நாட்டில் மட்டுமல்லப் பாண்டி நாட்டிலும் சைவசயமத்தை நிலைகொள்ளச் செய்தவர். அவருடைய பணியைச் சேக்கிழார் வருமாறு பதிவுசெய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனால் எற்றைக்குந் திருவருடையேம்
நன்றியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திருநீற்றொளியில்
விளங்கும் மேன்மையுங் படைத்தனம்."

சம்பந்தருடைய இளமை; சமய எழுச்சிக்குப் பணி செய்யும் இலக்குடையதாக இருந்தது. அவர் மன்னனையும் மக்களையும் ஒன்றிணைக்கப் பக்தியை இயக்கநிலையில் பயிற்றினார். இளமையும் முதுமையும் இணைந்து பணியாற்றும் சிறப்பான ஒரு நிலையும் சம்பந்தர் வாழ்வியலூடாக விளக்கப்பட்டுள்ளன. பெரியபுராணத்தில் சம்பந்தருடைய இளமைப்பணியைப் பாடப் பெருமளவு பாடல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 1256 பாடல்களில் சம்பந்தர் வரலாறு பாடப்பட்டுள்ளது. சுந்தரர் வரலாற்றை அவருடைய 'அடியாரைப் பணிதல்' என்னும் புதிய பக்திநெறிக்காக முதன்மைப்படுத்திப் பாடிய சேக்கிழார் சம்பந்தர் வரலாற்றைப் பாடும்போது இயக்க பூர்வமான அவருடைய வழிபாட்டு நடைமுறைக்குத் தனிச்சிறப்புக் கொடுத்துள்ளார். 'பிள்ளைபாதி புராணம் பாதி' என்று சிறப்பித்துக் கூறுமளவிற்குச் சம்பந்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தர் பெரியபுராணம் காட்டும் அடியவர்களில் வயதில் மிகவும் குறைந்தவரானாலும் சைவப்பணியில் உயர்ந்து நின்றவர்.

## 4. சேக்கிழார் இளமை பற்றிய எண்ணம்

பெரிய புராணத்தைப் பாட வந்த சேக்கிழாருக்கு இளமை பற்றிய எண்ணம் தோன்றுவதற்குப் பலநோக்கங்கள் இருந்தன. உலகம் போற்றும் சைவப்பேரிலக்கியம் ஒன்றைப் பாட எண்ணங்கொண்ட அவருடைய மனதில் சமய உண்மைகளை அடுத்த தலைமுறையினருக்குத் தெரிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் வலுவாக இருந்துள்ளது. எதிர்காலத்திலும் சைவப் பணி தொடரவேண்டும் எனவே இளமையையும் இப்பணியில் இணைப்பது இன்றியமையாததாகும். தொண்டு என்பது எந்த வகையிலும் வயதிலும் செய்யக் கூடிய பணியென்பதை எல்லோருக்கும் உணர்த்த விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வியலில் ஏற்படும் முரண்பாடுகளையும் சிக்கல் களையும் சமன்செய்ய இளமையின் பங்களிப்புத்தேவை என்பதை எல்லோருக்கும் உணர்த்துவதும் சேக்கிழாரின் இலக்காக இருந்தது. அதனால் சம்பந்தருடைய வாழ்வியலை மிகவிரிவாகப் பாடினார். அப்பரும் சம்பந்தரும் பக்திநெறியில் ஒன்றுபட்டுப் பணிசெய்தமை ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. முதுமையும் இளமையும் இயக்க பூர்வமாக இணைந்து சைவசமயத்தின் எழுச்சிக்காகப் பிற மதங் களையே எதிர்ந்து நின்றன. அதனால் பிறமதச் செல்வாக்கு வலிகுன்றச் சைவம் மீண்டும் தழைத்தது. தென்னாடுடைய சிவனே எந்நாட்ட வர்க்கும் இறைவன் என்ற கோட்பாடு உருவாகவாயிற்று.

மனித வளர்ச்சி நிலையில் இளமையை ஒத்திசையச் செய்வது நன்றென உணர்ந்த சேக்கிழார் சம்பந்தர், சுந்தரர் பாடியபாடல்களில் நன்கு ஊறித்திளைத்து அப்பணியை எல்லோரும் செய்யவேண்டுமென எண்ணினார். அடியார் பிறந்த நாடுகளை வர்ணிக்கும் போது இயற்கை அழகை நன்கு பதிவு செய்துள்ளார்.

"சீரில் நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப் பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழையாறை"

இப்பாடலில் அமர்நீதி நாயனர் பிறந்த பழையாறை என்னும் ஊரினது இயற்கை அழகு சொல்லப்பட்டுள்ளது. சம்பந்தருடைய பாடல் களிலும் இயற்கை பற்றிய புனைவு இடம்பெற்றிருந்ததைச் சேக்கிழார் படித்துணர்ந்து தனது பெரிய புராணத்திலும் இணைத்துள்ளார்.

அடியார் மரபு பேணல் என்னும் கோட்பாட்டைச் சேக்கிழார் தொடக்கி வைத்துள்ளார். இளமைக்காலம்; அடியார் பற்றியறிய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியமையால் இளம் அடியாரை அறிமுகம் செய்துள்ளார். சமூகக் கடமைகளைச் செய்வதற்கு இளவல்களை இணைக்க எண்ணங்கொண்டுள்ளார். இளமையிலே பக்திநெறி வயப்பட்ட ஒரு வாழ்வியல் தேவை. இளமையில் சமயம் ஒரு வாழ்வியல் என்பதை உணர வேண்டும். சம்பந்தர் பாண்டி நாட்டிலே இளமை வழிநின்று செய்த சமூகப்பணி தனித்துவமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப்பணிநிலையில் சம்பந்தரது தலயாத்திரையின் பெறுபேற்றைப் பாண்டிய மன்னனின் மந்திரியார் குலச்சிறை நன்கு உணர்ந்து கொண்டதைச் சேக்கிழார்

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் ........................."

என்னும் பாடலில் விளக்கியுள்ளார்.

## 5. பெரியபுராணம் காட்டும் இளமையும் எதிர்காலமும்

இளமையின் செல்நெறியைச் சீர்செய்ய வேண்டும் என்ற குரல் உலகம் எங்கும் இன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் விஞ்ஞானத்தின் வேகமாக முயற்சிகளும் கருவிக் கையாட்சியால் இளமையைப் பெரிதும் ஈர்த்து வருகின்றன. கருவிக் கையாட்சியினால் மனிதவிழுமியமும் பண்பாடும் மறக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் முதுமையோடு இளமை பெரிதும் முரண்படும் நிலையும் தோன்றியுள்ளது. பெரியபுராணம் காட்டும் அடியார் பக்திநிலைகளை இளமைப்பருவத்தினர் அறியச் செய்ய வேண்டும். அடியார் வாழ்வில் இளமைக்காலத்தில் ஏற்பட்ட சோதனைகளையெல்லாம் அவர்கள் சாதனையாக மாற்றியதை இளையோர் உணரச் செய்ய வேண்டும். சேக்கிழாரின் பெரியபுராணம் இளமைக்கு இயற்கையாக இரு ஆற்றல்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. அன்பு, தொண்டு என்னும் இருகுண இயல்புகளையும் கொண்டு இயற்கையோடு ஒத்தியைய வாழ்வதே சேக்கிழார் காட்டும் இளமைக்கான பக்திநெறியாகும்.

பிறமதங்களின் செல்வாக்கின் போது அதனைத்தடுப்பதற்குச் சம்பந்தரின் இளமை துணிந்து செயற்படுகிறது. பாண்டிய நாட்டிலே பரமசயத்தவரால் ஏற்பட்ட இடையூறு சம்பந்தர் உயிருக்குக் கேடு விளைவிக்குமோ எனப் பாண்டிமாதேவி அஞ்சுகிறாள். அவளைச் சம்பந்தரது இளமை உள்ளம் தேற்றுகிறது. முனைப்போடு இறை யுணர்வோடு சென்று சமணரை வென்று வருகிறது. இன்றைய இளமைக்கும் இத்தகைய மனஉரம் தேவை. மனம் உரம்பெற இறை வழிபாடு இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரருடைய இளமை தனது சொந்த வாழ்வியல் துன்பந்தீர இறைவழிபாடு செய்கிறது. தான் கேட்டதை இறைவன் உடனே கொடுக்காவிட்டால் நிந்தாஸ்துதி பாடுகிறது. இளமையில் காமத்தை ஆற்ற இறைவனையே தூதுபோக்கும் தோழமை நெறி நிற்கின்றது. உலக இன்பங்களை அநுபவிக்கவும் இருமனைவியை அடையவும் இறைவனே சுந்தருக்கு உதவுகின்றார். தோழனாக இறைவனிடம் எல்லாவற்றையும் கேட்டுப் பெறும் சுந்தரரின் இளமைப்பண்பு உலகில் எங்கும் பரவவேண்டும்.

காரைக்காலம்மையார் புராணத்தில் இளமை வழிபாட்டில் ஏற்படும் சிக்கல் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பெண்ணின் தெய்வீக ஆற்றல் மீது நம்பிக்கை கொள்ளாத ஆண்மையைச் சேக்கிழார் காட்டிப் பெண்மை அதனை வழிப்படுத்தும் தன்மையையும் காட்டி யுள்ளார். இளமையையும் அழகையும் துறந்து பேய்வடிவு பெற்றுத் தன் கணவன் ஒரு மனைவியுடன் இல்லறம் நடத்த வழிவகுத்த அன்புநெறி அற்புதமானது. தெய்வீகத்தை அறியாத இளமையை ஆற்றுப்படுத்தும் புனிதவதியின் ஆற்றல் இறைவனைப் பாடும் பணியாகத் தொடர்கிறது. எதிர்காலப் பக்திநெறியின் போக்கிற்கு வித்திடுகிறது. செய்யுள் மரபை மாற்றிப் புத்திலக்கிய வடிவமாகப் பதிக அமைப்பைக் காட்டுகிறது. பக்தியின் வலிமையை இளமையால் உணரமுடியும் என்பதைக் காரைக்காலம்மையார் புராணத்தில் சேக்கிழார் நிறுவியுள்ளார். அடியார் அன்பு நிலையில் அனைவரும் ஆண் பெண் பேதமின்றி உலகில் மற்றவர் வாழப் பணி செய்யலாம் என்ற கருத்தையே சேக்கிழார் எதிர்காலத்தலைமுறைக்கு எடுத் தியம்பியுள்ளார்.

"மண்ணில் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ணலாரடி யார்தமை யமுது செய்வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனி னுலகர்முன் வருகவென வுரைப்பார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை**

திருத்தொண்டர் புராணம், ம.சுப்பிரமணியபிள்ளை, பதிப்பு, ஸ்ரீவைகுண்டம், 1970.

சுப்பிரமணிய முதலியார், c. k சேக்கிழார், சென்னை, 1933.

ஆறுமுகச் செட்டியர். இ.எம்.சேக்கிழார் விருந்து, சென்னை, 1958.

சீதாலக்குமி, இரா. பெரியபுராணத்தில் உவமைகள், சென்னை, 1988.

கிருஷ்ணன், நாகர்கோயில், அருள்பெற்ற நாயன்மார்கள், சென்னை, 1999.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# தடுத்தாட் கொண்ட புராணத்தின் கட்டமைப்பு

ஆர். எஸ். சந்திரசேகர் பி.ஏ. (தமிழ் சிறப்பு)

இறைவன் தன் அடியார் மீது கொண்ட அளப்பரும் கருணைத் திறத்தினாலே அவர்களை ஆட்கொள்வதனை இந்துசமய இலக்கியங்கள் பலவற்றிலும் காணமுடியும்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
பாட்டுவித்தால் யாரொரவர் பாடாதாரே"

என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு. இதற்கேற்ற வகையில் இறைவனது ஆட்படுத்தலுக்கு அவனது அடியவர்கள் உட்படுத்தப் படுகின்றனர். அடியவர்களின் நிலை, தகுதிக்கேற்ற வகையில் அவர்களைச் சோதனைக்கு உள்ளாக்குவதும், அச் சோதனைகளை வென்று அவர்களைச் சாதனை படைக்கச் செய்வதும் அவனது திருவிளையாடல்களாகப் புராணங்கள் விளம்பிப் பெருமிதங் கொள்கின்றன. இவற்றில் அடியவர்கள் இறைவனை நாடிச் செல்லாமலே இறைவனே அடியவர்களை நாடிவந்து ஆட்கொள்ளும் பெருங் கருணையையும் புராணங்கள் பல இடங்களில் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இச் செயலை,

"நாயே னையுமிங் கொரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டு கொண்டாய்....."

(அபிராமி அந்தாதி - 61)

"தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி......"

(திருவெம்பாவை - 07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன போன்ற பக்தி இலக்கியங்களில் காணப்படும் அடிகள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிட வெளிப்படுத்தி நிற்பதனைக் காண முடிகின்றது.

திருத்தொண்டர் புராணத்திலும் பல இடங்களில் இவ்வாறான ஆட்கொள்ளல் இறை திருவிளையாடலாக நிகழ்த்தப்படுவதைச் சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார். ஒவ்வொரு அடியவரும் ஏதோ ஒரு வகையில் ஆட்கொள்ளப்படுவதனையும் அதற்கெனச் சோதனைகள் வைக்கப்படுவதையும் அடியவர்கள் புடம் போடப்பட்ட தங்கம்போல சோதனைகளைச் சாதனைகளாக்கி மிளிர்வதனையும் அவரவர் புராணங்களில் சேக்கிழார் வெளிப்படுத்தியுள்ளார். ஆளுடைய அரசாகிய நாவுக்கரசரை சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளுதலும், ஆளுடைய பிள்ளையாகிய சம்பந்தரை பால் கொடுத்து ஆட்படுத்தலும்,சிறுத்தொண்டரைப் பிள்ளைக்கறிகேட்டு ஆட்கொள்ளுதலும் என ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் ஆட்கொள்ளப்படுவதனைக் காணலாம். இவை பற்றியெல்லாம் உளம் உருகும் வகையில் கவிபடைத்த சேக்கிழார், அவ்வாறான ஒவ்வொரு நாயன்மார்களதும் வரலாறுகளைக் கூறும்போதும் அவர்களது பெயருடன் புராணம் எனும் சொல்லை இணைத்தே தலைப்பிட்டுள்ளனர். சான்றாக

தில்லைவாழ் அந்தணர் புராணம்
திருநீலகண்ட நாயனார் புராணம்
இயற்பகை நாயனார் புராணம்

என்றவாறே பெயரிட்டு அவரவர் செயற்கரிய செயல்களைப் பாடியருளுகின்றார். ஆனால் சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றைக்கூறும்போது 'சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்' எனக் குறிப்பிடாமல் 'தடுத்தாட் கொண்ட புராணம்' எனப் பெயரை வழங்கி அவர் வரலாற்றை எடுத்தியம்புகின்றார். புராண நாயகராகிய சுந்தரரின் பெயருக்கு முன்னுரிமை வழங்காமல் இறைவனது செயலுக்கு முன்னுரிமை வழங்கிப் பெயரிட்டிருப்பது சிந்தனைக்குரியது. இவ்விடத்திலேதான் சேக்கிழாரின் கூரிய மதிநுட்பத்தை அவதானிக்க முடியும்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் கூற விரும்பியது அடியார் பெருமையே இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்" (பாயிரம் - 05)

எனவும்

"தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்......" (பாயிரம் - 05)

எனவும் பாயிரச் செய்யுள்களில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செயற்கரிய செயற்றிறனையுடைய பெருமைசால் அடியவர் புகழைப் பாடுவதற்கு சேக்கிழாருக்கு உதவிய மூலநூல் சுந்தரரது திருத்தொண்டர் தொகையாகும். ஏனைய நாயன்மார்களின் வாழ்க்கையில் இறைவன் ஆட்கொள்ளல் என்பது அவரவர் சுகதுக்க, இகரபல நலன்களின் பொருட்டாக அமைந்திருக்கச் சுந்தரரை ஆட்கொள்ளல் என்பது பரநல நோக்கான 'திருத்தொண்டர் தொகை' எனும் அரிய நூலை அவர் மூலம் வெளிக்கொணரவேயாகும். இதனைத் தெளிவுபடுத்தச் சேக்கிழார் 'திருமலைச் சிறப்பு' எனும் ஒரு பகுதியை அமைத்து சுந்தரரது முற்பிறவியைக்கூற விழைகின்றார். ஞானசம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர் போன்ற நாயன்மார்களிற்குச் செவிவழி மரபாக வழங்கப்பட்டுவரும் முற்பிறவிக் கதைகள் உண்டெனினும் சேக்கிழார் அவைபற்றிக் குறிப்பிடாமல் சுந்தரருக்கு மட்டுமே முற்பிறவிக் கதையை அமைந்துள்ளார்.

கயிலைமலையில் சுந்தரர் அநிந்திதை கமலினியாரைக் காதல் வசப்பட்டு திருநோக்கம் செய்ததை,

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
திதிலாத் திருத்தொண்டவர் தொகை தரப்
போதுவார்........" (திருமலைச் சிறப்பு - 25)

எனத் திருத்தொண்டர் தொகை எனும் நூலைத் தருவதற்காகவே நோக்கினார் என்கின்றார். இந்நிலையில் இறைவன் சுந்தரரை மண்மீது காதல் இன்பம் கலந்தணைவாய் எனப் பணிக்க,

"செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையன் மானுடமாய் மங்கும் வழி
ஐயனே தடுத்தாண்டருள் செய்" (திருமலைச் சிறப்பு - 25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சுந்தரர் தான் மயங்கும் வேளையில் மண்ணில் தன்னைத் தடுத்தாண்டருள் செய்யுமாறு வேண்டுகின்றனர். இத்தடுத்தாண்டருள் செயற்பாடே உலகம் உய்யவும், சைவம் நின்றோங்கவும் அலகில்சீர் நம்பி ஆரூரர் நிலவு தொண்டர் தம் கூட்டம் பாட உதவியது.

இதனூடாக இறைவனால் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்படுதல் என்பது அவரது குறுகிய சுகநலன்களைச் சார்ந்ததன்று என்பது தெளிவாகின்றது. சேக்கிழாரது பெருநோக்கம்,

இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்போம்
(பாயிரம் - 10)

என மக்களது அக இருளை நீக்கும் திருத்தொண்டர் கதையைத் தருவதேயாகும். எனவே திருத்தொண்டர் புராணத்திற்கு மூலநூலாகிய திருத்தொண்டர் தொகையைச் சுந்தரர் தருவதற்கு நிகழ்ந்த உன்னதமான செயற்பாடே 'தடுத்தாட் கொள்ளப்படுதல்' என்பதாகும். இதனால் அத்திருச் செயலைப் புராணத்தின் தலைப்பாகவும் வைத்துள்ளார்.

தடுத்தாட் கொண்ட புராணம் சுந்தரர் மண்ணில் அவதாரம் செய்தது தொடங்கி திருத்தொண்டர் தொகை பாடப்படும் வரையான 203 திருவிருத்தப்பாக்களால் அமையப் பெற்றுள்ளது. பெருங் காப்பியத்தில் இடம்பெற வேண்டிய பல பண்புகள் இப்புராணத்தில் பரக்கக் காணப்படுகின்றன. சுந்தரரது நிகரில்லாத அழகுநலன், இயற்கை வருணனைகள், சுந்தரரது வளரிளமைக் கோலம், மனைவியல் நடைமுறைகள், முதியவருடனான வழக்காடல், தடுத்தாட் கொள்ளப் படுதல், பரவையார் திருமணம், திருத்தொண்டர் தொகை பாடுதல் என நிகழ்வுகள் கட்டமைக்கப்பட்டு ஒரொழுங்கில் வரிசைப்படுத் தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவற்றில் சில விடயங்களை இவ்விடத்தில் நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தடுத்தாட் கொள்ளலுக்கான களம்**

திருமலைச் சருக்கத்தில் 'மையன் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள்செய்' எனந் சுந்தரர் வேண்டிக் கொண்டதற்கிணங்க தடுத்தாட் கொள்ளலுக்குக் களமாக சேக்கிழாரால் தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதி புத்தூர் சிவாச்சாரியாரின் மகளுடனான திருமண நிகழ்வாகும்.

**திருமணச் சடங்கு முறை**

ஆதிவைச பிராமண குலத்தில் பிறந்த சுந்தரருக்கும் அதே குலத்தில் பிறந்த புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளுக்கும் திருமண நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது. இவ்விடத்தில் அக்காலப்பகுதியில் நிலவிய திருமண நடைமுறையைச் சேக்கிழார் மிக விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

- ★ பொருத்தமான குலம் பார்த்தல் - 'சைவ அந்தணர் குலத்தில் அரும் பெரும் மரபுக்கேற்ப'
- ★ பொருத்தமான பெண்ணைத் தெரிந்து கொள்ளல் - 'செந்திரு அனைய கன்னி மணத்திறம்'
- ★ மணப் பொருத்தம் பார்த்தல் - 'மணம்புரி செயலின் வாய்மை பலவுடன் பேசி'
- ★ மணவோலை மணமகள் இல்லம் அனுப்புதல் - 'கொற்றவர் திருவுக்கேற்ப குறித்த நாள் ஓலைவிடார்'
- ★ திருமண ஓலை ஏற்றல் - 'பங்கய வதனிமாரும் மைந்தரும் பணிந்து கொண்டார்'
- ★ ஆடவர் பந்தற்கால் நடுதல் - 'மைந்தர் ஆண்டி நீள்முளை சாத்தினார்கள்'
- ★ காப்புக் கட்டுதல் - 'பைம்பொன் நாண் காப்புச் சேர்ந்தார்'
- ★ மாப்பிள்ளை உலா - 'பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்'
- ★ மாப்பிள்ளை வரவேற்பு - 'மறையவர் மடவார் வள்ளல் மணம் எதிர் கொள் வந்தார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாப்பிள்ளை திருமணப் பந்தலை அணுகும் வகையான திருமணச் சடங்குகள் ஒழுங்குமுறையில் கூறி, கற்பவர் மனதில் அவை பற்றிய காட்சிப் படிமத்தை ஏற்படுத்துகின்றார்.

**சுந்தரர் தோற்றப்பொலிவு (மணக்கோலம்)**

தடுத்தாட் கொண்ட புராணத்தின் முதன்மைப் பாத்திரமாக சுந்தரர் விளங்குவதனால் அவரது தோற்றப் பொலிவை மிக நயம்பட அற்புதமாகப் பாடியுள்ளார்.

"தேமருந் தொடையல் மார்பன் திருமணக் கோலம் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான்"
(த. கொ. புராணம் - 13)

எனச் சூரியனே சுந்தரர் மணவாளக் கோலத்தைக் காண ஆசையுற்று வந்ததாகக் கூறி சுந்தரர் நீராடுவதற்காக திருமஞ்சனச்சாலை சென்றது முதல் அவர் நீராடி அலங்காரம் செய்தது வரையான பகுதியை 5 பாடல்களால் விபரித்துள்ளார். தொடர்ந்தும் காணவரும் மக்களின் மன உணர்வுகளினூடாகவும் உரையாடல்களினூடாகவும் அவரது திருக்கோலப் பொலிவை விவரணப்படுத்தி உள்ளார்.

"கண்கள்எண் ணிலாத வேண்டுங் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூரவந்த மணம்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களி நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள்."
(த.கொ.புராணம் - 25)

எனவும்,

"ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம் என்பர்
தாண்டியும் பரியும் நம்பால் தகுதியின் நடந்த தென்பார்
பூண்தயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்ன இசையச் சென்றார்."
(த.கொ.புராணம் - 26)

எனவும் திருமணப் பந்தல் செல்லும் நாவலூரின் வருமணக் கோலத்தைப் பார்த்து மக்கள் வாயாரப் புகழ்தலை எடுத்துக் காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியப் புனைவிற்கே உகந்ததான தலைவனது அழகு நலன்கள், அவன் செல்லும் உலாத்திறன்கள் என்பன இப்பகுதியினூடாக உணர்த்தப்படுவதனை அவதானிக்கலாம்.

**தடுத்தாட்கொண்ட வேதியரின் தோற்றப் பொலிவு**

வேதங்களால் சூழப்பெற்றிருந்த திருக்கயிலைமலையில் முன்னர் சுந்தரருக்கு அருள்புரிந்த திருமொழியின் பிரகாரம் அடிமை கொள்வ தற்காக, மாலயனுக்கும் அரியவரான சிவபிரான் முதியவராக வந்த திருக்கோலத்தைச் சேக்கிழார் உணர்வுபூர்வமாக நன்கு பாடல்களில் பயன் கொண்டுள்ளார்.

நம்பியாரூரை ஆட்கொள்வதற்காக வயோதிப வேதியராக வந்தவர் சிவபிரான் என்பதனால் சிவபிரானின் தோற்றப்பொலிவு முதிய வருக்குரிய வேடமாக மாறிய அழகை,

"கண்ணிடை கரந்த கதிர் வெண்படம் எனச் சூழ்
புண்ணிய நுதல் புனித நீறுபொலி வெய்த......"

(த.கொ. புராணம் - 29)

என நெற்றிக்கண்ணின் ஒளி வெண்ணீறாக விளங்க திருச்சடைமேல் பொலியும் இளம்பிறை முதிர்ந்து பூரணனாகி நிலாக்கதிர் சாய்வது போல தலையில் உள்ள நரைமயிர் சாய்ந்து வாரி குடுமியாக முடிந்ததும் அக்குடுமி கழுத்திடை அசைந்தாடவும் காதில் அணியப்பெற்ற உருத்திராக்கம் ஆகிய குண்டலம் தாழ்ந்திடவும், பூணூலுடன் தோளின்மேல் அணிந்த உத்தரியமாய் வெள்ளை ஆடை சாய்ந்தசை யவம், வெயிலை மறைத்தபடி குடையைத் திருக்கரத்தில் ஏந்தியும் வயிற்றில் சரிந்து சிறிது நழுவும் பழைய கோவண உடையுடனும் கச்சை போன்ற சலுங்கல் உடையும் அணிந்து வெள்ளை ஆடையுடன் தருப்பையும் சேர இணைத்து முடித்துள்ள மூங்கில் தண்டு ஒரு கையில் கொண்டு வயது முதிர்ச்சியால் திருப்பாதங்கள் நடை தள்ளாட நெருங்கி வளரும் பெரிய அழகு முதுமை அடைந்ததோ அல்லது மூப்பு என்பதன் இயல்பு வருமோ? அல்லது வைதிகம் தனது உண்மைக் கொள்கை காட்டவிளைந்த வடிவமோ? எனக் காண்போர் சந்தேகம் கொள்ளுமாறு முதிய பிராமணக் கோலத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார் எனச் சிறப்பாக உயிரோட்டமாக வருணித்துள்ளார். இவ்வாறு வருணிக்கும் போது,

காதிலணி கண்டிகை வடித்தகழை தாழச்
சோதிமணி மார்பன் அசை நூலினொடு தோளின்
மீது புனை யுத்தரிய வெண்டுகி னுடங்க
ஆதப மறைக்குடை யணிக்கரம் விளங்க

(த.கொ. புராணம் - 30)

என வயோதிபர் நடக்கும் போதுண்டாகும். தள்ளாடலுக்கு ஏற்ற தாள இசையில் பாடலை அமைத்துள்ளமை சேக்கிழாரின் நுண்மையான இசைசார்ந்த உணர்வுத்திறனை வெளிப்படுத்துகின்றது.

**புத்தூர் சிவாச்சாரியார் மகள் பற்றிய வருணனை**

மணமகனாகிய சுந்தரர் பற்றியும், மணநிகழ்வைத் தடைசெய்ய வந்த சிவவேதியர் பற்றியும் விரிவாகப் பாடிய சேக்கிழார் மணப்பெண்ணாகிய புத்தூர் சிவாச்சாரியாரின் மகள் பற்றி பெரிதாக வருணிக்கவில்லை. பொதுவாகப் பெரியபுராணத்தில் வரும் ஒரு சில நாயன்மார்களின் மனைவிகளைத் தவிர ஏனையோரின் பெயரைச் சேக்கிழார் குறிப்பிடவில்லை. இது சிவாச்சாரியாரின் மகளுக்கும் பொருந்தும். எனினும் மணமகள் என்ற வகையில் அவர் பற்றிய குறிப்புக்களை சேக்கிழார் ஏன் தரவில்லை என்பது பெரிய கேள்வியாகும்.

மணமகன் பற்றிய விரிடான வர்ணனைகளைக் கூறிய சேக்கிழார் முன்பகுதியில் மாத்திரம் மணம்பேசும் போது,

"புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி" (த.கொ. புராணம் 07)

எனவும், இறுதியில் திருமணம் தடைப்பட்ட பிற்பாடு,

"புத்தூர் சிவவேதியன் மகளும்........
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம் பெற்றாள்"

(த.கொ. புராணம் - 77)

எனச் சுந்தரரைத் தியானித்து வரும் வழிபாட்டில் சிலகாலத்தில் சிவலோகம் வாய்க்கப் பெற்றாள் எனவும் கூறப்படும் பகுதிகளில் மட்டுமே இவளைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சேக்கிழார் மணப்பெண்ணிற்கு முன்னுரிமை கொடுத்து வருணிக்காமைக்கு முக்கிய காரணம் உண்டெனவே தோன்றுகிறது. சுந்தரரைப் போலவோ, சிவவேதியரைப் போலவோ இப் பெண்ணையும் விரிவாக வருணித்திருந்தால் அவை வாசகனிடத்தில் இவள் பற்றிய அனுதாப உணர்வினையும், காவிய நாயகன் சுந்தரர் மீதும் இறை வேதியர் மீதும் அதிருப்தியையும், மனக்கிலேசத்தையும் தோற்று வித்திருக்கும் என்பது உண்மையாகும். இவ்வாறான உணர்வுநிலை வாசகனிடத்தில் ஏற்படுமேயானால் புராணத்தின் மகிமையும் நோக்கமும் கெட்டுவிடும். இவற்றினைக் கருத்திற் கொண்டே மிக நாகரிகமாகச் சடங்கவியின் பேதை பற்றிய விபரிப்பைத் தவிர்த்து விட்டார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**சுந்தரர் வேதியர் வழக்காடல் அமைப்பு**

திருத்தொண்டர் புராணத்தில் ஐந்து வழக்குகள் பேசப்பட்டுள்ளன.

1) மனுநீதிச் சோழன் மகன் மீதான பசுவின் வழக்கு
2) திருநீலகண்டரின் திருவோட்டு வழக்கு
3) தண்டியடிகளின் சிவன்கோவிலைச் சுற்றியிருந்த சமயர்கள் மீதான நில ஆக்கிரமிப்பு வழக்கு
4) அமர்நீதியாரின் கோவண வழக்கு
5) தடுத்தாட் கொண்ட புராண அடிமை வழக்கு

பொதுவாக வழக்குகள் உரிமை வழக்கு, குற்ற வழக்கு என இரண்டு வகைப்படும். இவற்றுட் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இடம்பெறும் வழக்கு உரிமை வழக்காகும். வேதியர் உருவில் வந்த இறைவன், சுந்தரர் மீதான தனக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்காகத் தொடுத்த வழக்காகும். தடுத்தாட்கொண்ட புராணத்தின் உயிர்ப்பான பகுதியாக அமைவதே இவ்வழக்காடலாகும். சேக்கிழார் சோழ அரசவையில் முதலமைச்சராக இருந்தவர் என்பதனால் பல வழக்கு களைக் கண்ட அனுபவம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். அவ் அனுபவப் பின்னணியில் இவ்வழக்காடல் பகுதியை மிக நுட்பமாக அமைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வழக்கினை முன்வைத்தல் : வழக்கினை தொடர்பவரே வழக்கு எதுபற்றியது என்பதனை முன்வைக்க வேண்டும். இந்த வகையில் இறைவேதியரும் 'என்னிடையும் நின்ன டையும் நின்ற இசைவால் யான் முன்னுடையதோர் வழக்கினை முடித்தே.......' என வழக்கினை முன் வைப்பதனைக் காணலாம்.

2) சபையோரை விளித்து அவர்கள் முன்னிலையில் வழக் கினைக் கூறல் : சபையில் உள்ள பெரியவர்களை நோக்கியே வழக்கினைக் கூறல் வேண்டும். இங்கு இறைவன் 'ஆவதிது கேண்மின் மறையோர்' என அந்தணப் பெருமக்களை நோக்கி விளித்து வாதாடுகின்றார்.

3) தான் யார் என்பதனை உரைத்தல் : வழக்கினைத் தான் யார் என்பதனைப் புலப்படுத்த தனது இடம், ஊர், பெயர், குலமரபுகளைக் கூறல் வேண்டும். அந்தணர்கள் 'எங்குளீர் செப்பும்' எனக் கேட்க, 'இங்குளேன் இருப்பும் சேயது அன்று இந்த வெண்ணெய் நல்லூர்' என இறைவன் கூறுகின்றார்.

4) வழக்கின் தன்மை / குற்றம் கூறல் : மேற்கூறியவை முடிந்தபின் வழக்கு எதுபற்றியது என்பதனை முன்வைக்க வேண்டும். இந்த வகையில் இறைவனும் 'என்னடிமை இந்த நாவல் நகரூரான்' என அடிமை வழக்கினை முன் வைக்கின்றார்.

5) குற்றம் சுமத்தப்பட்டவர் தன் பக்க நியாயம் கூறல் : மன்றில் குற்றம் சுமத்தப்படும்போது குற்றம் சுமத்தப்பட்டவர் தன்பக்க நியாயத்தை எடுத்துரைப்பதற்கு அனுமதியுண்டு 'என்னைத் தனக்கு வேறடிமை என்றில் அந்தணன் சாதித் தானேல் மனத்தினால் உணர்தற் கெட்டா மாயை' எனச் சுந்தரர் கூறுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

6) சான்று காட்டல் : வழக்கினைத் தொடர்பவர் எதிர்வாதி, குற்றவாளி என்பதனை நிரூபிப்பதற்கு போதியதான சான்று களை முன்வைக்க வேண்டும். அதுவே மன்றில் ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
643383

கொள்ளப்படும். தடுத்தாட் கொண்ட புராணத்தில் மூவகைச் சான்றுகள் கூறப்பட்டுள்ளன. "ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள் சாட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" எனச் சபையோர் கேட்கின்றனர். இதன்படி ஆட்சிச்சான்று, ஆவணச் சான்று, சாட்சிச் சான்று எனச் சான்றுகளை மூவகைப்படுத்தலாம். இப்புராணத்தில் ஓலையாகிய ஆவணச் சான்று காட்டப்படுகின்றது.

7) தீர்ப்பிற்குக் கட்டுப்படல் : வழக்கினைத் தீர விசாரித்த பின் வழங்கப்படும் தீர்ப்பிற்கு இருசாராரும் கட்டுப்பட வேண்டும். "நான்மறை முனிவனார்க்கு நம்பியாரூர் தோற்றீர் பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என நீதியுரைக்க, ஆரூரர் "விதிமுறை இதுவே ஆகில் யான் இதற்கு இசையேன் என்ன இசையுமோ" என மேன்மையோர் தீர்ப்பிற்கு உடன்படுகின்றார்.

இவ்வாறு தடுத்தாட்கொண்ட புராணத்தில் இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொள்ளும் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடலைச் சேக்கிழார் அதியற்புதமாகக் கட்டமைத்துள்ளார். இவற்றினூடாகச் சோழர் காலத்தில் நிலவிய சட்ட நுணுக்கங்களையும், நீதி பரிபாலன முறைகளையும் பதிவு செய்தருளியுள்ளார்.

**சுந்தரர் பரவையார் திருமணம்**

சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்தில் சுந்தரரின் அவதாரம், புத்தூர் சிவாச்சாரியாரின் மகளுடனான திருமணம், வழக்காடித் தடுத்தாட்கொள்ளல் என ஒவ்வொரு படிநிலையாகச் சம்பவங்களை அடுக்கி வந்தவர் சுந்தரருக்கும் பரவையாருக்கும் இடையிலான காதலையும் அதன் பின்னராக ஏற்படும் திருமண உறவினையும் சிலாகித்துப் பாடியுள்ளார். ஆதி சைவ உயர்குடியில் தோன்றிய பெரு மகனாகிய சுந்தரமூர்த்தி நாயனார் கணிகையர் குலத்தில் தோன்றிய பரவையாரைத் திருமணம் செய்தலென்பது அக்காலச் சூழலில் பெரும் சமூகப் புரட்சியாக சாதிச் சழக்கைக்களையும் செயலாகவும் அமைந்திருக்கும். அனைத்து மக்களையும் எவ்வித ஏற்றத்தாழ்வு மின்றி, சிவத்தொண்டர் என்னும் ஓரணியில் வைத்து ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும் உளப்பாங்குடைய சேக்கிழார் இப்பகுதியை வெகு நயம் படப் படைத்துள்ளார்.

நம்பியாரூரும் பரவையாரும் திருவாரூர் பூங்கோயிலில் ஒருவரை யொருவர் கண்டு காதல் கொள்கின்றனர். இச் சம்பவத்தைச் சேக்கிழார் வெறும் உடலியல் சார்ந்த காமத்தை மையப்படுத்தியதான விரச முடையதாகக் காட்சிப்படுத்த விரும்பவில்லை. இவற்றினூடாக தெய்வீக உணர்வு சார்ந்த சிவானுபவத்தையே தருகின்றனர். சுந்தரர் பரவையாரைக் காணும் போது,

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார்

(த. கொ புராணம் - 140)

பரவையார் சுந்தரரைக் காணும்போது,

முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னோர் செஞ்சடையண்ணல் மெய்யருள் - பெற்றுடையவனோ
என்னே என்மனந் திரிந்த இவன் யாரோ என நினைத்தார்

(த. கொ. புராணம் - 144)

என இருவரது உணர்வு நிலைகளையும் முன்வைக்கின்றார். இங்கு சுந்தரருக்கு பரவையார் பூங்கொம்பு, காமன்தன் பெருவாழ்வு, புண்ணியத்தின், புண்ணியம், விரைக்கொடி எனப்பல வகையில் தோன்றினாலும் இறுதியில் 'சிவனருளோ' என்றே அதிசயிப்பதாக முடிந்த முடிவாகக் கூறுகின்றார். இதுபோலவே பரவையாருக்கும் சுந்தரர் முருகன், மன்மதன், விஞ்சையன். எனத் தோன்றினாலும் இறுதியில் 'மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்ற வனாகவே' காட்சி தருகின்றார். எனவே இவருவரது மனநிலையை யும் சிற்றின்பத்திற்கும் அப்பால் இறையருள் சார்ந்ததாக விளங்கு வதனைக்காண முடிகின்றது. தோழி பரவையாருக்கு சுந்தரர் பற்றியதாக அறிமுகத்தைச் செய்யும்போது கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே
டொருவர் தாம் எதிர்நின் றாண்ட
வைமுதல் திருத்தொண்டர் தம்பிரான்
தோழனார் நம்பி

(த. கொ. புராணம் - 171)

என இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் என்பதனையும், சைவமுதல் திருத்தொண்டர் என்பதனையும் முதன்மைப்படுத்தியே கூறுகின்றார். பரவையாரின் காதல் வசப்பட்ட நிலையையும், சுந்தரது அத்தகு நிலையையும் பல பாடல்களில் புனைந்துள்ளார். தமிழில் தோன்றிய புராணங்களில் பெரும்பாலானவை காவியமரபு சார்ந்தே தோன்றியுள்ளன. இந்தவகையில் காவிய மரபுக்கே உரித்தான தலைவன் தலைவியரது காதல் பரவச நிலையினைச் சேக்கிழாரும் தனது புராணத்தில் உள்வாங்கியிருக்கின்றார். ஆயினும் அவர் தனது பேரறிவுத் திறத்தினால் சுந்தரர் பரவையாரிடம் அனுபவித்த இல்வாழ்க்கை இன்பத்தை,

"பன்னாளில் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார்"

(த. கொ. புராணம் - 181)

என யோகநிலையில் வழுவாது வாழ்ந்தார் என்றே சுட்டுகின்றார். கயிலையில் பிரித்து வைத்த இறைவனே மண்ணில் மின்னிடையாள் உடன்கூடி விளையாடச் செல்லும் வகையில் இருவரையும் சேர்த்து வைத்துள்ளார். தடுத்தாட் கொண்ட புராணத்தில் வரும் இப் பகுதி காவிய வனப்புக்கள் நிறைந்த அழகிய சொல்லோவியமாக சேக்கிழாரால் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

### திருத்தொண்டர் தொகைத் தோற்றம்

தடுத்தாட் கொண்ட புராணத்தின் இறுதிப்பகுதியாகிய சுந்தரர் திருத்தொண்டர் தொகை பாடுதலைச் சேக்கிழார் அமைத்துள்ளார். "மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட, தீதிலாத் திருத்தொண்டர் தொகைதர" கயிலையில் சுந்தரர் இரு பெண்களை நோக்கியதும், இதனால் இறைவன் 'மண்ணில் காதல் இன்பம் அணைவாய்' எனப் பணித்ததும், சுந்தரர் 'மையன் மானுடமாய் மயங்கும் வழி தடுத் தாண்டருள் செய்' என மன்றாடியதும், திருமலைச் சருக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் நிகழ்வுகளாகும். இவற்றினூடாக சுந்தரரது அவதார நோக்கத்தில் முதன்மையாளதும் 'திருத்தொண்டர் தொகை' தருவது என்பது புலனாகின்றது. இதனடிப்படையில் "காதல் இன்பம் கலந் தணையுமாறு பரவையாருடன் இணைத்து வைத்த இறைவனே திருத்தொண்டர் தொகையினைப் பாடுமாறும் பணிந்தருளு கின்றார்"

திருவாரூர் தேவாசிரியன் மண்டபத்தில் அடியாரைக் காணும் சுந்தரர் 'இவர்க்கினியான் அடியேனாகப் பண்ணுநாள் எந்நாள்' என்று பரமன்தாளைப் பணிய இறைவனே,

"பெருமையாய் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்......."

எனத் தொடங்கி அடியார்களது பல்வேறு சிறப்புக்களைக்கூறி 'சொன்மாலை கோதிலா வாய்மையாலே பாடு' எனப் பணிக்க, எவ்வாறு பாடுவேன் எனச் சுந்தரர் வேண்ட இறைவன், 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுத் தான். இதனை முதலடியாகக் கொண்டே சுந்தரர் திருத்தொண்டர் தொகையைப் பாடுகின்றார். இப்பாடலினுள் கூறப்படும் ஒவ்வொரு அடியார்களையும் கருத்திற் கொண்டே தொடர்ந்து வரும் அடுத்த பகுதிகளைச் சேக்கிழார் அமைத்துள்ளார்.

எனவே தடுத்தாட் கொண்ட புராணத்தின் இறுதிப்பகுதியாகிய திருத்தொண்டர் தொகையின் தோற்றம் பற்றி சேக்கிழார் கூறியமை தொடர்ந்து வரும் அடியவர் புராணங்களை அதன் வழியில் பாடுவதற்கே ஆகும். இதனை,

"தம்பிரான் தோழரவர் தாம் மொழிந்த தமிழ் முறையே
எம்பிரான் தமர்கள் திருத் தொண்டேத்தல் உறுகின்றேன்."

(த. கொ. புராணம் - 203)

எனும் இறுதிப்பாடல் உறுதி செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவுரை**

பெரிய புராணத்தில் தடுத்தாட் கொண்ட புராணம் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்வியலின் பெரும் பகுதியைப் பேசுகின்றது. ஏனைய சில புராணப்பகுதிகளிலும் இவரது வரலாறு தொடர்ச்சியாகக் கூறப் பட்டாலும், தடுத்தாட் கொண்ட புராணமே உயிர்ப்பான பகுதியாக அமைந்துள்ளது. சேக்கிழார் பாடுவதற்கு மூலநூலாக அமைந்த 'தீதிலாத் திருத்தொண்டர் தொகையின்' பிறப்பிற்குச் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பெறுதலும், தேவாசிரியன் மண்டபத்தில் அடியவரைக் காணலும், இறையருளால் பாடப் பணித்தலும், பணிதலும் ஆகிய உன்னத செயற்பாடுகள் நிழக வேண்டியிருந்தமையால் இதற்கேற்ற வகையில் தடுத்தாட் கொண்ட புராணமும் பாடப்பட்டு உள்ளது. இத் தடுத்தாட் கொண்ட புராணமே ஏனைய அடியவர் வரலாறு களையும், கதைகளையும் முன்னோக்கியும் பின்னோக்கியும் நகர்த்திச் சென்று பொங்கிய இருளை ஏனைப் புற இருள் போக்குகின்ற செங்கதிரவன் போல் திகழும் திருத்தொண்டர் தொகை பாட உதவிய தெனலாம். இதனைக் கருத்திற் கொண்டே குன்றை நகர்க் குலக்கவி யாகிய சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்தை மிகக் கவனமாகக் கட்டமைத்துச் சென்றுள்ளமையைக் காண முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

சேக்கிழார் பெருமான் அருளிய 'பெரியபுராணம்', சந்தக்கவி, வே. ஶ்ரீ. நா. இராமசுவாமி உரையுடன், தெய்வச் சேக்கிழார் சைவசிந்தாந்தப் பாடசாலை, தஞ்சாவூர், 2005.

'பெரியபுராணம்' திருமுக கிருபானந்தவாரியார் சுவாமிகள் உரையுடன், குகஶ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை, 2005.

'பெரியபுராணம்', நவாலியூர். வை. நல்லையா உரையுடன், சைவநூற் பதிப்பகம், கொக்குவில்.

ஞானசம்பந்தன், அ.ச., 'பெரியபுராணம் ஓர் ஆய்வு', கங்கை புத்தக நிலையம், சென்னை, 1999.

இராசமணிக்கனார், மா., 'சைவசமய வளர்ச்சி', பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனிச்சாமி, து., 'தமிழில் காப்பியக் கொள்கை' இரண்டாம் பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 1994.

சரளா இராஜகோபாலன், 'இறைமைத்தமிழ்' ,ஒளிப்பதிப்பகம், சென்னை, 2002.

சுப்பிரயலு, இரா., பெரியபுராணத்தில் திருவிளையாடல், அகரம், தஞ்சாவூர் - 2007.

'பன்னிரு திருமுறைகள் - 19ம் பாகம்' , . மணிக்கனார் உரையுடன் வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1998.

பொன்மணி, 'இலக்கிய விமர்சன சிந்தனைகள்' , ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2004.

ஞானசம்பந்தன், அ.ச., 'இலக்கியக்கலை' , கழக வெளியீடு, சென்னை, 1999.

குலரத்தினம். க. சி., 'இந்து நாகரிகத்தின் மூலங்கள்' , குமரன் புத்தக இல்லம், சென்னை - 2009.

மகாதேவன். ரி. எம். பி., 'இந்து சமயத் தத்துவம்' , குமரன் புத்தக இல்லம், சென்னை - 2001.

சொல்லேருழவனார், 'அறுசமய விளக்கம்' , சங்கர் பதிப்பகம், சென்னை, 2000.

பாக்யமேரி, 'வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு' , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008.

'இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்புமலர்' - இந்து விவகார அலுவல்கள் அமைச்சு, இலங்கை, 2003.

'பண்பாடு' , மலர் 16, இதழ் 01, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2007, ஆவணி.

மாணிக்கவாசகர் அருளிய 'திருவாசகம் மூலம் முழுவதும்' , ஸ்ரீ இந்து பதிப்பகம், சென்னை, 2004.

தங்கவேலு, கோ., 'தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாறு' , அமிழ்தம் பதிப்பகம், சென்னை, 2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி

**சுந்தரர் வாழ்வியவில் அடிகியல்**

பெரியபுராணம் சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாவதாக வைத்தெண்ணப்படுகிறது. இது திருத்தொண்டர் புராணம் என்றும் அழைக்கப்படும். நம்பியாரூர் என்ற பெயர் கொண்ட சுந்தர மூர்த்தி சுவாமிகளினாற் செய்யப்பட்ட திருத் தொண்டத்தொகைத் திருப் பதிகத்தில் போற்றப்பட்ட சிவனடியார் வரலாற்றினைப் பெரிய புராணம் விரிந்துரைக்கின்றது. பயில்தொறும் பக்தியை விளைவிப்பது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய திருத்தொண்டர்களது வாழ்க்கை சைவத் தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாக விளங்குவது. அத்தகைய அருளாளர்களது உறுதியான பக்தித்திருக்கூட்டச் சிறப் பியல் விளக்கப்பட்டுள்ளது. "கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கிய மாதவர் கூட்டத்தை எம்பிரான் அந்தமில் புகழ் ஆலாலசுந்தரன் சுந்தரத் திருத்தொண்டத் தொகையிற் பாடிய வண்ணம் உரை செய்வோம்" என்று சேக்கிழார் பாடியுள்ளமை சிறப்புக்குரியது. சேக்கிழார் சுந்தரமூர்த்தி சுவாமிகளை நாயகனாகக் கொண்டு 4286 பாடல்களினாற் பெரிய புராணத்தைச் செய்துள்ளார். பெரிய புராணத்தில் சுந்தரர் வரலாறு தனியாகக் கூறப்படாது ஏனைய நாயன்மார்களது வரலாற்றோடு கலந்து காணப்படுகிறது. இந்த வகை யிற் தடுத்தாட்கொண்ட புராணத்தில் 203 பாடல்களும், ஏயர்கோன் கலிக்காமர் நாயனார் புராணத்தில் 409 பாடல்களும் சேரமான பெருமாள் நாயனார் புராணத்தில் 175 பாடல்களும் வெள்ளானைச் சுருக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53 பாடல்களுமாக மொத்தம் 840 பாடல்கள் இடம்பெறுகின்றன. 18ம் பாடலில் சுந்தரரை பெரியோர் என்று குறித்த வகையின்படி பெரியோர் புராணம் என்றும், இயல்பின் பெரிய புராணம் என்ற பெயரைப் பெற்றது சேக்கிழார் புராணம், சுந்தரரினாற் பாடப்பட்ட தேவாரப் பதிகங்கள் 7ம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

சுந்தரர் தமிழ்நாதன் தமிழ்வேந்தன், ஆளுடையநம்பி, ஊரான், நம்பியாரூரன், நாவலூரன், நாவலர்கோன் போன்ற பெயர்களினாலும் சிறப்பாகத் தம்பிரான்தோழர், வன்தொண்டர் போன்ற பெயர்களினாலும் அழைக்கப்பட்டுள்ளார். சுந்தரர் தனது வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றும் அவர் இறைவன் மீது கொண்ட பக்தியையும் அப்பக்தி மூலம் இறைவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளையும் காட்டுவனவான உள்ளன. இந்த வகையில் பக்தி பற்றிய எண்ணக்கருவை நோக்கின் அது இருவழி உறவாகக் காணப் படுகின்றது. இறையன்பில் பங்கு கொள்ளலும், இறையன்பை பகிர்ந்து கொள்ளலும் இடம்பெறுகின்றது. தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் வாழ்க்கை எடுத்துக் காட்டப்படுமிடத்து பக்தியின் சிறப்பு நன்கு விபரிக்கப்படுகிறது. இறைவனே அன்பின் காரணமாக அவர்முன் தோன்றியும் மறைந்ததும் அவரது வாழ்வினை நெறிப் படுத்துகின்றார்.

### சுந்தரர் பிறப்பும் வாழ்வும்

பெரிய புராணத்துட் தடுத்தாட்கொண்ட புராணம் தனிக்காவியமாக விளங்குவது. காப்பிய நயத்துடன் சுந்தரர் வாழ்க்கை வரலாறு சித்தரிக்கப்படுகிறது. சுந்தரர் பிறப்புப் பற்றி சேக்கிழார் (தடு.பு.சூ) கூறுமிடத்து.

> மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
> வேதியர்குலத்துள் தோன்றிமேம்படு சடையனார்க்கு
> ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசைஞானியார் பால்
> தீதகன்று உலகம் உய்யத்திருவவதாரஞ் செய்தார்

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

உலகத்தை உய்விக்க வேதியர் குலத்துள் தோன்றிய சுந்தரர் நரசிங்கமுனையர் எனும் அரசர் பால் அரசிளங்குமாரர் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசரது காதற் பிள்ளையாய் வளர்ந்து திருமணப் பருவத்தையும் அடைகிறார் இந்நிலையிற் தந்தையார் திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார். மண நாளன்று இறைவன் முதிய அந்தண வேடங்கொண்டு உள்ளே புகுகின்றார். ஆங்கே கூடியிருந்தோர் முன்னிலையில்

"ஆவது இது கேண்மின் மறையோர்
என்னடியான் இந்நாவல் நகர்ஊரன்
இது நான் மொழிவது" (தடு.பு.37)

என்று உறுதிபட ஆணையிடும் ஒருவர் யாராக இருக்கக்கூடும் என்று சிந்திக்கவில்லை அவர்கள் அந்தணர் வேறு அந்தணர்க்கு அடிமை யாதல் நாட்டு நடைமுறையில் இல்லை. (தடு.பு.40) என்ற கூறுகின்றனர் சுந்தரரும் அவரைப் பித்தரோ என்று ஏளனம் செய்து நகைக்கின்றார். பின்னர் நம்பியாரூரன் தன் அடிமை, என்று அவர் பாட்டன் எழுதித் தந்த ஓலையைக் காட்டி தம் அனுமதியின்றித் திருமணம் நடக்கக் கூடாது என்று கூறி வெற்றி கொண்ட பின் தான் யாரென்பதை உணர்த்த திருவருட்துறைக் கோயிலுக்குச் சுந்தரரும் ஏனையோரும் புடைசூழச் செல்கின்றார். சேக்கிழார் இதனை (தடு.பு.65)

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை
ஒருவரும் அறியீராகில் போதும் என்று உணரச் சூழ்ந்த
பெருமறையவர் குழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட்டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார்.

என்று விவரிக்கின்றார்.

இந்நிலையில் கோயிலுட் சென்று மறைந்த அந்தணர் இறைவியோடு காட்சி கொடுத்துத் தடுத்தாட்கொண்டமை பற்றிக் கூறித் தம்மை இன்னிசையாற் பாடுக என்று பணிக்கத் தாம் என்ன பாடுவது என்று தயங்கிய சுந்தருக்குப் 'பித்தா' என்ற அழைத்தமையை நினைவுபடுத்தி 'அவ்வாறே பாடுக' எனச் சுந்தரரும் 'பித்தா பிறைசூடிப் பெருமானே அருளாளா' என்று பாடுகிறார். நம்பியாரூரன் தனக்கு அடிமை என்று உறுதியாகக்கூறும் அந்தணரைப் புரிந்துகொள்வார் யாருமில்லை. அத்தகைய பேதமை உடையார் அந்தணரைப் பார்த்து எள்ளி நகையாடியமை நகைப்பிற்குரியது. இங்கு நாடக அங்கதம் (Dramatic Irony) வெளிப்படுத்தப்படுகிறது. பேசும் பாத்திரங்களில் ஒன்று அறியாமற் பேசுவதன் உட்பொருளைக் கேட்கும் நாம் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் வகையில் உரையாடலை அமைப்பதையே நாடக அங்கதம் என்று திறனாய்வாளர்கள் கூறுவர்.

இவ்வாறு இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரர் தலங்கள் தோறும், யாத்திரை செய்து இறைவனது பெருமைகளையும், பத்தியையும் சிறப்பித்து பாடல்கள் மூலம் இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றார்.

சுந்தரரது வாழ்க்கையில் முதன்மை நிகழ்ச்சியாக, சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது அவரை இறைவன் தடுத்தாட்கொண்டமைதான். அதனை நினைவு கூர்ந்து தமக்கும் இறைவனுக்குமிடையே உயர்ந்த தோழமை நட்பை வளர்த்து அதன்வழி தம் வாழ்க்கையை மேன்மை படுத்தியவர் சுந்தரர். அவர் தம்மை இறைவன் தடுத்தாட்கொண்டபோது பேசிய வார்த்தைகளை மீண்டும் நினைவு கூறுகிறார்.

"அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள்
சபைமுன் வன்மைகள் பேசிய வன்றொண்டர்
என்பதோர் வாழ்வு தந்தார்" (7-17-2)

என்று தம் வாழ்வு முழுவதும் வன்றொண்டர் என்று அழைக்கப் படுவதற்குக் காரணமான அந்த சம்பவத்தை பக்தியோடும் மறக்க முடியாத நினைவுகளோடும் மனங்கொள்கிறார். இறைவனை ஓரிடத்தில் 'பேயோடாடலைத் தவிரும் நீரொரு பித்தரோ' என்று பேசுவது உரிமையின் நெருக்கத்தைக் காட்டுகிறது. ஒவ்வொருவரது வாழ்வுக்கும் ஏதோ ஒரு உந்துசக்தியே அதாவது அவர்கள் சந்தோசமாக வாழ்வதற்கும் வாழ்வில் ஒரு பிடிப்பும் பற்றும் ஏற்படுவதற்கும் காரணமாகிறது. சுந்தரர் வாழ்வுக்கு பற்றாக இருந்து அவரது வாழ்விற்கு அர்த்தம் தந்தவர் இறைவன் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்பதற்கிணங்க இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கைதான் அவரது வாழ்வியலின் அழகாக் கொள்ளத்தக்கது.

சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவன், பின்னர் சுந்தரர் பரவையாரை விரும்பிய போது தம் தோழமைக்காகத் தூது செல்கிறார். சுந்தரரும் வாழ்வில் காதல் குறுக்கிட்டது இறையருள் என்றே நினைக்கின்றார். சைவப் பெருமக்களின் வாழ்க்கை நெறியைக் கூர்ந்து நோக்கின் முக்தி நிலைக்கு மட்டுமன்றி உலகில் நல்லவண்ணம் வாழ்வதற்கும் இறையருள் வேண்டும். மனையாளோடு கூடிவாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்திலே சகல தர்மங்களையும் கடைப்பிடித்து வாழும் நிறைவான வாழ்க்கை மறுபிறப்பிலும் ஒருவன் தெய்வத்துள் வாழ வழி வகுக்கின்றது. அந்த வகையில் நம் ஆரூரன் சுந்தரரது வாழ்க்கை முன்னுதாரனமாகின்றது. அழகு என்பது வாழ்க்கைக்கு அடிப்படை யானது. அது இன்பத்தையம் திருப்தியையும் கொடுக்க வல்லது. நாயன்மார்களுள் நம்பியாரூரன் அழகாக இருப்பதுடன் அவரது காதல் வாழ்க்கையும் அழகுணர்வைத் தரவல்லதாக உள்ளது. ரஸங்களில் உயர்ந்தது சிருங்காரம். அதற்கு ஆதாரமாக உள்ள பாவம் ரதி என்ற ழைக்கப்படும். உலகிற்கு அடிப்படையான காதலே நம் கலைஞர் களுக்கும் அடிப்படையாக உள்ளது. அது உலகியல் நிலையில் ரதி (காதல்) என்றும் தெய்வீக நிலையில் பக்தி என்றும் போற்றப்படு கின்றது. தெய்வீக நிலையின் உயர்வு காரணமாக உலகியற் காதல் (ரதி) உயர்ந்த காதலாக மாறும் நிலையில் 'பகவாத்ரதி' என்றழைக் கப்படுகிறது. உலகியற் காதலில் வீழ்ந்த பரவை நங்கையார் தன்மன மாற்றத்திற்குக் காரணமான சுந்தரரின் அழகை வியந்து இன்புறுதலை சேக்கிழார் (செய். 144) பின்வருமாறு கூறுகின்றார்.

முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாறனோ தார்மார்பின் விஞ்சையனோ
பின்னேர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என் மனந்திரிந்த இவன் யாரோ என நினைத்தார்

இறை விருப்பத்துடன் பரவையாரை மணந்து கொண்ட சுந்தரர் வாழ்க்கை திருவாரூரில் இன்பமாகக் கழிகிறது. குண்டையூரைச் சேர்ந்த கிழார் ஒருவர் சுந்தரருக்கு நெல், பால், பழம் என்பனவற்றை அன்பின் காரணமாக அனுப்பி வருகிறார். இந்நிலையிற் கொடிய பஞ்சம் ஏற்பட அவரால் நெல் பொருட்களை அனுப்பிவிட முடிய வில்லை.

ஆனால், இறையருள் மூலம் தாம் பெற்ற நெல்லைச் சுந்தரருக்கு அனுப்ப முற்பட்டுத் தகவல் அனுப்புகிறார். சுந்தரர் குண்டையூர் சென்று நெல் மலையைக் கண்டு வியந்து இவற்றை யார் கொண்டு வந்து தரவல்லார் என்று நினைத்து 'நீள நினைந்தடியேன்............. .....வாளனக் கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே, குன்றையூர் சில நெல்லுப்பெற்றேன் ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியே' என்று விண்ணப்பம் செய்கிறார். வாள்போன்ற நீண்ட விழிகளையுடைய பரவையார் வருந்தாமல் குன்றையூரிற் தாம் பெற்ற நெற்குவியலைத் திருவாரிற் சேர்ப்பிக்கும்படி கேட்கிறார். இறைவனும் அவ்வாறே ஆகும் என்று அசரீரியாகக் கூறுகிறார்.

பங்குனி உத்தரத் திருநாட் செலவுக்கு பரவையாருக்குப் பொன் தேவையாக இருந்தது. திருப்புகலூர்க் கோயில் இறைவனை நினைத்த வண்ணம் செங்கட்டிகளைத் தலையணையாக கொண்டு துயின்ற சுந்தரர் செங்கட்டிகள் பொன்கட்டிகளாக மாறிய விந்தையை வியந்து போற்றித் துதித்து திருப்பனையூர் சென்று பின் திருவாரூர் செல்கிறார். இவ்வாறு சுந்தரர் தம் வாழ் நாளை இனிமையும் பக்தியும் மிக்க வாழ்வாகத் தல யாத்திரைகள் செய்து இறை புகழையும் தம் பக்தியையும் வெளிப்படுத்தும் வகையிற் பாடல்களைச் செய்கிறார். சுந்தரர் பாடிய 100 பதிகங்களும் சேக்கிழார் புராணத்தில் ஆங்காங்கே எடுத்தாளப்படுகின்றன. அந்த வகையிற் தடுத்தாட்கொண்ட புராணத்தில் ஏழு திருப்பதிகங்களும், ஏயர்கோன் கலிங்காமர் நாயனார் புராணத்தில் 76ம் சேரமான் நாயனார் புராணத்தில் 14ம் வெள்ளானைச் சருக்கத்தில் 3 திருப்பதிகங்களும் இடம் பெறுகின்றன. சுந்தரரது தல யாத்திரையில் தில்லை வழிபாடு முக்கியம் பெறுகிறது. தடுத்தாட் கொண்ட புராணம் (106) சுந்தரர் வழிபட்ட திறத்தினை வெளிப் படுத்துகிறது.

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள்
நான்கும்சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து
சாத்துவீக மேயாக இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூட்டத்தின் வந்த பேரின்ப
வெள்ளத்துன் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்."

சுந்தரர் வாழ்க்கையில் இடம்பெற்ற தெய்வீக நிகழ்ச்சிகளில் ஒன்று ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை. திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) இறைவனிடம் பொன் கேட்டுப் பெற்ற சுந்தரர் அதனை எடுத்துச் செல்லாமல் இங்கே பெற்றதைத் தனக்கு வேண்டிய இடத்திற்கு கொண்டு வந்து தர வேண்டும் என்று வேண்டுதல் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருளும் இக்கணமெல்லாம்
அடியனேற்கு ஆரூர் உள்ளோர்
மருளுற வியப்ப ஆங்கே வரப்பெற வேண்டும்." *(ஏயர்.கலி.108)*

அதற்கு இறைவன் பின்வருமாறு கூறுகிறார்.

"செழுமணி முத்தாற்றிட்டுப்
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற்போய் கொள்க."
*(ஏயர்.கலி.108)*

இதனைக் கேட்ட சுந்தரர் இறைவன் கூறியதை அவ்வாறே செய்யாமற் பொன்னை ஆற்றில் இடுவதற்கு முன்னர் அதில் ஓர் அடையாளத்தை வெட்டிக்கொண்டு அதனை மணிமுத்தாற்றில் இடுகின்றார். பின் ஆரூர்க் குளத்தில் பொன்னைத் தேடுகின்றார் ஆனால் கிடைக்க வில்லை. மனைவியாரான பரவையார் *(ஏயர்.கலி 131)*

"ஆற்றிலிட்டுக் குளத்திற் தேடுவீர்
அருள் இதுவோ சாற்றும்" *(ஏயர்.கலி. 13)*

என்று நகைக்கிறார். இறைபக்தரான சுந்தரர் தாமிட்ட பொன்தான் தமக்குக் கிடைக்கிறதா என்பதைப் பார்க்க அப்பொன்னில் அடை யாளமிடுவது இறை பக்தர்கள்கூடச் சில நேரங்களில் ஐயத்திற்கும், சஞ்சலத்திற்கும் ஆட்படுவதுண்டு என்பதைக் காட்டுகிறது. மேலும் பொன்னைத் தேடியுங் கிடைக்காத நிலையில் 'பரவை வருந்துகிறாள் என் இட்டளங்கெட அருள்வாய்' என்று இறைவனிடம் வேண்டுதல் செய்கிறார் சுந்தரர் தேவாரத் திருமுறையும் (7-25-2) இக்கருத்தினை எடுத்துரைக்கிறது.

உம் பரும் வானரும் உடனே நிற்கவே எனக்குச்
செம்பொன்னைத் தந்தருளித் திகழும் முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலால் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெருமான்! அருளீர்! அடியேன் இட்டளங் கெடவே.

சுந்தரர் இறையன்பிற் சந்தேகங் கொண்டது பரவையாரின் உள்ளத்திற் துன்பத்தை உண்டாக்க வேண்டும். இதையுணர்ந்த சுந்தரர் இறை வனிடம் மேற்கண்டவாறு விண்ணப்பஞ் செய்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. இறைவனிடம் அன்பு செலுத்தும் பக்தர்கள் இறைவனையும் தம்முள் ஒருவராகவோ தந்தையாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனாகவோ, தலைவனாகவோ, எஜமானாகவோ ஏதோ ஒரு உறவின் அடிப்படையில் வேண்டுதல் செய்வதைக் காணலாம்.

சுந்தரர் வாழ்வில் இடம்பெற்ற அற்புத நிகழ்ச்சிகளில் ஒன்றாக இறைவன் அவருக்குப் பொதி சோறு அளித்தமையை கூறலாம். சுந்தரர் திருக்குருகாவூருக்குச் செல்லும் வழியில் பசியும் தாகமும் வருத்த இளைப்புற்றவராய் வரும்போது, பக்தரின் நிலையுணர்ந்த இறைவன் தண்ணீர்ப் பந்தலிலே வேதியராக இருந்து சுந்தரரை எதிர்கொள்ளச், சுந்தரரும் சிவாயநம என்று உச்சரிக்க, வேதியரும் 'என்னிடம் பொதி சோறு இருக்கிறது அதை உண்டு இளைப்பாறும்' எனக் கூறி உணவளிக்கிறார். அவ்வுணவோ எல்லோரும் உண்ணக்கூடிய வகையில் பெருகுகிறது. சிவனின் அருட் செயலைக்கண்டு வியந்து திருக்குருகாவூர் இறைவனைத் துதித்துப் போற்றுகிறார். திருக்கச்சூர் ஆலயக் கோயிலில் இறைவன் உணவை இரந்து வந்தபோது சுந்தரர் பசியாற்றியதாகவும் அறியப்படுகிறது. இங்கு 'முதுவாய் ஓரி' என்று தொடங்கும் திருப்பதிகத்தை அருளியதாக வரலாறு கூறுகிறது. இதன் பின் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து திருவொற்றியூர் வருகிறார்.

திருக்கைலையிலே உமையம்மையாருக்குச் சேடியராயிருந்த அநிந்திதை என்பாரே சங்கிலியார் என்ற பெயரில் ஞாயிறு கிழாரின் மகளாகப் பிறந்து இளமைப் பருவம் அடைந்தவராயிருந்தார் என்று பழமை வரலாறு கூறப்படுகிறது. ஏற்கனவே திருக்கயிலையில் கமலினியாக இருந்தவரே திருவாரூரிற் பரவையராக அவதரித்துச் சுந்தரரை மணந்து கொண்டார். இறைவன் வகுத்த விதியின் வழியே சுந்தரர் திருவொற்றியூரிற் சங்கிலியாரைக் காணும் பாக்கியத்தைப் பெறுகிறார். சங்கிலியாரும் தாம் ஒரு சிவனடியாரையே திருமணஞ் செய்வேன் என்ற உறுதியோடு இருக்கிறார். திருவொற்றியூர் கன்னி மடத்திற் பூமாலை கட்டிக்கொண்டிருந்த சங்கிலியாரைக் கண்டு அவர் பாற் காதலுற்று இறைவனை வழிபடுகிறார். இறையருளினால் சுந்தரர் சங்கிலியாரை மணமுடித்துக் கொள்கிறார்.

ஏற்கனவே பரவையாரைக் கரம் பற்றி வாழ்ந்த சுந்தரர் இப்போது சங்கிலியாரையும் மணம் முடிக்க விரும்பிய நிலையிற் தம் தோழராகிய இறைவனிடம் தம் வேண்டுகோளை வெளியிடுவது எவ்வாறு எனத் தயங்கி இறைவரது செயல்களையே அவருக்கு எடுத்துரைத்து தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுதலுக்கு இசைவிக்க முற்படுகிறார். அத்தகைய அழகிய லுணர்வைத் தூண்டும் வகையில் சேக்கிழார் அருளிய (கலி.நாய.புர.231) பாடல் அமைகிறது.

மங்கையொருபால் மகிழ்ந்துதவும் அன்றி மணி நீள் முடியின் கண்
கங்கை ஒரு பால் கரந்தருளும் காதலுடையீர் அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீரும்.

என்று சுந்தரர் வேண்டுவதாகப் பாடல் அமைகிறது. கரந்தருளும் காதலுடையீர் என்று கூறும் போது "நீர்கங்கையைச் சடையிலே மறைத்து வைத்துள்ளீர் ஆனால் நானோ ஊரறியச் சங்கிலியை மணக்க விரும்புகிறேன்" என்று நகைச்சுவையோடு சேக்கிழார் பாடுவது சுந்தரரது வாழ்வியலின் அழகியல் வெளிப்பாடகவே கொள்ளப் படத்தக்கது.

சுந்தரர் வாழ்வியலைச் சிறப்பித்துக் கூறவந்த சேக்கிழார் பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரையும் சுந்தரர் மணந்து கொண்டதிற் தவறில்லை என்பதைக் காட்டும் நோக்கில் இருவரை மணம் புரிந்தமை இறைவனது திருவருளே என்பதைக் குறிப்பிடுகிறார். (166)

"பண்டு திகழ் பான்மையினால் பசுபதி தன் அருளாலே
வண்டு அமர் பூங்குழலாரை மணம் புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத்து அவள் வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டு கேட்டு உண்டுயிர்ந்து உற்று அமர்ந்திருந்தார் காதலினால்"

சேக்கிழார் சுந்தரர் உலக வாழ்வில் அனுபவிக்க வேண்டிய இன்பங் களைத் துய்த்து நிறைவாழ்வு வாழ்ந்தவர் என்பதனை அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்ற இடங்கள் கவனிக்கத் தக்கவை. அதாவது

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும் ஒண்தொடிகண்ணே உள" (குறள் 1101)

என்ற குறளுக்கமைய ஐம்புலன் வாயிலாக நுகரும் இன்பத்தினை உற்றார் என்பதனைச் சேக்கிழார் பாடல் (266) இறுதி ஈரடிகள் விளக்குவதனைக் காணலாம்.

பரவையாரின் தாபத்தை எடுத்துக்கூறும் வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலாமுற்றத் துயிலாற்றாது நின்ற பரவையை
மலரமளித் துயிலாற்றாது நின்ற வருந்தென்றால்
மருங்காற்றாள் மங்குல வானில்
நிலாவுமிழுந் தழலாற்றாள்
நிறையாற்றும் பொறையாற்றாள்"

என்று பாடியுள்ள (174) இடம் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு நாயன்மார்களுள் அழகும் பொலிவும் கொண்ட சுந்தரரது நிறையுடை வாழ்க்கை சைவப்பெருமக்கள் உள்ளத்தில் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அர்த்தத்தை உணர்த்துவதாக உள்ளது. இறை பக்தியுடன் வாழ்வோருக்கு இன்பம். துன்பம். தீமை யாவற்றிலும் இறைவன் பங்கு கொண்டு வழிநடத்துவான் என்பதற்கு சுந்தரர் வாழ்க்கை சிறந்த உதாரணமாகும்.

சுந்தரர் வரலாற்றிலே பரவையார், சங்கிலியார் என்ற இருவரையும் இறைவன் உலக வாழ்வியலூடு மனிதனின் உயர் குறிக்கோளை அடைய அவரைப் பக்குவப் படுத்திச் செல்வதைக் காணலாம். சங்கிலியாரை மணந்து கொண்டதன் பின்னுள்ள வாழ்க்கையை நோக்கும் போது இது புலனாகும். உலக வாழ்க்கையை சங்கிலியாரோடு பகிர்ந்த காலத்தில் திருவாரூரிற் கோயில் கொண்ட வீதிவிடங்கப் பெருமானின் பங்குனி உத்தர விழா சுந்தரருக்கு ஞாபகம் வருகிறது. இதனை விவரிக்கும் சேக்கிழார் பின்வரும் பாடலைத் தருகிறார்.

"பொங்கு தமிழ்ப் பொதிய மலைப் பிறந்து பூஞ்சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சாரல் இடைவளர்ந்த கொழுந் தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணி வீதி அழகர் அவர்
மங்கல நாள் வசந்தம் எதிர் கொண்டருளும் வகை நினைத்தார்."

இத்தகைய நினைவுகள் உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்ட 'சங்கிலியாரை விட்டுப் பிரியேன்' என்று சபதஞ் செய்ததையும் மறந்து யாருக்கும் தெரியாமல் திருவாரூருக்குப் புறப்பட்ட சுந்தரர் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டும் முன்னரே தம் கண் பார்வையை இழந்து விடுகின்றார். இந் நிலையில் இறைவன் திருவெண்பாகத்திற் சுந்தரருக்கு ஊன்று கோல் அளிக்கிறார். பின் காஞ்சிபுரம் சென்று இறைவழிபாடு செய்து இடக்கண் பார்வையைப் பெறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரர் பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளில் இப்போது இழிவரல் எனும் சுவை வெளிப்படுகிறது. அழகிய திருக்கோலத்தோடு மணவாழ்க்கையில் மாண்புற்றிருந்த பக்தர் இப்போது தாழ்நிலையடைந்து வருத்தமுற்றுத் தன் பிழை பொறுத்தருள வேண்டுகிறார். திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்கு உன் சீருடை கழல்கள் என்று எண்ணி ஒருரை மதியாது உறாமைகள் செய்தும் ஊடியும் உறைப்பாளாய் திரிவேன் என்று பாடுகிறார். *(7-69-1)*

ஏயர் கோன் கலிங்காம நாயனார் புராணத்தில் *(286)* சேக்கிழார்.

"விண்ணவர் அமுதுண்ணா மிக்க பெருவிடமுண்ட
கண்ணாளா! கச்சி ஏகம்பனே! கடையனேன்
எண்ணாத பிழை பொறுத்து இங்கு காண எழிற்பவன்
வண்ணா கண் அளித்தருள்வாய் என வீழ்ந்துடைய வணங்கினார்."

என்ற பாடலை முன்வைக்கிறார். சுந்தரரும் 'ஆலந்தானுகந்து அமுது செய்தானை' என்ற பதிகத்தை பாடியமை குறிப்பிடத்தக்கது. சுந்தரரது வரலாற்றில் அவர் பின் பல ஸ்தலங்களுக்கும் சென்று வழிபடு நாளில் திருவாரூரை அடைந்து.

மீளா அடிமை உமக்கே ஆளாய்

என்ற பாடலைப் பாடி *(80)* வலக்கண் பார்வையும் பெற்றதாக அறிகிறோம். சேக்கிழார் பெருமான் இக்கருத்துக்களை தம் காப்பியத்தில் *(308)*

"மீளா அடிமை என எடுத்து மிக்க தேவர் குலம் எல்லாம்
மாளாமே நஞ்சுண்டருள மன்னி இருந்த பெருமானைத்
தான் ஆத ரிக்கும் மெய்யடியார் தமக்காம் இடர் நீர் தரியீர் என்று
ஆளாம் திருத் தோழமைத் திறத்தால் அஞ்சொல் பதிகம்
பாடினார்."

என்று அதுவும் அழகிய (அஞ்சொல்) சொற்களாற் பதிகம் பாடினார் என்று கூறுவதைக் காணலாம்.

திருவாரூரிற் சுந்தரர் தம்மோடு வந்த பக்தர்களைப் பரவையார் மாளிகைக்கனுப்ப கணவரை நீண்ட நாட் பிரிந்து மனம் தளர்வுற்றிருந்த பரவையார் 'ஏதம் மருவும் அவர் திறத்தில் இந்த மாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயம்பில் உயிர் போதல் ஒழியாது' என்று நம்பியாரூரையை பற்றிக் கூறுவீர்களானால் என்னுயிரை நீக்குவது உறுதி என்று எனது கூற அவர்கள் அஞ்சி வெளியேறி சுந்தரரிடம் தெரிவித்தனர்.

சுந்தரர் இப்போது சிவனை வணங்கிப் பரவையாரது ஊடல் தனித்தருள வேண்டுகின்றார். இவ்வாறு சுந்தரர் தம் வாழ்வின் ஒவ்வொரு அடியையும் இறையருளை வேண்டியே நடத்துகின்றார். நான் உமக்கு அடியவன். தாங்கள் எனக்குத் தாயினும் இனிய தோழர். அறிவிழந்து உள்ளங் கலங்கித் தவிக்கும் என வருத்தத்தைப் பார்த்து இன்றிரவே பரவையிடம் தூது போகும் படி கேட்கிறார்.

இறைவனிடம் இவ்வாறு மேற்கூறப்பட்ட கருத்துக்கள் மூலம் நட்புக்கொண்டு தம் வாழ்க்கையை மேற்கொண்ட சுந்தரதர வாழ்வின் அழகியலை நாம் அறிய முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**

*பெரியபுராணம், தொகுதி 4, இரண்டாம் காண்டம் மூலமும் தெளிவுரையும் உரையாசிரியர் வ.த. இராமசுப்பிரமணியம் வெளியீடு; திருமகள் நிலையம், சென்னை - 17.*

Dorairangasamy, M.A., : The Religion and philosophy of Thevaram, Book II, University of Madras, Madras, 1959.

Gopalakrishnan, R., Religion and Mysticism of periyapuranam, (Thesis) University of Mardas, 1978.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

# காரைக்காலம்மையார் புராணக் கட்டமைப்பு

ச. லலீசன் எம். ஏ. (தமிழ்)., எம். எட்.

### தமிழ்த் தேசியக் காப்பியம்

பெரிய புராணம் தமிழ்த் தேசிய காப்பியமாக விளங்குகின்றது. காப்பியத்தில் இடம்பெறும் தொண்டர்கள் எல்லோரும் தமிழர்கள், தமிழ்நாட்டினர். பெரிய புராணத்திற்கு முதல்நூலாக அமையும் திருத் தொண்டத் தொகையும் தமிழுணர்வின்பால் பாடப்பட்டதாகவே கொள்ளப்பட வேண்டும். சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய தமிழ்க்குடி, பின்வந்த காலப்பகுதியில் பல சவால்களை எதிர் கொண்டது. பல்லவர் காலத்தில் தமிழுணர்வை வெளிப்படுத்த வேண்டிய தேவை சுந்தரருக்கு இருந்ததன் வெளிப்பாடாகவே தமிழ் அடியவர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அது மட்டு மல்லாமல் தமது தமிழ் வல்லமையையும் தனது பதிக இறுதியில் புலப்படுத்தியிருக்கிறார். இதன் தொடர்ச்சியாகச் சோழர் காலத்தில் தமிழுணர்வை முதன்மைப்படுத்திக் காப்பியம் செய்ய வேண்டிய தேவை சேக்கிழாருக்கும் எழுகின்றது.

வாழ்க்கை ஒரு நோக்கத்தை உடையதாக அமைய வேண்டும். தொண்டை அடிப்படையாகக் கொண்ட வாழ்வில் ஈடுபட்டுப் பெருமை பெற்ற தமிழர்களை - அடியவர்களை வைத்துக் காப்பியம் செய்து சேக்கிழாரும் பெருமை பெறுகிறார். தமிழகத்தைத் தமிழுணர் வால் ஒரு குடைக்கீழ் வைத்திருக்க பெரியபுராணக் காப்பியம் உதவும் என்பது அவரது எதிர்பார்ப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண் நாயன்மார் மூவர்**

சேக்கிழார் பாடிய தனியடியார் அறுபத்து மூவருள் காரைக்காலம்மை, மங்கையர்க்கரசி. இசைஞானி ஆகிய மூவருமே தனியடியார் என்ற தகுதிநிலைக்குரியவராம். இவர்கள் குறித்துச் சுந்தரர் தனது திருத் தொண்டத் தொகையில்

"பேயார்க்கும் அடியேன்" *(தி.தொ.தொகை - பாடலெண் 04)*
"வரிவளையாள் மானி" *(தி.தொ.தொகை - பாடலெண் 11)*
"இசைஞானி" *(தி.தொ.தொகை - பாடலெண் 11)*

எனக் குறிப்பிடுவதையும் காண முடியும்.

**காரைக்காலம்மையார் புராணத்தின் இருப்பிடம்**

பெரிய புராணக் காப்பியம் இரண்டு காண்டங்களாக வகுக்கப் பட்டுள்ளது. முதற்காண்டம் திருமலைச் சருக்கம், தில்லைவாழந்தனர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம் என்ற ஐந்து பிரிவுகளையுடையது. இரண்டாம் காண்டம் வம்பறா வண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னிய சீர்ச்சருக்கம், வெள்ளானைச் சருக்கம் என்ற ஏழு பிரிவு களையுடையது.

திருநின்ற சருக்கத்தில் 66 விருத்தப்பாக்களால் காரைக்காலம்மையார் புராணம் அமைந்துள்ளது.

**பெயர்க் காரணம்**

"பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்"

எனச் சேக்கிழாரும்,

"நம்பன் திருமலை நான்மிதியேன் என்று தாளிரண்டும்
உம்பர் மிசைத் தலையால் நடந்தேற உமைநகலும்
செம்பொன் உருவன் என்னம்மை எனப் பெற்றவள் செழுந்தேன்
கொம்பின் உகு காரைக்காலின் மேய குலதனமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நம்பியாண்டார் நம்பி தனது திருத்தொண்டர் திருவந்தாதியிலும் குறிப்பிடும் புனிதவதியார் பற்றி, அமைக்கப்பட்ட புராணத்திற்குக் 'காரைக்காலம்மையார் புராணம்' என்ற பெயரையே சேக்கிழார் அமைத்தார்.

அம்மையார் தனது பாடல்களிலெல்லாம் தனது பெயரை 'காரைக்காற் பேய்' என்றே குறித்தார். ஆனால் இறைவன் அழைத்த மகுட வாக்கை மனதில் உன்னிப் பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சேக்கிழார் தான் பாடிய கதைக்குக் 'காரைக்காலம்மையார் புராணம்' எனப் பெயரிட்டார். 'காரைக்காலம்மை பெருமை கூறுவாம்' (பெ.பு. : 1721) எனத் தொடங்கி 'கீதம்முன் பாடும் அம்மை' (பெ.பு. : 1787) என முடிக்கும் வகையிலும் அம்மை என்று சேக்கிழார் பெண்மையைச் சிறப்பிக்கின்றார்.

### வாழ்வியலைக் கட்டமைத்தார்

காரைக்கால் அம்மையார் புராணத்தின் ஊடாக சங்க மருவிய காலப் பிற்பகுதியில் வாழ்ந்த பெண்மையை, அவர்தம் வாழ்வியலைக் கட்டமைத்துக் காட்டச் சேக்கிழார் முயன்றுள்ளார். அம்மையை அறிமுகம் செய்ய முனையும் சேக்கிழார்

"மயிலைப் புறம்கொள் மென்சாயல்
மகிளர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால்
அம்மை"

எனக் குறிப்பிடுகின்றார். இந்தப் பீடிகையுடன் சமய வாழ்வியல், வணிக வாழ்வியல் என்றவாறான உள்ளடக்கங்களைப் புலப்படுத்தும் என வாழ்வியல்சார் செய்திகள் கட்டமைத்துக் காட்டப்படுகின்றன. இவற்றை நம்வசதி கருதி

- ★ பிறப்புச் சூழல்
- ★ வளர்ப்புச் சூழல்
- ★ திருமணச் சூழல்
- ★ சோதனைச் சூழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ பிரிவுச் சூழல்
- ★ பக்திச் சூழல்

எனக் கட்டமைத்து நோக்குவோம்.

**பிறப்புச் சூழல்**

சோழ நாட்டின் துறைமுக நகராக விளங்கிய காரைக்கால், செல்வச் செழிப்பில் உயர்வு பெற்றிருந்தது. பெருவணிகர் குடிகள் நெருங்கி வாழ்கின்ற அழகான பதியாகக் காரைக்கால் காணப்பட்டது. இவ்வூரில் தனதத்தன் என்ற வணிகர் குலத் தலைவனுக்கு மகளாகப் புனிதவதியார் பிறந்தார். தனதத்தனுக்கு வேறு பிள்ளைகள் இருந்ததாகத் தெரிய வில்லை. நீண்ட காலம் பிள்ளைப் பாக்கியம் இன்றி மேற்கொண்ட தவத்தினாலேயே புனிதவதியாரைத் தனதத்தன் பெற்றெடுத்திருக் கிறான்.

"வங்கம்மலி கடல்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள் குலத் தலைவனார் தனதத்த னார் தவத்தால்
அங்கு அவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கிய பேர் அழகுமிகப் புனிதவதியார் பிறந்தார்."
*(பெ.பு.: 1723)*

புனிதவதி கருவிலேயே திருவுடைய தெய்வக் குழந்தையாயிருந்தாள். பின்னாள்களில் அம்மையே! என இறைவனால் அழைக்கப்படப் போகிறவள் அல்லவா? இதனால் போலும் புனிதவதியாரை அறிமுகம் செய்கையிலே திருமடந்தை அவதரித்தாள் எனச் சேக்கிழார் கூறு கின்றார். 'தாமரைத் தவிசின் வைகும் தனித்திரு என்ன' என்று பிற்பகுதியிலும் குறிப்பிடுகின்றார். இலட்சுமி கடாட்சம் வணிகர் குடிக்குள்ள சிறப்பு. அத்தகைய சிறப்பைக் காட்டச் சேக்கிழார் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

**வளர்ப்புச் சூழல்**

அம்மையார் வளர்ந்தமை பற்றிக் குறிப்பிட வந்த சேக்கிழார் அதைப் பாடலிலேயே தன் கவித்திறத்தால் அச்சூழலை நிறுவிவிடு கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று
தொண்டர்வரில் தொழுது தாதியர் போற்றத் துணைமுலைகள்
கொண்டுநுசுப்பு ஒதுங்குபதம் கொள்கையினில் குறுகினார்."

(பெ.பு.: 1726)

வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும் என்பது நம்மவர் முதுமொழி. வண்டல் என்பது சிறுமகளிருடைய விளையாட்டுகளுள் ஒன்று. இத்தகைய விளையாட்டுகளில் வரும் சொற்கள் கூட சிவனைக் குறித்ததாக இருந்தன. சிறப்பான பக்திச் சூழலில் புனிதவதி வளர் கிறாள். பிள்ளைகளுடைய நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் பரம்பரையும் சூழலும் முக்கியமானவை. புனிதவதி யாரைப் பொறுத்தவரையில் இவ்விரண்டு கூறுகளும் உயர்நிலை யிலேயே அமைந்திருந்தன.

மங்கையர்க்கரசியாருக்கோ இசைஞானியாருக்கோ சொல்லாத பக்திச் சூழலை, காரைக்காலம்மையாருக்கு மட்டும் காட்டுவது ஏன்? என்ற வினாவும் இங்கு எழலாம். அம்மையார் அருளிய அற்புத் திருவந்தாதியிலே அவரே தம்மைப் பற்றிக் குறிப்பிடும் பாடலொன்று இருக்கிறது. எனவே அம்மையாரது இயல்பைப் பதிவு செய்வது சேக்கிழாருக்கும் இலகுவாகின்றது.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்." (அ.தி. : 01)

புனிதவதி அழகு நலம் மிக்கவள். பெண்களுக்கு இருக்க வேண்டிய அத்தனை சிறப்பு இலட்சணங்களும் பொருந்தப் பெற்றவள். பின்னாள் களில் கணவன் இவளை விட்டுச் சென்று வேறொரு திருமணம் செய்யப் போகிறான். கணவன் கைவிட்டுச் சென்று இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்கிறான் என்றால் இப்பெண் குறைபாடுடையவளாகச் சமூகத்தவரால் நோக்கப்படுவாள். அப்படி புனிதவதி மீது மாசு எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் சேக்கிழார் கவனமாயிருக்கிறார். 'தாதியர் போற்றத் துணைமுலைகள் கொண்டு நுசுப்பு...... குறுகினார்' என்றும் 'நல்லவென உறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலவர் உரைக்கும் நலம் நிரம்பி மல்குபெரு வனப்பு மீக்கூர' என்றும் அவள் பெற்றிருந்த பெண்மை வளங்களை எல்லாம் சேக்கிழார் பதிவு செய்கிறார்.

### திருமணச் சூழல்

அழகு வளங்கள் நிரம்பப்பெற்ற புனிதவதிக்கும் நாகைப் பட்டினத்துப் பெருவணிகனான நிதிபதி என்பானின் புதல்வன் பரமதத்தனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது. இத்திருமணம் பொருந்தாத் திருமணம் என்ற செய்தி சேக்கிழார் மனதைக் குடைந்திருக்க வேண்டும். எனவே குடும்பப் பிரிவுக்குக் கட்டியம் கூறுவதைப் போன்று இரண்டு அடிகளை முற்கூட்டியே அமைத்தார்.

> தளிர்அடி மென் நகைமயிலைத்
> தாதுஅவிழ்தார்க் காளைக்குக்
> களிமகிழ்சுற் றம்போற்றக்
> கல்யாணம் செய்தார்கள் (பெ.பு. : 1732)

மயிலுக்கும் காளைக்கும் திருமணம் செய்வது பொருத்தப்பாடானது அல்ல. இவர்தம் குணவியல்பைக் கருதி இவ்வாறு சேக்கிழார் கூறியிருக்கலாம்.

திருமணம் செய்த பெண் கணவன் வீட்டில் சென்று வசிப்பதே மரபு. ஆயினும் ஒரே மகள் என்ற காரணத்தால் தன்மகளைத் தன்னூரிலேயே வைத்துக் கொள்ள தனதத்தன் விரும்புகிறான். இதனால் காரைக்காலிலேயே புதுமணத் தம்பதியருக்கெனப் புதுமனை அமைத்துக் கொடுக்கிறான். கூட்டுக் குடும்ப வாழ்வியலில் இருந்து கருக்குடும்பம் நோக்கிய சிந்தனைக்கு சேக்கிழார் இங்கு இடம் தருகிறார்.

### சோதனைச் சூழல்

பெரிய புராணத்தில் ஒவ்வொரு அடியாரது கதையிலும் இறைவன் வைக்கும் சோதனை இடம்பெறும். அடியாரைக் கதாநாயகன் ஆக்கு வதற்காக இறைவனே வில்லன் வேடம் ஏற்றிருப்பான். காரைக்கால் அம்மையாருக்கும் விருந்தோம்பல் குறித்துச் சோதனை வைக்கப்படு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பல் பண்பு பெரிய புராணத்தில் சிறப்பு நிலையில் நோக்கப்படும் உயர்ந்த பண்பாகக் காணப்படுகின்றது. அத்தகைய பண்பிற் சிறந்தவராக புனிதவதி விளங்குகின்றார்.

"நம்பர் அடியார் அணைந்தால்
நல்லதிரு அமுது அளித்தும்
செம்பொன்னும் நவமணியும்
செழும் துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத்
தகுதியில் வேண்டுவ கொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகும் நாள்" (பெ.பு. : 1736)

பரமதத்தனுக்கும் புனிதவதிக்கும் இடையிலான திருமண வாழ்வு 'அன்புறு காதல் மிகப் பெருகும்படி' அமைந்திருந்தது. வணிக முயற்சியில் பரமதத்தன் ஈடுபட்டிருக்கும் நாளொன்றில் அவனைச் சந்திப்பதற்காக அவனது பணியகத்தை நாடியவர் யாரோ இரண்டு மாங்கனிகளைக் கொடுக்கிறார். அவனும் அவ்விரண்டு கனிகளையும் தனது ஏவலாளரூடாகத் தனது வீட்டிற்கு அனுப்பி வைக்கிறான்.

இந்நிலையில் சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் புனிதவதி வீட்டை நாடினார். உணவில் மிக்க வேட்கை கொண்டு புனிதவதியின் புக்கத்தை நாடிய அவ்வடியாரை வரவேற்ற புனிதவதி அமுதளிக்க எண்ணுகிறாள்.

திருவமுது ஆக்கி ஆயிற்று. ஆனால் கறியமுது இன்னும் கை கூடவில்லை. என்ன செய்யலாம் என யோசிக்கிறார். பசியுடன் வந்திருப்பவருக்கு இன்னும் சற்று நேரம் பொறுத்திரும், கறிஅமுது ஆக்கிய பின் சோறு தருகிறேன் எனக் கூறல் அறிவுடைமையாகாது. தயாராக இருக்கின்ற திருவமுதை மாங்கனியுடன் வழங்குகின்றாள். கணவன் அனுப்பி வைத்த இரண்டு மாங்கனிகளுள் ஒன்றை எடுத்தே சோற்றுடன் கொடுக்கிறாள். 'மூப்புஉறும் அத்தளர்வாலும் முதிர்ந்து முடுகிய வேட்கைத் தீர்ப்பசியின் நிலையாலும்' வருந்திய சிவனடியார் படைக்கப்பட்ட உணவை மனமகிழ்வோடு உண்டு புனிதவதியை வாழ்த்திச் செல்கிறார்.

சிவனடியார் அகன்றபின் தனது வியாபரத் தலத்திலிருந்து மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்த பரமதத்தன் நீராடி விட்டு உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண அமர்ந்தான். புனிதவதி அமுதளித்து அத்துடன் எஞ்சியிருந்த பழமொன்றையும் கணவன் உண்பதற்காக வழங்கினாள். அதிமதுரம் போன்ற மாங்கனியின் சுவையால் பரமதத்தனும் எஞ்சியிருக்கும் மற்றைய பழத்தையும் தருமாறு வேண்டுகிறான். இப்போதுதான் சோதனை ஆரம்பமாகிறது.

மாங்கனியை எடுத்து வருபவர் போல் அவ்விடத்தைவிட்டு அகன்ற புனிதவதி, மெய்ம்மறந்து இறைவனைப் பிரார்த்திக்கிறாள். இறைவனது பேரருளால் அதிமதுர மாங்கனியொன்றை பெற்றுவந்து கணவனுக்குப் படைக்கிறார். ஆனால் இப்பழத்தின் சுவை முற்பழத்தின் சுவையை விட மேலானாதாக இருப்பதை உணர்ந்த பரமதத்தன் 'இக்கனி முற்கனியின் சுவையுடையதன்று. இதனை எங்கு பெற்றாய்?' எனச் சந்தேகத்தோடு கேட்கிறான்.

இக்கேள்வியைக் கண்ட புனிதவதி விதிர்ப்படைகிறாள். கணவனுக்கு பொய்பகர்தலும் கூடாது. திருவருள் திறத்தை வெளிப்படுத்தவும் கூடாது. இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள் ஈற்றில் உண்மையைச் சொல்லிவிடுவதென்று முடிவு செய்தாள். 'ஈசன் அருளால் இக்கனி கிடைத்தது' என விடை பகர்ந்தாள்.

சிவனருளாலே இக்கனி கிடைத்தது என்ற செய்தியை ஏற்றுக் கொள்ளப் பரமதத்தனின் மனம் ஒப்பவில்லை. 'சிவனருளால் கிடைத்ததானால் இன்னொரு கனியையும் பெற்றுக் காட்டுக' எனத் திருவருளுக்கே சோதனை வைக்கிறான்.

புனிதவதி என் செய்வாள்? பணி அணிவார் தமைப்பரவி 'ஈங்கு இது அளித்து அருளீரேல் என் உரை பொய்யாம்' என்று மனமுருகி வேண்டுகிறாள். அவள் அன்புருகி வேண்டியமைக்குப் பணிந்த பரமன் அவள் கையில் ஒரு மாங்கனி கிடைக்குமாறு அருளினார்.

புனிதவதி அம்மாங்கனியை பரமதத்தனது கைகளில் இட்டதும் அது திடீரென மறைந்து விடுகின்றது. பரமதத்தனுக்குப் பயம் மேலிடுகின்றது. தன்னிலையில் தாழ்வுண்டானதென நினைக்கிறான். அம்மையாரை விட்டு நீங்குதலே நலம் என எண்ணுகிறான். இதற்கொரு சாட்டாக வாணிப நிமித்தம் கடலில் செல்வதாக அறிவித்துக் கப்பலும் கட்டுவித்தான்.

அம்மையாரை விட்டு நீங்குவதற்குரிய தந்திர நெறியாக பரமதத்தன் இதைக் கையாண்டாலும் யாரும் இதை எண்ணிச் சந்தேகம் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. 'பொருள் வயிற்பிரிவு' என்ற அகப்பொருள் இலக்கணப்படி பொருளீட்டச் செல்லும் தலைவன் தலைவியைப் பிரிந்தே செல்வான். உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை.

'முந்நீர் வழக்கம் மகடூஉ வொடு இல்லை' என்பது தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம். எனவே அம்மையார் உட்பட யாருக்கும் சந்தேகம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

இங்கு அம்மையார் பக்கத்தில் பிழைகாணும் ஆர்வலர்களும் இருக்கின்றார்கள். பரமதத்தன் அனுப்பிய மாங்கனிகளுள் ஒன்றைச் சிவனடியாருக்குக் கொடுத்த செய்தியை அம்மையார் கணவனுக்குக் கூறியிருக்கலாம் என்பது அவர்தம் வாதம். ஆனால், சிவனடியாருக்கு உணவளிப்பது, பழங்கொடுப்பது முதலிய நிகழ்வுகள் புனிதவதியைப் பொறுத்தவரையில் புதிதானவையல்ல. பிறந்த நாள் முதல் இச் சூழலியே வளர்கின்றாள். இதே நேரம் இறைவனிடம் மாங்கனி பெற்றமையைக் கூடக் கணவனுக்குக் கூற வேண்டுமென்பதில்லை. தெய்வீகக் காரியங்களை, தெய்வச் சித்துக்களை பிறர் அறியும் வண்ணம் வெளிப்படுத்தக் கூடாது என்பது இன்றும் நம்மவர் நம்பிக்கையாகும்.

**பிரிவுச் சூழல்**

கடல் வாணிபத்திற்காகப் பிரிந்து சென்ற பரமதத்தன் பாண்டி நாட்டுக் கரையொன்றை அடைந்து அவ்வூர் வணிகன் ஒருவனின் மகளைத் திருமணம் செய்து அங்கேயே வாழத் தலைப்பட்டான். ஆனால் தான் ஏற்கனவே மணமானவன் என்பதையோ புனிதவதியை ஏமாற்றிவிட்டு வந்துள்ளேன் என்பதையோ அவன் யார்க்கும் சொல்லவில்லை. ஆனால் புனிதவதியைத் தெய்வமாகக் கருதி மனதுள் வழிபட்டான். தன் புதிய திருமண பந்தத்தால்

"பெருகு ஒளி விளக்குப் போலோர்
பெண் கொடி அரிதிற் பெற்றான்" (பெ.பு. : 1758)

தான் பெற்ற பிள்ளைக்குப் புனிதவதி என்று பெயர் சூட்டினான். அம்மையை நினைத்துப் புனிதவதி என்று பெயர் சூட்டிய முதலாள் இவன்தான். இனிவருங்காலங்களில் புனிதவதி என்ற திருநாமம் ஒளிவிளக்குப் போல பெருகி வளரப் போகின்றது என்ற நினைப்போடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழாரும் மேற்கண்ட உவமயைக் கையாண்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

மறுபுறத்தில் கரைக்காலில் அம்மையார் கணவனைப் பிரிந்த வேதனையில் வாழ்கின்றார். பரமதத்தன் பாண்டி நாட்டில் மறுமணம் செய்து வாழ்கின்ற செய்தியைப் புனிதவதியினது சுற்றத்தவர்கள் அறிந்து வேதனையுற்றனர். கணவனை நீங்கித் தனித்து வாழ்தல் தகாது என எண்ணிய அவர்கள் பல்லக்கொன்றில் அம்மையாரை ஏற்றி நெடுந்தூரம் பயணம் செய்து கணவர் இருக்கும் இடத்தில் சேர்ப்பித்தனர். அம்மையார் தன்பால் வருவதையறிந்து பரமதத்தனும் அவர் வருவதற்கு முன்பு யான் அவரிடம் சென்றுவிடுவேனென்று உடனடியாகவே தனது மனைவி, குழந்தையுடன் அம்மையாரை நாடினான்.

"தானும் அம்மனைவி யோடும்
தளர் நடை மகவி னோடும்
மான் இளம் பிணை போல் நின்ற
மனைவியார் அடியில் தாழ்ந்தே
யான் உமது அருளால் வாழ்வேன்
இவ் இளம் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்
என்று முன் பணிந்து வீழ்ந்தான்" (பெ.பு.: 1766)

அம்மையாரது அடிகளில் வீழ்ந்து யான் உமது அருளாலேயே வாழ முடியும். எம் நினைவாக இக்குழந்தைக்குப் புனிதவதி எனப் பெயர் சூட்டிருக்கிறேன் எனப் பணிந்து நிற்கிறான். பண்புநலமிக்க பெண்ணொருத்தியால் இத்தகு செயலைக் கண்டு எவ்வித எதிர்ப்பை வெளிப்படுத்த முடியும்?

கணவனது காலில் மனைவி வீழ்ந்து வணங்கும் வழக்கம் அந்நாள்களில் இருந்தது. ஆனால் மனைவியின் காலில் கணவன் வீழ்ந்து வணங்குவதன் காரணமென்ன? எனச் சுற்றத்தவர் வினவுகின்றனர். அதற்குப் பரமதத்தன் பதிலளிக்கிறான்.

"மற்று அவர் தம்மை நோக்கி
மானுடம் இவர்தாம் அல்லர்
நல்பெருந் தெய்வம் ஆதல்
நான் அறிந்து அகன்ற பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற இம்மகவு தன்னைப்
பேர்இட்டேன் ஆதலாலே
பொன்பதம் பணிந்தேன் நீரும்
போற்றுதல் செய்மின் என்றான்." (பெ.பு.: 1768)

அங்கு நின்றவர் யாவரையும் பார்த்து நீரும் செய்மின் என்று தனது வியாபாரப் புத்தியை பரமதத்தன் வெளிக்காட்டினான். இதுகாறும் பரமதத்தனது மனைவி என்ற உணர்வோடு வாழ்ந்த அம்மையாருக்கு இச்செயல் மிகுந்த அதிர்ச்சியை அளிக்கின்றது.

கணவனால் ஏற்றுக் கொள்ளப்படாத பெண் அன்றைய சமூகத்தில் வாழ்வது கடினமான காரியம்.

"ஈங்கு இவன் குறித்த கொள்கை
இது இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்து இங்கு உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய் வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர்தாள் பரவி நின்றார்." (பெ.பு.: 1770)

பிறப்பு முதலே சித்தத்தைச் சிவன்பால் வைத்த அம்மைக்குப் பேய் வடிவெடுத்து இறைவனை நினைப்பது புதுமையாக இருக்கவில்லை. மனத்தை முழுவதுமாக இறைவனிடம் அர்ப்பணித்து விட்டால் உடலைப்பற்றிய கவலையே இல்லை.

காரைக்காலம்மையார் வாழ்ந்த சூழலில் கணவனை விட்டுத் தனித்து ஓர் இளம்பெண் வாழ முடியாது என்பதும் மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது.

அண்டர் நாயகனார் என்னை
அறிவரேல் அறியா வாய்மை
எண்திசை மாக்களுக்கு யான்
ஏவ்வுருவாய் என்? (பெ.பு. : 1775)

என அம்மையார் கூறுகின்றார். என்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு யான் எவ்வுருவில் இருந்தால் என்ன? என்று பேசுகின்றார். மக்கள் என்பதைக் கூட மாக்கள் என்றே இகழ்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்திச் சூழல்**

பிறந்த நாள் முதல் பக்தி நெறியில் வளர்ந்தவர், பேயுருக் கொண்ட பின்பு அந்நெறியினை மேலும் இறுபக் பற்றிக் கொண்டார். அம்மையாரது பக்தி மேலீட்டிற்குப் பரமதத்தனே வழி சமைக்கிறான். மாங்கனி கிடைத்தவுடன் அவள் தெய்வப் பெண் என்பதைப் பறைசாற்றி இருப்பானானால் சொற்ப தொகையினரே அதை நம்பியிருப்பர். ஆனால் தான் பெற்ற பிள்ளைக்குப் புனிதவதி எனப் பெயரிட்டு, அம்மையாரது காலில் வீழ்ந்து வணங்கித் தன் பக்தியை வெளிப்படுத்திய நிலையில் அம்மையார் பற்றிய தெய்வீக நோக்கு அதிகரிக்கின்றது.

கணவனைப் பிரிந்த நிலையில் - பேய் வடிவடைந்த அம்மையார் பேசத் தொடங்குகின்றார். இறைவனது பெருமைகளைப் பேசுகின்றார். பக்தி மரபில் புத்தாக்கங்களையும் புரட்சிகளையும் ஏற்படுத்துமாறு தனது பாடல்களை அமைக்கிறார். இதுவரை வாய்திறவாத, அறிவுத் தகுதிப் பாட்டை வெளிக்காட்டாத அம்மையாரின் பாடற் திறம் அவரது புலமை உயர்ச்சியை வெளிக்காட்டுகின்றது.

வடதேசத் தலங்களை அடைந்து இறைனை வழிபட்டார். திருக்கயிலை மலையின் மேல் ஏறும் போதும் திருவாலங்காட்டைச் சேரும் போதும் காலினால் நடத்தலை தவிர்த்துத் தலையினால் நடந்து புனிதம் பேணினார்.

பேயாகி வழிபட்ட செய்தியைத் தனது பாடல்களுடாகவும் அம்மையார் குறித்தர். இதனால்தான் சேக்கிழாரும்

வானமும் மண்ணும் எல்லாம்
வணங்கு பேய் வடிவம் *(பெ.பு : 1771)*

பேயுருக் கொண்டு சிவனிருப்பிடத்தைப் பாதத்தால் தீண்டாது வரும் அம்மையாரைப் பிறப்பு இறப்பு இல்லாத இறைவனாரும் 'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே!' என அறிமுகம் செய்கின்றார்.

பேய்வடிவு எடுத்த கையோடு 'பிறந்து மொழி பயின்று..... எனத் தொடங்கும் அற்புதத் திருவந்தாதியை வெண்பா யாப்பில் பாடினார். ஒரு பாடலின் ஈற்றடி அல்லது இறுதிசீர் மறுபாடலின் தொடக்கமாக அமையுமாறு பாடப்படுவது அந்தாதி ஆகும். இவ்வகையில் அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வடிவத்தை முதன் முதல் அறிமுகப்படுத்தியவரும் அம்மையாரே ஆவார். அற்புதத் திருவந்தாதியில் 101 பாடல்கள் உள்ளன.

பாவினங்கள் கலந்து பாடும் மரபை ஆரம்பித்து வைத்தவரும் அம்மையாரே ஆவார் கட்டளைக் கலித்துறையையும் வெண் பாவையும் கலந்து 20 பாடல்களில் திருவிரட்டை மணிமாலையை ஆக்கினார்.

கயிலையை அடைந்து இறவாத இன்ப அன்பு வேண்டிப் பணிந்த அம்மையின் வேண்டுதலுக்குப் பணிந்த பரமனார் திருவாலங்காட்டில் தம் அடியின்கீழ் எப்போதும் பாடும் பெருவாய்ப்பை வரமாக ஈந்தார்.

இந்நிலையில் பதிகம் பாடும் மரபும் அம்மையாராலேயே ஆரம் பித்து வைக்கப்படுகின்றது. "கொங்கை திரங்கி.... எனத் தொடங்கும் மூத்த திருப்பதிகத்தை விருத்தப்பாவில் பாடினார். இது தலச் சிறப்பைப் போற்றுவதற்காகப் பதினொரு பாடல்களைக் கொண்டுள்ளது. இன்னும் எட்டி இலவசம்........." எனத் தொடங்கும் மூத்த திருப் பதிகம் ஒன்றையும் பாடினார். இது இறைவனது திரு நடனத்தைப் போற்றுவதாகப் பதினொரு பாடல்களைக் கொண்டுள்ளது.

அந்தாதி. விருத்தம், இரட்டை மணிமாலை, பதிகம் முதலிய வடிவங்களைத் தமிழில் கையாளும் பெருமையராக அம்மையார் திகழ்கின்றார். இத்தகு திறத்தை அவர் கல்வியினால் பெற்றார் அல்லர். இறையருளினாலேயே பெற்றார் எனக் கொள்ள வேண்டும்.

**நிறைவுரை**

இறைவனுக்குக் தொண்டு செய்யும் அடியவர்கள்

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (பெ.பு. : 143)

என்ற தகுதிப்பாட்டிற்குரியவர்கள். எனவேதான் அம்மையாரும் இறவாத இன்ப அன்பைக் கேட்டு 'அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வரந்தருக' என வேண்டினார். அன்பின் ஆழ் நிலையில் பிறக்கும் பக்தி அனுபவத்தை வெளிப்படுத்த காரைக்கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் புராணம் சேக்கிழாருக்குக் கைகொடுத்து உதவுகின்றது. அத்துடன் பெண்களை இறை பணியில் ஆற்றுப்படுத்தவும் இப் புராணம் வழங்குகின்றது. சேக்கிழார் இதனைச் சரியாக எடை போட்டே காரைக்காலம்மையார் புராணத்தைக் கட்டமைத்தார்.

**உதவியன**

சுப்பிரமணிய முதலியார். சி.கே., (உரையாசிரியர்), பெரிய புராணம், கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர்., 1964.

ஞானசம்பந்தன்., அ.ச., சேக்கிழார் தந்த செல்வம், கங்கை புத்தக நிலையம், சென்னை. 1999

ஞானசம்பந்தன்., அ.ச., பெரிய புராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை. 1999

பெரிய புராணச் சொற்பொழிவுகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்., 1970

மனோன்மணி சண்முகதாஸ், (கலாநிதி), அருணாசலம் சண்முகதாஸ், (பேராசிரியர்), தமிழ்த்தோணி, கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம். 2005.

மகேஸ்வரி வேலாயுதம் (பதிப்பாசிரியர்), தெய்வச் சேக்கிழார், இந்து சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை. 2005.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# காரைக்காலம்மையார் புராணத்தில் பெண்மை

விக்னேஸ்வரி பவநேசன் M. Phil.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும் நம்பி யாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியினை வழிநூலா கவும் கொண்டு சேக்கிழர் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை எழுதினார். இது இறைவனே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த சிறப்புடைய சைவ சமயக் காப்பியம். தமிழக வரலாற்றையும் புவியியலையும் எடுத்துக்கூறும் காப்பியம். அறுபத்து மூன்று நாயன் மார்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறும் வாழ்வியல் காப்பியம். தழுவலும் மொழி பெயர்ப்புமாக இல்லாமல் தமிழ்நாட்டுக்கு உரிய காப்பியம். இறைவன் எழுந்தருளிய திருத்தலங்களைப் பற்றியும் திருத்தொண்டர்கள் பிறந்த நாட்டினைப் பற்றியும் எடுத்துக்கூறும் வரலாற்றுக் காப்பியம். எனவேதான் மேலைநாட்டுப் பேரறிஞர் போப் ஐயர் 'Every Tamil student should read truly marvellus Periyapuranam' எனப் புகழ்ந்து கூறியுள்ளார்.

பெரிய புராணத்தில் தனியடியார் அறுபத்து மூவரும் தொகை யடியார் ஒன்பதின்மாரும் இடம்பெற்றுள்ளனர். இவ்வடியார்களில் ஆடவர்களுடன் ஒப்பிடும் போது பெண் அடியார்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆயினும் அடியவர்கள் அனைவரின் வாழ்விலும் பெண்கள் பின்னிப் பிணைந்துள்ளனர். பெண்களின் உறுதுணை இல்லையேல் அவர்கள் திருத்தொண்டர் களாகச் சிறக்க முடியாது என்று கூறும் அளவிற்கு அவர்கள் இணைந்து தொண்டாற்றியுள்ளனர். அடியவர்கள் எழுபத்திரண்டு பேரில் இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானியார், காரைக்காலம்மை யார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரே தொகையடியார்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுள் இறைவனின் தோழராக விளங்கிய சுந்தர மூர்த்தியை மணிவயிற்றில் தாங்கிய பெருமையுடையவர் இசைஞானியார். சைவத்தினின்றும் சமண சமயத்திற்கு சென்ற தன் கணவர் நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டியரைத் சம்பந்தரின் அருந்துணையால் மீண்டும் சைவத்திற்கு கொண்டு வந்தவர் மங்கையர்க்கரசியார். அருவ நிலையிலும் இறை வனைத் தொழுது இறைவனால் அம்மையே வருக என்று அழைக்கப் பெற்ற பெருமைமிக்கவர் காரைக்காலம்மையார். இவர்கள் மூவரோடும் ஒப்பிடத் தகுந்த சிறப்புடையவராகத் திகழ்ந்தவர் திலகவதியார். ஆயினும் அவர் அடியவர்களுள் ஒருவராக குறிப்பிடப்படாமை வருந்தத் தக்கதாகும்.

தேவாரம் அருளிய மூவரையும் உயர்த்திய பெருமை இம் மூன்று பெண்களையே சாரும். பெரியபுராணத்தில் இடம்பெற்றிருக்கும் நான்கு மகளிரும் நால் வேறு வர்ணத்தவர்களாகத் திகழ்கின்றனர். திலகவதியார் வேளாளர் பெருங்குடிக்கும் இசைஞானியர் அந்தணர் குலத்திற்கும் மங்கையர்கரசியார் அரச குலத்திற்கும் காரைக்காலம் மையார் வணிகர் குடிக்கும் பெருமை சேர்க்கப் பிறந்தவர்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு சேக்கிழாரின் பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பெரியபுராணத்தில் திரு நின்ற சருக்கத் தில் காரைக்காலம்மையாரின் வரலாற்றினை அறுபத்தாறு பாடல்களில் சேக்கிழார் பாடியுள்ளார். பெரியபுராணத்திற்கு தொகை நூலாக சுந்தரின் திருத்தொண்டத்தொகையும் வகைநூலாக திருத்தொண்டர் திருவந்தாதியும் அமைகின்றன. இங்கு சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் அம்மையாரைப் 'பேயார்க்கும் மடியேன்' எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

காரைக்காலம்மையாரின் வாழ்வில் உலகியலைத் துறந்து இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றது ஒரு வியத்தகு நிகழ்வாகும். அம்மையாரே தம்மைக் 'காரைக்காற் பேய்' என்று தாம்பாடிய அற்புதத்திருவந்தாதியிலும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களிலும் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் இதனைக் கருத்திற் கொண்டு 'பேயார்க்கும்' என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் கயிலையில் தலையால் நடந்த காட்சியையும் இறைவி அதனைக் கண்டு வியக்க இறைவன் மலையேறி வரும் பேய்வடிவம் 'என்னம்மை' என்று கூறிய சிறப்பினையும் நம்பி யாண்டார் நம்பி எடுத்துக் காட்டியுள்ளார்.

பதிகப் பெருவழி சிறக்கத் தோன்றியவர் என்று போற்றப்படும் திருஞானசம்பந்தருக்கு முன்பே பதிகம் பாடி அவருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் அம்மையார். இது பற்றியே சம்பந்தர் தேவாரத்தில்

"வணங்கும் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்தும் கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலம்காட்டெம்மடிகளே"

என இறைவனின் தூக்கிய திருவடியின் கீழ் அம்மையார் நாடோறும் பாடிப் பரவுவதையும் அதை இறைவன் கேட்டு அப்பாடல்களின் இசைக்கேற்ப ஆடுவதையும் சிறப்பித்துப் பாடியுள்ளர்.

**இளமைப் பருவம்**

காரைக்கால் நகரில் பெருமையும் வாய்மையும் நிறைந்த வணிகர் குடியின் தலைவனாக விளங்கிய தனதத்தன் செய்த தவப்பேற்றால் அவனது குலம் விளங்க பராசக்தியே வந்து பிறந்தது போன்று அவனுக்கு மகளாக காரைக்காலம்மையார் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் புனிதவதி என்பதாகும். இவரின் இளமைப் பருவம் இறையுணர்வு பொலிந்து விளங்கியது. மொழி பேசத் தொடங்கிய மழலைப் பருவத்திலேயே சிவபெருமான் திருவடிக்கு ஆட்படும் எல்லையற்ற பேரன்பு ததும்பும் சொற்களைப் பேசத் தொடங்கினார். இதனை

வணிகர் பெருங்குலம் விளங்க வந்து பிறந்தருளியபின்
அணிகிளிர் மெல்லடி தளர்வுற்றசையு நடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்கு பெறத்
தணிவில் பெருமணற்காதற் றதும்ப வருமொழி பயின்றார்

என அழகுறச் சேக்கிழார் உரைக்கின்றார். இவ்வாறு அம்மையார் குழவிப் பருவத்திலேயே சிவ பக்தியுடன் விளங்கியமைக்கு அவரது பாடலே அகச்சான்றாய் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்"[3]

என்றே தாம்பாடிய அற்புதத்திருவந்தாதியைத் தொடங்கியுள்ளார் அம்மையார்.

அழகின் கொழுந்து வளர்வது போல் வளர்ந்து வந்த புனிதவதியாரின் இறையன்பும் உடன் வளர்ந்து வந்தது. சிறுமியருடன் விளையாடும் போது கூடப் பெம்மானின் சொற்களையே பேசினார் புனிதவதியார் இதனைச் சேக்கிழார்.

வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை
யண்டர் பிரான் றிருவார்த்தை யனையவருவன பயின்று
தொண்டர் வரிற் றொழுது தாதியர் போற்றத் தணைமுலைகள்
கொண்ட நுசும் பொதுங்குபதக் கொள்கையினிற், குறுகினார்.[4]

என்று விளக்கியுள்ளார்.

இளமைப் பருவத்திலேயே அரனைப் பற்றி பேசுவதோடு சிவனடி யார் தொண்டிலும் புனிதவதியார் நாட்டம் கொண்டிருந்ததைத் 'தொண்டர் வரின் தொழுது' என்று இப்பாடலில் சேக்கிழார் புலப் படுத்தியுள்ளார். செல்வவளம் நிறைந்திருந்த வணிகர் குடியில் ஒரே மகளாய் பிறந்த புனிதவதியாருக்குத் திருத்தொண்டர்களுக்குத் தொண்டு புரிவதற்குரிய மனமும் செல்வ வளமும் வாய்ந்திருந்தன. தொண்டர் வழிபாட்டில் புனிதவதியாருக்கு இருந்த ஈடுபாடே பின்னர் அவர் வாழ்வில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதும் இங்கு சிந்திக்கத்தக்கது. பின்னர் அவரது கணவன் பரமதத்தன் அவரைத் தெய்வம் எனப் போற்றவும் கயிலையில் 'தாயுமிலி தந்தையுமிலிதான் தனியன்' ஆகிய சிவபெருமானே அவரை அம்மை அழைக்கவும் காரணமாய் அமைந்தது அவர் செய்த அடியார் தொண்டே ஆகும். இதனை அம்மையார் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியிலும்.

"மறித்து மடநெஞ்சே வாயாலும் சொல்லிக்
குறித்து தொழுது தொண்டர் பாதம்"[5]

என்று பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லறவாழ்வு**

பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் நூன்முறைப்படி திருமணம் நிகழ்ந்தது. இன நிலையில் இருவருக்கும் இருந்த நுட்பமான பொருத்தமின்மையினைக் காட்டுவது போல் சேக்கிழார்.

"தளிரடி மென்னகை மயிலைத் தாதவிழ்தார் காளைக்கு
களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள்"[6]

என்று நயமுறப் பாடியுள்ளார்.

திருமணமானபின் மகளிர் கணவர் இடம்சென்று இல்லறம் நடத்தலே அக்கால மரபு. ஆனால் புனிதவதியார் ஒரே மகளாக இருந்ததால் காரைக்காலிலேயே மகளையும் மருமகனையும் இல்லம் அமைத்து பெரும் செல்வத்தையும் கொடுத்தான். பரமதத்தனும் தன்குடி மரபிற்கேற்ப வணிகத்தில் ஈடுபடச் செல்வம் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டான். இல்லறமாம் நல்லறம் நடாத்தி வந்த புனிதவதியாரும் சிவபெருமானின் திருவடிமீது நீங்காத அன்புடைய வராய் அவ் வன்பு மேலும் பெருகிவர இல்லறத்தின் பண்பு பிறழாமல் நடந்து வந்தார்.

சிவனடியார் வீட்டிற்கு வந்தால் அவர்களுக்குத் திருவமுது அளித்தும் பொன்நவமணி செழும் துகில் ஆகிவற்றைக் குறிப்பறிந்து உதவியும் சிவனின் திருவடியிடத்து உள்ளன்பு மேலும் பெருகிவர இல்லறம் நடாத்தி வந்தார். இந்நிலையில் ஒரு நாள் பரதத்தனிடம் வந்த சிலர் இருமாங்கனிகளை அவனிடம் கொடுத்தனர். அதை இல்லத்திற்கு அனுப்புகிறான் பரமதத்தன். அவ் வேளையில் வீட்டிற்கு பசியோடு வந்த சிவனடியாருக்கு அம்மையார் அதில் ஒன்றைக் கொடுத்துவிட்டார். தொண்டர் வீடுவரின் அவருக்கு ஏற்றது கொடுக்கும் கடமை நெறி நின்று புனிதவதியார் விருந்தளிக்கின்றார். நாதன் அடியாரைப் பசி தீர்க்கும் கடமையில் ஒன்றி அவர் பாதம் விளக்க நீர் முன்னளித்து பரிகலம் வைத்து இன்னடிசில் ஊட்டினார். கறியமுது முடியாத நிலையில் திருஅமுது ஊட்ட சோற்றமுதோடு கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைப் படைத்தாள். முதுமையும் அதனால் வரும் தளர்ச்சியும் மிக்க பசியும் அயர்ச்சிதர புனிதவதியாரின் இல்லம் வந்த அச்சிவனடியார் இன்னடிசிலையும் இனிய மாங்கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் உண்டு அன்னையாரை அமுதூட்டும் அன்னை வடிவம் கண்டு வாழ்த்திச் சென்றார்.

**அற்புத நிகழ்வு**

சிவனடியார் சென்றபின் கணவன் வரவே கடப்பாட்டில் அவனுக்கு உணவூட்டுகின்றார். கறிகளுடன் உணவு உண்டு மகிழ்ந்த பரமதத்த னுக்கு சிவனடியார் உண்டது போக எஞ்சியிருந்த ஒரு மாங்கனியையும் இட்டார். மாங்கனியின் சுவையால் மகிழ்ந்தவன் மற்றைய கனியையும் கேட்கின்றான். புனிதவதியாரும் அதனைக் கொண்டுவரச் செல்பவர் போல் அவ்விடம் விட்டகன்றார். என்ன செய்வது என மனம் தளர்ந்தார். அந்நிலையில் இறைவன் அருளால் அதிமதுர மாங்கனி யொன்று அவர் கரத்தில் வந்த சேர்ந்தது. அதனை மகிழ்ச்சியோடு கொண்டுவந்து கணவன் கையில் கொடுத்தார். முன்னையதை விட இக்கனியின் சுவை பன்மடங்கு அதிகமாக இருப்பதை உணர்ந்தான். இது முன்னையதை விடச் சிறந்தது. மூவுலகிலும் பெறுதற்கரியது. இதனை எங்கு பெற்றீர் என்று வினாவினான். இந்நிலையில் இறைவனின் அருட்செயலை எங்ஙனம் எடுத்துரைப்பது எனத் தயங்கினார் புனிதவதியார். கணவனுரை காவாது விடுத்தல் கற்பு நெறியன்று என்று கருதி நடந்ததை உரைத்தார். இறையருள் என்று கேட்டும் பரமதத்தன் தெளிவு பெறாதவனாகிய திருமகளனைய புனிதவதியாரை நோக்கி "இக்கனி செஞ்சடைப் பெருமான் அருளால் கிடைத்ததாயின் மற்றொரு குற்றமற்ற கனியினை அழைத்துத் தருக" என்றுரைத்தான்.

புனிதவதியார் அவ்விடம் விட்டகன்று "இக்கனியை நீர் அளிக்க வில்லையெனில் என் சொல் பொய்யாகும்" என்று இறைவனை வேண்ட இறைவன் திருவருளால் ஒரு மாங்கனி அவர் கரத்தில் கிடைத்தது. அதனை அவன் கையில் கொடுக்கவே அக்கனி உடனே மறைந்தது. இதனால் அச்சம் மிகக் கொண்ட பரமதத்தன் மனம் தடுமாறி புனிதவதியாரை மானிடப் பெண் அல்லள் தெய்வப் பெண் என்றே கருதி அவரை விட்டு நீங்கும் எண்ணம் கொண்டு அதனை எவர்க்கும் சொல்லாமல் கணவன் மனைவி என்ற தொடர்பின்றி வாழ்ந்து வந்தான். புனிதவதியாரை விட்டு நீங்கும் எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த பரமதத்தன் அதனை மனதிற் கொண்டு கடல் வாணிகம் செய்ய எண்ணியிருப்பதாக அறிவித்தான். இவ்வாறு கடல் வாணிகத்திற் பெருஞ் செல்வமீட்டிப் பாண்டிய நாட்டில் ஒரு துறைமுகப் பட்டினத்திற்குச் சென்று தங்கினான். இந்நிலையில் அங்கு வணிக குலக் கன்னியொருத்தியை மணந்தான். அதன் பயனாக அழகிய பெண் மகவிற்குத் தந்தையாகின்றான். தான் நீத்துவந்த புனிதவதியாரைத் தெய்வம் என்று கருதித் தன் குழந்தைக்குப் புனிதவதி என்றே பெயரைச் சூட்டினான்.

அம்மையர் கற்பு நெறியில் நின்று மனையறம் புரிந்து வாழ்ந்து கொண்டிருந்தர். அவரது உறவினர்கள் பரமதத்தனது நிலையை அறிந்து அவனிருந்த இடத்தில் அவரைச் சேர்த்தல் கடமை என்று கூறி ஒரு பல்லக்கில் புனிதவதியாரை ஏற்றி உறவினர் புடைசூழச் சென்றனர். இவ்வாறு இவர்கள் வந்த செய்தியைக் அறிந்த பரமதத்தன் மனைவியோடும் குழந்தையோடும் புனிதவதியாரின் திருவடியில் வீழ்ந்து வணங்கி "நான் உம்மருளால் வாழ்கின்றேன் இச்சிறு குழந்தைக்கும் உங்கள் பெயரையே சூட்டியிருக்கிறேன்" என்று கூறினான். தம்மைக் கணவன் வணங்கியதால் அச்சமடைந்து நிற்கவே உறவினர்கள் உம்மனைவியை வணங்கக் காரணம் யாது? என்று வினவ அற்குப் பரமதத்தன்.

> இவர் மானிடரல்லர். நற்பெரும் தெய்வமாவார். இதனை நன் கறிந்தே இவரை விட்டகன்றேன். என் மகவிற்கும் இவர் பெயரை இட்டேன். அதனால் இவர் பொறப்பதம் வணங்கினேன். அதனால் அவரை நீங்களும் வணங்குங்கள் என்றுரைத்தான்.

புனிதவதியார் பரமதத்தன் சொற்கேட்டு சிவபெருமானைச் சிந்தித்து மனம் ஒன்றி "இவன் கொள்கையிது இனிமேல் இவனுக்காகத்தாங்கி நின்ற அழகு தாங்கிய சதைச் சுமையினை இங்கு நீங்கி உன் திருவடிகளைப் போற்றும் பேய் வடிவம் அடியேனுக்கு வேண்டும்" என்று வேண்டினார். இறைவன் திருவருளால் தாம் வேண்டிய வரம் பெற்று உடம்பின் தசைகளையும் அதன் அழகையும் உதறி என்பு வடிவம் பெற்று விண்ணும் மண்ணும் வணங்கத் தக்க சிவகண வடிவம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவதியார் உள்ளத்தில் எழுந்த ஓரமை ஞானத்தினால் அற்புதத் திருவந்தாதி எனும் பக்திப் பனுவலைப் பாடினார். இறைவன் திருவடியைப் போற்றும் நற்கணத்தில் ஒன்றானேன் நான் என்று விரும்பிப்பாடி இரட்டை மணிமாலையையும் பாடினார். பின்னர் தம்முள் ஞானவுணர்வு பொங்க கயிலாயம் சென்று இறைவனை வழிபடச் சென்றார். அவரது பேய் வடிவம் கண்டவர் அஞ்சி ஓடினர். "இறைவன் என்னை அறிந்தாற் போதும் வாய்மையறியா இவ்வுலக மக்களுக்கு யான் எவ்வாறாயினென்?" என்று கூறிய புனிதவதியார் வடநாடு சென்று கயிலை மலையடைந்து தலையால் நடந்து சென்றார். இங்ஙனம் தலையால் நடந்து வந்த புனிதவதியாரின் மீது இறைவியின் திருவருள் நோக்குப் பட்டது. அவரைக்கண்டு வியந்து இறைவனை நோக்கி தலையால் இங்கு நடந்து வரும் ஓர் என்பு உடம்பு பெற்ற அன்புதான் என்ன? என்று கேட்க இறைவன்.

"வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே
மற்றிப் பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்"[7]

என்னுரைத்தார். அருகில் வந்த புனிதவதியாரை நோக்கி அம்மையே என்றழைத்து அருளிச் செய்தர். இவ்வாறு இறைவனாலேயே அம்மையே என்றழைக்கும் பேறு பெற்றவராகிய புனிதவதியாரைத் தம்மிடம் வேண்டுவதென்ன? இறைவன் கேட்க அதற்கு அவர்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுன்னை
யென்ஞான்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
யறவா நீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார்[8]

அம்மையார் வேண்டியவாறே அருளிச் செய்த இறைவன் தென்னாட்டில் திருவாலங் காட்டில் நாம் ஆடும் ஆடலை எப்போதும் கண்டு மகிழ்ச்சி கொண்டு 'நம்மைப் பாடுவாய்' என்றருளினார். இறையருள் பெற்ற அம்மையார் இறைவனை வணங்கி விடைபெற்று திருவாலம் காட்டிற்கு தலையால் நடந்து சென்றார். அங்கு ஈசன் அண்டமுற நிமிர்ந்தாடும் ஆடல் கண்டு 'கொங்கை திரங்கி' என்று தொடங்கும் மூத்த திருப்பதிகம் ஒன்றைப் பாடியார். இவ்வாறு ஆலம்காட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் திருவடியின் கீழ் என்றும் இருக்கும் பேறும் இறைவன் ஆடும் போது முன்பாடும் அருளும் பெற்றார்.

**சிறப்புக்கள்**

தேவாரம் பாடிய மூவருக்கும் முன்னவராகக் காரைக்காலம்மையார் கருதப்படுகிறார். கி.பி. 7ம் நூற்றாண்டினராகக் கருதப்படுகின்ற திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டு இறைவனை வழிபடச் சென்ற போது அம்மையார் தலையாலே நடந்து இறைவனைப் போற்றிய திருத்தலம் என்று அம் மண்ணை மிதிக்க அஞ்சினார். அதன் பக்கத் திலஸ்ள ஊரில் தூங்கினார். திருவாலங்காட்டு இறைவன் ஆளுடைய பிள்ளைார் கனவில் தோன்றி, நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என வினவினார். இறைவன் திருவருளை உணர்ந்த சம்பந்தர் 'துஞ்ச வருவார்' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடி, திருவாலங்காட்டு இறைவனைப் போற்றினார் என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். அதனால் காரைக்காலம்மையாரின் காலம் சுந்தரருக்கு முன்னால் கி.பி 4ம் அல்லது 5ம் நூற்றாண்டு எனக் கணிக்கப்பட்டுள்ளது எனப் பேராசிரியர் முனைவர் சரளா இராச கோபாலன் குறிப்பிட்டுள்ளமை[9] இங்கு நோக்கத்தக்கது. காலத்தால் மூத்தவராயினும் அவருடைய பாடல்கள் 11ந் திருமுறையில் சேர்க் கப்பட்டுள்ளன. சைவசமய உலகில், இறைவன் மீது பாடல்கள் பாடிய பெண்பாற் புலவராக இவர் மட்டுமே திகழ்கிறார். இவ்வகையில் பன்னிரு திருமுறையில் இவர் ஒருவரே பெண்பாற் புலவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன் முதலாகத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை, பதிகம் எனப்பல சிற்றிலக்கிய வகைகளைத் தோற்றுவித்த பெருமை இவருக் குரியது. கணவனுக்குப் பயன்படாத உடம்பும் அழகும் பயனற்றவை என்ற பேயுருவம் தாங்கிய கற்புடைமை, காரைக்காலம்மையாருக்கே உரியது. தமிழகத்தில் சமய மகளிரில் தலையால் கயிலைக்குச் சென்ற பெருமையும் பயணம் மேற்கொண்ட பெருமையும் இவருக்கு மட்டுமே உரியது. புனிதவதியார் என்ற இயற்பெயர் பெற்ற இவர் தான் பிறந்த ஊரால் காரைக்காலம்மையார் ஆனார். காரைக்காலும் இவரால் பெருமை பெற்றது. பிறவாயாக்கைப் பெரியோன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்குரியவன் சிவபெருமான் பிறப்பும், இறப்பும் இல்லாதவன் ஆவான். ஒரு தாயின் வயிற்றில் பிறக்காதவன். அத்தகையோன் புனிதவதியாரை 'அம்மையே' என அழைத்து தாயாக்கிக் கொண்டான். குழந்தைப் பேறில்லாத அவர், இறைவனுக்கே தாயானார். 63 நாயன்மார்களில் காரைக்காலம்மையார் தாயானதால் சிவபெருமானை அமர்ந்த நிலையில் வழிபடுவதாகப் படிமங்கள் காணப்படுகின்றன. மற்ற நாயன்மார்கள் நின்ற நிலையில் வணங்குகின்றனர்.

பண்சுமந்த பாடல்களைப் பாடிய காரைக்காலம்மையார் இயற்றமிழிலும் இசைத் தமிழிலும் நிறைந்த புலமையாளர். நம்பியாரூரரால் திருத்தொண்டர்தொகையில் போற்றப்பெற்ற அடியார்களில் சம்பந்தர், நாவுக்கரசர், காரைக்காலம்மையார் ஆகிய இம் மூவரும் இசைத் தமிழிலும் வல்லவர்கள் என்பது தெரியவருகின்றது. கவுணியர், நாவுக்கரசர், பேயார் இம் மூவரையும் கற்கும் இசைவல்லோர் என்று சேக்கிழார் புராணம் குறிப்பிடுகின்றது.[10] திருஞான சம்பந்தர் முதலிய தேவார முதலிகள் தங்கள் பாடல்களை இசையின் மூலம் தமிழகம் எங்கும் பரப்புவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் காரைக்காலம்மையரே ஆவார். அம்மையார் அருளிய இயலிசைத் தமிழ்ப்பதிகங்களாகிய திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டும் மூத்த திருப்பதிகங்கள் என வழங்கப்பெற்றன. சைவ சமய மகளிரில் இறைவனால் திருவருள் ஞானம் பெற்றவர் காரைக்காலம்மையார் மட்டுமே. அதனால்தான் மதுரைச் சிவப்பிரகாசர் "திருவருள் ஞானமாவது முதலிகள் மூவர், காரைக்காலம்மையார் முதலாயினோர்க்கு உண்டாகிய ஞானம் என்று அறிக" என்று சிறப்பித்துள்ளார்.

காரைக்காலம்மையாரின் சிறப்பு நோக்கி "மாங்கனித் திருவிழா நடைபெறுகிறது. மாங்கனியின் பொருட்டுச் சைவ உலகம் ஓர் அம்மையாரைப் பெற்றமையை சைவர்கள் நன்றியோடு நினைப்பதாக இவ்விழா அமைந்தள்ளது. அம்மையாரின் திருவுருச்சிலை வீதிவழியே உலாவரும்போது பக்தர்கள் மாங்கனிகளைக் கொட்டுகின்றனர். அக்கனிகளை உண்ணும் மகளிர் குழந்தைப் பேறு பெறுவர் என்ற நம்பிக்கை தமிழக மக்களிடையே நிலவுகின்றது.[11] குழந்தைப் பேறில்லா அம்மையார் இறைமை நிலை பெற்றமையால், குழந்தைப் பேறு அருளும் சிறப்பைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கடந்த நாடுகளில் இன்றும் (கம்போடியா) சிவன் கோயில் களில் காரைக்காலம்மையாரின் திருப்பதிகங்கள் பாடப்படுகிறன. இறைவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடும்போது அவரின் திருவடிக்கீழ் பேயுருவில் அமர்ந்து தாளம், போடும் காட்சி பல சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. கடல் வணிகர்கள், தங்களைக் காக்கும் தெய்வமாக அம்மையாரைக் கருதியுள்ளனர். பயணம் மேற்கொண்ட போது அச்சிலையைக் கொண்டு சென்றனர். இவ்வாறு சைவசமய உலகில் காரைக்காலம்மையார் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுத் தன்னிகரற்றவராக விளங்குவதற்கு பெரியபுராணம் எடுத்துக்கூறும் செய்திகள் மிகுந்த பயன்பாடுடையனவாக அமைகின்றன.

**'பேய்' என்ற சொல் விளக்கம்**

'பேய்' என்ற பெயர் ஆன்மீக வாழ்வுடனும் அக்காலத்துடனும் எவ்வாறு இணைந்திருந்தது என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். இவ்வகையிலே அம்மையார் ஏற்ற பேயுருவுக்குப் பிற் காலத்தில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று.

> அம்மையார் வேண்டிப் பெற்றது மானிட உடம்பினுள் ஏனையவை ஒழித்து எலும்புக்கூடு ஒன்றுமே காணப்பெற்றதும் காற்றுப் போற் கடிந்து செல்லும் தன்மை வாய்ந்ததும், மண் என்ற ஒரு பூதச்செயல் மிகுந்த எலும்பு வடிவாயினும், களிம்பு நீங்கிப் பொன்னான செம்பு போலப் பாசநீக்கித் தூய்மைகாக்கப்பட்ட சுத்த மாயாவுருவம் வாய்ந்ததும் ஆனால் மக்கள் கண்ணுக்குப் புலப்படுவதுமாகிய ஓர் ஒளி பெற்ற திருவுடம்பு என்க.[12]

இவ்வடிவம் பற்றி மற்றொரு விளக்கம் வருமாறு

> என்றுஞ் சிவலோக வாசிகளாப் சிவபரிவாரங்களாய் இருந்து ஆடிப் பாடிக்களிக்குஞ் சுத்தமாய் சூக்குமசாரீரிகளுள் தனியே என்பு மாத்திரமான சரீரம் பெற்றிருப்போர் பேய்கள் என்னும் பெயர்க்குரியவராவர். இலாகவமாக இருந்து சிவனைப் பக்தி பண்ணுவதற்கும் பாடியாடுவதற்கும் மிகவாய்ப்பான வடிவம் பேய்வடிவம் எனப் பேசப்படுகிறது. காரைக்காலம்மையாரின் பேய்நிலை மோட்ஷ வாழ்வுக்குரிய சுத்தான்மவர்க்கப் பேய் நிலையிலுந் துல்லியமான விசேட பண்போடு கூடியது. சிவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜராய்த் திருநடனம் புரிய எடுத்த திருவடிக் கீழிருந்து கீதம் பாடும் பண்பினதாக அது அறியப்பட்டிருக்கின்றது.[13]

அம்மையார் பெற்ற பேய்வடிவமானது பெண்மைக்குரிய அழகு ஒழிந்த எலும்புருவான வடிவமாக வேண்டும், இளமையும் அழகும் அழிந்த இவ்வடிவில் சுடுகாட்டிலும், தனியிடங்களிலம் நடமாடவும், வேண்டிய நேரத்தில் இறைவனைப்பாடவும், இறையருளில் மூழ்கவும் வசதி கிடைத்திருக்கும். எனவேதான் பேய் என்று அம்மையார் விருப்புடன் தம்மைக் குறிப்பிடுகிறார்.[14]

பெண் என்ற நிலையில் அவர் பேய் வடிவம் பெற்றமை முக்கிய மாகக் கவனிக்கப்பட வேண்டியது. பிற்காலத்தில் தொண்டாற்றிய எந்த நாயன்மாரும் இவ்வாறான வடிமாற்றங்களைப் பெற்றுத் தொண்டாற்றியதாகப் பெரியபுராணத்தில் எங்கும் குறிப்பிடப்பட வில்லை. அம்மையார் மட்டுமே இவ்வாறு பேய்வடிவம் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இவர் பெண் என்பதால் மட்டும் தான் இவ்வடிவை வேண்டிப் பெற்றாரா? அல்லது அக்காலச் சூழலே இந்நிர்ப்பந்தத்தை அவர் மீதும் சுமத்தியதா? பல்லவர் காலத்திற் சைவப் பணியில் ஈடுபட்ட திலகவதியாரும் இவரைப் போன்ற ஒரு தனித்த பெண். திருமணத்தின் முன்னரே கணவனாய் வரவிருந்தவனும் மாண்டு போய் விட்டான். இளமை. அழகு தனிமை இவற்றுடனே அவர் பணியாற்றுகிறார். ஆனால் அவர் இவ்வாறான உருவ மாற்றத்தை அடையவில்லை. இவர்கள் இருவரும் வாழ்ந்த காலம் சமணர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த துறவு ஒன்றே வாழும் வழி என்றும், ஆணின் அத்தகைய துறவுக்குப் பெண் தடை என்றும் கருதிய சமணர் பெண்களை மிகவும் இழிவுபடுத்தினர்.[15] எனவே அத்தகைய கருத் துள்ளோர் மிகுந்திருந்த சமுதாயத்திற் கணவனால் புறக்கணிக்கப்பட்ட ஓர் அழகிய பெண் தனிமையில் ஆன்மீக வாழ்வில் ஈடுபடுவது கடினம் என்ற எண்ணம் அம்மையார் மனதில் எழுந்ததனாற் போலும் பேயுருவை இறைவனிடம் வேண்டிப் பெற்றார். ஆனால் சமணர் செல்வாக்குப் பெற்றிருந்த சூழ்நிலையில் திலகவதியார் எங்ஙனம் தனிமையிற் தொண்டாற்றினார் என்பது ஆய்வுக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறை பக்தி**

பிற்காலத்தில் நாவுக்கரசரிடம் காணப்பட்ட பக்தி வைராக்கியம் அம்மையாரிடம் அதிகம் காணப்படுகிறது. அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம்.[16] இறைவன் வானுலகில் இருப்பதாகவும் இவ்வுலகத்தவர் என்றும் கூறினும் என் நெஞ்சிலேயே இருக்கிறான் என்பேன்[17] இறைவனுக்கு ஆளாகியதால் நானே தவமுடையேன் என் நெஞ்சமே நன்நெஞ்சம்[18] மாலும் நான்முகனும் அளக்க முடியாதவனை இன்று காணும் அறிவு எளிதாயிற்றே[19] என்றும் கூறும் திடமும் அனுபவமும் அம்மையாருக்கு அமைந்துள்ளது. இறைவனை அன்பினால் உணர்ந் ததையும், அந்த, உணர்வினால் மனோதிடம் ஏற்பட்டதையும் அற்புதத் திருவந்தாதியில் பரக்கக் காணலாம். தமது பாடல்கள் மூலம் பக்தியால் இறைவனை அடையலாம் என்று வற்புறுத்தியதோடு, தாம் பெற்ற பக்தியனுபவங்களையும் முன்மாதிரியாகத் தந்த தன் மூலம் பல்லவர் காலத்தெழுந்த பக்திப் பாரம்பரியத்தைத் தோற்று வித்த முன்னோடி என்று அம்மையாரைக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

இப்பக்தியால் விளைந்த ஓர் ஆத்மதிருப்தியை அம்மையாரின் பாடல்களிலே காணமுடிகின்றது. இறைவனுக்கு ஆளாயினதால் பெறற்கரியனாயினதன்மை.[20] ஈசனை மனத்துக்கினிய வைப்பாக வைத்து அவனைப் பிரானாகக் கொண்டால் எனக்கு அரிய விடயம் இனியேது முண்டோ.[21] இறைவனுக்கு ஆட்பட்டதால் பெருஞ்சேமம் ஏற்பட்டுள்ளது. மனிதருள் நீயும் நிகழ்வதால் நெஞ்சே மகிழ்வாயாக,[22] எமது நெஞ்சுக்குள்ளே செருக்கே என்னவெனில் இறைவனுக்கு ஆட்செய்யப்பெற்றோம்,[23] என்பது போன்ற பாடற் குறிப்புகளில் அம்மையார் இறைவனிடம் பக்தி பாராட்டியதால் அவருக்கு ஏற்பட்ட உள்ளார்ந்த திருப்தியும், மகிழ்ச்சியும் புலப்படுகின்றன. பற்றுக் கோடிழந்த அவருடைய வாழ்வில் இறைவனின் நம்பிக்கை கொண்டு அவனைப் பற்றுக் கோடாகக் கொண்டதால் ஏற்பட்ட புத்துணர்ச்சியும், புதுநம்பிக்கையும் இழையோடியிருப்பதை அவரது பாடல்களிற் காணலாம். அன்பால் இறைவனை அடையலாம் என்று கூறியது மட்டுமல்லாது அதனை வாழ்ந்தும் காட்டியவர் என்ற வகையிலும் அம்மையார் சிறப்புப் பெறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் பாடிய மூவரிலும் பொதுவாகக் காணப்பட்ட வடமொழிப் புராணக் கருத்துக்களைப் பாடல்களிற் பயன்படுத்தும் மரபினையும் அம்மையாரே ஆரம்பித்து வைத்தவர் என்று ஓரளவிற்குக் கூற முடிகின்றது. அம்மையாரின் பாடல்களே முதன் முதல் பக்தியுடன் சிவனைப் போற்றுகின்றன. இறைவனின் ஆற்றலை அருளை தோற்றத்தைக் குறிக்க வடமொழிப் புராண மரபினை ஓர் ஆற்றல் வாய்ந்த கருவியாக அம்மையார் பயன்படுத்துகிறார். இப்புராண மரபினூடாக அவர் இறைவனுடன் உறவு பூணுகிறர். நகைச்சுவை யுடன் கேலி பேசுகின்றார். தம் தீராத பக்தியைப் புலப்படுத்துகிறார். அம்மரபினூடாக இறைவனைப் பற்றிய உண்மையைத் தேடுகிறார். தெய்வீக சமாதானத்தைப் புலப்படுத்துகிறார். சுருக்கமாகக் கூறுவதாயின் வடமொழிப்புராணக் கதைகள், கருத்துக்கள் அம்மையாரின் மனதில் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவற்றையும் தம் பாடல்களின் மூலம் தெரிவிக்கின்றார் எனலாம்.

**தாய்மைப்பண்பு**

இறைவனுடன் அம்மையார் பூணும் உறவில் தாய்மையே மேலாங்கி நிற்கின்றது. பக்தியின் முதிர்ச்சியினால் பிரபக்தி நிலை வரும்போது பக்தன் இறைவனுடன் ஏதோவகையில் உறவு கொள்கிறான். தாஸனாய், நண்பனாய், காதலியாய், புத்திரனாய், மனைவியாய் பல்வேறு உறவு நிலைகளில் பக்தன் தன் அன்பைத் தெரிவிக்கின்றான் அம்மையாரில் தாய்மை உணர்வு அதிகம் காணப்படும் அதேநேரத்தில் நண்பனாய்க் கேலி பேசுவதையும் காணலாம். அகவுணர்வுடன் காதலியாய் அம்மையார் எவ்விடத்திலம் இறைவனுடன் தொடர்பு கொள்வதைக் காணமுடியாது. வைணவ பக்தி இயக்கத்தைச் சேர்ந்த ஆண்டாளுடன் அம்மையாரை ஒப்பிடும் போது இருவருக்கும் இடையில் காணப்படும் பெரும் வேற்றுமை புலனாகும். தத்தமது இறைவரைப் பாடிய இவ்விருவரும் இளம் பெண்கள். ஆண்டாள் திருமணமாகாது திருமாலைக் காதலனாகப் பாவித்துப் பாடல் பாடியவர். அம்மையார் இல்லறவாழ்வில் முறிவு ஏற்படவே பேயுரு வேண்டிப் பெற்றுத் தனியே திரிந்து பாடியவர். இருவரும் இளம் பெண்களாகிய போதும் வாழ்வில் ஏற்பட்ட வேறுபாட்டின் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை இருவரும் அணுகும் முறையில் வேறுபட்ட தன்மை காணப்படுகின்றது. இறைவனுடன் ஆன்மா இணையும் பேரின்ப நிலையை சிற்றின்பத்தின் மூலம் ஆண்டாள் சித்திரிக்கின்றார். ஆனால் அம்மையார் உணர்வில் மிகவும் முதிர்ந்தவராகக் காணப்பட்டதால் அவரது பாடல்களில் மானிடக் காதல் இடம் பெறவில்லை அவர் தம்மை இறைவனின் தாயாகவே பாவனை செய்கிறார். பிச்சைக்குப் போகும்போது அரவுகளை விட்டுச் செல்வாயாக. பாம்பு மேலே படமெடுத்து ஆடுவதைக் கண்டால் பெண்கள் வந்து பிச்சையிட மாட்டார்[24] என்றும் "நள்ளிரவில் ஈமப் பெருங்காட்டில் நடன மாடும்போது பாதியாக உமையை வைத்துப் போக வேண்டாம்.[25] என்றும் பாம்பை அணிய வேண்டாம் உமைத் தொழுது இருந்தோம். பொன்னாரம் ஒன்று பூண்[26] என்றும் ஆலோசனை கூறுவதிலும், இரங்குவதிலும் தாய்மைப் பண்பே மேலோங்கி நிற்கிறது.

புராணக் கருத்துக்களின் அடிப்படையில் இறைவனுடைய செயல்களிலும் தோற்றத்திலும் கேலி பேசும்போது அம்மையாரில் நெருங்கிய நட்புறவைக் காணமுடிகின்றது. சடையில் இருக்கும் கங்கையும் பாதியாக இருக்கும் உமையும் ஒரு போதும் உம்மை விட்டு நீங்குவதில்லை. இருவரில் யார் அன்பினால். உம்மை நெருங்கியவர்[27] என்று இரண்டு மனைவியர் பற்றிய சர்ச்சையைக் கிளப்புவதிலும், பாம்பினையும் மதியினையும் ஈர்ந்து இரைத்தோடும் கங்கை உமது சடையை மிக்குப்பெருகி ஓடுமாயின் என்ன செய்வீர்[28] என்ற அவரது தோற்றத்தைக் கேலி செய்வதிலும், நிறமுடைய விடத்தை உண்டு உமது வாய் நிறம் மாறாதும் கழுத்து கறுத்து இருப்பதும் ஏன்[29] என்று வேடிக்கையாக ஆச்சரியப்படுவதிலும் அம்மையாரின் மிக நெருக்கமான நட்பே புலனாகின்றது. இத் தாய்மையும், நட்புணர்வும் அம்மையார் இறைவனுடன் கொள்ளும் நட்புணர்வானது சில அம்சங்களில் அம்மையாருடையதை ஒத்திருந்த போதும் பலவகைகளில் வேறுபட்டிருந்தது. நெருங்கிய நட்பினால் இறைவனைத் தூதுவிடுவதும் அவனுடன் கேலிபேசுவதும், நிந்தாஸ் துதி செய்வதும் சுந்தரரிடம் காணப்பட்டதைப் போல அம்மையாரிடம் காணப்படவில்லை. இவ்வகையில் அம்மையாரிடம் பலன் கருதாத நட்பே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்மை மரபு காத்தல்**

காலத்துக் கேற்ற புதிய மாற்றத்தைப் பெண் அடைவதைச் சேக்கிழார் குறிப்பிடவில்லை. அவர் மரபான பெண்மையையே பேண முற்பட்டுள்ளார். சேக்கிழார் பெண்மை மரபு பேணும் வகையில் புனிதவதி மறுமணம் செய்ய இடமளிக்கவில்லை. பெற்றோர் மரபுபேணும் வகையில் அவள் பரமதத்தனுடனே வாழவேண்டுமென முயற்சி செய்கின்றனர். மாங்கனி நிகழ்வால் குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல் பரமதத்தன் செய்கையால் விளைந்தது. புனிதவதியாரின் கற்புநிலை குடும்பச் சிக்கலைத் தீர்த்து வைக்கிறது. இறைவனிடம் பேய்வடிவினை வேண்டிப்பெற்ற புனிதவதி காரைக்காற்பேயாகிறாள்.[30] சுற்றத்தாரும் அவளைத் தொழுது அகன்றனர். சேக்கிழார் பெண்மையின் கற்புநிலை மூலம் பரமதத்தனை மட்டுமன்றி பெற்றோர் சுற்றத்தோர் எல்லோரையுமே சமநிலைப்படுத்தி விடுகிறார். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கற்பு நீதி தவறிய மன்னனை அழித்தது. ஆனால் புனிதவதியின் கற்பு மானிடத்தின் அமைதிக்கு வழிகாட்டுகின்றது. இறையன்பு மானிடவாழ்க்கையின் இன்னல்கள் தீர வழிகாட்டும் நெறியாகும். எனத் திருத்தொண்டர் தன் வாழ்க்கை மூலம் காட்டவே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினார். வாழ்க்கையின் இன்னல் களைக் கண்டு அதைவிட்டு நீங்கித் துறவு பூணாமல் இறையருளை வேண்டி, வாழ்வை நடத்திப் பின்னர் உரிய பொழுதில் இறைவனிடம் சேர்வதே மானிட வாழ்வியல் என்பதையே ஏனைய சிவனடியார்கள் மூலம் எடுத்தக்காட்டிய சேக்கிழார் காரைக்காலம்மையார் வரலாற்றில் அதை மாற்றியுள்ளார்.

பெண் கணவனுடன் சேர்ந்து வாழ்வதே இயல்பான வாழ்வு. கணவனுடன் வாழமுடியாத நிலை ஏற்படும்போது பெண் துறவு பூண்பதே வழி எனக் காட்டுகிறார். சமண பௌத்த மதங்கள் உலக வாழ்க்கையின் இன்னல்களுக்குப் பெண்களே காரணமெனக் கொண்டு பெண்கள் தொடர்பை விடுத்துத் துறவியாவதே ஆண்களுக்குச் சிறந்த தெனக் கூறினர். ஆனால் சேக்கிழார் ஆண் கற்புநிலை தவறும் போது இல்லறம் துறக்க வேண்டியது பெண்ணின் முடிவாகும் எனக் காட்டுகிறார். குடும்ப நிலையிலே ஏற்படும் குழப்பத்தைத் தீர்க்கப் பெண்மையின் துறவினை வழியெனச் சேக்கிழார் கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் தேவையை நிறைவேற்ற முற்பட்டதையே காட்டுகிறது.[31] பெரியபுராணத்தில் இறையருளால் அற்புதங்கள் செய்த ஏனைய அடியார்கள் வரலாற்றில் இத்தேவையை நிறைவேற்ற முடிய வில்லை.

காரைக்காலம்மையார் புராணம் அவருடைய மனவளர்ச்சி நிலையில் இறைவழிபாட்டைச் செய்யும் பண்பினைத் தெளிவாகக் காட்டுகிறது. பொதுவாக குடும்பநிலையிலே பின்பற்றிய வழிபாட்டு நடைமுறைகள் தந்ததெளிவு பின்னர் முழுமையான இறைவழி பாட்டை உணரச் செய்கின்றது. இது மானிடர்க்கு ஏற்றது. அம்மையின் பாடல்கள் பிற்கால அடியார்களுக்கும் வழிகாட்டியுள்ளன. இயற்கைத் தோற்றத்தில் இறைவனைக் காணுகின்ற மனப்பக்குவம் காரைக் காலம்மையார் என்ற அனுபவத்தின் உயர்நிலை ஆகும். இவற்றுக்கு அடிப்படையாய் அமைந்தது இறைவழிபாடாகும்.

**காரைக்காலம்மையாரும் அக்கமாதேவியும் ஒப்பீடு**

காரைக்காலம்மையார் சைவசமயத்தைச் சேர்ந்தவர். சிவனை வழி பட்டவர். சிவபெருமானின் உருவத்தோற்றமும். சிறப்பாகத் திருவாலங்காட்டில் அண்டமுற நிமிர்ந்தாடும் தோற்றமும் இவரது பாடல்களில் பெரிதும் போற்றப்பெற்றுள்ளன. முத்தித்தருவே அவதாரம் செய்தது போன்று அம்மையார் பிறந்தார் என்பர் சேக்கிழார். சிவன் கோயில்களில் நாயன்மார் வரிசையில் இவரது உருவச் சிலையினைக் காணலாம். அக்கமாதேவி வீரசைவர். இவரும் சிவனை இட்டலிங்க வழிபாடு செய்தவர். சிவபெருமானின் செஞ்சடை இளம்பிறை அரவுக்கங்கணம், ஒளிதிகழ் புன்னகை ஆகியவற்றின் வருணனையை இவரது வசனங்களில் காணமுடிகின்றது.

அம்மையார் சில காலம் இல்லற வாழ்க்கையில் சிறப்புற வாழ்ந் துள்ளார். இல்லறத்தில் இருந்தவரை அதற்குரிய கடமைகளை "வழுவாது செய்து கற்புக்கரசியாகத் திகழ்ந்தார். இல்லறத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் அரன் நினைவும் அடியார் தொண்டுமாக இவரது வாழ்க்கை அமைந்திருந்தது. அக்கமாதேவியாருக்கு திருமணம் ஆயிற்றா? இல்லையா என்பது ஆய்விற்குரியதாக உள்ளது. கௌசிக மன்னன் அவரை மணக்க விரும்பினான் என்று கூறப்படினும் இல்லற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தத்தில் ஈடுபட்டதாக தெரியவில்லை. கணவன் திருமணம் புரிந்து கொண்டு தம்மைத் தெய்வம் என்று போற்றித் தொழுதநிலையில் அம்மையார் பற்றற்ற துறவியாகிப் பேய்வடிவத்தை இறைவனிடம் பெற்றார். இது ஓர் அற்புத நிகழ்வாகும். அக்கமாதேவி இல்லற சுகத்தை விரும்பாது அரச போகங்களை உதறித்தள்ளி வைராக்கியம் பூண்டு ஆடை அணி கலன்களற்ற திகம்பரியாகி அஞ்சாநெஞ்சுடன் கல்யாண் நகரம் சென்று அங்கு அல்லமருடன் தத்தவ உரையாடல் நிகழ்த்திப் பின்னர் ஸ்ரீசைவத்திலுள்ள கதலிவனம் சென்றார்.

அம்மையார் மகாதேவி அக்கா ஆகிய இரு மாதரிசிகளுமே உருவ அழகும், பண்பு நலனும், சிறந்த இலக்கியப் புலமையும், இசை அறிவும் சிவஞானமும், தத்துவ அறிவும், மெய்ஞ்ஞான உணர்வும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தனர். இருவருமே சிவயோகம் கற்றவர்கள் சிறந்த வைராக்கிய சீலர்கள். பெண்களின் ஆன்மீக உரிமையைத் தங்கள் சொல்லாலும், செயலாலும் இவர்கள் நிலை நாட்டி உள்ளனர். கணவனுக்காகத் தாங்கிய உடல் வனப்பினை அவனோடு வாழும் இல்லறவாழ்வு நீக்கப்பெற்ற நிலையில் இறை வனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றார் என்பது அம்மையார் வரலாறு. கணவனுக்காக என்றிருந்த தம் வனப்பு, கணவனுடன் சேர்ந்து வாழ்தல் என்பது அற்றநிலையில், பிறர் கண்படக்கூடாது என்று கருதிய அம்மையாரின் கற்புடைமை இதனால் புலனாகும். அக்கமாதேவி திகம்பரியாகி நெடுந் தொலையையும், அரிய வழி களையும் கடந்து சென்றவர். மங்கையர் குலதிலகங்களாகிய இவ்விரு பெண்மணிகளுமே சமயத் தொண்டோடு சிறந்த இலக்கியப் படைப் பாளர்களாகவும் விளங்கித் தத்தம் மொழிகளுக்கு வளம் சேர்த் துள்ளனர்.[32] மேலும் இருக்கும் இறைவனை அடைதலையே குறிக் கோளாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறாகத் தமிழகம் செய்த தவப்பயனால் வந்து பிறந்தவர் காரைக்கால் அம்மையார். கருநாடகத்தின் பெறுதற்குரிய திருவருட் பேறாய்த் தோன்றியவர் அக்கமாதேவி, இவ்விரண்டு மெய்ஞ்ஞானப் பெண்மணிகளும் இடம், மொழி, காலம் ஆகியவற்றில் வேறுபட்ட வராயினும், ஆன்ம ஞானம், ஆன்மசுதந்திரம், ஆன்மமுக்தி ஆகிய வற்றால் ஒன்றுபட்ட நோக்குடையவர்களாகவே விளங்குகின்றனர். இவ்விருவரும் அவர்களுக்குரிய காலச்சூழலுக்கேற்ப தத்தம், தனித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களுடன் ஈடிணையற்றவர்களாக விளங்குகின்றனர். இறை ஞானத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேறுபாடில்லை எனத் தமிழகமும், கன்னட தேசமும் கொண்டிருந்த சிந்தனை வளர்ச்சியின் சான்றுகளாக அம்மையாரும் அக்கமாதேவியும் விளங்குகின்றனர்.

நிறைவாக, காரைக்கால் அம்மையாரது பெண்மைச் சிறப்பினை திரு. வி. க. போற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

> காரைக்கால் அம்மையார் அன்பும், அறிவும் நிரம்பப் பெறும் அவையில்லா நாயகனோடு கலந்து இல்லறம் நடாத்தி அவன் மனதுக்கிசைய ஒழுகி வந்தார். அம்மையாரது கல்விநிலையும், ஞானநிலையும் வருணனைக் கெட்டாதன. அத்துறைகளைக் கல்விஞானம் பெற்றிருந்ததும், அவர் தம் நாயகன் பிரியுமட்டும் தாம் அவரை விடுத்துப் பிரியாமலும், தமது நிலையை ஏனை யோர்க்குப் புலப்படுத்தாமலும், வாழ்ந்து வந்ததை இக்காலப் பெண்மக்கள் உற்றுநோக்கி உய்த்துணர்தல் வேண்டும்.

அவரது இக்கூற்றிலிருந்து அம்மையாரது வாழ்க்கை இன்றையநிலை யில் மாதர் குலத்திற்கு முன்னோடியாக அமைந்து விளங்குகின்றது எனலாம். இவ்வகையில் சைவம் வளர்ந்த மகளிரில் அம்மையார் முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்பது காரைக்கால் அம்மையார் புராணம் தரும் செய்தியாகும். அம்மையார் பல்வேறு சிறப்புகளுக்கு முரியவர். கடல்கடந்த நாடுகளிலும், அவரது புகழ் பரவியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகச் சேக்கிழார் காரைக்கால் அம்மையாரது பெண்மைச் சிறப்புக்களை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது. கணவனால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் முகம் தொலைந்து மூலையில் முடங்கிவிடாது தான் விரும்பிய ஆன்மீகத்துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முதல் புதுமைப்பெண் அம்மையார் என்றால் மிகையில்லை.

**அடிக்குறிப்புக்கள்**

1. *சேக்கிழார், காரைக்கால் அம்மையார் புராணம், 2.*
2. *மேற்படி, 3.*
3. *காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, 1.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சேக்கிழார், காரைக்கால் அம்மையார் புராணம், 5.
5. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, 40.
6. சேக்கிழர், காரைக்கால் அம்மையார் புராணம், 11.
7. மேற்படி, 58.
8. மேற்படி, 60.
9. சரளா இராசகோபாலன், சமயம் வளர்த்த மகளிர், ஒளிப்பதிப்பகம் சென்னை, 2000, ப. 3.
10. சேக்கிழார், பெரிய புராணம். 46.
11. சரளா இராசகோபாலன், மு.கு.நூல், ப. 6.
12. திருத்தொண்டர் புராணம், திருநின்ற சருக்கம், மூன்றாம்பகுதி, ப. 854. (உரை.சி.கே. சுப்பிரமணிய முதலியார்)
13. கந்தையா. மு, அரியவும் பெரியவும் பெரியபுராணச் சிந்தனைகள், இரண்டாம் பாகம், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை, 1986, பக், 98-99.
14. சிந்தனை, சந்திரலோகா வாமதேவா, 'காரைக்கால் அம்மையாரும், அவர் பாடிய பிரபந்தங்களும், ஓர் ஆய்வு' தொகுதி III, இதழ் I ஆகஸ்ட், 1988. கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப. 13.
15. சிறுபஞ்சமூலம், 17 : 40.
16. அற்புதத் திருந்தாதி, ப. 3.
17. மேற்படி, 6.
18. மேற்படி, 7.
19. மேற்படி, 19.
20. மேற்படி, 8.
21. மேற்படி, 10.
22. மேற்படி, 31.
23. மேற்படி, 79.
24. அற்புதத் திருவந்தாதி, 57.
25. மேற்படி, 51.
26. மேற்படி, 27.
27. மேற்படி, 95.
28. மேற்படி, 90.
29. மேற்படி, 89.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. சேக்கிழார், காரைக்கால் அம்மையார் புராணம், பாடல் 49.

31. மனோன்மணி சண்முகதாஸ், காலத்தை வென்ற பெண்கள், அறிவு பதிப்பகம், சென்னை, 2006, பக். 89-90.

32. சாந்தா, M.S டாக்டர் காரைக்கால் அம்மையாரும் அக்கமாதேவியும் ஓர் ஒப்பாய்வு வித்யா பதிப்பகம், சென்னை, 1994, ப. 244.

**உசாத்துணைநூல்கள்**

ஆறுமுகநாவலர், திருத்தொண்டர் புராணம், சென்னை, 1953.

இராசமாணிக்கனார், மா:பெரியபுராண ஆராய்ச்சி, பாரிநிலையம், சென்னை, 1948.

இராசமாணிக்கனார், மா:சைவசமய வளர்ச்சி, பாரிநிலையம், சென்னை, 1948.

சரளா இராசகோபாலன், சமயம் வளர்த்த மகளிர், ஒளிப்பதிப்பகம், சென்னை, 2000.

சாந்தா, MS. டாக்டர், காரைக்கால் அம்மையாரும் அக்கமாதேவியும் ஓர் ஒப்பாய்வு, வித்யா பதிப்பகம், சென்னை, 1994.

சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் வெளியீடு, சென்னை, 1950.

ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாட்டு மலர் - இந்து சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை, 2005.

கந்தையா. மு.அரியவும் பெரியவும் பெரியபுராணச் சிந்தனைகள், இரண்டாம் பாகம், துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை, 1986, பக். 98-99.

சிந்தனை தொகுதி III, இதழ் I, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மார்ச், 1988.

மனோன்மணி சண்முகதாஸ், காலத்தை வென்ற பெண்கள், அறிவு பதிப்பகம், சென்னை, 2006.

ஞானசம்பந்தன். அ.ச. பேராசிரியர், பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை, மார்ச், 1999.

நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டுக் கருத்தரங்கு மலர், தொகுதி, 2 தர்மபுர ஆதீனம், மதுரை, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

# திருநீலகண்ட நாயனார் புராணக் கட்டமைப்பு

சைவப்புலவர் கு.றஜீபன். M.A.

### அறிமுகம்

உலக இலக்கிய வகைமையில் ஒரு பேரரசின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் காப்பியங்கள் தோன்றியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறி இருக்கின்றனர். அந்தவகையில் தமிழ் நாட்டில் சோழப் பேரரசின் எழுச்சியில் கம்பராமாயணமும், அதனது வீழ்ச்சியில் பெரியபுராணமும் பாடப்பட்டிருக்கிறது. பக்தியை முதன்மைப்படுத்தி சைவசமயத்தினை நிலைநிறுத்தும் நோக்கில் பாடப்பட்ட பக்தி இலக்கியத்தின் உயரிய வடிவமே பெரியபுராணம் ஆகும்.

பல்லவர் காலத்தில் உயரிய நிலை அடைந்திருந்த பக்தி இலக்கிய வடிவம் சோழர்காலத்தில் பேரிலக்கிய வடிவமாக விரிவு பெற்றிருக்கிறது. திருமுறை இலக்கியங்கள் இறைவனை இலக்கிய கர்த்தாவாக நிலைநிறுத்த, பெரியபுராணம் அடியவர்களை இலக்கிய கர்த்தாக்களாக நிலைநிறுத்தி பக்திக்கு உருவக் குறியியலைக் கொடுத்திருக்கிறது.

பெரியபுராணம், சேக்கிழாரால் தீந்தமிழ் சுவை நிரம்பிய பக்திமணம் கமழும் தமிழ்க் காப்பியமாகவும் போற்றப்படுகிறது. பெரியபுராணம் காப்பியமா? புராணமா? என்ற ஆய்வுகளுக்கு அப்பால் புராதனச் செய்திகளைக் குறிப்பிடும் தமிழ்க் காப்பியம் என்ற வகைமைக்குள் நிலைநிறுத்தப்படுகிறது. தண்டியாசிரியர் குறிப்பிடும் வடமொழிக் காப்பிய இலக்கணத்தில் இருந்து விலகி தமிழுக்கென்று தனிக்காப்பிய மரபினைத் தோற்றுவித்த இலக்கியமாகப் பெரியபுராணம் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரருடைய திருத்தொண்டர் தொகையும், நம்பியாண்டார் நம்பியினுடைய திருத்தொண்டர் திருவந்தாதியையும் மூலமாகக் கொண்டே சேக்கிழாரது பெரியபுராணப் படைப்பியல் அமைந் திருக்கிறது.

அநபாய சோழனுக்கு முதலமைச்சராக இருந்த ஆளுமையும் சமூகம், நாடு என்பவை மீதான ஆழமான பார்வைகளும்தான் சேக்கிழாரை சிற்றிலக்கியம் பாடவிடாமல் பேரிலக்கியம் பாடத் தூண்டி இருக்கிறது. சோழப்பேரரசுக்கே உரித்தான பெருங்கர்வம் போன்றே இலக்கியத்திலும் கர்வமான காப்பிய வகைமையினை சேக்கிழார் தேர்ந்தெடுத்திருக்கலாம். அரசசபையில் சீவகசிந்தாமணியின் காமப் போதையில் இருந்த மன்னனையும் மக்களையும் மீட்கும் நோக்கம் மட்டுமன்றி சோழ சாம்ராஜ்யத்தையும், மக்களையும் மீட்கும் பொது நோக்கு நிலையிலேயே சேக்கிழாரால் பெரியபுராணம் பாடப்பட்டிருக்கிறது.

பல்லவர் காலத்தில் வீறுகொண்ட பக்தி சோழர்காலத்தில் உயரிய நிலையை அடையவேண்டும் என்று எண்ணம் சேக்கிழாருக்கு இயல்பாக ஏற்பட்டதொன்று. சோழ சாம்ராஜ்யத்தின் சரிவைத் தடுக்க பக்தி எழுச்சியே சிறந்த சாதனம் என்ற சேக்கிழாரின் மதிநுட்பம் தான் பெரியபுராணமாக மிளிர்ந்திருக்கிறது. இங்கு பக்திக்கூடாக ஒரு சமூக எழுச்சியும், சீர்திருத்தமும் உரைக்கப்பட்டிருக்கிறது. சமூகக் கட்டுமானத்தின் சிதைவுகளைச் சீர்செய்ய முனைபவையே உண்மை யான இலக்கியங்கள் என்பதை இதனூடாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

சமூதாயச் சீர்மைப்படுத்தலுக்கூடாக சம்ராஜ்ய சரிவை தடுத்து நிறுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு சேக்கிழாருக்கு இருந்திருக்கிறது. சங்கமருவிய காலம் அறத்திற்கூடாக சமூகத்தளத்தினை ஒழுங் கமைத்தது போல சோழர்காலம் பக்திக்கூடாகவும் சமூகத்தளத்தினை சீர்செய்திருக்கிறது.

'உலகெலாம்' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுத்த பெருமையோடு பாடப்பட்ட பெரியபுராணம் அடியார்கள் அறுபத்து மூவரில் தில்லைவாழ் அந்தணருக்கு அடுத்தபடியாக திருநீல கண்டரையே பாடி இருப்பது சேக்கிழாரின் சமூகப்பின்புலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மைப்படுத்தலையே வெளிக்காட்டுகிறது. பெரியபுராணத்துக்கு மூலமாக அமைந்த சுந்தரருடைய திருத்தொண்டர் தொகையிலும் தில்லைவாழ் அந்தணர்களுக்கு அடுத்தபடியாக திருநீலகண்டரே சிறப்பிக்கப்பட்டிருப்பதும் இவ்வடியாரது சிறப்புக்கருதியே ஆகும். எனவே சேக்கிழாராலும், சுந்தரராலும் முதன்மைப்படுத்தப்பட்ட இந்நாயனாரது புராணக் கட்டமைப்பினை ஆராய்வதே இக்கட்டுரை யின் நோக்கமாக அமைகிறது.

காப்பியமரபிலும், புராணமரபிலும் கவிஞன், கதைமாந்தர்களை அறிமுகப்படுத்தும் முறையில்தான் அவனது படைப்பு ஆளுமையும், காப்பிய, புராணத்திறன்களும் அமைகிறது. இவற்றில் புராணமரபில் இலக்கியம் படைக்கும் போதுதான் புலவனுக்கு அதீத ஆளுமை தேவைப்படுகிறது. காப்பிய இலக்கியக் கட்டமைப்பினையே பிரதான நோக்கமாக கொண்டிருக்கும் புராணம்; இலக்கிய அமைப்பினைவிட கருத்தியலுக்கு முதன்மை கொடுக்கும். காப்பியமும், புராணமும் வெவ்வேறு கட்டமைப்புக்களைக் கொண்டது. புராணம் புராதன செய்திகளுக்கு முதன்மை கொடுத்து பக்தியை கருப்பொருளாகக் கொள்ளும். காப்பியம் இலக்கிய கட்டமைப்புக்கு முதன்மைகொடுத்து நயங்களை அதிகளவு பிரதிபலிக்கும். இந்த வகையில் பெரியபுராணம் தமிழக்காப்பியத் தளத்தில் அமைந்திருந்தாலும் புராணச் செல்வாக்கு அதிகமாகவே காணப்படுவதனால்தான் சேக்கிழார் கூட திருத்தொண்டர் காப்பியம் என்று குறிப்பிடாமல் திருத்தொண்டர் புராணம் என்றே குறிப்பிட்டார். மேலும் காப்பியம் பொதுநிலையில் இருக்கும். இது எந்தச் சமயத்தின் கருத்தியலையும் வெளிக்கொணர பயன்படுத்தப் படும் இலக்கியவகை. ஆனால் புராணம் சிறப்பு நிலை கொண்டது. அதாவது அது சைவசமயத்தின் கருத்தியலை மட்டுமே வெளிக் கொணரப் பயன்படுத்தப்பட்ட இலக்கிய வடிவமாகும். இந்த இருவகை இலக்கியங்களிலும் புராண இலக்கியவகையே காலத்தால் முந்தியது எனலாம். இரண்டும் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டமைப்பு**

திருநீலகண்ட புராணக்கட்டமைப்பானது மூன்று தளங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. திருநீலகண்டரது வரலாற்றுச் செய்திகளுக்கு ஊடாக சமய விழுமியங்களை நிலைநிறுத்துவதே சேக்கிழாரின் நோக்காக இப்புராணத்தில் அமைந்துள்ளது. எனவேதான் அதற்கு அமைவாக புராணக்கட்டமைப்பினை ஏற்படுத்தி உள்ளார். பக்தியை ஒரு போதனை நெறியாகக் காண்பதே சைவசமயத்தின் சிறப்பாகும். எனவே பக்தியின் ஊடான பேரின்பத்தை நிலைநாட்ட சேக்கிழாருக்கு தமிழர்தம் பாரம்பரியமரபான கதை கூறும் மரபு தேவைப்பட்டு இருக்கிறது. இத்தகைய மரபிற்கூடாக அடியவரின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை மூன்று பிரதான பாத்திரங்கள் பங்கு கொள்ளும் வகையில் மூன்று தளஅமைவுகளும், மூன்று கருத்தியல் புகளும் கொண்டதாக இப்புராணக் கட்டமைப்பு விளக்குகின்றது

**முதலாவது கட்டமைப்பு**

இங்கு முதலாவது கட்டமைப்பு என்பது திருநீலகண்டரது அறிமுகத்தில் தொடங்கி மனைவியார் சத்தியம் செய்யும் வரையிலான எல்லைகளைக் கொண்டது. இக்கட்டமைப்பினுள்ளும் மூன்று உபகட்டமைப்பில் முதலாவது காப்பியம், புராணம், குறிப்பிடுகின்ற நாட்டு நகர வர்ணனை பற்றியதாகும். பொதுவாக காப்பிய, புராணத்தில் நாட்டு நகர வருணனையானது தொடக்கத்திலேயே அமைந்துவிடும் பின்னர் கதைகளுக்குள்ளோ, உபகதைகளுக்குள்ளோ அவை அமைவதல்ல. ஆனால் இவற்றில் சேக்கிழார் செய்த சிறப்பு என்னவென்றால் பெரியபுராணத்தில் ஒரு கதையாகக் காணப்படும் இத்திருநீலகண்டர் புராணத்தில் இதற்கென தனியான நாட்டு, நகர வர்ணனை சொல் லியிருப்பது, பெரியபுராணம் பல புராணங்களின் தொகுப்பாக மாபுராணம் என்ற நிலையினை அடைந்திருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

புராணம், இதிகாசம், காப்பியம் ஆகியவை ஒருகதையினையே பிரதான கதையாகக் கொண்டும், ஒருவனையே தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டும் உருவாக்கப்பட்டன. பெரியபுராணத்தில் பிரதான கதை என்று தனிஒரு கதை கூறாமல் ஒவ்வொரு அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களது கதையுமே பிரதான கதையாகக் கொண்டது சேக்கிழாரின் சமய சிந்தனை ஆற்றலைக் காட்டுகிறது. வெறுமனே இலக்கியமரபுக்குள் நின்று பாடாமல் சமயமரபுக்குள் நின்று பாடியமையால்தான் அடியார்களில் பாகுபாடு காட்டாமல் எல்லாரும் சிவனடியார் என்ற பொது நோக்கில் அனைவரது கதைக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளார்.

தலைமைப்பாத்திரம் அல்லது தன்னிகரித்தலாத் தலைவன் என்ற நிலை காப்பிய மரபுக்கே பொருந்தக் கூடியது. பெரியபுராணத்தில் சுந்தரருக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருந்தாலும் அவரது வாழ்வியல் பின்னணியோடு ஏனைய அடியவர்களின் வாழ்வியல் பின்னணியை விளக்கவில்லை. எனவே சுந்தரருக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஏனைய அடியவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

ஆகையால் புராண, இலக்கிய மரபையும் மீறி சேக்கிழார் பக்தியின் மூலமாக இலக்கியக் கட்டுடைப்பை, புதியதொரு சிந்தனை முடிச்சை இப்புராணம் மூலம் எடுத்துரைத்திருக்கிறார். இப்புராணத்தின் தொடக்கத்தில்,

"வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்"

என்று நகரவருணனையோடு தொடங்கி குலப்பெருமை கூறி அதன் பிறகே பக்தித்தளத்திற்கு வந்து இறைவனது பெருமை கூறப்படுகிறது. திருநீலண்டரை அறிமுகம் செய்யும்முன் அவரது சூழலை அறிமுகம் செய்வது என்பது மரபு மட்டும் அல்லாமல் பாத்திரக் குணப்பண்பினை அறிந்து கொள்ளும் உத்திமுறையாகவும் காணப்படுகிறது. சோழர் காலம் சமூகவியல் நோக்கிற்கு உட்பட்ட கருச்சமைகின்ற காலமாகும். பேரரசின் எழுச்சியும், வீழ்ச்சியும் சமூகம் சார்ந்ததாகவே அமைந்து விடுகிறது. ஆகவே சமூகத்தின் பிரதிபலிப்பே இலக்கியம் என்னும் கொள்கை வேரூன்றத் தொடங்கியமையால் சமூகக்கருத்தியல் தளம் சேக்கிழாரது பெரியபுராணத்திற்கு பின்னணியாக அமைந்திருக்கிறது. மனிதன் சமூகம் சார்ந்து செயற்படுவதனால் சமூகத்தின் தாக்கம் மனிதனிலும், மனிதனின் தாக்கம் சமூகத்திலும் இருந்து கொண்டே இருக்கும். ஒரு நல்ல சூழலமைவுதான் இலக்கியம் தோன்றுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுவாக இருக்கும். அத்தகைய சூழல் அமைவினை 'வேதியர் தில்லை மூதூர்' என்ற முதல் அடியிலேயே காட்டிவிடுகிறார். சமயவரலாற்றில் தில்லைக்கு உயரிய இடம் உண்டு அங்குவாழும் அந்தண குலத்தவர் களும் உயர்வாகப் போற்றப்படுபவர்கள். ஆகையால்தான் 'வேதியர் தில்லை மூதூர்' என்றார். இங்கு தில்லையினை முன்னே குறிப்பிடாது வேதியலை முன்னே குறிப்பிடுவது சமூகநிலைப்பட்ட கருத்தாகவும் நோக்க இடம் ஏற்படுகிறது. இறைவன் உறைகின்ற இடமாக இருப்பதனால்தான் தில்லை சிறப்படைகிறது என்பது சமயவாதிகள் அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இங்கு சேக்கிழார் முரண் மாற்று மூலம் வேதியர்கள் உறைகின்ற ஊராக தில்லை விளங்குகிறது என்று தில்லைக்கு வேதியர்களால் உயர்வு கொடுத்தமையானது சமூகவியல் நோக்கான இலக்கியப் படைப்புருவாக்கத்தின் கருத்து நிலை ஆகும்.

இத்தகைய சமூகம் சார்ந்த பொருண்மைக்கு முன்னுரிமை கொடுத்த சேக்கிழார் அச்சூழலமைவில் அதற்கு ஏற்றவாறு வேட்கோவர் குலத்திலும் ஒருவர் இருக்கிறார், அவர்தான் திருநீலகண்டர் என்று சுந்தரர் அடியவர்களை சமநிலைப்படுத்தியது போன்று வேதியர்களுக்கு நிகரான ஒருவரும் தில்லையில் உள்ளார் என்று பக்தி மார்க்கம் சமூக சமத்துவத்தினை பேணும் மார்க்கம் என்பதை உணர்த்தி இருக் கின்றார்.

உயரிய ஒழுக்கமும் சீரிய சிந்தனையும் கொண்ட தில்லைச் சூழலில் வாழும் அனைவரும் ஒரேதன்மையரே என குறிப்பிடுவதன் மூலம் திருநீலகண்டரது குணப்பண்புகளும் இத்தகையதே என உள்ளுறுத்தி இருக்கிறார். இது தான் கூறவந்த புராண தலமைப் பத்திரத்தை நிலைநிறுத்தும் ஒரு உத்தி முறையாகும். இப்படிப்பட்ட உயரியவராக விளங்கும் திருநீலகண்டரை

"நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார்"

என்று இறைவனது திருவடியை வாழ்த்தி வழிபடும் செயல் என்பது நலம்தரும் செயலாகும் என்று சேக்கிழாருடைய தலைமைப்பாத்திர அறிமுகம் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் இரண்டாவது உபகட்டமைப்பாக அமைவது திருநீல கண்டரை நேரடியாக அறிமுகம் செய்யும் முறையாகும். முதலாவது கட்டமைவில் திருநீலண்டரது சூழலை விளக்கிய சேக்கிழார் இப்போது அந்த சூழலமைவில் வாழும் அடியவரது பண்புநலனை வெகுவாக பாராட்டுகிறார். சோழர்கால இலக்கியப் போக்கு. அரச நிலையில் இருந்து அடியவர் நிலைக்கு சமூகம் சார்ந்த இலக்கியப் போக்கு, அரச நிலையில் இருந்து அடியவர் நிலைக்கு சமூகம் சார்ந்த இலக்கியப் படைப்புருவாக்கத்திற்கு மாறிக் கொண்டிருந்த காலமாகும். மன்னர் களையும், கடையேழுவள்ளல்களையும் புகழ்ந்து உயர்வுபடுத்திய புலவர் பரம்பரை அடியவர்களையும் அவர்களுக்குச் சமமாக மதித்து பாடும் நிலை இங்கு தோன்றிவிடுகின்றது.

பொய்கடிந்து அறத்தின் வாழ்வார் புனல்சடை முடியார்க்கு அன்பர்
மெய்யடியார்கட்கான பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின்சார்வே பொருளெனச் சாரும் நீரார்

என்ற பாடலில் திருநீலகண்டரைச் சிறப்பிக்க வந்த சேக்கிழார் கதைத் தளத்திற்கு இயைபான ஒரு கருத்துநிலையை இங்கே குறிப்பிட்டு விடுகிறார். புனல்சடை முடியார்க்கு அன்பராக விளங்கும் திருநீல கண்டர் பொய்கடிந்து அறத்தின் வாழும் தன்மை கொண்டவராவர். தில்லைவாழ் அந்தணர்களுடைய ஒழுக்கத்துக்கு நிகராக வாழ்க்கை யில் பொய்மை என்பது இல்லாது இருக்க அதனைக் கடிந்து உண்மைப் பொருளை நேசிப்பவராக அறத்தின் வழியில் ஒழுகுபவர் என்பதை 'பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்' என்று முதல் அடியிலேயே திருநீலகண்டரது வாழ்க்கை முறையை குறிப்பிட்டு விடுகிறார்.

இத்தகைய அறத்தின் வழியில் வாழும் இவர் மெய்யடியார் களுக்கான பணிகளைச் செய்யும் இல்லற தர்மத்தையும் சிறப்புற ஆற்றிவருபவர். ஆகவே திருநீலகண்டர்,

1. பொய்கடிந்தவர்
2. அடியாரைப் போற்றுபவர்
3. மனையறம் புரிந்து வாழ்பவர்
4. சைவமே சிறந்த நெறியெனக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நான்கு வகையான உயரிய குணப்பண்புகளைக் கொண்டவராக சேக்கிழாரால் காட்டப்படுகிறார். பொய்யைக் கடிபவராகவும் அடியாரை போற்றுபவராகவும் வாழும் இவரது வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதை 'மனையறம் புரிந்து வாழ்வார்' என்ற சொல் லாட்சியின் மூலம் உணர்த்தி விடுகிறார். மனையறம் புரிந்து வாழ்தல் என்பது மனைக்குரிய அறங்களை புரிந்து வாழ்தல் என்று பொருள்படும். ஆகவே சிறந்த இல்லறத் தலைவனாக அறத்தொடுநிற்றல், அடியாரை போற்றுதல், சிவனை வழிபாடல் ஆகிய அறங்களை செவ்வனவே செய்துவருபவராக திருநீலகண்டர் காணப்படுகிறார் என்று அவரது அறிமுகத்தில் உயரிய அறமும், ஒழுக்கமும் உள்ளவராக காட்டப் படுகிறது. தன்னிகரில்லாத் தலைவனுக்குரிய உயரிய கௌரவத்தை சேக்கிழார் இரண்டாவது துணைக்கட்டமைப்பில் வழங்கியுள்ளார்.

அடுத்து முதல்கட்டமைப்பின் மூன்றாவது துணைக்கட்டமைப்பு திருநீலகண்டர் புராணத்தின் மையக்கருத்தியல்புக்கு வருகிறது. காப்பியம் சமைக்கும் புலவர்களுடைய திறன் தாம்படைக்கும் பாத்திரங்களினுடைய போக்கிலேயே கதையைக் கொண்டுசெல்வ தாகும். இதற்குச் சிறந்த உதாரணமாக முதலில் கம்பரையும் அடுத்து சேக்கிழாரையும் குறிப்பிடலாம். தாங்கள் படைக்கும் பாத்திரங்களில் பாத்திரங்களுக்கு வெளியே நின்று தமது கருத்தியல்புகளைத் திணிக்காமல் பாத்திர ஒழுங்கிலேயே நகர்த்திச் செல்வார்கள். கம்ப ராமாயணத்தில் வாலிவதை படலத்தில் கம்பர் தன்னை உரசிப்பார்க்க இடம் கொடுத்தது போன்று இங்கும் பெரியபுராணத்தில் சேக்கிழார் தன்னை உரசிப்பார்க்க கொடுத்த இடமாகவே இத் திருநீலகண்டர் புராணம் அமைகிறது. முதல் இரண்டு பாடல் அடிகளிலும் நகர வருணனை, பாத்திரப்பெருமை என்பவற்றைச் சொல்லி மூன்றாவது பாடலில் திருநீலகண்டரது தொழிற்பெருமையும், கொடைச்சிறப்பும் சொல்லி இறுதியடியில்,

"...............................

இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார்"

என்று சீரிய ஒழுக்கமும், செம்மாந்த வாழ்க்கையும், உயரிய கொடைப் பண்பும் கொண்ட இவர் இறைபக்திக்கு ஆட்பட்டவரென முன்னமே சேக்கிழாரால் குறிப்பிட்டதன்பின்னர் 'இளமைமீதூர இன்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையினில் எளியரானார்' என்று சொல்வது வாலிவதைப்படலத்தில் வாலியின் பலம்பற்றி கம்பர் கூறியதோடு ஒப்பிடக் கூடியதாக உள்ளது. அங்கு 'கிட்டுறப்பொருதின்' என்ற சொல்லாட்சியும், இங்கு 'இன்பத் துறை' என்ற சொல்லாட்சியும் உரைகொள்வோரை மயக்கமுறச் செய்யவல்லன.

பெரியபுராணத்தில் 'இன்பத்துறை' என்ற சொல்லாட்சிக்கு அது சிற்றின்பத்துறையாகவும் இருக்கலாம், பேரின்பத்துறையாகவும் இருக்கலாம் என்றும் பொருள் கொள்ளலாம். பேரின்பத்துறையிலும் அகப்பட்டவர்கள் அதற்கு அடிமையாகி எளியர் ஆவார்கள். எனவே இன்பத்துறை என்பது சிற்றின்பத்துறை, பேரின்பத்துறை என்று இரண்டு பொருள் கொள்ளும் நிலையில் இவர் பேரின்பத்துறைக்கு ஆளானவர் என நிரூபிக்கத்தக்க சான்றுகளை சேக்கிழார் முதல் இரண்டு பாடல்களிலும் தெளிவாகவே காட்டியிருக்கிறார்.

சிற்றின்பம் என்பது சிறிய இன்பம் சிறுபொழுது இன்பம் என்று பொருள்படும். இச்சிற்றின்பத்தை காம ஒழுக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். இங்கு இல்லறத்தில் மனைவியோடு இன்பமாக இருப்பதும் சிற்றின்பத்தின்பாற்படும். காமமானது சமூக அங்கீகாரத் தோடு ஒழுக்கமாக நடைபெறுவதால் காம ஒழுக்கம் என்றார்கள். எனவே இல்லறத்தில் பால்நிலைக்கலப்பும் சிற்றின்பம் என்ற பொருள் நிலைக்குள்ளேயே வந்துவிடுகிறது.

எனவே மூன்றாம்பாடலில் சேக்கிழார் குறிப்பிட்ட 'இளமை மீதூர இன்பத்துறையினில் எளியர் ஆனார்' என்ற பாடல் அடியில் இன்பத்துறை என்ற சொல்லுக்கு சிற்றின்பம்தான் என்ற பொருள்பட எந்தக்குறிப்பும் முதல் இரண்டு பாடல் அடிகளிலும் சேக்கிழார் குறிப்பிடவில்லை.

காப்பியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் வரும் தலைவர் கலை களில் வல்லவனாக காண்பிப்பது இலக்கிய வழக்கு சங்க இலக்கியத்தில் மருத நிலத்து ஆடவர்கள் சிறப்பாக இத்தகைய கலைகளில் நாட்டம் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். சங்கம்மருவியகால சிலப்பதி காரத்தில் கோவலன் கலைகளில் காதலனாக இருந்திருக்கிறான். பல்லவர்காலத்தில் நாயன்மார்கள் தொடங்கி அடியவர்கள் வரையும் கலைகளில் நாட்டம் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். இதனை விட இறைவனையே ஆடல்வல்லான் என்றும் ஆடலரசன் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை படுத்தப்படுகிறது. இத்தகைய கலைகளை இன்பத்துறை, இன்பம் தரும் துறை என்று கொள்ளும் மரபும் உண்டு சோழர்கால காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் இத்தகைய நிலை காணப் பட்டது. சீவகசிந்தாமணியில் சீவகன் கலைகளில் நாட்டம் மிகுந்த வனாகக் காணப்பட்ட செய்தியையும் உற்றுநோக்குமிடத்து கலை களில் அமிழ்ந்து ரசிப்பவன் ஒருவனுக்கு அது இன்பத்துறையாகவே அமையும் என்பது திண்ணம்.

திருநீலகண்டரும் மருதநிலத்தவர்களைப் போல வாழ்க்கைக்குத் தேவையான அளவு பொருள் ஈட்டி அடியவர்களுக்கு கொடை கொடுக்கக் கூடியவராக இருந்திருக்கிறார். எனவே இத்தகைய ஒருநிலையில் மருதநிலத்தவர்கள் போல இவரும் ஆடல், பாடல், முதலிய கலைகளில் ஈடுபாடு கொண்டிருப்பதற்கும் நியாயம் உண்டு.

எனவே இன்பத்துறை என்று சேக்கிழார் குறிப்பிட்டது கலைத் துறையாக இருப்பதற்கே போதிய ஆதாரங்கள் காணப்படுவதால் அதனையே இங்கு முதன்மைப்படுத்த வேண்டி ஏற்படுகிறது. உரை யாசிரியர்கள் இன்பத்துறை என்பதற்கு சிற்றின்பத்தை குறிப்பிட்ட தற்கும் நியாயம் உண்டு. அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றாக காமக்கலை காணப்படுவதால் உரையாசிரியர்கள் குறிப்பிட்டதிலும் தவறேதும் இல்லை. ஆனால் புராண அறிமுகத்தில் ஒவ்வொரு படிநிலையாக கதைக்கட்டமைப்பை நகர்த்தும் சேக்கிழார் நகரச்சிறப்பு. பாத்திரச்சிறப்பு, குணச்சிறப்பு, கலைச்சிறப்பு என்ற ஒழுங்கிலேயே சென்றிருக்க வேண்டும் என்று துணிபதற்கே அதிக வாய்ப்பு ஏற்படு கிறது. ஆகவே இன்பத்துறை என்று சேக்கிழார் குறிப்பிட்டது கலைத்துறையாக இருக்கலாம் என்றே எண்ணப்படுகிறது. இது புராணக்கட்டமைப்பின் ஒரு கூறாகும்.

அடுத்து முதலாவது கட்டமைப்பின் மூன்றாவது துணைக் கட்டமைப்பில் திருநீலண்டரது இல்லறச் செழிப்பும் அவருடைய மனைவியார் திறனும் சேக்கிழாரால் விதந்தோதப்படுகிறது.

"அவர்தங்கண் மனைவியாரும் அருந்ததிக் கற்பின்மிக்கார். . . ."

என்று திருநீலகண்டரது இல்லறச் செழுமைக்குகக் காரணம் அவருடைய மனைவியரது கற்புத்திறமே ஆகும். இங்கு திருநீல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டரது மனைவியாரது பெயரைச் சேக்கிழார் குறிப்பிடாது விட்டது சிந்தனைக்குரியது. உலகில் கற்பிற்கு இலக்கணமாக அருந்ததியைக் குறிப்பிடுவது வழக்கம் இங்கு சேக்கிழார் அந்த அருந்ததியின் கற்பினை விட திருநீலகண்டரது மனைவியின் கற்புச் சிறந்தது என்று உரைத் திருப்பது புராணக் கதைநகர்வுக்கான ஒரு உத்திமுறை என்றும் கொள்ளலாம்.

முதல்மூன்று பாடல்களிலும் திருநீலகண்டரது சிறப்பினைச் சொன்ன சேக்கிழார் இப்பாடலில் மனைவியின் சிறப்பினை உரைத் திருப்பது புராண ஒழுங்கமைப்பினையும் கதை ஒழுங்கமைப்பினையும் காட்டுகிறது. பொதுவாக இலக்கியங்களில் பெண்ணை அறிமுகப் படுத்துவதில் அவளது கற்பின் சிறப்பு பேசப்படுவது இயல்புவழக்கு. பெண் என்றால் கற்பு என்பது நினைவுக்கு வருமளவில் இலக்கியங் களில் பெண்ணோடு மட்டுமே கற்பு தொடர்புபடுத்தி பேசப்பட்டதால் அது பெண்ணுக்குரிய ஒழுக்கமாகவே மாறிவிட்டது. அது ஆண்வழிச் சமுதாயத்தின் அரங்கேற்றுகை எனலாம். இதனையே சேக்கிழாரும் இங்கு செய்திருக்கின்றார். இங்கு மனைவியாரது கற்புநெறிதான் திருநீலகண்டரை உயரச்செய்திருப்பதோடு கற்புநெறி என்பது தனியே பெண்ணுக்கு மட்டும் உரித்தானது அல்ல அது ஆணுக்கும் உரித்தான ஒன்று என இப்புராணத்தின் மூலம் சேக்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். எனவே திருநீலகண்டரது வாழ்நிலையானது கற்புடையாளைத் துணைக் கொண்டதும், தில்லைவாழ் அந்தணர்கள் வாழும் சூழலைக் கொண்டதும், பஞ்சாட்சரத்துக்குப் பதிலாக திருநீலகண்டம் என்று உச்சரிக்கும் பக்திநெறியினைக் கொண்டமைந்ததும், அடியாரைப் போற்றிப்பணியும் பண்புநலனும் கொண்டமைந்ததாக இருந்திருக் கிறது. இறுக்கமான வேலிக்காவலுக்குள் செழித்திருக்கும் கீரைப்பாத்தி போல திருநீலகண்டரது வாழ்க்கை முறை இருந்திருக்கிறது.

இவ்வாறாக வாழ்வின் அனைத்து நிலைகளிலும் உயர்ந்திருந்த திருநீலகண்டர் ஒருநாள் பரத்தையர் பால்சென்று வந்து மனைவியின் ஊடல் தீர்க்க அவரை நெருங்கமுனைந்த போது திருநீலகண்டத்தின் மீது ஆணை இட்ட செய்தி அடுத்து கூறப்படுகிறது. இப்புராணத்தின் முதல் மூன்று பாடல்களிலும் ஆன்மீகம் பற்றிக் குறிப்பிட்ட சேக்கிழார் பின் இரண்டு பாடல்களில் ஊடல்பற்றிக் குறிப்பிடுகிறார். இங்குதான் திருநீலகண்டநாயனார் புராணத்தின் கதைக்கரு உயர்நிலை அடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திர போக்கிற்கு இயைவாக தான் கூறவந்த செய்தியை இங்கிருந்து ஆரம்பிப்பதை காணமுடிகிறது.

சோழர்காலம் அனைத்துவகையிலும் உன்னதநிலை பெற்றிருந்த காலம் என்பது ஆய்வாளர்கள் துணிபாகும். அப்படிப்பட்ட காலத்தில் மன்னனும், மக்களும் இன்பக்கலைகளில் மட்டுமே நாட்டம் கொண்டிருந்தனர். பல்லவர்காலத்தில் பாய்ந்தோடிய பக்திவெள்ளம் இங்கு தேக்கநிலை அடைந்திருந்தது. அரசசபைகளில் கூட காமச்சுவை ததும்பிய சீவகசிந்தாமணியை படித்து மகிழ்ந்திருந்தனரே ஒழிய பக்திவெள்ளத்தில் எவரும் நனையவில்லை இது முதலமைச்சராக இருந்த சேக்கிழாருக்கு நன்கு தெரிந்திருந்தது. இத்தகைய நிலையை மாற்ற எண்ணியே அவரால் பெரியபுராணம் பாடப்பட்டிருக்கிறது. இதனால்தான் ஏனைய புராணங்கள், காப்பியங்கள் கலைகளுக்கும், காமத்துக்கும் முதன்மை கொடுக்க பெரியபுராணம் பக்திக்கு முதன்மை கொடுத்திருந்தது.

பல்லவர்காலத்தில் பாய்ந்த பக்திவெள்ளம் சோழர்காலத்திலும் பாயவேண்டும் என்ற நோக்கில் உண்மை இன்பம் எதுவென்று நிலைநாட்ட சேக்கிழார் எடுத்த வரலாற்றுச் சான்றுகளில் முக்கியமான வரலாற்றுச் சான்றாக திருநீலகண்டரது புராணம் அமைகிறது. காமம் என்பது பேரின்பத்திற்கு தடையானது அது சிற்றின்பத்தையே கொடுக்கவல்லது என்ற செய்தியினை இப்புராணத்தின் மூலம் கூறிச் சென்றிருக்கிறார்.

கதைநகர்வில் திருநீலகண்டரது மனைவியார் அருந்ததிக் கற்புடையார் மட்டுமன்றி சிறந்த அழகு பொருந்தியவராகவும் காணப்படுகிறார். இதனை

"தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார்"

என சேக்கிழார் குறிப்பிடுகிறார். இங்கு திருநீலகண்டரது மனைவியாரை கற்பில் சிறந்தவள் என்றும், அழகில் உயர்ந்தவள் என்றும் உயர்வுபடுத்தி இருக்கிறார். இதில் கற்பில் சிறந்தவள் என்றால் இல்லற ஒழுக்க நியமங்களை தவறாது மேற்கொள்பவள் என்பது பொருள். இதில் தாம்பத்திய உறவும் அடங்கும். குறிப்பறிந்து நடப்பாள் பெண் என்பதற்கிணங்க திருநீலகண்டரது இல்லறத்தின் அனைத்துச் செயற் பாட்டிற்கும் உறுதுணையாகவே இருந்திருக்கிறார். எனவேதாம்பத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவில் கூட அவருக்கு இசைந்தவளாகத்தான் இருந்திருப்பாள். எனவே இல்லறத்தில் அழகான, கற்புடையமனைவி, இவரது எண்ணம் சொல், செயல் எல்லாம் திருநீலகண்டம் என்றிருக்க இடையில் இந்த பரத்தமை ஒழுக்கம் என்பது எவ்வாறு வந்தது என்பது ஆய்வுக்குரிய விடயம்.

திருநீலகண்டரது சூழலமைவும், இல்லறவாழ்வும் செம்மை சான்றதாக இருக்க அவரது போக்கும் செம்மை சான்றதாகவே முதலில் இருந்திருக்கிறது. ஆயினும் சூழல் அமைவுக்கு சற்றும் பொருந்தாத பரத்தமை நாட்டம் இவருக்கு ஏற்பட்டது எங்ஙனம்? முரண்களுக் கூடாக சேக்கிழார் போடும் முடிச்சு இறுக்கமாக அமைகிறது.

தமிழ் இலக்கியம் அகம், புறம், எனும் இரண்டு துறைகளைக் கொண்டிலங்குவது. இவற்றில் அகம் எனப்படுவது காதல் சார்ந்தது. இக்காதல் ஒழுக்கம் காமம் சார்ந்ததாகவே முதலில் அமைகிறது. இவ்வொழுக்கம் களவுநிலை, கற்புநிலை என இருவகைப்படும் இதில் கற்பு நிலையில் வைத்துத்தான் பரத்தமை ஒழுக்கம் பேசப் பட்டிருக்கிறது.

இலக்கியம் என்பது சமூகத்தின் பிரதிபலிப்பு. எனவே பரத்தமை ஒழுக்கம் என்பது இலக்கிய வரலாற்றுப்பரப்பில் சங்ககாலம் முதல் பேணப்பட்டு வந்த நடைமுறையாகும். இந்த நடைமுறை சிக்கலுக் குரிய ஒன்றாகவே காணப்படுகிறது. காரணம் காதல் என்பது தூய்மை யானதாக ஆண், பெண் ஆகிய இருபாலரிலும் ஏற்படும் பருவமாற்றம். இங்கு தலைவனுக்கும் தலைவிக்கும் பத்துவகைப் பொருத்தமும் காணப்படவேண்டும். தலைவனும் தலைவியும் ஒத்திருத்தலையே காதல் என்றனர். இதனால்தான் கைக்கிளையும், பெருந்திணையும் தூய காதல் ஒழுக்கமாகக் கொள்ளப்படவில்லை.

இவ்வளவு கட்டுப்பாடும், ஒழுக்கமும் நிறைந்த களவொழுக்கம்தான் கற்பொழுக்கமாக மாறுகிறது. களவொழுக்கத்தில் காணப்பட்ட இறுக்கமும் கட்டுக்கோப்பும் குலைந்தமைதான் கற்பொழுக்கத்தில் பரத்தமை நாட்டம் உள்நுழைய காரணமாகியது என்று எண்ணவும் தோன்றுகிறது. களவொழுக்கத்தின் வழியே கற்பொழுக்கத்துக்கு வந்த தலைவன் இடையில் பரத்தமையை நாடிச் செல்லக்காரணம் என்ன? இது முரண்தன்மையை தோற்றுவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் ஆணுக்கு வீறுணர்ச்சியாக வெளிப்படுவது என்றும், பெண்ணுக்கு படிநிலையாக உருவாவதென்றும் காமசாத்திரம் கூறு கிறது. இதனால்தான் ஆண் களவொழுக்கத்தில் இருந்து கற்பொழுக்கம் பற்றிய சிந்தனை இல்லாமல் இருக்கிறான். களவொழுக்கத்திலேயே தளம்பல் நிலையில் இருக்கும் தலைவனை நல்வழிப்படுத்தி கற்பொழுக்கத்துக்குக் கொண்டுவருபவர்கள் தலைவியும், தோழியு மாகும், பின்னர் கற்பொழுக்கத்திலும் ஆணினுடைய தளம்பல் நிலை காமம் சார்ந்ததாக, குடும்பம் என்ற பின்னணி பற்றி சிந்தியாமல் பரத்தமையை நாடிவிடுகிறது. எனவே களவொழுக்கத்திலும் சரி கற்பொழுக்கத்திலும் சரி பெண்ணானவள் மாத்திரமே பொறுப்புடனும் சமூக உயர்சிந்தனையுடனும் செயற்படுபவளாக் காணப்படுகிறாள்.

இவ்வாறு தமிழர்தம் தூய வாழ்நிலையில் பரத்தமை என்பது இடையில் புகுந்து கொண்ட ஒன்றாக விளங்கிய போதும் இதனைக் கடிவதற்கு எந்த இலக்கிய வாதிகளும், மன்னர்களும் முன்வரவில்லை. சங்ககாலம் முதல் சோழர்காலம் வரைக்கும் இது அங்கீகரிக்கப்படாத நடைமுறையாகவே இருந்து வந்துள்ளது. தூய்மையான ஒழுக்கத்தைப் போதித்த சங்கமருவிய காலத்தில் தோன்றிய திருக்குறளில் பரத்தமை ஒழுக்கத்தினை காமத்துப்பாலில் வைக்காமல் அதனை பொருட்பாலில் வள்ளுவர் வைத்ததன் நோக்கம் இது தூய்மையான காதல் என்ற நிலையினை அடையமுடியாது என்று உணர்ந்தவர் அதனை விலக்க முன்வராமைக்கு காரணம் அக்காலத்தில் அதன் செல்வாக்காக இருந்திருக்கலாம். சோழர்காலத்தில், இது மரபாகிவிடுமோ என்ற அச்ச உணர்வு சேக்கிழாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் பரத்தமை ஒழுக்கம் கேடான ஒழுக்கம் என்பதை இப்புராணத்தில் மூலம் பகிரங்கமாக கூறியுள்ளமை சைவசமயம் சமூகம் சார்ந்த சமயம் என்பதை நிரூபிப்பதாக உள்ளது.

ஆயினும் இன்னொரு கோணத்தில் நோக்கினால் திருநீல கண்டரில் ஏற்பட்ட காமமானது இயல்பா? அல்லது விபத்தா? என்பது ஆய்வுக்குரியது எது எப்படி இருப்பினும் அது கண்டிக்கப்பட வேண்டியதே என்பதை சேக்கிழார் தெளிவாக எடுத்துக்காட்டி உள்ளார். எனினும் சமயநோக்கில் இதனை ஆய்வுக்கு உட்படுத்துமிடத்து இறைவன் சுந்தரரை பூவுலகுக்கு அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்ட தற்காக கயிலையில் நடத்திய திருவிளையாடல் போன்றுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீலகண்டரிடத்திலும் இறைவன் ஒரு திருவிளையாடல் புரிந்திருக் கிறான் போலும் என்று எண்ணவும் தோன்றுகிறது. இங்கு திருநீல கண்டர் பரத்தமையிடம் சென்ற செய்கை சரியா? பிழையா? என்ற விவாதத்திற்கு வரமுன்னர் இப்பிரச்சனையை ஆன்மிக வழியில் நோக்குவதா, இலக்கிய வழியில் நோக்குவதா என்ற பிரச்சனையே மேல் எழுகிறது.

திருநீலகண்டரது செய்கையினை ஆன்மீக வழியில் நோக்கினால், பேரின்பத்திற்கு சிற்றின்பம் ஒரு தடையாகும் என்று பெரியபுராண சூசனத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் ஏலவே குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே பேரின்ப நாட்டம் கொண்ட திருநீலகண்டர் எப்படி சிற்றின்ப நாட்டம் கொண்டார் என்றால் இது அவரது ஊழ்வினையே என்று கொள்ள இடமுண்டு. இறைவன் அடியவர்களை சோதித்துப் பார்ப்ப தற்காக ஆடும் திருவிளையாடல். இது புராணங்களில் நிறையவே இடம்பெற்றிருக்கிறது. உள்ளத்தில் சபலத்தை ஏற்படுத்தினால் முத்தி கைகூடாது. விசுவாமித்திரருக்கு ஏற்பட்ட சபலம் அவரை சம்சாரி ஆக்கியது. ஆகவே உண்மை ஞானம் என்றால் ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். எனவே திருநீலகண்டரது பக்தியைச் சோதிப்பதற்காக இறைவன் வைத்த பரீட்சையில் முதலில் அவர் தோற்றுவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்த தோல்விக்குத் தண்டனையாகவே முதுமைக் காலம் வரை அவர் பெண்ணின்பம் நாடாதவராக வாழவேண்டி ஏற்பட்டது.

மேலும் பரத்தமை ஒழுக்கம் கூடா ஒழுக்கம் என்பதை சமய ரீதியாக உலகிற்கு காட்டவே திருநீலகண்டரில் இத்தகைய சபலத்தை இறைவனே ஏற்படுத்தி இருக்க வேண்டும். எனவே உலகிற்கான ஒரு நற்செய்திக்காக திருநீலகண்டர் தன்னை அறியாமல் பழியை ஏற்றுக்கொண்டார். இது அவர்செய்கை அன்று இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலாகும்.

அடுத்து இலக்கியரீதியில் நோக்குமிடத்து மருதநிலத்து ஆடவர் போன்று திருநீலகண்டரது மனதும் சபலப்பட்டிருக்கிறது. சமூகப் பின்புலம் இதற்கு காரணமாக அமையாது விட்டாலும் வறுமை இன்மை காரணமாக அமைந்திருக்கலாம். என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தைய இலக்கியங்களில் காணப்பட்ட இத்தகைய முறையை மாற்றி அமைத்து மரபுமாற்றத்தை செய்து உண்மையான வாழ்வியலை காட்டி இலக்கியரீதியிலும், வாழ்வியல்ரீதியிலும் திருநீலகண்டரது செய்கை குற்றம் என்பதை காட்டுவதற்காகவே சேக்கிழார்,

"ஆனதங்கேள்வர் ஆங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானமும் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ."

என்று 'மானமும் பொறாது வந்த' என்ற அடிகளால் அடியவரது இச்செய்கையை பொறுக்க மாட்டாமல் இருந்த குறிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

சோழர்காலத்திலும், ஏனையகாலத்திலும் கணவர் பரத்தமை வீடுசென்று வந்தது அறிந்த பெண்கள் இப்படி மானமும் பொறாது ஊடல் கொள்வார்கள் பின்னர் அது கூடலாக மாறும் இதுவே உலக வழக்காக இருக்க ஆண் பரத்தமையிடம் செல்லுதல் ஒரு சமூக அங்கீகாரமாக வந்துவிடுமோ என்ற ஐயம் சேக்கிழாருக்கு ஏற்பட்டதனால் இதனை தடுக்கும் முகமாகவே இங்கு ஊடலை உச்ச நிலைக்கு கொண்டு சென்று கணவன் போற்றும் திருநீலகண்டத்தின்மீதே ஆணையிட்டு முதன்முதலாக பரத்தமை ஒழுக்கம் கூடாது என்று பெண்வாயிலாக உறுதிபட கூறியதோடு நின்றுவிடாமல் கணவனுக்கு தண்டனை கொடுத்த புரட்சிகரமான காரியத்தை சேக்கிழார் இனங் காட்டியிருக்கிறார். எனவே பரத்தமை ஒழுக்கம் கூடா ஒழுக்கம் என்பது இதன்மூலம் பெறப்படுகிறது.

இங்கு திருநீலகண்டர் பரத்தமை வீடுசெல்வதும் அது கண்டு துணைவியார் ஊடல் கொள்வது வரைக்கும் சாதாரண அகத்திணை இலக்கிய வழக்கினைக் கையாண்ட சேக்கிழார் ஊடல் துனியில் முடிவடைவது போன்று ஊடலுக்கு அப்பால் கூடலை விளைவித்து சம்மதம் தெரிவிக்காமல்.

"தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீலகண்டம் என்றார்"

என்று பெண்புரட்சியின் வடிவத்தைக் காட்டுகிறார். இது பரத்தமை ஒழுக்கத்தை மறுதலித்த முதல் காட்சி நிறுவுகையாகும். இங்கு 'தீண்டுவீராயின் எம்மை. . . . . .' என்ற அடியில் 'எம்மை' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாட்சிக்கு எம்மைப்போன்று மற்றப் பெண்களையும் தீண்டக் கூடாது என்று திருநீலகண்டரே தெரிவித்திருக்கிறார். இருப்பினும் இலக்கிய வழக்கில் பெண்தன்னை பன்மை கொண்டு அழைப்பதும் ஊடல்நிமித்தம் இது உச்சம் பெறுவதும் இலக்கிய வழக்கில் காணக் கூடியதாக உள்ளது. எனவே இங்கு 'எம்மை' என்ற சொல்லுக்குப் பொருள் மற்றைய பெண்களையும் அல்ல அவர் ஊடலால் தன்னை புறநிலைகாட்டி கூறி இருக்கலாம் என்று எண்ணவும் தோன்றுகிறது. திருநீலகண்டரின் அப்போதைய மனநிலையில் அச்சொல்லாட்சி மற்றைய பெண்களையும்தான் என்று எண்ண வைத்திருக்கிறது. எனவே 'எம்மை' என்ற சொல்லுக்கு இருவரும் இருவேறு பொருள் கொண்டிருக்கிறன்றனர்.

திருநீலகண்டரது மனைவி 'எம்மை' என்று குறிப்பிட்டது மற்றைய பெண்களையும் என்று எண்ணாது விட்டாலும் அல்லது அவர் 'எம்மை' என்று குறிப்பிடாது விட்டாலும் மனைவி மறுத்தவிடத்து அவர் மீண்டும் பரத்தமையிடம் சென்றிருப்பாரா? இல்லையா? என்று எண்ணவும் தோன்றுகிறது. ஆகவே திருநீலகண்டரை நல்வழிப் படுத்திய சொல்லாகவும் உலகுக்கு நல்லது உரைக்க வைத்த சொல் லாகவும் இந்த 'எம்மை' என்ற சொல் காணப்படுகிறது. இச்சொல் லாட்சி சுந்தரர் வரலாற்றிலும் வருகிறது. இறைவன் சுந்தரரை தடுத் தாட்கொண்ட போது இறைவனே 'எம்மை' என்ற சொல்லாட்சியை கையாண்டு சுந்தரரை சொற்றமிழ் பாடவைத்திருக்கிறார். பட்டினத் தாருக்கு 'காதற்ற ஊசியும் வராதுகாண் கடைவழிக்கே' என்ற சொல்லாட்சி ஞானத்தைக் காட்டியது போன்று திருநீலகண்டருக்கு 'தீண்டுவீராயின் எம்மை திருநீலகண்டம்' என்ற சொல்லாட்சி ஞானத்தை போதித்திருக்கிறது.

ஆகவே திருநீலகண்டநாயனாரது புராணக் கட்டமைப்பு மூன்று கட்டமைவுகளைக் கொண்டது அதில் முதலாவது கட்டமைவு நகர வர்ணனையில் தொடங்கி மனைவியார் சத்தியம் செய்தல் வரைக்குமாக அமைந்து காணப்படுகிறது. இக்கட்டமைப்பு இறையியல், உலகியல் சார்ந்த இருதளநிலைகளில் நின்று பாடப்பட்டிருக்கிறது. சேக்கிழாரின் படைப்பாற்றலும், கதைசொல்லும் திறனும், தெளிவும், சிறந்த புராணக்கட்டமைப்பும் இதன்மூலம் புலனாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாவது கட்டமைப்பு**

இப்புராணத்தினுடைய இரண்டாவது கட்டமைப்பு திருநீலகண்டர் மனைவியின் சபதத்தில் தொடங்கி அவர்கள் முதுமைப்பருவத்தில் இறைவன் சிவனடியார் வேடம் பூண்டு வரும் வரையிலான அமைவைக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டமைப்பில் பெண்ணின் பெருமைபற்றியே சேக்கிழார் பாடி இருக்கிறார். மனைவியின் சத்தியத்தைத் தொடர்ந்து அடியவரது மன உறுதியில் தொடங்கி மூன்று பாடல்களுக்கூடாக ஆழமான கருத்தினை கூறி இருக்கிறார். இல்லறப் பெருமையும், இல்லாள்சிறப்பும், சத்தியவலிமையும் உயர்வுற காட்டப்படுகிறது.

திருநீலகண்டருடைய கீழான செயலைக் கண்டு பொறுக்கமாட்டாத வளாக சூளுரைத்ததற்கு காரணம் ஒரு கணவனைத் திருத்தி நல்வழிப் படுத்த வேண்டும் என்ற நோக்கம், மற்றது பெண்ணுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கம். இவை இரண்டும் மனை வியாரது பாத்திரத்திற்கூடாக நிறைவேற்றப்பட்டு விட்டது. இங்கு திருநீலகண்டர் விட்ட தவற்றை சேக்கிழார் இலக்கிய காட்சிப் பொருளாகவோ, அகத்திணை மரபாகவோ மட்டும் பார்க்கவில்லை. அதனை சமூகம் சார்ந்த பிரச்சனையாக நோக்கி நீண்டகாலம் தீர்க்கப் படாது இருந்த சிக்கலுக்கு விடைகாணுவதாக இக்கதை நிகழ்வு அமைகிறது.

இங்கு மனைவி சபதம் செய்தது பெண் உரிமை உண்டு என்ற செய்தியையும் அதனை ஏற்று கணவன் ஒழுகிய செய்கை பெண்ணுரி மையை அங்கீகரித்த நிகழ்வாகவும் காணப்படுகிறது. தூய பக்தி நெறிக்கான ஒழுங்கமைவாக மட்டும் இருக்காமல் சமூக நன்னெறிப் படுத்தலுக்கான முயற்சியாகவும் அமைகிறது. சேக்கிழார் திருநீலகண்ட நாயனார் புராண கதையமைப்பையும், காட்சியமைப்பையும் இலக்கிய நோக்கில் செய்திருந்தால் ஊடலுக்கு பின் கூடல் நிகழ்ந்திருக்கும் அப்படி கூடல் நிகழ்ந்திருந்தால் திருநீலகண்டநாயனார் பரத்தமையிடம் சென்றது சரியே என்பதை சேக்கிழார் ஏற்றுக் கொண்டதாகிவிடும். இது பிற இலக்கிய போக்கில் இருந்து மாறுபடாத தன்மையைக் கொண்டதாக ஆகிவிடும். எனவே, இவற்றில் இருந்து மாறுபட்டு புதிய சிந்தனை நோக்கில் இலக்கிய வழக்கையும், சமயநெறியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துத்தான் இக்காட்சியமைப்பை செய்திருக்கிறார். பரத்தமை வீடு செல்வதும், மனைவி ஊடல் கொள்வதும் கணவன் அதனைத் தீர்ப்பதற்காக மெய்யுறு புணர்ச்சிக்காக அவளை நெருங்கிவரும் வரையில் அகத்திணை மரபைப் பேணிய சேக்கிழார் அடுத்த படிநிலையில் மனைவி மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படாது சத்தியம் செய்வது சமய நெறிப்பட்ட நிலையினைக் காட்டுகிறது. உணர்வுத்தளம், அறிவுத்தளம் என இருதளநிலைகளில் உணர்வுத்தள போக்கினைக் கண்டித்து அறிவுத்தளமே சரியான முடிவினைக் கூறுவதாக சேக்கிழார் பாங்கு சேக்கிழாருடைய புலமை நயத்தை எடுத்துக்காட்டுவதோடு பக்தி நெறியின் சமூகப் பிரக்ஞையை வெளிக்காட்டுவதாகவும் அமைகிறது.

அடுத்து மனைவி இட்ட சபதத்தை திருநீலகண்டர் ஏற்காதும் விட்டிருக்கலாம் அது அவருடைய சுதந்திரம்.அப்படி அவர் ஏற்றதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்;றன. ஒன்று, பெண்ணை அடிமைப் பொருளாகவோ, போகப்பொருளாகவோ சைவம் எண்ணியிராதது. இரண்டாவது, பெண்ணை சமூக அந்தஸ்து உடையவளாக, ஆண்சமூகத்தால் மதிக்கப்படுகின்றவளாக, இல்லற ஆட்சியின் தலைமைப் பீடமாக பார்த்த காரணம் ஆகும். எனவே பெண்ணுக்கு சமுதாயத்தில் அளிக்கப்பட்ட சமத்துவமான உயரியநிலை இங்கு காட்டப்படுவதோடு தலைவன் தவறினைச் சுட்டிக்காட்ட பெரியபுராண சமுதாயம் உரிமை அளித்திருக்கிறது.

மேலும் இவர் கொண்டிருந்த ஆன்மீக நாட்டமும் மனைவியரது சொல்லை ஏற்கவைத்திருக்கிறது. இல்லறம் என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து செய்கின்ற அறமாகும். எனவே அறத்தைக் காப்பதற்காக மனைவி கொடுத்த சபதம் சரியானதே என்று அவரது ஆன்மீக ஞானத்தில் தோன்றியமையால் ஏற்றிருக்கிறார். இவர் ஏற்றதற்கு இன்னொரு காரணமும் உண்டு. திருநீலகண்டர் போற்றி வழிபடும் திருநீலகண்டத்தான் மீதே சத்தியம் செய்தமை திருநீல கண்டருக்குக் கிடைத்த வாசகதீட்சை என்றும் கருதலாம். எனவே இத்தகைய காரணங்களினால் சபலப்பட்டிருந்த திருநீலகண்டர் உண்மை ஞானத்தை தெளிந்தமையால்தான் இவளை மட்டுமல்ல மற்றைய பெண்களையும் மனத்தாலும் தீண்டேன் என்று தனக்குத் தானே சபதம் செய்து கடைசிவரைக்கும் அதனைக் காப்பாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார். இங்கு மனைவி இட்ட சத்தியத்தினை கணவன் என்ற உறவுமுறையில் நோக்காமல் குற்றம் செய்தவன் என்ற தாழ்வுணர் விலேயே நோக்கி இருக்கிறார் என்பதனை,

"....................................

போதியா ஆணைகேட்ட பெரியவர் பெயர்ந்துநீங்கி

ஏதிலார் போல நோக்கி.........................."

என்று பெரியவர் என்ற நிலையில் இருந்து நீங்கி வெளியார் போலவே நோக்கி அதனை ஏற்றிருக்கிறார். இங்கு மனைவியார் சத்தியம் செய்வதும், கணவன் அதனை ஏற்று நடப்பதும் கீழைத்தேச நாகரி கத்தின் குடும்ப உறவுநிலை இறுக்கத்தினைக் காட்டுகிறது.

இதனோடு நில்லாமல் கணவனுடைய பிழைக்கு தண்டனை கொடுத்தாரே தவிர அவரைக் கணவர் என்ற அந்தஸ்தில் இருந்து கீழிறக்கவில்லை. மெய்யுறு புணர்ச்சியை மட்டும் விடுத்து கணவனோடு சேர்ந்து கணவனுக்கான இல்லற தர்மங்களுக்கு உதவிபுரிந்து அயலவர்கள் கூட அறியாது வாழ்ந்து வந்த முறையானது பெண்ணினுடைய பெருமையினை ஒருபடி மேல்சென்று உயர்த்திக் காட்டுகிறது.

திருமணபந்தம் என்பது சைவசமயத்தவருக்கு புனிதமானது. இறைவனையே சாட்சியாக வைத்து நிகழ்த்தப்பட்ட காரியம் முறிந்து போனால் இறைவனே பொய்த்துப்போவான் என்ற எண்ணம் சமய நம்பிக்கையாக வளர்ந்த படியால் உயர்நிலையில் இருக்கும் இறைவன் கீழ்நிலை அடையக் கூடாது என்ற சமய நோக்கில் மணவினை முறிவு என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக சைவமக்களிடையே காணப்படுகிறது.

இங்கே இப்புராணத்தில் திருநீலகண்டம் மீது சத்தியம் செய்துவிட்டு மனைவி பிரிந்து சென்றிருந்தால் அதனை சமயமும், சமூகமும் ஏற்றுக் கொண்டிருக்காது. சமூகம் சார்ந்ததே சமயம் என்பதால் சமூகச் செல் நெறிப் பாங்கு சீருடையதாக இருக்கவே சமயம் விரும்பும் ஆகையால் தான் அவர்களது பிரிவு பற்றிச் சிந்தியாமல் குடும்ப உறவை வலுப் படுத்துவதில் சைவம் முன்னின்று செயற்பட்டிருக்கிறது. இது சமூக மேம்பாட்டை நோக்கிய புதியதொரு பயணம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீலகண்டத்தின் மீது சத்தியம் செய்து விட்டு கணவரை ஏற்காது விட்டிருக்கலாம். ஆனால் அது தமிழ்ப் பண்பாட்டின் முறையன்று என மனைவியார் உணர்ந்திருந்தமைதான் இந்த இரண்டாவது கட்டமைப்பு முழுவம் பெண்ணின் பெருமை பற்றியே பேசப்படுகிறது. இங்கு திருநீலகண்டரது பக்திக்கு நிகராக மனைவியின் பெருமை நிற்கிறது. இதனை சேக்கிழார்.

"கற்புறு மனைவியாரும் கணவனார்க்கு ஆன எல்லாம்
பொற்புற மெய்யுறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம்பு ஒழியாது அங்கண் இருவரும் வேறுவைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயல் அறி யாமைவாழ்ந்தார்"

என்று கணவன் விட்ட தவறுக்காக தண்டனை கொடுத்ததோடு இல்லறதர்மத்திற்கு எந்த தீங்கும் வராமல் செய்த பெருமை மனைவியையே சாரும். குடும்பப் பிணக்கு என்பது நான்கு சுவருக்குள் நடைபெறவேண்மே அன்று நான்கு பேர் முன்னிலையில் அல்ல என்ற உயர்ந்த சிந்தனையையும் குடும்பக் கட்டுக்கோப்பையும் திருநீலகண்டரது மனைவி செவ்வனவே செய்திருக்கிறார். கணவனோடு பேச்சுவார்த்தை இல்லாத நிலையில் கூட கணவர்க்கான எல்லாம் செய்த செய்கையானது குடும்பத்தலைவியினுடைய பண்பினை வெளிக்காட்டுவதாக அமைகிறது. இது பெண்ணினத்துக்கே பெருமை சேர்க்கும் செயலாகும். பெண்ணினுடைய சமூகப் பொறுப்புணர்வினை எடுத்துக் காட்டுவதற்கு சேக்கிழார் அளித்த சந்தர்ப்பம் இதுவென்றே கூறலாம். அன்புறு புணர்ச்சி இல்லாமையை அயல்கூட அறியாமல் வாழ்ந்தார்கள் என்று சேக்கிழார் குறிப்பிடுவது இருவரினதும் ஒத்த மனநிலையினை எடுத்துக் காட்டுகிறது. இது குடும்பப் பாங்கான கதைநிகழ்வாக அமைகிறது. திருநீலகண்டரது மனைவியாரது சத்தியம் சிறிதுநாள் வரைக்குமல்ல அது ஆயுள் முழுவதுமே கொடுக்கப்பட்டது. இளமைப்பருவத்தில இருந்து முதுமைப்பருவம் வரைக்கும் சத்தியத்துக்காக வாழ்ந்தார்கள் என்பது அவர்களது பக்தி விசுவாசமும், ஒழுக்கக் கட்டுக்கோப்புமாக காணப்படுகிறது. ஆனால் இதனை உலகம் அறியாமல் இருந்தால் ஒரு பயனும் இல்லையே என்பதை உணர்ந்துதான் இறைவன் சிவனடியார் வேடம் பூண்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடல் வருவதும் பின் அது கூடலாக மாறுவதும் உலக இயற்கை. ஆனால் இங்கு ஏற்பட்ட ஊடலானது சத்தியமாக மாறி இருக்கிறது. சத்தியத்திற்கு பிறகான வாழ்க்கை ஓட்டத்தில் இருவரும் இளமை உந்துதலால் சபலப்பட்ட நிலைக்கு செல்லவில்லை என்பதுதான் ஆச்சரியப்படத்தக்க விடயம். இவர்களது இறுக்கமாக இந்த இருப்புத் தான் உயர்நிலை அடையவைத்திருக்கிறது.

இங்கு திருநீலகண்டரது வைராக்கியம் இறைவன்மீது ஆணை இட்டதனால் ஏற்பட்டதா? அல்லது மனைவி கூற்றினால் ஏற்பட்டதா? என்பது விரிவாக நோக்கவேண்டியதென்று. மனைவி கூற்றினால் ஏற்பட்டதென்றால் நிச்சயம் ஊடல் கூடலாக மாறி இருக்குறம். திருநீலகண்டர் சிறந்த பக்திமானாக இருந்தாலும் மனைவியின் ஊடலைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என்ற இலக்கிய ரசனை தெரிந்திருக்கிறது. பொதுவாக பெண்ணினுடைய மனது இளகியது என்று சொல்லுவார்கள். கோபத்தில் அவளுக்கேற்பட்ட ஊடலை இலக்கிய ரசனை தெரிந்த திருநீலகண்டர் நிச்சயம் கூடலாக மாற்றி இருப்பார் அந்தளவுக்கு பக்குவமும் அவருக்கு இருந்திருக்கிறது.

திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டமைதான் அவரை வாழ்நாள் பூராகவும் நெருங்கவிடாமல் வைத்திருக்கிறது. ஏலவே பக்திநெறிக்கு ஆட்பட்டவராக அவர் விளங்கியமையால் உயர்வாக போற்றி வழிபடும் திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டமையால் அவரால் ஏற்று வாழவேண்டி இருந்தது. இங்கு பக்திக்கா, உணர்வுக்கா முதலிடம் தந்து இறுதிவரை சத்தியத்தினை பேணி இருக்கிறார். இதனால்தான் தில்லைவாழ் அந்தணர்களுக்கு அடுத்தபடியாக சுந்தரர் இவரை போற்றி இருக்கிறார். தில்லைவாழ் அந்தணர்களுடைய ஒழுக்கத்துக்கு அடுத்தபடியான ஒழுக்கத்தை பேணியவராக இவர் விளங்குகிறார். திருநீலகண்டர் மனைவிக்கு மதிப்பளித்திருந்தமை சத்தியத்தை ஏற்கவைத்தது. இறைவன்மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தமை அதனை கடைசிவரை பேண உரமூட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாவது கட்டமைப்பு**

இப்புராணத்தினுடைய மூன்றாவது கட்டமைப்பு சிவனடியார் இவர்கள் இல்லத்துக்கு எழுந்தருளுவதில் இருந்து இருவரும் இறையருளால் மீண்டும் இளமைப் பருவம் எய்தி சிவலோகம் அடைதல் வரைக்குமாக அமைகிறது. சேக்கிழார் முதல் இரண்டு கட்டமைப்புகளையும் இலக்கிய நோக்கிலும், இல்லற நோக்கிலும் படைத்து மூன்றாவது கட்டமைப்பை முற்றுமுழுதாக இறையியல் நோக்கில் பாடி இருக்கிறார். இறைவன் அடியார்க்கு எளியனாதல் என்பதற்கிணங்க இவர்களது சத்தியத்தையும், அது ஏற்பட்ட முறையினையும் உலகிற்கு உணர்த்துவதற்காக ஒரு நாடகமே செய்திருக்கிறார்.

இவர்கள் ஒழுக்கநியமத்தினால் பக்திநிலையில் முதிர்ச்சி பெற்று விட்டார்கள் என்பதை உணர்ந்த இறைவன் நேரடியாகவே அருள் வழங்கியிருக்கலாம். அதனை விடுத்து இத்தகைய ஆடம்பரம், ஆர்ப்பாட்டம் என்பதெல்லாம் என்ன நோக்கத்திற்காக என்பது சிந்தனைக்குரியது. சுந்தரரை தடுத்தாட்கொண்ட முறையிலும் இதே ஆர்ப்பாட்டத்தையே செய்திருக்கிறான். சுந்தரரையும், திருநீலகண்டரையும் ஆட்கொள்வதற்காக இறைவனே வாதம் புரிந்திருக்கிறான் விவாத்தின் மூலம் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இவர்கள் இருவருமே எனலாம். சுந்தரருக்கு நிகழத்திய விவாத நாடகம் போன்றே திருநீல கண்டருக்கும் செய்திருக்கிறான். அங்கு ஓலைகாட்டி ஆட்கொண் டிருக்கிறான். இங்கு ஓடு காட்டி ஆட்கொண்டிருக்கிறான். சுந்தரரை ஆட்கொண்ட ஆடம்பர விளம்பரத்தின் நோக்கம் உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் இறைவனுக்கு அடிமை என்று உணர்த்துவ தற்கு. திருநீலகண்டரை ஆட்கொண்டதன் ஆடம்பர விளம்பரம் பரத்தமை ஒழுக்கம் இல்லுக்குரிய ஒழுக்கம் அன்று என்பதை உணர்த்துவதற்கு.

திருநீலகண்டர் செய்த தவறும், கிடைத்த தண்டனையும் நான்கு சுவருக்கு மட்டுமே தெரியும் இதனை வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலமே இந்தப்பாடம் உலகுக்கு ஒரு பாடமாக அமையும். இங்கு இறைவனது நாடகம் திருநீலகண்டரது வீட்டுக்கு சிவனடியார் வந்து திருவோட்டினை பாதுகாத்து தருமாறு சொல்லிக் கொடுப்பதில் இருந்து ஆரம்பமாகிறது. பின்பு பாதுகாத்த ஓட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையச் செய்து விவாதத்தை இறைவனே ஆரம்பித்து வைக்கிறான்.

இங்கு விவாதமானது மூன்று கட்டங்களாக அமைகிறது. முதல் விவாதம் திருநீலகண்டரது வீட்டிலும், இரண்டாவது விவாதம் தில்லை அந்தணர் சபையிலும், மூன்றாவது விவாதம் குளத்தில் இறங்கும் போதும் நிகழ்கிறது. இவற்றில் முதல் விவாதத்தில் இறைவன் திருநீலகண்டரை 'கள்வன்' என்று குறிப்பிட்டது ஒரு புதுமையாகும். காரணம் பொதுவாக அடியார்கள் இறைவனையே கள்வன் என்பார்கள். திருஞானசம்பந்தர் தனது முதல் பதிகத்தில் 'என் உள்ளங்கவர் கள்வன்' என்று குறிப்பிடுகிறார். இங்கு திருநீலகண்டரை இறைவன் கள்வன் என்றது திருநீலகண்டரது சத்தியம் இறைவனை கவர்ந்தது என்பது பொருளாகும். ஆனால் திருநீலகண்டர் உலகியல் நடைமுறையில் பொருள் கண்டு அதனை மறுத்துரைக்கிறார்.

தன்மீது சுமத்தப்பட்ட பழியைப் போக்குவதற்காக என்ன செய்ய வேண்டும் என்று வினாவிய போதுதான் இறைவனால் முதலாவது பொறி வைக்கப்படுகிறது. அதுதான் உனது மகனை குளத்தில் மூழ்கச் செய் என்பதாகும். முழுமுதல் பொருளான இறைவனுக்கு இவருக்கு மகன் இல்லை என்று தெரியாமலில்லை அப்படி இருந்தும் புத்திரனை மூழ்கச் சொன்னமையானது திருநீலகண்டரது வாயினாலே தான் செய்த பிழையினைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே ஆகும். இவ்வாறு திருநீலகண்டர் தனக்கு மகன் இல்லை என்று கூற, இறைவன் இரண்டாவது பொறியாக உனது மனைவியின் கையினைப் பற்றி மூழ்கு என்று கூறுகிறார் அதற்கும் அவர் தனக்கும் மனைவிக்கும் ஒரு சூது உள்ளது என்று கூறினாரே ஒழிய அதனை முழுமையாகக் கூறவில்லை. அப்படி அவர் கூறாமைக்கு நாணம் காரணமல்ல. குடும்பப் பிரச்சனை அடுத்தவர் அறியாவண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காகவே. ஆனால் அந்த இடத்தில் திருநீலகண்டர் கூறி இருந்தால் அதனை இறைவன் ஏற்றிருப்பாரா? என்பதும் சிந்தனைக் குரியது. காரியத்தை அடையாளப்படுத்திய பின்பு காரணத்தை உருவாக்கும் நியதி சுந்தரரை பூவுலகிற்கு அனுப்பும் திருவிளையாட்டிலும் இடம்பெற்றிருக்கிறது. அதற்கேற்றாற் போல திருநீலகண்டர் செய்த தவறு உலகிற்கு ஒரு பாடமாக புகட்டப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எண்ணிய காரியத்திற்கு அமைவாகவே காரணங்கள் உருவாக் கப்பட்டன. இதனால் சிவனடியாரையும் திருநீலகண்டரையும் தவிர எவரும் இல்லாத வீட்டில் சத்தியத்திற்கான காரணத்தை முழுமையாக கூறி இருந்தால் அதனை இறைவன் ஏற்றிருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது. ஓட்டினை மறையச் செய்தது போன்று திருநீலகண்டரை அப்படி பேசவைத்திருக்காமை திருவருளாக இருந்திருக்கலாம்.

எனவே சபைநடுவில் வைத்து குற்றத்தை ஒப்புக் கொள்ளச்செய்து அதற்கான தண்டனையையும் வெளிக்காட்டி ஏனையவர்கள் இவ்வாறு நடக்காமல் இருக்கச் செய்வதே இறைவனது நோக்கமாக இருந் திருக்கிறது. அதற்காகவே தில்லை அந்தணர் சபைக்கு இப்பிரச்ச னையை கொண்டு சென்றிருக்கிறார். ஆயினும் இறைவனது எதிர் பார்ப்புக்கு மாறாக திருநீலகண்டர் அங்கு வேறு எதனையும் தெரிவிக்காமை அவரது பண்பு நலனைக் காட்டுகிறது இதனால்தான் அச்சபையில் சிவனடியார் சொன்னது போல மூழ்குவேன் என்று வாக்குறுதி கொடுத்தமை மதிநுட்பமான கருத்தாடலாகும்.

இருப்பினும் இறைவனது மூன்றாவது பொறி சரியாகவே வைக்கப் படுகிறது. பொதுமக்களுக்கான செய்தி பொதுமக்கள் மத்தியிலேயே அறிவிக்க சாத்தியமாகிறது. கோலின் இரண்டு முனைகளிலும் இவர்கள் தனித்தனியே பிடித்துக்கொண்டு நீரில் இறங்கும்போது இறைவன், கோலை விடுத்து மனைவியாரின் கரங்களைப் பற்றி நீரில் மூழ்கும் என்று உரைத்த பொறிதான் சரியான இடத்தை பிடித்திருக்கிறது. இந்நிலையில் அடுத்த நகர்வினை மேற்கொள்ள இறைவன் இடம் வைக்கவில்லை. எனவே பொதுமக்கள் முன்னிலையில் உண்மை யைக் கூறவேண்டியதாகிறது. இது சமூகத்திற்கான காட்சி நிரூபண விளக்கமாகும்.

எனவே பரத்தமை நாட்டம் பக்திமார்க்கத்தையும், இல்லறத்தையும் கெடுத்துவிடும். அது தமிழர் வாழ்வியலுக்கான ஒன்றல்ல என்பதை பலருக்கு உரைக்கும் முகமாக திருநீலகண்டர் என்ற பாத்திரத்திற்கு ஊடாக இறைவனே கூறி இருக்கிறான். ஒழுக்கமான வாழ்வியல்தான் உண்மையான ஆன்மீகம் என்பது இதன்மூலம் பெறப்படுகிறது. ஆகவே மூன்றாவது கட்டமைப்பை சேக்கிழார் தனக்குச் சாதகமாக பயன்படுத்தி உலகிற்கு நல்லறத்தை உரைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

திருத்தொண்டர்களின் வரலாற்றினைக் கூறும் திருத்தொண்டர் புராணம் வெறும் பக்திக்காப்பியம் மட்டுமன்றி அது சமூகத்திற்கு தேவையான பல விடயங்களை உள்ளடக்கி இருக்கிறது. பல்லவர் கால பக்தி இயக்கம் சமூகச் செம்மையே உண்மையான பக்தியின் ஊற்று என்று சமூகச் செம்மைப்படுத்துலுக்கூடாக பக்தியை முன்னெடுத்தது போலவே சோழர்காலத்திலும் சேக்கிழார் சமூகச் செம்மைப்படுத்தலுக்கூடாக பக்தி வெள்ளத்தை பாய்ந்தோட விட்டிருக்கிறார். சமூகச் செம்மையும் ஒழுக்க முன்னிலையும் தான் சமூகச் செல்நெறியைச் சீர்மைப்படுத்தும் என்பதை இப்புராணத்தின் மூலம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# திருநீலகண்ட நாயனாரும் மெய்யுணர்வும்

நாச்சியார் செல்வநாயகம் M. Phil.

**மெய்யுணர்வுப் பாடல்களாகப் பெரியபுராணம்**

பக்தி இலக்கியம் மக்களைப் பாடாது இறைவனைப் பாடுவது. இறைவனைப் பாடுவதென்றால் இறை அனுபவத்தைப் பாடுவது. இவ்விறையனுபவம் மெய்யுணர்வனுபவம். இக்கவிஞர்கள் மெய்யுணர்வுக் கவிஞர்கள். பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம் என்ற நூலில் டாக்டர் ப. அருணாசலம் மேல்வருமாறு கூறுகின்றார்.[1] இறைவனைப் பாடுதல் இரண்டு வகைப்படும். ஒன்று உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல். மற்றையது இறைவட்டத்திலிருந்து பாடுதல். சிறந்த அடியவரென்று வளர்ச்சி பெறாத ஒருவரும் இறைவனைப் பாடலாம். அப்படிப்பட்டவருக்குப் பாடல் பொருள் பலவற்றில் தெய்வமும் ஒன்றாகின்றது. தெய்வ நம்பிக்கையின் விளைவாகத் தெய்வத்தையும் பாடிவிடுகிறார். திருமறைகள் நாலாயிர திவ்விய பிரபந்தங்களுக்கும் பிற்காலத்தில் எழுந்த தாயுமானவர். குமரகுருபரர், அருணகிரிநாதர், இராமலிங்கர் போன்ற கவிஞர்களுக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உள்ளது. இறைவனைப் பாடும் பாடல் இறைவட்டத்தில் நின்று பாடும்போதே ஞானப்படலாக மெய்யுணர்வுப் பாடலாக ஆகிறது. உலகியல் வட்டத்திலிருந்து பாடும்போது தெய்வத்தைப் பாடினாலும் உலகியற் பாடலே. 'மேலும் அவர் கூறுவது' இருவகைப் பாடல் களிலும் பாடல்களைப் பொறுத்தளவில் வடிவு, கற்பனை இவற்றிற்கும் வேறாக உள்ள உணர்ச்சியில் இருவரும் விலகியே நிற்கின்றனர். ஒருவர் தெய்வ நாட்டத்தில் திளைத்து தெய்வத்தோடு ஒன்றி நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அனுபவத்தை இறைவட்டத்திலிருந்து வெளிப்படுத்த மற்றவர் இறை நம்பிக்கை என்ற பொதுவான ஈடுபாட்டில் உலகியல் வட்டத்தில் நின்று பாடுவதாகக் கூறலாம். தெய்வத்தைப் பற்றிப் பாடினாலும் ஒன்று மெய்யுணர்வுப்பாடல் (Mustic Poetry) மற்றது உலகியற் பாடல்[2]. இறைவட்டத்தில் இறைவன் அருளை முற்றாகப் பருகி அனுபவமுடையவர்கள் முதலில் ஞானியர். அடுத்துக் கவிஞர். இவ்வகையில் சேக்கிழர் பெருமானும் சிவாநுபவம் வாய்க்கப்பெற்ற ஞானக்கவி. சைவநாயன்மார்கள் சிவாநுபூதி கைவரப்பெறுவதற்குச் செய்த சிவதருமங்களைப் பற்றி அநுபூதிமானாகிய சேக்கழார் பெரியபுராணத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

அருளாகிய சக்தியும் பொருளாகிய சிவமும் பிரபஞ்சத்தின் வியாகப்பொருள். அத்தகைய பொருளை சுயநலமற்ற அன்பினால் தொண்டினால் அடையலாம் எனத் தன் ஆன்மஞான ஒளியால் மெய்யுணர்வினால் சேக்கிழார் சொன்ன பாடல்களே பெரியபுராணம். பெரியபுராணம் சிவநுபூதிச் செல்வராகிய சேக்கிழாரால் மெய்யுணர்வு பெற்ற சைவநாயன்மார்களின் சிவாநுபூதித் திறத்தை விளக்குவது என்பது யோகர்சுவாமிகளின் சீடனாகிய செல்லத்துரைச் சுவாமிகளின் திருவாக்கு.

செல்லத்துரைச் சுவாமிகள் "தென்தமிழ்ப்பயனாயுள்ள திருத் தொண்டர்தொகை" என்பது சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர்தொகையைப் போற்றிச் சொன்ன வாசகங்களுள் ஒன்று. மொழிப்பயன் உலககாரியங்கள் பலவற்றையும் போன்று உண்மை உணர்தற்கு உதவியாதலே. மொழி யில் உண்மை நூல்கள் உள்ளமையாலே அது உண்மை உணர்தற்கு உறுதுணையாய் அமைகின்றது. உண்மை நூல்களுள்ளும் உண்மை யுணர்ந்த மெய்யடியார்களது பெருமை கூறும் நூல்களே உத்தம மானவை. இத்தகைய மெய்யடியார்கள் பலரது பெருமையைத் தொகையாகக் கூறும் முதல் நூலாதலாலே திருத்தொண்டத்தொகை யைத் தென்தமிழ்ப்பயன் எனச் சேக்கிழாரடிகள் போற்றினார். இத்தகைய மெய்யடியார்கள் பற்றிய திருத்தொண்டர்தொகையை அடியொற்றி விரித்துப் பாடப்பட்டதே திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர்தொகைக்கு இறைவன் தில்லைவாழந்தணர் என அடியெடுத்துக் கொடுத்தது போலவே திருத்தொண்டர் புராணத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெலாம் என அடியெடுத்துக் கொடுத்தார். ஆதலால் இரண்டும் அருள்வழிப்பட்ட திருநூல்களே. திருத்தொண்டத்தொகையில் ஆலவித்துப் போன்று. நுட்பமாய் உரைக்கப்பெற்ற தொண்டர் சீர் பெரியபுராணத்துள் பெரிய ஆலமரம் போன்று பரக்கப் பரவப் பெறுகின்றது. ஆகவே திருத்தொண்டத்தொகைக்குச் சேக்கிழார் சூட்டிய விருது அவர்தம் திருத்தொண்டர் புராணத்துக்கும் சாலவும் பொருந்துவதாகும். எனக் குறிப்பிடுவதிலிருந்து பெரியபுராணம் மெய்யுணர்வைப் பற்றிய காப்பியமாகவிருந்து மெய்யுணர்வுக்கான நூலாகவும் இருப்பதைக் காணலாம்.

மேலும் செல்லத்துரை சுவாமிகள் பெரியபுராணம் உண்மை உணர்தற்கு உறுதுணையாக நூல் எனவும் பகவான் ரமணர் பதினேழு வயதில் ஞானம்பெறுவதற்கு உறுதுணையாகவிருந்த ஒரே ஒரு நூல் பெரியபுராணம் என ரமணர் கூறுவதாகவும் எடுத்துக் காட்டுகின்றார். சுயநலங்கடந்த தொண்டு என்ற பண்பை அநுபூதிக்கான வழியாகக் கண்டு தெளிந்து தொண்டுப் பண்பையே காப்பியத்தில் முதன்மை பெறச் செய்தவர் சேக்கிழார். இதனைச் செல்லத்துரை சுவாமிகள் "தொண்டு என்ற பண்பையே காப்பியத் தலைமை பெறுமாறு செய்து புதுவகைக் காப்பியம் புனைந்ததுடன் தமக்கெனத்தனியே காப்பிய இலக்கணமும் வகுத்துக் கொண்டவர் சேக்கிழர்"[4] எனக் குறிப்பிடுவது நோக்கற்பாலது.

தொண்டு என்னும் பண்பைக் காப்பியப் பொருளாக வைத்துக் கொண்டு 63 உதிரிக் கதைகளையும் வைத்துச் சிறந்த முறையில் காப்பியம் செய்தமை செயற்கருஞ் செயலாகும்.

சேக்கிழாருடைய காப்பியத்தின் பாவிகம் தொண்டில் விளைந்த வீரம் எனலாம் என்பது செல்லத்துரை சுவாமிகளின் கருத்தாகும். சேக்கிழாருக்கு முற்பட்ட காலங்களில் வீரம் என்பதற்குத் தரப்பட்ட பொருளை மாற்றி மனத்துணிவும் துயர்பொறுத்தலும் தொண்டு செய்தலுமே வீரம் எனப் புதுக்கொள்கை வகுக்கின்றார் சேக்கிழார். பிற காப்பியங்கள் பலருக்கும் அறிமுகமான எட்டுச்சுவைகளையே மிகுத்துப் பாடவும் பலரும் அறிந்து கொள்ளாத மெய்யுணர்வின் வெளிப்பாடான பக்திச்சுவையை சேக்கிழார் முதன்மைப்படுத்திப் பாடியுள்ளார்.[5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானியருக்கும் பிறருக்குமுள்ள வேறுபாடு ஒருவர் மலத்தோடு கூடிய நிலையிலும் பிறிதொருவர் நின்மலநிலையிலும் நின்று பாடுவதாகக் கூறுவர். திருமுறைகளை விளக்கும் சபாபதி சாவலர் திருமுறை இலக்கியங்கள் திரோதானம் நீங்கிய அருள்நாத ஒலியும் மற்றைக் கலைப்புலவர்கள் பாடிய பாடல்கள் மாயாநாத ஒலியுமாதலின் சிறிதும் தம்முள் ஒவ்வா மாணிக்கமும் செங்கல்லும் போல்வன அவை என விளக்குவார் என டாக்டர் அருணாசலம் குறிப்பிடு கின்றார்.[6]

பெரியபுராணம் சிவாநுபூதியை எடுத்துக் கூறும் ஞான அநுபவ நூல் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத் தமிழில் குறிப்பிடுகின்றார். ஞான அநுபவத்திலேயே உண்மைப் பக்தி மணம் கமழும் பெரியபுராணம் முழுமையும் அடியார்களின் வரலாறுகளைக் கூறுவதைப் பொருளாகக் கொள்ளவில்லை. அவ்வடி யார்களின் அநுபூதியை அவர்கள் அடைந்த (பெற்ற) சிவஞானத்தைக் கூறுவதாகவே அமைந்தள்ளது. பெரியபுராணம் சேக்கிழார் ஆகிய ஞானி ஒவ்வொரு அடியாரின் ஞான அநுபவத்தையும் கொண்டு நூல் முழுவதையும் ஞானரசமாகிய பக்தியைப் பருக வைக்கும் பாங்கில் அமைந்துள்ளது. பக்தர்கள் இறையனுபவத்தில் பெறும் அனுபவம் எவ்வளவு உண்மையானது என்பது பற்றி எப்.எச். பிராட்லி என்பார் சமய வாழ்க்கையில் நாம் பெறும் அனுபவத்தைவிட உண்மையானது வேறு எதுவும் இல்லை என்கிறார். பக்தி அனுபவத்தில் ஒருவன் உண்மைப்பொருளோடு தொடர்பு கொள்கிறான் என்பதை மறுப்பவன் தான் பேசுவது இன்னது என்று அறியாதவனாவான் என ஞானசம் பந்தன் கூறுகின்றார். பெரியபுராணத்துள் போற்றப்பெறும் அறுபத்து மூன்று தனியடியார்களும் கைக்கொண்ட நெறி தனித்தனி நெறி. அவ்வாறே தொகையடியார் தொகுதி ஒவ்வொன்றும் சென்ற நெறியும் தனிநெறி. திருமுறைகளில் தோய்ந்து திருவருள் அமுதத்தைப் பருகிய சேக்கிழார் சுவாமிகள் அதனை ஏனையோரும் பருகும் வண்ணம் வழிப்படுத்தும் நிலையில் பெரியபுராணம் அமைந்துள்ளது.

மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே'

என்பதே பெரியபுராணப் பாயிரம்.

சாதனையில் ஈடுபடுவோர்க்குப் பெரியபுராண நாயன்மார் தக்க திசைகாட்டியுள்ளனர். அடியார்களுக்கு அமுது செய்வித்தல் உயர்ந்த சைவ ஒழுக்கம் என்பதை பெரியபுராணம் மிக அற்புதமாக எடுத் துரைக்கின்றது. கோயிற் சொத்தைக் களவாடுதல் பாதகமான செயல் என்பது கோட்புலிநாயனாரின் திருச்சரிதத்தில் அறியக்கிடக்கின்றது. மந்திரம் ஒன்றைத் தம்மைக் காக்கும் கவசம் எனக் காதலித்துக் கைக்கொள்வதனால் திருநீலகண்டத்துக் குயவனார் 'திருநீலகண்டம்' எனும் ஆணைக்குட்பட்டது போன்றும் உருத்திர பசுபதியார் ஸ்ரீருத்திரம் ஓதியது போன்றும் ஆனாயர் அஞ்செழுத்து மந்திரம் இசைத்தமையும் குறிப்பிடத்தக்கது. சிவனடியார் வேடமே மெய்ப்பொருள் எனும் நிலையில் நின்ற மெய்ப்பொருள் நாயனாரின் அநுபூதி நிலையும் இவ்வாறு ஒவ்வொரு அடியார்களும் சிவாநுபூதிப் பேற்றைப் பெற உதவிய சாதனைகள். சைவர்களின் மெய்ப்பொருள் பேணும் வாழ்க் கைக்கு இன்றியமையாதவை. யோகர்சுவாமிகள் சாதனை உள்ள சத்தக்கள் காண்பரே' எனச் சாதனையின் வழி சிவாநுபூதி கைகூடுவதை எடுத்துக் கூறுகின்றார். இவ்வாறு பெரியபுராணம் சைவவாழ்வின் உயர் இலட்சியமாகிய சிவாநுபூதிப் பேற்றுக்குரிய சாதனைநூலாகும். 'சாதனம் இன்றிச் சாதிப்பார் இல்லை' பெரியபுராணம் முழுமையும் சாதனை இயலாகவே அமைந்தள்ளது.

சேம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுதே[8]

என்பது சிவஞானபோத 12ம் சூத்திரம். சிவஞானபோதம் கூறும் சாதனையியலில் இச்சூத்திரம் ஈற்றாக அமைந்தள்ளது. குற்றமற்ற அன்பே வடிவான சிவனடியார்களும் சிவாலயங்களும் சிவனாகக் கண்டுவழிபடக்கூடியவை 'மற்றுப்பற்றெனக்கின்றி நின் பாதமே மனம் பாவித்தேன்' என்பது அப்பர் பெருமானின் வாக்கு பசுகரணங்கள் எல்லாம் சிவகரணங்களாக மாற்றம் பெற்றவர்களே. சிவஞானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய சிவனடியார்கள் இத்தகைய சிவஞானிகளின் புனிதச் செயற் பாடுகள் மக்களை திருவருளின்வழி ஆற்றுப்படுத்துவன. சேக்கிழார் பெருமான் மனிதர்கள் பிறவிநோயை நீக்கி பேரின்பத்தை அடைவ தற்காக ஆற்றுப்படுத்தும் வகையில் திருவருள் வழிநின்று பாடிய ஞானக்கவிகளே பத்திரசத்தை ஊட்டும் பெரியபுராணமாகும்.

**திருநீலகண்ட நாயனாரும் மெய்யுணர்வும்**

'திருநீலகண்டம்' என்ற திருமந்திரத்தின்மூலம் சிவாநுபூதியைப் பெற்றவர் இவர். சிவன் திருப்பாற் கடலில் எழுந்த நஞ்சை உண்டு கண்டம் திருநீலகண்டமாகி பேரருள் செய்த திறம் திருநீலகண்டரின் மெய்யுணர்வுக்கு சாதனையாயிற்று. இறைவன் நஞ்சுண்ட பெருங் கருணைத்திறத்தை நினைத்து நினைத்து உருகி இறைவனுடன் முற்றொருமைப்படுவதற்குத் 'திருநீலகண்டம்' என்ற மந்திரம் உதவு மாற்றை திருநீலகண்டரின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகின்றது. திருநீலகண்டரின் பேர் ஊர் ஒன்றும் அறியமுடியாத நிலையில் அவர் திருவருட்பேற்றிற்கு உறுதுணையாகவிருந்த 'திருநீலகண்டம்' என்ற மந்திரத்தையே அவர் உபாசனை செய்து சிவப்பேற்றை மெய்யுணர்வை பெற்றமையின் அவர் திருநீலகண்ட நாயனாரானார். இவரின் வாழ்வு நாமும் இறைவனின் கருணையைப் பெற்று சிவாநுபூதிச் செல்வர்களாக மலர்வதற்கு இறைவனின் யாதானுமொரு கருணைச் செயலுடன் தொடர்புபட்ட நாமத்தை மெய்யன்புடன் உச்சரித்தல் (உபாசித்தல்) மூலம் கிட்ட முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. சிவஞானம் ஒன்றே சிவாநுபூதியைக் கொடுப்பது. சிவஞானத்துக்கு அடிப்படை யாக அமைவது சிவதொண்டாகும். பெரியபுராணத்தொண்டர்கள் அனைவரும் தாங்கள் செய்யும் செயலால் இறைவன் மகிழ்ந்து தங்கட்குச் சிறப்புச் செய்வான் என்றோ பிறர் மதிக்க வேண்டும் என்றோ புகழ் கிடைக்குமென்றோ தொண்டு செய்தவர்கள் அல்லர். எந்த எதிர்பார்ப்பும் இல்லாத தொண்டுக்குச் சொந்தக்காரர்கள். அவர்கள் பரம்பொருளை உள்ளத்துப் பதிய வைத்துப் பக்தி செலுத்தி, அப்புத்தி காரணமாகத் தங்களால் முடிந்த செயல்களைச் செய்தவர்கள். தங்கள் பணிக்கு இடையூறுவரின் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தரத்தயங்காதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் தொண்டு செய்து வரும் அடியவர்களின் அன்பின் திறத்தையும் தொண்டின் உறைப்பையும் உலகவர்க்கு உணர்த்த இறைவன் திருவுளம் பற்றி அவர்கள் இல்லம் தேடிச் செல்லுகின்றான். இதனைத்தான் "அடியவர் மனைகள்தொறும் சென்று அவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர்" என்கிறார் சேக்கிழார். "தொண்டரை விளக்கம் காண்" என்ற சேக்கிழார் தொடர் சிவன் இல்லந்தோறும் செல்வது அவர்களின் தொண்டினை மற்றவர்கள் அறியச் செய்வதற் காகவே என்பதை உணர்த்துகிறது.

திருத்தொண்டர்கள் தம்தம் திருத்தொண்டில் தாம்தாம் பெற்றிருக்கும் உணர்வழுத்தமாகிய உறைப்பு விசேடத்தினாலே திருத்தொண்டுக்கு எதிரிடையாக நேரும் எவ்வித சோதனைக்கும் சலிக்காது அசாமானிய பக்குவநிலையெய்துந்தருணம் பார்த்திருந்து சிவபரம்பொருள் தாமே அவரை அணுகி எதிர்பாராத வகையிற் சில சோதனை நியமங்களையும் புகுத்தி அவற்றின் சார்பில் அவர்கள் ஆத்மீக வீறும் விறலுஞ் சொரூபித்தெழக்கண்டு உலகறியக்காட்டும் பாங்கு சிவனது பரத்துவ விசேடப் பண்பாகும்.[9]

திருநீலகண்டநாயனார் உலகநிலையில் கல்வியில் செல்வத்தில் குலத்தில் உயர்ந்தவர் அல்லர். மிகச் சாதாரணமான குயவர் குலத்தில் பிறந்தவர். சிதம்பரத்துச் சிற்சபையிலே சிவகாமியம்மையார் காண அற்புதத் தனிக்கூத்தாடும் நடராசப்பெருமானை நாளும் வாழ்த்தி வழிபடும் நியமமுடையவர். அத்துடன் இறையன்பர் பணி செய்வதும் அவ்வடியவரின் ஓர் அருஞ்செயல். எனவே தாம் ஆக்கும் மட்கலங் களில் சிறந்தனவற்றை அடியவர் அமுது செய்வதற்காக இலவசமாக அளிப்பதை வழக்கமாகக் கொண்டவர். அவருக்கு ஏற்ற சிவபக்தை ஒருவர் மனைவியாக வாய்க்கப்பெற்றவர். அத்துணைவியாருடன் தருமநெறி பிசகாது மனையறம் புரிந்து வந்தவர். இதனைப் பெரிய புராணம்.

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம்நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்.[10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கடிந் தறத்தின் வாழ்வர் புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட்கான பணிசெயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்பே பொருளெனச் சாருநீரார். [11]

சிவசக்தி அடியார்பத்திகளிற் சிறந்தவராய் இல்லறத்தில் வாழும் இயல்புடையவர் திருநீலகண்டநாயனார். சிவனை வணங்கும் போதெல்லாம் திருநீலகண்டம் எனப்போற்றி வணங்குவதால் திருநீலகண்டர் எனப் பெணர் பெற்றவர்.

புவனங்கள் உய்ய ஐயர் பொங்கு நஞ்சுண்ண யாம்செய்
தவநின்று தடுத்த தென்னத் தகைத்து தான் தரித்ததென்று
சிவன் எந்தை கண்டம் தன்னைத் திருநீலகண்டம் என்பார்.[12]

தம்முடைய மனைவி இருப்பவும் தம்மனசிலே தலைப்பட்ட காம மிகுதியினாலே சிவதருமத்தில் விலக்கப்பட்டதாய பரத்தைப் புணர்ச் சியைச் செய்தார். இதனால் அவர் மனைவி கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டு அவரைத் தீண்டும்படி சென்றபொழுது

"தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்றார்.[13]

அதாவது திருநீலகண்டத்தின் மீது ஆணையிடுகின்றேன் எம்மைத் தீண்டுதல் கூடாது என்றார் அம்மையார் இதைக்கேட்ட திருநீல கண்டர்,

"ஆதியார் நீலகண்டத் தளவுநாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணைகேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நீக்கி" எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன் மனதினும் தீண்டேன் என்றார்.[14]

எப்பொருட்கும் ஆதியாய்வரின் திருநீலகண்டத்திடை தான் வைத்திருந்த பற்று அம்மையிடத்து அநுபவித்திட வேண்டுமெனக் கொண்ட இன்பத்தின் ஆசையை உடனே பேதித்து வேறாகி அந்த ஆணையைக் கேட்ட அப்பெரியவர் உடன் அவ்விடம் விடுத்து நீங்கி அம்மையாரை தமது சுகத்திற்கு உரியவரல்லாத வேறொரு பெண்போல நினைத்து பார்த்து பெண்ணே நீ உன்னைமட்டும் தனித்து கூறிவிடாது பல பெண்களையும் பொதுவாகக் கொண்ட சொல்லாக எம்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டுவீராயின் என்றதனால் நான் உன்னையன்றி மற்ற மாதரையும் மனதாலும் கூட தீண்டமாட்டேன் என்றார்.

தமது மனைவியார் சிவனைச்சுட்டி எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம் எனச் சிவனைச் சுட்டி இட்ட ஆணைகடத்தல் சிவத் துரோகமாம் என்பது பற்றி மனைவியைத்தானும் புணராதொழித்தார் எனவே இவரது சிவபக்தி மகிமை வியக்கத்தக்கது இவ்வியப்பு நோக்கியே

பட்டினத்துப்பிள்ளையார்
மாதுசொன்ன சூளாலிளமை துறக்க
வல்லேனல்லேன் என்றார்.
இளமையாயுள்ள இருவரும் ஒருவரை ஒருவர்
தீண்டாது இறையன்பில் திளைத்து வாழ்ந்தனர்.
இளமையின் மிக்குளார்கள் இருவரும் அறியநின்ற
ஆளவில்சீர் ஆணை போற்றி ஆண்டுகள் பலவுட் செல்ல
வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்புவந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்தச் சாயார்[15]

இந்நிலையில் திருநீலகண்டரின் சத்தியநெறி பேணும் தன்மையை உலகவருக்குக் காட்டவும், அவர் திருநீலகண்டத்தில் வைத்த மாறாத பக்தியை உலகோர் அறிந்துகொள்ளவும் அருளாடலை மேற்கொண்டு சிவயோகியாக வடிவுகொண்டு திருநீலகண்டரின் மனைக்குச் சிவன் சென்றார் "ஆன்மீகப் பயணம் என்பது தெய்வீக அன்பு என்னும் இறுதியான இலக்கை பூர்த்தி செய்வது. சமஸ்கிரதத்தில் பக்தி என்பது மனிதன் எல்லையில்லா அண்டவெளியுடன் பகிர்ந்தகொள்வது என்று பொருள்படும் தெய்வத்துடன் பகிர்ந்து கொண்வதும் பிரகாச மாக ஒளிர்வதும் தான் பக்தி. ஆன்மீகம் என்றாலே அன்பின் பயணம் தான். அன்பு என்பது அளவில்லாத எல்லையேயில்லாத விரிவுணர்வு என்பது பரமபூஸ்ய ஸ்ரீலஸ்ரீ ரவிசங்கரின் கருத்தாகும்.[16] அன்பும் அகங்காரமும் எப்போதும் முரண்பாடானவை. அகங்காரம் என்ற உணர்வு கட்டுப்பட்ட எல்லை. அன்பு என்றால் பரந்து விரிவடைவது எல்லையற்ற முடிவில்லாத நிலையை அடைவது.

"பக்தி என்பது ஞானத்தின் விளைவாக இறைவனிடம் உணர்ச்சி ஒன்றி நிற்றல்" ஆகும். உயர்ந்த பக்தி இறைவனைப் பற்றிய பூரண ஞானம் கைகூடாதபோது அமையுமொன்றாகவிருக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது கருணையென்னும் காற்று வீசிக்கொண்டிருந்தாலும், நம் வாழ்க்கைத் தோணியிலுள்ள பாயை நாம் விரித்தாலன்றித் தோணி பிறவிக்கடலின் மீது ஓடாது. எனவே இறைவனிடம் முற்றாகத் தன்னை ஒப்படைக்கும் பக்தியின் தொடக்கநிலையில் தன்முயற்சி என்ற ஒன்றுண்டு. தொடக்க நிலையிலும் நம்முயற்சி சிறிது. இறை யருளே பெரிது. நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் இறைவன் நம்மை நோக்கிப் பலஅடி எடுத்து வைத்து வருகிறான். இறைவனே முடிவில் சாதனமாகவும் சாத்தியமாகவும் உள்ளான். இவ்வாறு கொள்வது அன்பின் முதிர்ச்சி மட்டுமன்று ஞானத்தின் முதிர்ச்சியுமதுவே. ஞானம் என்பது மற்றாக அருளினால் விளைவதே.[17] சிவநெறியினர் கூறும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களும் பக்தியின் அடிப்படையிலேயே தோற்றம் பெறுவன.

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய - வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணாவரன்.[18]

என்பது மெய்கண்ட சாத்திரம் இறைவனிடம் காட்டும் அன்பு நெறியின் படிகளாகச் சித்தாந்தம் நான்கு மார்க்கங்களையும் குறிப்பிடு கின்றது.

அன்பு என்பதே தெய்வீக ஐக்கியம்தான். ஆழ்ந்த பக்தியைப் போன்று ஆச்சரியப்படத்தக்கது. உன்னதமானது வேறு ஒன்றும் இல்லை. பக்6 (பூஜ்யம்) அன்பினிலிருந்து வரும் பேரானந்த நிலை மிக உன்னதமானது. கடவுள் பக்திதான் அன்பின் உன்னதநிலை. அதுவே. அன்பின் சிகரம். (பக் 15) அன்புச் சக்தி அருளை ஈர்க்கின்றது. இதனால் இறை சந்நிதி கிட்டுகின்றது.

அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுதூட்டி[19]
அருளால் என் அகம் புகுத்தானே
அருளாலே இறைவன் எம் அகத்தில் புகுகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு, மனம், ஆன்மா என்ற பகுதிகளால் ஆனவன் மனிதன். இதில் உடம்பும் மனமும் மாறக்கூடியவை எனவே அவை நிழல், ஆன்மா மாறாதது. அது நிஜம். நிழலுடன் நம்மை ஒன்றுபடுத்துவதை விட்டு விட்டு நிஜத்துடன் ஒன்றுபடுத்திக் காணவேண்டும். எனவே உடம்பையும் மனத்தையும் தவிர நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது. உண்மையில் நாம் உடம்போ மனமோ அல்ல. இவை இரண்டையும் கருவிகளாகக் கொண்டது. ஆன்மா என்ற உண்மையை அனுபவபூர்வமாக அனுபூதியில் உணர்வதே வாழ்க்கையின் லட்சியம்.

ஆன்மா என்ற ஒன்று இருப்பதால்தான் நாம் பார்க்க முடிகிறது. கேட்கமுடிகிறது. அனுபவிக்க முடிகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் வாழ்க்கையை வாழ முடிகிறது". ஆன்மா இருப்பதால்தான் கேட்க முடியாதவற்றைக் கேட்க முடிகிறது. சிந்திக்க முடியாதவற்றை சிந்திக்க முடிகிறது. அறிய முடியாதவற்றை அறிய முடிகிறது.

யேன அச்ருதம் சருதம் பவதி அமதம் மதம்
அவிஜ்ஞாதம் விஜஞாதம்[20]

சிவதருமச் செயலாகிய சிவநாமத்தை உச்சரித்தலை எவ்வித உலக போக நுகர்ச்சிக்காவன்றி இறைவன்மீது கொண்ட மாறாத பேரன் பினால் உச்சரித்தமையின் சிவாநுபவமாகிய மெய்யுணர்வைப் பெறுகின்றார். திருநீலகண்டர் கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கியவராகப் பெரியபுராணத்தின் மூலம் அறியப்படுபவர். இவர் பக்திவலையிற் படுபவன் சிவன் திருநீலகண்டத்து மாறாத பக்தி கொண்ட நாயகாரின் பக்தித் திறத்தை உலகமக்களுக்கு வெளிப்படுத்தக் கருணை கொண்டார் சிவன். எனவே நீலகண்டரின் மனையிற் புகுந்த சிவன் அவரால் உபசரிக் கப்பட்டபின் அவரிடத்தில் ஓர் ஓட்டைக்கொடுத்து அதைப் பேணிப் பாதுகாத்துத் தரும்படி கூறிவிட்டுச் சென்றுவிட்டார். செல்லும்போது அது ஒப்பற்ற பொருள் அதனைப் பேணிப்பாதுகாத்து தாம் திரும்பவும் கேட்கும்போது தரும்படியும் கூறிச்சென்றார்.

பின்பொருநாள் அவ்வோட்டினைத் தரும்படி சிவயோகியாராக வந்த சிவன் கேட்டபோது எங்கும் தேடியும் காணாது செய்வதறியாது சிவன் முன்பு திகைத்து நின்றார் ஓட்டைக் காணாது திகைத்து நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீலகண்ட நாயனார் புதிய அதிசிறந்த ஓடு ஒன்றை அதற்குப் பதிலாகத் தருவதாகக் கூறினார். பரமனார் அதற்கு இயைய மறுத்து, உன்னுடைய மகனைக்கொண்டு குளத்தினில் மூழ்கிச் சத்தியம் செய்க என உரைத்தருளினார். தன்னிடம் மகனில்லாமையைக் கூறக்கேட்ட பரமனார் மனைவியின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடுத்திடுவாய் என மொழிந்தார். மனைவியைத் தீண்டா திருந்த திருநீலகண்டர்.

"எங்களில், ஓர் சாபத்தால் உடன் மூழ்க இசையவில்லை
பொங்குபுனல் யான் மூழ்கித் தருகின்றேன்" [21]

என்று கூறலும் பரமனார் நான் தந்த அடைக்கலப்பொருளை திருப் பித்தராது அதனை இழந்துவிட்டாய் என்பதனை மனைவி கைப்பிடித்து சத்தியம் செய்ய மறுக்கின்றாய். எனவே தில்லைவாழ் அந்தணர்கள் வழக்கு விசாரிக்கக்கூடும் சபையிடத்தே சென்று சொல்லுவோம் என்று கூட்டிச் சென்றார். அங்கு நடந்தவற்றை வாதியான பரமனாரும் பிரதிவாதியான திருநீலகண்டரும் உரைத்தனர். தில்லைவாழ் அந்தணர் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடுக்கும்படி பிரதிவாதிக்குக் கட்டளை இட்டனர். குயவனார் தன் மனைவியடம் தாங்கள் முன்பு செய்த வாக்குறுதியின்படி இருவரும் ஒருவரையொருவர் தீண்டாமல் மூங்கில் தண்டொன்றின் இருமுனையிலும் இருவரும் பிடித்து குளத்தில் மூழ்கினர். இதைக்கண்ட பரமனார் மனைவியின் கையினைப் பிடித்தே மூழ்குவீர் என்று கூற குயவனார் தமது மனைவியாரைத் தீண்ட முடியாத காரணத்தை யாவரும் கேட்கும் வண்ணம் கூறியவாறே மூழ்கினார்.

வாவியில் மூழ்கி ஏறும் கணவரும் மனைவியாரும்
மேவிய மூப்புநீங்கி விருப்புறும் இளமைபெற்றுத்
தேவரும் முனிவர்தாமும் சிறப்பொடு பொழியும் தெய்வப்
பூவின்மா மழையின் மீளமூழ்குவார் போன்று தோன்ற[22]

திருநீலகண்டரும் துணைவியாரும் பேரின்பத்தை ஏற்படுத்துகின்ற இளமைப்பருவத்தைக் கொண்டு விளங்கினார். சிவயோகியாக வந்த சிவனைக் காணாது அனைவரும் மருண்டு நின்றனர். அப்போது,

"துன்னிய விகம்பினூடு துணையுடன் விடைமேற்கண்டார்"[23]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைக் கண்ட அனைவரும் கைகளுக்கான தொண்டாகிய கூப்பித்தொழுதலைச் செய்தனர். திருநீலகண்ட நாயனாரின் பக்தித் திறத்தை தேவர்கள் போற்றினார்கள். திருநீலகண்டரும் மனைவி யாரும் இறைவனைப் போற்றித் துதிசெய்தனர்.

"மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் முனைகள் தோறும்
சேன்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
"வென்ற ஐம்புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும் இவ் இளமை நீங்கா"[24] தென்றெழுந்தருளினாரே.

"விறலுடைத் தொண்டானாரும் வேண்ணாகைச் செவ்வாய் மென்தோள்
அறலியற் கூந்தலாளாம் மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை எய்திப்
பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே"[25]

'எம்மைத் தீண்டுவீரேல் திருநீலகண்டம்' என்ற வார்த்தை நீலகண்ட நாயனாருக்கு சிவஞானத்தை உதிப்பித்தது. எனவே சிவனிடத்திலே சிந்தை மழுவதும் உணர்வுபூர்வமாக ஒன்றிவிடுகிறது. தன்னிற் சிவம்பிரகாசிக்கத் தான் அதன் தண்ணிழலில் ஒதுங்கிக் கொள்ளும் ஆன்ம சுத்தி இடம் பெறுகின்றது. அதன் தொடர்ச்சியாக சிவயோகம் வாய்க்கப்பெறுகின்றமை மேற்போந்த விடயங்களால் தெளிவுறுத்தப் படுகின்றது.

உலகிருளை விலக்கிப் பேரருளுண்மையறியுமாறு கண்ணுக்கு உபகரிக்குஞ் சூரியன் போலப் பெரும் பிரகாசமாயெழுந்து ஆன்மாவைச் சார்ந்த மலவிருளை விலக்கி அதனிடத்திற் பதிவிருக்குஞ் சிவபரம் பொருளையும் ஆன்மாவுக்குக் காட்டுந் திருவருள் விளக்கமே ஞானம் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இந்த ஞானமானது சிவனாலேயே அருளப்பட்டு சிவனையே அறியவல்ல ஞானமாதலால் சிவஞானம் என்றும் வழங்கப்படுகின்றது. இத்தகைய ஞானப்பேற்றைப் பெறுவதற்கான ஏதுவாக 'திருநீலகண்டம்' என்ற மந்திரத்தினூடாகச் சிவனிடம் சரணடைந்தவர் திருநீலகண்டர். திருநீலகண்டர் சிவனின் கருணைத் திறத்தைக் கொண்ட மந்திரமாகிய திருநீலகண்டம் என்ற மந்திரத்தை உச்சரிப்பதன் மூலமும் அதனோடு இயைந்த அருட் செயலை உன்னுவதன் மூலமும் மெய்யுணர்வு தலைப்படக் கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஆன்ம முயற்சியினால் மெய்யுணர்வு தலைப்படுவதாக சைவசித்தாந்தம் கூறாது. ஆன்ம முயற்சியும் திருவருள் வீழ்ச்சியும் இணையும் போது மெய்யுணர்தலும் அதன் பேறாகிய பேரின்பமும் கைகூடுவதொன்றாகும் எனக் கூறுகின்றது. சரண் அடைதல் என்பது விடுதலை சுதந்திரம் என்பவற்றைக் கொடுப்பது. அன்பின் உயர்ந்த உன்னதநிலை சரணமடைதல் என்று கூறப்படு கின்றது. அங்கு முழுமையாக பூரணமான ஆன்மா முடிவில்லாத அழிவில்லாத சக்தி யுடன் ஒன்றாகி விடுகின்றது. அளவிற்கு உட்பட்ட ஆற்றல் சக்தியில் இருந்து அளவு இல்லாத சமுத்திரத்தைப் போல் உள்ள ஆன்மசக்திக்கு வருவதுதான் சரணடைதல் என்பதன் அர்த்தமாகும் அளவிற்குள் இருந்து அளவில்லாததற்கு வளருவதும் தெய்வத்துடனும் எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் ப்ரும்மாண்ட சக்தியுடனும் ஸதா நிலைத்திருக்கும் த்துவத்துடனும் ஐக்கியமாவது தான் சரணடைதல். அதீதமான ஆழ்ந்த அன்பிலேயே சரணடையலாம் திருநீலகண்டர், நீலகண்டரைச் சரணடைந்தார்.

மனிதன் தெய்வத்திடம் செலுத்தும் அன்பே பேரன்பு. இப்பேரன்பே பேரின்பத்தைக் கொடுக்கின்றது. எல்லையற்ற அன்பு எல்லையற்ற இன்பத்துக்கு வழியாக அமைவதனை திருநீலகண்டரின் வரலாறு வெளிப்படுத்தி நிற்கின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

1. டாக்டர். அருணாசலம், ப.. பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973, ப. 90.
2. மேலது, ப. 93.
3. செல்லத்தரை சுவாமிகள், சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பெரியபுராண வசனம், சிவதொண்டன் சபை, 2005, பதிப்புரை.
4. மேலது.
5. மேலது.
6. டாக்டர். அருணாசலம், ப., பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1973, ப. 104.
7. பெரியபுராணம், பாயிரம் 4 (திருக்கூட்டம்).
8. சிவஞானபோதம் 12ம் சூத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கந்தையா, மு. திருத்தொண்டர் புராண மூலமும் சூசனமும், ப. 46.
10. பெரியபுராணம் திருநீலகண்டநாயனார் புராணம், பாடல். 1.
11. மேலது, பாடல் 2.
12. மேலது பாடல் 4.
13. மேலது பாடல் 6.
14. மேலது பாடல் 7.
15. மேலது பாடல் 9.
16. பரபூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அருளிய நாரதபக்தி சூத்திரங்கள் (அன்பின் நீதி உரைகள்) Thanslation of Narada Bhakti Sutra, 2006.
17. டாக்டர். அருணாசலம், ப., பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973, ப. 141.
18. திருக்களிற்றுப்படியார், 15.
19. திருமந்திரம், 1769.
20. சாந்தோக்கிய உபநிடதம், 6.1.3.
21. பெரியபுராணம் திருநீலகண்டநாயனார் புராணம், 29.
22. மேலது 39.
23. மேலது 40.
24. மேலது 42.
25. மேலது 43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# சிறுத்தொண்டர் புராணத்தின் கட்டமைப்பு

செல்வி செல்வ அம்பிகை நடராஜா M.Phil.

**பக்திக் காப்பியம்**

கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை செயற்பட்டு வந்த பக்தி இயக்கம் தேவார திருவாசகங்களையும் நாலயிரம் திவ்விய பிரபந்தங்களையும் அளித்தது. பக்திக் காலத்தை அடுத்து வந்த காப்பிய காலத்தில் கம்பராமாயணம், பெரியபுராணம் என்னும் இரு பெருந்தமிழ்க் காப்பியங்கள் தோன்றின. இவற்றை அடுத்துத் தோன்றிய கந்த புராணம், வில்லி பாரதம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம் போன்றவையும் வைதிக சமய இலக் கியங்கள் ஆகும். எனினும் இவற்றுக்கில்லாத ஒரு தனிச்சிறப்பு பெரிய புராணத்திற்கு உண்டு. மேற்குறித்த பக்தி இலக்கியங்கள் எல்லாம் இறைவனையும் அவனுடைய அற்புதங்களையும் கூறுவன வாயினும் அடியார்களின் பெருமையைப் பேசவில்லை. அடியார் களின் பக்தி அனுபவத்தைப் பாடுபொருளாகக் கொள்ளவில்லை. இறைதொண்டு பற்றிப் பேசவில்லை. பெரியபுராணம் ஒன்று மட்டுமே சைவ அடியார்களுள் தலைசிறந்த அறுபத்து மூன்று நாயன்மார்களையும் தொகையடியார்களாகிய ஒன்பது பேரையும் பக்தி அனுபவம் என்னும் ஒரே தன்மையால் காட்டி அவர்களது பக்தி வரலாற்றைக் காப்பிய நிலைக்கு உயர்த்திக் காட்டியுள்ளது. சுருங்கக் கூறின் பல்வேறு சிவனடியார்களின் அடியார்க்கு அடியார்களின் பக்தித்திறன் வெளிப் பட்ட வரலாறுகளின் தொகுப்பு நூலே பெரியபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம்பிரான் தமர்கள்திருத்
தொண்டேத்தல் உறுகின்றேன்."

எனச் சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்தின் இறுதியில் கூறுகின்றார். 'திருத்தொண்டேத்துதல்' என்ற உணர்வே இந்நூலை எழுதக் காரணம் என்பதை ஆசிரியர் கூற்றாலேயே அறிந்து கொள்ள முடிகின்றது. பக்திச் சுவையை முதன்முதலில் சேக்கிழார்தான் படைத்துக் காப்பியமாக்கினார். பெரியபுராணம் பக்திச் சுவையைப் பாவிகமாகவும் அடியார் பெருமையை பாடுபொருளாகவும் கொண்டு தனிச் சிறப்புப் பெற்று விளங்குவதால் 'பக்திக் காப்பியம்' என அழைக்கப்படுகின்றது.

**பெரியபுராணம் எழுந்த சூழல்**

பல்லவர் காலத்தையடுத்து வந்த சோழர்காலத்தில் வைதிக சமயங்கள் செழிப்புற்று விளங்கின. கலை இலக்கியங்கள் வளமைபெற்றன. காப்பியங்கள் என்னும் பேரிலக்கிய வகை தமிழிலே புத்துயிரும் புத்தெழுச்சியும் பெற்று வளர்ந்தன. இக்காலத்தில் எழுந்த காப்பியங்கள் பெரும்பான்மையும் மொழிபெயர்ப்பாகச் சமணசமயக் கருத்துக்களின் இலக்கியப் பிரசாரமாக அமைந்தன. இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில் சோழப்பேரரசு ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது. வீழ்ச்சிப் பாதையில் செல்லும் சோழப்பேரரசைத் தடுத்து நிறுத்திப் பழைய நிலைக்குச் செலுத்தச் செய்யப் பெற்ற முயற்சிதான் பெரிய புராணம். குறிக்கோள் இல்லாமல் மன்னனும் மக்களும் வாழ்ந்தால் எவ்வளவு சிறப்புடனும் செல்வத்துடனும் அமைந்தாலும் அவ்வாழ்வில் பயனில்லை என்பதை வெளியிடமுயன்ற பயனே பெரியபுராணம். சேக்கிழார் பெரியபுராணம் இயற்ற நேர்ந்த அண்மைச்சூழலைப் பற்றிச் சேக்கிழார் புராணம் கூறுவதைப் பெரியபுராணச் சொற் பொழிவில் நடேசக் கவுண்டர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அக்காலத்தில் நாட்டு மக்கள் பலர் சீவகசிந்தாமணி எனும் சமணக் காப்பியத்தை மெய்யென்று நம்பிக் கற்று உமிக்குத்திக் கை வருந்துவோர் போலவும் மலடு கறந்து எய்த்தோர் போலவும் குளிர் பூங்சோலை வழியிருக்கக் குழியில் விழுந்து சேறு பூசிக் கொண்டோர் போலவும் கரும்பிருக்க இரும்பு கடித்தோர் போலவும் விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தோர் போலவும் வருந்திருந்தனர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ வேந்தன் சீவகசிந்தாமணியைப் பாராட்டிக் கேட்போனாக இருந்தான். அதனைக் கண்டு சேக்கிழாரும் இளவரசனை நோக்கி, 'சமணர் பொய்நூல் இது மறுமைக்கும் ஆகாது இம்மைக்கும் அப்படியே மறுமைக்கும் உறுதி தரும்' என்று கூறியருளினார். சோழ வேந்தனும் சிவகதை பற்றிய விரிவான விளக்கத்தைக் கேட்கச் சேக்கிழாரும் சுருக்கமாகத் திருத்தொண்டர் தொகையையும் திருத்தொண்டர் திருவந்தாதியும் கூறுவனவற்றை விரிந்துரைத்தார். அதுகேட்டு அரசன் வியந்து அவ்வரலாறுகளைப் பெருங்காப்பியமாகச் செய்து தருமாறு வேண்டினான். சேக்கிழாரும் தில்லை சென்று 'உலகெலாம்' என்னும் திருவாக்குப் பெற்றுப் பெரியபுராணத்தைப் பாடினார். சேக்கிழார் மன்னனுக்கும் மக்களுக்கும் அறிவுச் சுடர் கொளுத்தும் பணியை மேற்கொண்டார். அதன் பயனாக எழுந்ததே பெரியபுராணம் ஆகும்.

## பெரியபுராணத்திற்குரிய மூலங்கள்

சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு ஆதாரமாக அமைந்த முதனூல் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற திருத்தொண்டர் தொகை ஆகும். இந்நூலை ஒட்டி இவர்க்கு அடுத்து நம்பியாண்டர் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலினைச் சிறிது விளக்கமாக எழுதினார். இவ்விரண்டு நூல்களையும் சேக்கிழார்தம் புராணத்திற்கு அடிப்படை ஆதாரமாக வைத்துக்கொண்டார். இவற்றைவிட மூவர் தேவாரங்கள். திருமூலரின் திருமந்திரம், காரைக்காலம்மையார் பாடல்கள், கழற்றறிவார் நாயனார் பாடல்கள், ஐயடிகள் காடவர் கோனின் பாடல்கள் ஆகியன சேக்கிழார் பெரியபுராணம் பாடுவ தற்குத் துணைபுரிந்த நூல்களாகும். இச்சான்றுகளுக்கும் மேலதிகமாக பழங்காலத் தமிழ் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சிற்பங்கள், ஓவியங்கள், உலகவழக்கிற்கேட்ட சரித வரலாறுகள் ஆகியனவும் சேக்கிழாருக்கு உதவின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேக்கிழாரின் நோக்கம்

சேக்கிழாருடைய பெரியபுராணம் மக்கள் அனைவரும் உயர்ந்த குறிக்கோளையும் கடமையையும் கொண்டு வாழவேண்டுமென்பதை தொண்டர்களின் வாழ்வியலினூடாக எடுத்துக்காட்டத் தோன்றிய நூல். சைவசமயத்தின் அடிப்படைநோக்கம் தொண்டு என்பதே. அத்தகைய தொண்டின் சிறப்பைக் கூறுவதே அவருடைய முதன்மை நோக்கம். தொண்டு என்பதைக் காப்பியப் பொருளாக்கி, தொண்டர்கள் என்பவர்கள் தூயபக்தி மனப்பாங்குடன் வாழ்க்கை நடத்தும்போது எப்படியெல்லாம் செயற்படுவார்கள் என்பதை அடியார்களின் வாழ்வியலினூடாக விளக்கியுள்ளார். 'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பது சான்றோர் வாக்கு. இப்பழைய கருத்து நிலை கொள்கையாகப் பேசப்படும் வரை மக்கள் மனதில் இடம்பெறாது. இந்தக்கருத்து மக்கள் எல்லோரிடமும் பரவவேண்டும். அவர்கள் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். இந்தக் கருத்துக்குச் சேக்கிழார் காப்பிய வடிவம் தந்துள்ளார். சைவம், சமயம், என்ற நிலைகளுக்கு அப்பால் அடியவர்கள் என்பவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர்கள் என்ற கருத்து இக்காப்பியத்தினூடாக வெளிப்படு கின்றது. வழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பதோடு மட்டு மல்லாமல் மக்கள்தொண்டு என்ற உயர்ந்த குறிக்கோளை உடைய வர்களாக இறையடியார்கள் விளங்கவேண்டும் என்ற உலகம் தழுவிய எண்ணம் வளரவேண்டும். இக்கருத்துநிலை சேக்கிழாரின் தமிழகம் என்ற எல்லையைக் கடந்து நின்ற உலக நோக்கைக் காட்டு கின்றது.

### சிறுதொண்ட நாயனார் புராண அமைப்பு

பெரிய புராணத்தை இயற்றிய சேக்கிழார், அதனை இரண்டு காண்டங்களாகப் பிரித்ததோடு அக்காண்டங்களுள் பதின்மூன்று சருக்கங்களை அமைத்து அச்சருக்கங்களில் எழுபத்தியிரண்டு புராணங் களை உள்ளடக்கியதாக 4281 பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார். இந்நூல் அமைப்பு நிலையைப் பின்வருமாறு காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம்
இரு காண்டங்கள்

| முதற்காண்டம் 5 சருக்கங்கள் | இரண்டாம் காண்டம் 8 சருக்கங்கள் |
|---|---|
| 1. திருமலைச் சருக்கம் | 6. வம்பறாவண்டுச் சருக்கம் |
| 2. தில்லைவாழ் அந்தணர்ச் சருக்கம் | 7. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் |
| 3. இலைமலிந்த சருக்கம் | 8. பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் |
| 4. மும்மையால் உலகாண்ட சருக்கம் | 9. கறைகண்டன் சருக்கம் |
| 5. திருநின்ற சருக்கம் | 10. கடல்சூழ்ந்த சருக்கம் |
| | 11. பக்தராய்ப் பணிவார்சருக்கம் |
| | 12. மன்னியசீர்ச்சருக்கம் |
| | 13. வெள்ளானைச் சருக்கம் |

இதில் ஏழாவது சருக்கமாகிய 'வார்கொண்ட வனமுலையாள்' சருக்கத்தில் சாக்கிய நாயனார் புராணம், சிறப்புலிநாயனார் புராணம், சிறுத்தொண்டர் நாயனார் புராணம், சேரமான் பெருமான் நாயனார் புராணம், கணநாதர் நாயனார் புராணம், கூற்றுவநாயனார் புராணம் என ஆறு அடியவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்றாவது அடியார் புராணமாக சிறுத்தொண்டர் நாயனார் புராணம் அமைந்துள்ளது. மொத்தமாக 88 பாக்களில் சிறுத்தொண்ட நாயனாரின் வரலாறு பாடப்பட்டுள்ளது.

தனியார்களின் வரிசையில் உள்ள அறுபத்துமூன்று நாயன்மார்கள் அனைவரும் சிவபெருமானிடத்தில் அளவில்லாத அன்புடைய வர்கள். இவர்களின் வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்து நிற்பது தொண்டுள்ளம். மக்கள் தொண்டு என்ற வகையில் பல்வேறு பணிகளை நாயன்மார்கள் ஆற்றியுள்ளதைப் பெரியபுராணம் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளது. பெரிய புராணத்தில் வரும் அடியார்களில் பெரும்பாலனவர்களின் வரலாற்றில் சோறிட்டுப் பசி போக்கிய செய்தி பேசப்படுகின்றது.

இவ்வுலகில் சோறிட்டுப் பசிபோக்கும் பணி உயர்வானது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (புறம். 18) எனத் தமிழ் இலக் கியமான புறநானூறு உணவிடுதல் தொண்டின் சிறப்பைப் பாடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவால்தான் உயிர்வாழ முடியும். உணவு இல்லாவிடின் உயிர்வாழ முடியாது. உணவு கொடுப்போர்தான் உயிரைக் கொடுப்பவர் ஆவார் என்ற கருத்தைப் புறநானூற்றின் பாடலடி வெளிப்படுத்துகின்றது. நாயன்மார்கள் சிவனடியார்களுக்கு உணவிடும் பணியைப் பல்வேறு வகையில் ஆற்றியுள்ளனர். அவர்கள் அப்பணியை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட இடர்களையும் அவற்றை வென்று பணியை நிறை வேற்றியமையையும் சேக்கிழார் நயமாகப் பாடியுள்ளார். உணவிடுதல் என்னும் தொண்டு நெறியில் சிவனடியாருக்காகத் தன்னுடைய ஒரே மகனையும் அரிந்து பிள்ளைக்கறி அமுது படைத்தவர் சிறுத் தொண்டராவார். பட்டினத்தார் பெரிய புராணத்தில் வரும் மூன்று நாயன்மார் வரலாற்றில் ஈடுபாடு கொண்டு பாடியுள்ளார்.

"வாளான் மகவரிந்துூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாவிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந் தப்பவல்லேனல்ல னானினிச்சென்
றாளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்கே "

சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் ஆகிய மூவரின் வரலாற்றிலும் மனம் கொண்டு இவர்கள் செய்த எந்தச் செயலையும் நான் செய்ய முடியவில்லையே அப்படியிருக்கும் போது நான் எப்படி காளத்தி நாதருக்கு ஆட்பட முடியும்? என்று கேட்கிறார். சுந்தரர் தன்னுடைய திருத்தொண்டர் தொகையிலே 'செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டற்கடியேன்' எனப் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பி சிறுத்தொண்டரைப் பற்றி திருத்தொண்டர் திருவந்தாதியிலே சற்று விளக்கமாகப் பாடியுள்ளார்.

"புலியி னதளுடைப் புண்ணியற் கினமு தாத்தனதோ
ரொலியின் சதங்கைக் குதலைப் புதல்வ னுடறுணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன் கண்டீர்
மலியும் பொழிலொண்செங் காட்டங் குடியவர் மன்னவனே."

சிறுத் தொண்டருடைய செயல் சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத ஒன்று. அவருடைய தொண்டுள்ளமே சிவனடியார் கேட்டதை அளித்து பரஞ்சோதியார் என்ற நிலையிலிருந்து சிறுத் தொண்டராக உயர்த்த வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுத்தொண்டர் புராணக்கட்டமைப்பு**

ஒரு காப்பியத்தைப் பாடும் புலவர் அதை எவ்வாறு தொடங்குகின்றான்; தன் சிந்தனைக்கு ஏற்றவாறு அதில் எந்தெந்த நிலைகளுக்குச் சிறப்பிடம் தருகின்றான்; காப்பியத்தை எவ்வாறு கூறிச் செல்கின்றான்; எவ்வாறு முடிக்கின்றான் என்னும் அமைப்பே காப்பிக்கட்டமைப் பாகும். காப்பியச் செய்திகள் தொடர்ந்து கூறப்பட்டுச் செல்லும் நிலையில் அதன் உயிர் நிலையான கூறுகள் சிலவற்றைக் காணலாம். அவற்றைக் காப்பியக் கட்டமைப்புக் கூறுகள் என்று கருதலாம். கட்டமைப்பு என்பது பொதுவாகக் காப்பிய வடிவத்தையே குறிக்கும். புலவன் பாடற்பொருளைக் காப்பியத்தில் அமைத்துள்ள முறையே காப்பியக் கட்டமைப்பு என்று கூறலாம்.

ஒவ்வொரு காப்பியத்திற்கும் ஒரு கட்டமைப்பு உண்டு. இவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது ஒன்றின் கட்டமைப்பு மற்றவற்றிலிருந்து மாறுபட்டு விளங்குவதைக் காணமுடிகின்றது. கதை, கதையமைப்பு. பாடுபொருள் நிகழ்ச்சிகளின் ஒருமைப்பாடு, பொருள்தொடர்நிலை ஆகிய கூறுகள் காப்பியத்தின் அகக் கட்டமைப்புக்கு அடித்தளங்களாக விளங்குகின்றன.

சிறுத்தொண்டர் புராணத்தின் கட்டமைப்பைப் பிரதானமாக மூன்று கட்டங்களாக வகுத்துப் பார்க்கலாம். அவை பின்வருமாறு அமையும்.

- 1ஆவது கட்டமைப்பு - நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த தன்னலமற்ற தன்மை (1-40 வரிகள்)
- 2ஆவது கட்டமைப்பு - சிவனடியார்களுக்கு உணவளிக்கும் பணியில் உயர்ந்த நிலை (41-96 வரிகள்)
- 3ஆவது கட்டமைப்பு - சிவனடியாருக்காகத் தன் ஒரே மகனையும் இழக்கத் துணிந்த நிலை.

**நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த தன்னலமற்ற தன்மை**

ஒவ்வொரு புராண அடியாரின் அற்புத வாழ்க்கையைக் கூறும்போது தொடக்கத்தில் அவர்கள் சார்ந்த ஊர்ப்பின்னணியை சில கதைகளுக்கு நாட்டு வருணனையாகவும் சில கதைகளுக்கு நகர் வருணனையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் சுருக்கமாக அமைத்துள்ளார். சில புராணங்களுக்கு இந்த வருணனை இடம் பெறாமலும் உள்ளது. இவ்வருணனை கூறுவதை ஒரு மரபாகத் தன் நூலில் ஆசிரியர் பின்பற்ற முனைந்துள்ளார். சிறுத்தொண்டரின் ஊரான திருச்செங்காட்டங்குடியின் பின்னணியைச் சேக்கிழார் சுருக்கமாக வருணித்துள்ளார். 'காவேரித் திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங்குடியாகும்' என்ற வரி மருதநிலப் பின்னணியைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. சிறுத்தொண்டரின் இயற்பெயர் பரஞ்சோதியார். இவருடைய குலம் மாமாத்திரர் என்ப தாகும்.

சிறுத்தொண்டர் உலகியல் வாழ்க்கையிலும் ஆன்மீக வாழ்க் கையிலும் சிறந்து விளங்கினார் என்பதைச் சேக்கிழார் காட்டியுள்ளார். அவர் வடமொழி தென்மொழி இரண்டிலும் புலமைத்தரம் பெற்றவர். சம்பந்தரும், 'சிறப்புலவன் சிறுத்தொண்டன்' என்று குறிப்பிடுகின்றார். சேக்கிழார் இவர் கல்வியறிவு பற்றி விமர்ச்சிக்கையில் ஆயுள்வேதக் கலை, வடநூற்கலை, ஆயுதப்பயிற்சிக் கலை போன்ற உலகியல் கலைகளை ஒரு பகுதியாகவும் 'உள்ளநிறை கலைத்துறைகள்' என ஆன்மீகக் கலைகளை ஒரு பகுதியாகவும் குறிப்பிட்டு இக்கலை களால் 'தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன்கழறிற் றெளிவு' என்ற ஞனமும் அவ்வுணர்வினால் நேரும் பக்தியும் மேற்கொண்டு அவர் திருத்தொண்டில் ஈடுபட்டு ஒழுகிய வரலாற்றைத் தெரிவித் துள்ளார்.

இவர் இராஜசிம்மபல்லவ அரசனைச் சேர்ந்து சேனாதிபதியாகி நாட்டுக்கடமைகளில் ஈடுபட்டார். அரசனோடு படை நடத்திச் சென்று பல தேசங்களை வென்று அவனால் நன்குமதிக்கப்பட்டவர். ஒருமுறை வடதேசம் சென்று வாதாவி நகரை வென்ற பலவகைப் பொருட்களை அரசனுக்கு முன் கொண்டு வந்தார். அரசனும் அவருடைய வலிமை யைப் புகழ்ந்து பேசினான். அவரை அறிந்த அமைச்சர்கள் அரசனுக்கு 'மதியணிந்தார் திருத் தொண்டு வாய்த்த வலியுடைமையினால் எதிரிவருக் கிவ்வுலகில்லை' என எடுத்துரைத்தனர். அது கேட்டு அரசனும் சிவனுடைய திருத்தொண்டர் என அறியாது போர்முனை யில் விட்டிருந்தேனே என மனம் வருந்தி. பிழை பொருத்தருளல் வேண்டும் என வணங்கினார். சிறுத்தொண்டரும் 'அரசே நான் எனது உரிமைத் தொழிலுக்கு அடுத்த திறத்தைச் செய்வேன் அதனால் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு' என்னுரைத்தார். அரசனும் அவருக்கு நிறைந்த செல்வங்களை அளித்து தனக்குப் பணி விடுத்துச் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டு செய்யுமாறு விடை கொடுத்தான்.

சிறுத்தொண்டர், நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த தன்னலமற்ற மனிதர் என்பதைச் சேக்கிழார் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். சிவப்பணியில் ஈடுபட்டிருந்தாலும் போர்க்களத்தில் தனக்கு வழங்கப் பட்ட கடமைகளை இனிது நிறைவேற்றிக் கடமை வீரனாக அமைகின்றார்.

**சிவனடியார்களுக்கு உணவளிக்கும் பணியில் உயர்ந்த நிலை**

சிறுத்தொண்டர் இல்லறம் என்னும் நல்லறம் ஆற்றிய பாங்கு இப்பகுதியில் சேக்கிழாரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பரஞ் சோதியார் தம் திருப்பதி மீண்டு வந்து கணபதீச்சரப் பெருமானை வழிபட்டு வாழ்ந்து வரும் நாளில் திருவெண்காட்டு நங்கை என்னும் மங்கையை மணந்து இல்லற தர்மம் பேணி ஒழுகினார். இதனைச் சேக்கிழாரும்,

"தீதில்குடிப் பிறந்திரு வெண்காட்டு நங்கை எனும்
காதல்மனைக் கிழத்தியார் கருத்தொன்றை வரும்பெருமை
நீதிமனை அறம் புரியும் நீர்மையினை நிற்பார்"

எனக் காட்டியள்ளார். கணவன் மனைவி இருவருமே எண்ணம், சொல், செயல் என்ற மூன்றிலும் ஒருமித்த கருத்தையே உடையவர்கள் என்பதைக் 'கருத்தொன்ற' என்ற சொல்லால் சேக்கிழார் புலப் படுத்தியுள்ளார். நாள்தோறும் தாம் உண்பதற்கு முன் சிவனடியார் ஒருவரோ அல்லது பலரையோ வரவேற்று உபசரித்து அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அந்த உணவை அவர்களுக்கு அளித்து அவர்கள் மகிழ்ந்து பின்பே தாம் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சிவனடியார்களை அன்போடு வழிபட்டு அவர்கள் திருமுன்னே மிகச் சிறியராக ஒழுகின்றமையால் அவருக்குச் 'சிறுத்தொண்டர்' என்ற பெயர் வழங்கப்பட்டது. 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற திருக்குறள் குறிக்கும் பெருமை இலக்கணத்துக்கு நாயனார் பண்பு முற்றிலும் பொருத்தமானதாகும். 'சிறுமை அணியுமாந் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து' என திருக்குறள் கூறும் சிறுமை இலக்கணத்துக்கு நேர் விரோதமாக இவருடைய திருப்பெயரிலுள்ள சிறுமையும் பெருமையைக் குறித்தே வழங்கப்படுகின்றது. சிவனடியார்களை அரியர் எனவும் இவர் முன்னிலையில் தன்மைச் சிறியராகவும் பணிந்து கொள்வதாலும் சிறுத்தொண்டர் என்ற பெயர் வழங்கப்பட்டது. இவர்களின் நல்லறம் நிறைந்த மனைமாட்சியின் பயனாக திருவெண்காட்டு நங்கையிடத்திலே சீராளதேவர் என்னும் புத்திரர் அவதரித்தார். புதல்வன் பிறந்த பொழுது மகிழ்வெய்தி அப்பிள்ளைக்குப் பருவ நிலைகளில் செய்ய வேண்டிய சிறப்புக்களைச் செய்தனர். ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்வித்துக் கல்வி பயிலப் பள்ளியில் இருத்தினர். இந் நாளில் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்து அவராலே திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடியருளப்பட்டார்.

பல்லவ சேனாதிபதியாக நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணிபுரிந்த பரஞ்சோதியார் இல்லறத்தில் இணைந்து நல்லறமாற்றி சிவனடியார் விரும்புவன அளித்து சிறுத்தொண்டராக தம்பணியில் உயர்ந்த வகையினை இப்பகுதியால் சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார்.

**சிவனடியாருக்காகத் தன் ஒரே மகனையம் இடிக்கத்துணிந்த நிலை**

சிறுத்தொண்டர் நாயனார் புராணத்தின் முக்கியமான பகுதி இதுவாகும். சிவபெருமான் சிறுத் தொண்டரின் ஆத்மிக வல்லமையை உலகறியச் செய்யும் பொருட்டு வைரவத்திருவேடம் கொண்டு சிறுத்தொண்டரின் இல்லம் அடைகின்றார். வாயிலில் நின்று 'சிறுத்தொண்டர் உளரோ?' என வினாவ தாதியாராகிய சந்தன நங்கையார் முன்வந்து வணங்கி 'அவர் சிவனடியார்களைத் தேடிப் போய்விட்டார் தேவரீர் உள்ளே எழுந்தருளும்' என்றார். வைரவர் 'பெண்கள் இருக்கும் இடத்தில் நாம் தனியே புகோம்' என்று கூற திருவெண்காட்டு நங்கையார் அதைக்கேட்டு "சுவாமி, எனது கணவர் சிவனடியாருக்குத் திருவமுது செய்விப்பவர். இன்றைக்கு ஒருவரையும் காணாமையினால் தேடிப் போய்விட்டார். தங்களது திருவேடத்தைக் கண்டால் மகிழ்வார் உள்ளே எழுந்தருளியிரும்" என்ற விண்ணப்பஞ் செய்தார். வைரவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி மரத்தின்கீழ் இருக்கிறோம் அவர் வந்தால் தெரிவியுங்கள்" என்று சொல்லிச் சென்றார்.

சிறுத்தொண்டரும் சிவனடியார்களைக் காணாது இல்லம் திரும்பி மனைவியிடம் கூறித் துக்கித்தார். திருவெண்காட்டு நங்கையரும் வைரவர் வந்த செய்தியைக் கணவனிடம் தெரிவித்தார். சிறுத் தொண்டரும் மகிழ்வுற்று கணபதீச்சரம் கோயில் சென்று வைரவரை வணங்கி நின்றார். வைரவரும் 'பெரிய சிறுத்தொண்டர் நீரோ' எனத் திருவாய் மலர்ந்தருளினார். அவரும் "சிவனடியார்கள் கருணை யினால் அடியவனை அப்படி அழைப்பார்கள் இன்று திருவமுது செய்வித்தற்கு யாரையும் காணவில்லை சுவாமியைக் கண்டுவிட்டேன் அடியேனின் இல்லத்திற்கு எழுந்தருளி திருவமுது செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். இந்தத் தருணத்தில்தான் சிறுத் தொண்டரின் உணவிடுதல் பணியின் தொண்டுறுதியைப் பரிசோதனை செய்யும் காலம் ஏற்பட்டது. சிவபெருமானும் சோதனைகளை ஏற்படுத்தப் பொருத்தமான வகையில் திருக்கோலம் கொண்டு எழுந்தருளியிருந்தார். அச்சம் தரும் வைரவக் கோலம் கடுமையும் கனிவும் கலந்த நிறுத்திட்டமான பேச்சு சிறுத்தொண்டர் உணவிடுதல் பணியில் கொண்டிருந்த உறுதியைப் பரிசோதிக்கும் வகையில் வைரவருடைய பேச்சும் நிபந்தனைகளும் அமைந்தன இல்லத்திற்கு திருவமுது செய்வதற்கு அழைத்த சிறுத்தொண்டரை நோக்கி வைரவரும் "நம்மை அமுது செய்வித்தல் உம்மால் முடியாது. அது மிக அருமை" என்கிறார் அதற்குச் சிறுத் தொண்டரும்,

"தண்ணார் இதழி முடியார்தம் அடியார் தலைப்பட் டால் தேட
ஒண்ணா தனவும் உளவாகும் அருமை இல்லை"

என உரைத்தார் வைரவரும் பின்வருமாறு நிபந்தனைகள் இடுகின்றார்.

1. பசுமாமிசம் வேண்டும்
2. அதுவும் நரப் பசு
3. அப்பசு ஐந்து வயதுக்குள்ளாக இருத்தல்
4. உறுப்பில் மறுவற்றது
5. ஒரு குடிக்கு ஒரு மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அந்தப் பிள்ளையைத் தாய் பிடிக்கத் தந்தை அரிய வேண்டும்
7. இந் நிகழ்ச்சி நடைபெறும் பொழுது தாய், தந்தை, மகன் மூவரும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்.
8. அரியப்பட்ட பிள்ளைக் கறியை சமைக்கும் பொழுது மனதில் கலக்கமோ துன்பமோ இருக்கக் கூடாது.

வைரவருடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு இல்லம் சென்ற சிறுத்தொண்டர் நடந்தவைகளை மனைவியிடம் கூறினார். அதைக் கேட்ட மனைவியார் அவ்வடியாரை திருவமுது செய்விக்கும் பொருட்டு ஒரு குடிக்கு ஒரு சிறுவனைப் பெறுவது எப்படி? என வினாவினார்.

அதற்குச் சிறுத்தொண்டரும்,

நினைவு நிரம்ப நிதி கொடுத்தால்
தருவார் உளரே நேர்நின்று
தனையன் தன்னைத் தந்தை தாய்
அரிவார் இல்லை

என்று விடை பகர்கின்றார். நிறைந்த நிதி கொடுக்கப் பிள்ளையைப் பெறலாம் என்றாலும், அப்பிள்ளையின் தாய் தந்தையர் அப்பிள்ளையை அரியமாட்டார்கள் என்பது சிறுத் தொண்டரின் உலகியல் அறிவைக் காட்டுகின்றது. சிறுத்தொண்டர் தாம் பெற்ற பிள்ளையைக் கறி சமைக்க முடிவு செய்துவிட்டார். மனைவியைப் பார்த்து 'எனை இங்கு உய்ய நீ பயந்தான் தன்னை அழைப்போம் யாம்' என்று கூறி முடித்தார். சேக்கிழார் மூன்று அற்புதமான சொற்களை இவ்வடியில் கையாண்டுள்ளார். 'என்னை இங்கு உய்ய' என்ற சொல் நான் உயிரை விடாமல் வாழவேண்டுமானால் என்ற பொருளைத் தருகின்றது. சிவனடியார் விரும்புவதை அளிப்பவன் என்று சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அவ்வாறில்லாவிடில் உயிர் வாழ்வதில் பயனில்லை. 'நீ பயந்தான் தன்னை' என்பது நீ பெற்ற பிள்ளையை என்பது பொருளாகும். பத்து மாதங்கள் கருவிலே சுமந்து உதிரத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்த்தவள் என்ற வகையில் தந்தையை விடத் தாய்க்கு உரிமை அதிகம் என்பது இவ்வடிகளால் புலப்படுகின்றது. 'அழைப்போம் யாம்' என்பது தனியே பிள்ளையை அழைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைச் செய்யாமல் இருவரும் சேர்ந்தே அழைப்போம். தொடர்ந்து பிள்ளையை அரிந்து கறி சமைக்கும் பணியைச் சேர்ந்தே செய்வோம் என்ற பொருளைத் தருகின்றது.

மனைவியாரும் சிறுத்தொண்டரின் பேச்சுக்கு இசைந்து "நன்மைக் காக்க வருமணியைச் சென்று பள்ளியினின்றும் அழைத்து வாரும் என்றார். சிறுத்தொண்டரும் மகனைப் பள்ளியினின்றும் அழைத்து வந்தார். திருவெண்காட்டு நங்கையரும் மகனை நீராட்டிக் கோலஞ் செய்து கணவன் கையில் கொடுத்தார். தந்தையாரும் மகனை உலகத்தவர்கள் அறியாவண்ணம் மறைவிடம் கொண்டு போனார். தாயார் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு வந்தார். தந்தையார் மகனை எடுத்துத் தலையைப் பிடிக்க, தாயார் அம்மகனுடைய இரண்டு கால்களையுந் தம்முடைய மடியிலே இடுக்கி அவர் கைகள் இரண்டையும் தம்முடைய கைகளினால் பிடிக்க அம்மகனும் தம்முடைய தாய் தந்தையார் மிக மகிழ்கின்றாரென்று மகிழ்ந்து நகை செய்ய தந்தையார் மனமகிழ்ச்சியோடு மகனுடைய தலையை அரிதலாகிய அரிய செய்கையைச் செய்தார். திருவெண்காட்டு நங்கையார் தலையின் இறைச்சியைக் கழித்து நீக்கும்படி சந்தனத் தாதியாரிடம் கொடுத்துவிட்டு மற்றைய உறுப்புக்களின் இறைச்சிகளை பாகம் பண்ணி வேறு கறியமுதுகளும் செய்து சமையல் முடிவுற்றதை நாயகருக்குத் தெரிவித்தார். பெண்மையிடம் இயல்பாகவுள்ள மனவுரத்தினைச் சேக்கிழார் திருவெண்காட்டு நங்கையார் மூலம் காட்டியுள்ளார். பெற்றதாய் பிள்ளையை அரிய ஒருநாளும் சம்மதிக்க மாட்டாள். ஆனால் தனது கணவன் கொண்டுள்ள குறிக்கோளும் கடமையும் என்றும் மாறாமல் இருக்க கணவனோடு இணைந்து பணியாற்றும் திருவெண்காட்டு நங்கையின் மன வைராக்கியம் போற்றத்தக்கது.

சிறுத்தொண்டருக்கு ஏற்பட்ட சோதனைகள் இத்துடன் நிறைவு பெறவில்லை. வைரவர் இட்ட நிபந்தனைகளுக்கு அமைய உணவு தயாரிக்கப்பட்டது. திருவமுது செய்யும் காலமும் ஏற்பட்டது. மேலும் நிபந்தனைக்கு மேல் நிபந்தனை தொடங்குகின்றது. அமுது கறி படைத்ததும் எங்கே தலைக்கறி என்பது கேள்வி சந்தனத்தாதியாரும் அடியார் திருவமுது செய்யும் பொழுது நினைக்க வரும் என்று கூறி தலைக்கறியைக் கொடுக்கின்றார். அதுவும் வந்த பின் எமக்குத் தனித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண முடியாது சிவனடியாரொருவரைக் கொண்டு வாரும் என்பது அடுத்த நிபந்தனை. சிவனடியார் ஒருவரும் கிடைக்கப் பெறாமையால் சிறுத்தொண்டர் தாமே உடனிருந்து உண்ண அமர்கின்றார். இன்னமும் நிபந்தனை முடிந்து விடவில்லை. நாமுண்ணத் தொடங்கு முன்பு நீர் உண்ணத் தொடங்கியதன் மூலம் உடனுண்ணும் தகுதியை இழந் துள்ளீர் ஆதலின் மகனைப் பெற்றிருந்தால் அவனை உடனுண்ண அழையும். அவன் வந்தால் தான் நான் உண்பேன் என வைரவரும் உரைக்கின்றார். இதற்கும் கூட அசைந்துவிட வில்லை நாயனார். எல்லாம் சிவமாக இருக்கப் பயின்றவராதலால் சற்று முன் நடந்தவை எதுவும் நினைவில் இல்லை. அடியார் சொன்னவுடன் சிறுத்தொண் டரும் அவர் மனைவியாரும் பிள்ளையை அழைக்கின்றனர்.

> "வையம் நிகழும் சிறுத்தொண்டர் மைந்தா வருவாய் என
> அழைத்தார் தையலாரும் தலைவர் பணி தலைநிற்பாராய்த்
> தாம் அழைப்பார்செய்ய மணியே சீரளா வாராய் சிவனார் அடியார்
> யாம் உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றார் என்று
> ஓலம் இட"

மகனும் பள்ளியினின்று வருவான் போல ஓடிவந்தணைந்தான். சோதனையின் நோக்கம் நிறைவேறக் கண்டதும் வைரவரும் சட்டென மறைந்துவிட்டார். சிறுத் தொண்டர் கொண்ட திருத்தொண்டின் உறுதி காக்கப்பட்டது. திருத்தொண்டாற்றும் பெரியவர்களுக்கு தம் குறிக்கோளின் வெற்றியே பொருளாவது அன்றி அணுகுமுறையில் ஏற்படும் சோதனைகள் பொருளல்ல என்பதைச் சிறுத்தொண்டர் புராணத்தின் மூலம் சேக்கிழார் காட்டியுள்ளார்.

### சிறுத்தொண்டர் இறைபணி நிற்றல் மாண்பு

எல்லாம் சிவன் செயல் என்பது சித்தாந்தம். வினையிலிருந்து விடுபடவிரும்பும் ஆன்மா தன் அறிவு இச்சை செயல்களை இறை வனிடத்தில் அடங்கக் கொடுத்து நிற்கும். அதுவே இறைபணி நிற்றல் எனப்படும். சிறுத்தொண்டர் வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்துமே இவ்விறை பணி நிற்றலின் மாண்பினைக் காட்டுகின்றது. இறுதி நிகழ்வாகிய மகனை அழைத்தல் என்பது இறைபணி நிற்றலின் உச்சக்கட்டமாகச் சேக்கிழார் காட்டியுள்ளார். சிறுத்தொண்டரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணி நிற்றல் அவரது குடும்பம் முழுவதையும் உள்ளடக்கிப் பரந்து விரிந்திருந்த பெருமை போற்றத்தக்கதாகும். சிறுத்தொண்டரை விட அவருடைய மனைவியார் உயர்ந்தவர் என்பதைச் சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார். சிறுத்தொண்டர் மகனை அழைக்கும்போது 'மைந்தா வருவாய்' என்று உரிமைபூண்டு அழைக்கின்றார். ஆனால் திருவெண்காட்டு நங்கை யாரோ இன்ப துன்பங்கள் அற்ற நிலையில் 'சிவனார் அடியார் உய்யும் வகையில் உடனுண்ண அழைக்கின்றார்' என இறைபணியை நிறைவேற்றும் நோக்கத்துடன் அழைக்கின்றார். விருப்பு வெறுப்புக்களைக் கடந்து நிற்கும் அம்மையாரின் மன நிலையைச் சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார். சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையாரும் மேற்கொண்ட இறைபணி இனிது நிறைவுற உதவிய தாதியாரும், சிறுத்தொண்டரின் மகன் சீராளதேவரும் இறைபணி நின்றவர்களே ஆவார். இறைபணி நிற்பவர் முழுமையாக விருப்பு வெறுப்புக்களைக் கடந்த நிலையில் காரியம் ஆற்றும்போதே அப்பணி நிறைவேறும். இறைவனும் அதையே ஏற்றுக் கொள்வான் என்பதைச் சேக்கிழார் சிறுத் தொண்டர் வரலாற்றின் மூலம் கட்டமைத்துக் காட்டியுள்ளார்.

### பயன்படுத்தி நூல்கள்

கௌதமன், ச., காப்பியங்கள் தந்த காப்பியங்கள் - ஓர் ஆய்வு, முனைவர் பட்ட ஆய்வேடு, 2001.

சீனிச்சாமி. து., தமிழில் காப்பியக் கொள்கை, இரண்டாம் பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, டிசம்பர் 1994.

ஞானசம்பந்தன், அ, ச., சேக்கிழார் தந்த செல்வம், கங்கை புத்தகநிலையம், இரண்டாம் பதிப்பு, மார்ச் 1999.

.........................................., பெரிய புராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழக கழகம், 1987.

பரமசிவம், சொ., சேக்கிழாரின் இலக்கியத்திறன், பட்டுப்பதிப்பகம், முதற்பதிப்பு, செம்டெம்பர் 1987.

மணவாளன், அ., இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், முதற் பதிப்பு, 2005.

திருத்தொண்டர் புராணம் மூலமும் சூசனமும், சைவசிந்தாந்த நிலையம் மலேசியா, ஒன்பதாம் பதிப்பு, 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# சிறுத்தொண்டர் புராணத்தில் அன்புநெறி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## 1. அறிமுகம்

சைவ சமயத்தைச் சார்ந்த தொண்டர்களின் பெருமையைப் பேச எழுந்த நூல் பெரிய புராணம் ஆகும். இறைநம்பிக்கையிலும் அன்பு நெறியிலும் பண்பாட்டிலும் கொடையிலும் ஒழுக்கநெறியிலும் மேம்பட்ட மெய்யடியார்களது வாழ்வியல் பெரிய புராணத்தில் மிக விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்நூல் 63 நாயன்மார் களுடைய வரலாற்றையும் 9 தொகையடியார்களுடைய வரலாற்றை யும் பதிவு செய்துள்ளது. பெரிய புராணம் 'உலகெலாம்' என்னும் பாடலுடன் தொடங்குகிறது. அப்பாடலில் உள்ள எழுத்துகளின் தொகை 63 ஆகும். பதம் பிரித்தால் வரும் எழுத்துகளின் தொகை 72 ஆகும். எனவே முதற்பாடலிலே சிறப்பாகப் பாடப்பெற்றுள்ள அடியார் தொகை அடக்கப்பட்டுளதெனலாம். பெரிய புராணத்தின் தனிச் சிறப்பை முனைவர். கே.எஸ். பிரணதார்த்திஹரன் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> பெரிய புராணத்தின் தனிச்சிறப்பு யாதெனில் செந்தமிழ் தன்னில் இருந்து
> வடமொழிக்கு எடுத்துச் செல்லப்பட்ட முதல் நூலாகத்திகழ்கிறது.
> சுந்தரமூர்த்தி அருளிச் செய்த திருத்தொண்டர் தொகை வடமொழியில்
> உபமன்யு - தத்தவிலாசம் என்ற பெயரினைத் தாங்கி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழாருடைய நூலில் அரசர் தொடக்கம் ஆண்டிவரையான பக்தர்கள் பாடப் பட்டுள்ளனர். அந்தணர் தொடக்கம் புலையர் வரையான பொதுமக்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. தொண்டர் வரலாறு கூறும் இந்நூலுக்குச் சேக்கிழார் இட்டபெயர் மாக்கதை யாகும். வேறுபாடுகள் எதுவுமில்லாமல் மேல்நிலை மக்களிலிருந்து அடித்தட்டு மக்கள் வரை பாடப்பட்ட நூல் என்ற பெருமையும் பெரியபுராணத்தையே சாரும். இதனால் தமிழ் மக்களது காப்பிய மாகவும் சமத்துவக் காப்பியமாகவும் கணிக்கப்படுகின்றது. தமிழ் நாட்டைப்பற்றிப் பக்திபூர்வமாக எடுத்துக்கூறுவதால் பக்திச்சுவை சொட்டும் காப்பியமாகவும் திகழ்கிறது.

இந்நூலின் இன்னொரு சிறப்பு, நூல் சுந்தரருடைய வரலாற்றில் தொடங்கிச் சுந்தரர் வரலாற்றோடு முடிவதாகும். ஏனைய காப்பியங் களைப் போலக் கற்பனைக் காப்பியமாக அன்றி கல்வெட்டு, இலக்கியம், சரித்திரக்குறிப்பு, அகச்சான்று என்பவற்றை ஆய்ந்து எழுதிய வரலாற்றுக் காப்பியமாக அமைந்துள்ளது. சேக்கிழார் பதவியும் அரச ஆதரவும் இத்தகைய தொருகாப்பியத்தை எழுத வாய்ப்பளித்தது. பின்னோக்கு உத்தியில் பாடப்பட்டுள்ளது. திருமுறைகளுக்கு விளக் கமாக அமைந்துள்ளது. திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூல்களின் விரிவான நூலாகச் சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் அன்பு நெறிபற்றி அழகாக எடுத்துரைக் கின்றது.

## 2. சிறுத்தொண்டர் வாழ்வியல்

பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள சிறுத்தொண்டரது வாழ்வியல் மிகவும் அற்புதமானது. சோழநாட்டைச் சேர்ந்த திருச்செங்காட்டங் குடியில் தோன்றியவர் சிறுத்தொண்டர். மாமாத்திரத்திரர் குலத்தில் பிறந்து பரஞ்சோதியார் என்ற பெயருடன் வாழ்ந்தவர். சிறந்த சிவனடி யார். அதுமட்டுமென்றிப் பெருமையின்றித் தன்னை எப்போதும் மிகச் சிறியவராகக் கருதி வாழ்ந்தமையால் 'சிறுத்தொண்டர்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்று விளங்கியவர்.

பல்லவ அரசனுடைய படைத்தளபதியாகப் பணிசெய்தவர். வாதாபி என்னும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரத்தைப் படை எடுத்துச் சென்று வென்றவர். அங்கிருந்து ஒரு விநாயகப் பெருமான் திருவுருவினைக் கொண்டு வந்து திருச்செங் காட்டாங் குடியில் 'கணபதீஸ்வரம்' என்னும் கோயிலில் வைத்து கணபதி வழிபாட்டு நடைமுறையை ஏற்படுத்தியவர். இவருடைய வாழ்க்கைத்துணைவியார் சிவனடியார்களுக்கு விருந்தோம்பும் பண்பாட்டுச் சூழலிலே பிறந்தவர். திருவெண்காட்டு நங்கை என்பது இவருடைய பெயர். சிறுத்தொண்டருக்குச் சீராளதேவர் என ஒரே யொரு புதல்வன்.

இக்குடும்பத்தினரின் வாழ்வியலில் சிவனடியார்க்கு நாள்தோறும் திருவமுது செய்வித்துப் பின்னரே தாம் உணவு உண்ணும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனைச் சேக்கிழார் வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

"நறை இதழ்த் திருமுடியார் அடியாரை நாள்தோறும்
முறைமையினில் திரு அமுது முன் ஊட்டிப்பின் உண்ணும்
நிறை உடைய பெருவிருப்பால் நியதி ஆகக் கொள்ளும்."

நாள்தோறும் அடியாரைத் திருவமுது செய்வித்தல் என்பது அக் காலத்து விருந்தோம்பலின் நடைமுறையாக இருந்துள்ளது. சிவனடி யாரை வீட்டிற்கு அழைத்துவந்து அவருக்கு அமுது செய்விக்கும் வழக்கம் ஒரு சமய நடைமுறையாக இருந்ததைச் சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார். பெரிய புராணத்தில் பல்வேறு அடியார்களின் விருந்தோம்பல் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையும் தூய்மையான திருவமுதை அடியார் களுக்கு அளித்து வந்தனர். அந்த அமுது பற்றிய குறிப்பையும் சேக்கிழார் பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

"தூய திரு அமுதகனி கன்னல் அறுசுவைக் கறிநெய்
பாய தயிர் பால் இனிய பண்ணியம் உண்நீர் அமுதம்"

தூய்மையான திரு அமுது, இனிமையான கனிகள், சர்க்கரை, அறு வகையான சுவைகள் கொண்ட கறிவகைகள், பால், தயிர், நெய், இனிய பலகாரவகைகள், அமிர்தம் போன்ற தண்ணீர் என்பவற்றோடு அடியாருக்கு விருந்தோம்பல் என்றும் செய்யும் வழக்கம் இருந்துள்ளது. பெரிய புராணத்தில் விருந்தோம்பலைச் செய்த அடியார்கள் நால்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பூதியடிகள், இளையான் குடிமாறன் நாயனார், காரைக்காலம்மை யார், சிறுத்தொண்டர் என்னும் நால்வருள் சிறுத்தொண்டர் வாழ்வியலனுபவம் வேறுபட்டது.

ஒருநாள் சிறுத்தொண்டர் இல்லத்திற்கு ஒரு சிவனடியார் வருகிறார். அப்போது சிறுத்தொண்டர் விருந்தளிப்பதற்காக ஒரு சிவனடியாரைத் தேடிச் சென்றிருந்தார். அதனால் சிறுத்தொண்டர் மனைவி மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஆனால் சிவனடியார் சிறுத்தொண்டர் வீட்டில் இல்லாமையால் தாம் வீட்டில் தங்க முடியாதெனக்கூறி, கணபதீச் சரம் கோயிலில் போயிருக்கப் போவதாகச் சென்றுவிடுகிறார். பின்னர் சிறுத்தொண்டர் அடியார் யாரையும் காணமுடியாமல் வீடுதிரும்ப, மனைவி வீடுவந்த சிவனடியாரைப் பற்றிச் சொல்கிறார். சிறுத்தொண்டர் கோயிலுக்கு ஓடிப்போய்ச் சிவனடியாரைச் சந்தித்து விருந்து உண்ண வரும்படி அழைக்கிறார். ஆனால் சிவனடியார் மறுக்கிறார். எனினும் சிறுத்தொண்டர் இறையடியார் கிடைத்தால் நிச்சயம் அமுதூட்டுவேன் என்கிறார்.

சிவனடியார் பின்வருமாறு தான் உணவுண்ணும் முறைமையைக் கூறுகிறார்.

"நற்பண்புமிக்கீர் நாம் உண்ணப்படுக்கும் பசுவும் நரப்பசுவாம்
உண்பது ஐந்து பிராயத்துள் உறுப்பில் மறு இன்றேல்"

"நாதன் தானும் ஓர்குடிக்கு நல்லசிறுவன் ஒருமகனைத்
தாதை அரியத்தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனம் உவந்தே"

நாம் விரும்பி உண்பது நரப்பசு. அதுவும் ஐந்து வயதிற்குட்பட்ட எவ்வித உறுப்புக் குறையும் இல்லாத நரப்பசு. அவன் ஒரு குடிக்கு ஒரு மகனாய் இருக்கவேண்டும். மனமகிழ்வோடு தாய் பிடிக்க; தந்தை அரியவேண்டும். அந்த மானிட ஊனை அமுது சமைத்தால் நாம் மனம் மகிழ்வோடு ஏற்று உண்போம் எனக்கூறுகிறார். இச் செய்தியை மனைவியிடம் சிறுத்தொண்டர் சென்று கூறுகிறார். மனைவியோ இப்படியான மகனை எங்கேதேடுவது எனக்கேட்கிறார். ஆனால் சிறுத்தொண்டர் அது கடினம் என்று கூறி நீ பெற்ற மகனை அழைப்போம் எனக் கூறுகிறார். மனைவியும் சற்றும் தாமதியாமல் மகனைப் பள்ளியிலிருந்து அழைத்துவரச்சொல்கிறார். சிறுத் தொண்டரும் சென்று அழைத்துவருகிறார். விருந்தோம்பல் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இலக்கை நிறைவேற்றுவதில் இருவரும் மனமொத்தவராக உள்ளனர். சேக்கிழார் சிறுத்தொண்டரது வாழ்வியல் நடைமுறையில் விருந்தோம்பல் ஒரு அன்பு நெறியாக இருந்ததைக் காட்டும்போது அதனை உலகியல் நடைமுறையில் ஏற்க முடியாத ஒரு சோதனை நிலையாக இருந்ததைக் காட்டுகிறார். சிறுத்தொண்டருடைய பிள்ளைக்கறி அமுது சமைக்கும் மனப்பக்குவம் புதியதொரு அன்பு நிலையாகக் காணப்படுகிறது.

**3. பிள்ளைக்கறியமுதும் அன்புநெறியும்**

சிவனடியார்களை அமுது செய்வித்தல் என்பது சிவனை அமுது செய்விப்பதற்கு ஈடாகும் என எண்ணி வாழ்ந்த மெய்யடியார்களில் சிறுத்தொண்டர் முதன்மையானவர். அவர் அளித்த பிள்ளைக்கறி யாராலுமே படைக்கமுடியாத அன்பு கலந்த அமுது. அதனைச் சேக்கிழார் எடுத்துரைக்கும் திறன் மிகவும் அற்புதமானது. இறை வனடியாருக்கு கறியமுது படைப்பதற்காக மகன் நீராட ஏற்றது செய்கின்றனர். அவனை நீராட்டி உச்சிமோவாது மார்போடு அணைக்காது முத்தமிடாது மகனை அரிவதற்காகத் தனியிடம் கொண்டு செல்கின்றனர். மகிழ்ச்சியோடு மகன்வரத் தந்தை மனமகிழ்ச்சியோடு அரிவதற்குத்தாய் செயற்பட்ட தன்மையைச் சேக்கிழார் வருமாறு காட்டுகிறார்.

இனிய மழலைக் கிண்கிணிகால்
இரண்டும் மடியின் புடைஇடுக்கிக்
கனிவாய் மைந்தன் கை இரண்டும்
கையால் பிடிக்கக் காதலனும்
நனி நீடு உவகை உறுகின்றார்
என்று மகிழ்ந்து நகை செய்யத்
இன மாமகனைத் தாதையார்
கருவி கொடுதலை அரிவார்.

தாய் சீராளனின் கால்கள் இரண்டையும் இடுப்பில் இடுக்கிக் கொள்கிறாள். சிவந்த அழகான கனிபோன்ற வாயையுடைய அவன் கைகளைக் கைகளால் பற்றிக் கொள்கிறாள். தந்தையைப் பார்த்துச் சீராளன் சிரிக்க அவரும் சிரித்தபடி அவன் தலையைப் பற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறார். தாயும் இருவரையும் பார்த்து மனம் மகிழ்ந்து சிரிக்கும் வேளையில் தந்தை, சீராளன் தலையைக் கருவியால் அரிந்து விடுகிறார். இத்தகைய அற்புதமான காட்சியைச் சேக்கிழார் தான் நேரில் பார்த்தது போலக் கூறியுள்ளார். தன்மகன் தலை அரியப்படும்போது தாயின் மனம் என்னபாடுபடும்? அவளுடைய மனதிலே அந்த எண்ணமே வரவில்லை. குழந்தையின் கனிவாய்ச் சிரிப்பிலே மனம் மகிழ்ந்திருக்கும் தாயாகவே திருவெண்காட்டு நங்கை இருக்கிறாள். இருவருடைய மகிழ்வான தோற்றத்தைக் கண்டு மனம் மகிழ்ந்த நிலையிலேயே சிறுத்தொண்டர் தலை அரிகிறார். இந்தவேளையில் தாயும் தந்தையும் தம் அன்புக் குழந்தையின் சிரிப்பிலே ஈர்க்கப்பட்டு நின்றனர். எனினும் சிவனடியாரின் பிள்ளைக் கறியமுது பற்றி மறந்துவிடவில்லை. பெற்ற குழந்தையைவிட இறைவன் அடியாருக்கு அவர் விரும்பியபடி திருவமுது செய்விப்பதையே கருத்தாகக் கொண்டனர். சிறுத்தொண்டர் சீராளன் தலையைத் திருவமுதுக்கு ஆகாது என நீக்கிவிடுகிறார். மற்றைய பகுதிகளைச் சமைப்பதற்காக எலும்பும் தசையுமாக வேறு படுத்திக் கொடுக்கிறார். கறிசமைக்கப்பட்ட பின்னர் சிவனடியார் அமுதுண்ண ஏற்றது செய்கின்றனர். கணவன் மனைவி இருவருடைய எண்ணத்திலும் சீராளன் பற்றிய எண்ணம் இல்லை. சிவனடியார் கேட்டபடி விருந்தளிக்கிறோம் என்ற நினைப்பேயிருந்தது. உலகப்பற்று அற்று இறையடியார் நினைப்பே மிக்கோங்கியிருந்தது.

சிறுத்தொண்டரும் மனைவியும் எவ்விதக்கலக்கமும் இன்றி சிவனடியாருக்குப் பாதபூசை செய்கின்றனர். அவருடைய பாதங்களைக் கழுவிய நீரைத் தமது தலையிலே தெளித்து வீட்டின் எல்லாப்பகுதி யிலும் தெளிக்கின்றனர். நுனிவாழையிலையை வைத்து நீர் தெளித்து சோற்றமுதையும் கறியமுதையும் படைத்தனர். அந்தவேளையில் நரப்பசுவின் உறுப்புகள் எல்லாவற்றையும் கறியமுதாக்கினீர்களா எனச் சிவனடியார் கேட்கிறார் திருவெண்காட்டு நங்கை தலையைத் தவிர்த்து எல்லாவற்றையும் சமைத்துள்ளோம் என்று கூறுகிறார். ஆனால் சிவனடியாரோ தனக்குத் தலை இறைச்சியும் வேண்டு மென்று கூறுகிறார். சிறுத்தொண்டர் அன்புள்ளம் கலங்கிவிடுகிறது. திருவெண்காட்டு நங்கையும் கலங்குகிறார். அந்த வேளையில் சந்தன நங்கை என்னும் தாதி தலைக்கறியும் ஆக்கியுள்ளேன் எனக் கூறி அக்கறியையும் எடுத்து வந்து கொடுக்கிறார். தாதியின் செயற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுத்தொண்டரையும் திருவெண்காட்டு நங்கையையும் மனம் மகிழவைக்கிறது. இனிமேல் சிவனடியார் திருவமுது செய்வார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

ஆனால் சிவனடியாரோ "தனித்து உண்ணமாட்டேன். சிவனடி யாரேனும் இருப்பின் அவரையும் அழைத்து வாருங்கள்" எனக் கூறுகிறார். இது சிறுத்தொண்டருக்கு இன்னொரு சோதனையாகி விடுகிறது. எனினும் சிவனடியாரின் அன்புக்குக் கட்டுப்பட்டு வேறு சிவனடியாரைத் தேடிச் செல்கிறார். ஆனால் அவ்வாறு சிவனடியார் யாருமே கிடைக்கவில்லை. திரும்பி வந்து யாரும் கிடைக்கவில்லை எனக் கூறி நிற்கிறார். தானே உடனிருந்து உண்ண அருளும்படி கேட்கிறார். சிவனடியாரும் "உம்மைப் போல திருநீறு தரித்த சிவனடியார் வேறுயாரும் உளரோ எனக் கூறி உடன் உண்பதற்குச் சம்மதிக்கிறார். சிறுத்தொண்டர் சிவனடியாருடன் உடனமர்ந்து உணவு உண்ணத்தலைப்பட்ட வேளை மீண்டும் திருவமுது செய்ய வந்த சிவனடியார் தடுக்கிறார். சிறுத்தொண்டரிடம் "உமது மகன் சீராளனையும் அழையுங்கள்" எனக் கேட்கிறார். சிறுத்தொண்டர் 'அவன் இப்போதைக்கு உதவான்' என்று கூறவும் சிவனடியார் கேட்கவில்லை. அவன் இங்கு வந்தால் தான் நான் உண்ணுவேன் என உண்ணாமல் இருக்கிறார். இந்நிலையில் சிறுத்தொண்டர் அவருடைய கட்டளைக்குப் பணிந்து வீட்டின் முன் வாசலில் வந்து சீராளனை அழைக்கின்றார். திருவெண்காட்டு நங்கையும் உடன் நின்று மகனை அழைக்கிறார். கறியாக அறுத்துச் சமைத்த மகன் உயிருடன் திரும்பிவருவான் என்ற எண்ணம் சிறுத்தொண்டருக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட அந்தவேளைதான் பக்திநிலையாகும். தனது ஆற்றலால் செய்ய முடியாத ஒரு செயற்பாட்டை இறையருளால் பெறமுடியும் என்ற நம்பிக்கை. இதுவரை அவர்கள் கண்ட அன்பு நெறி. அதற்கு இடையூறு ஏற்படாமல் சீராளன் பள்ளியிலிருந்து ஓடி வருவது போல ஒப்பற்ற அழகுடனும் மன மகிழ்ச்சியுடனும் வருகிறான். மகனைக் கண்ட திருவெண்காட்டு நங்கை ஓடிச் சென்று அவனை ஆரத்தழுவி முத்தமிட்டு கணவனிடம் கொடுக்கிறார். சிறுத்தொண்டர் விருந்தோம்பலை நிறைவேற்ற விரைவாக மகனுடன் உள்ளே வருகிறார். திருவமுது செய்யவந்த சிவனடியாரை அங்கே காணவில்லை. சமைத்த ஊனிறைச்சியையும் பரிகலங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. மனங்கலங்கியபடி வெளியேவந்தனர். சிவபெருமான் இடபவாகனத்தில் உமையம்மையோடும் முருகப்பெருமானோடும் காட்சி தருகிறார். சிவபூதகணங்களும் முனிவர்களும் தேவர்களும் விஞ்சையர்களும் அவரைத் துதிசெய்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காண்கின்றனர். இக்காட்சியைச் சேக்கிழார் பாடல் வருமாறு காட்டு கிறது.

தனி வெள்ளிடைமேல் நெடுவிசும்பில்
தலைவர் பூதகணநாதர்
முனிவர் அமரர் விஞ்சையர்கள்
முதலாய் உள்ளோர் போற்றி இசைப்ப
இனிய கறியும் திரு அமுதம்
அமைத்தார் காண எழுந்தருளிப்
பனி வெண் திங்கள் முடி துளங்கப்
பரந்த கருணை நோக்கு அளித்தார்.

சிவனடியாராகச் சிறுத்தொண்டர் வீட்டிற்கு வந்தவர் சிவபெருமானே எனச் சிறுத்தொண்டர் உணர்கிறார். சிறுத்தொண்டரும் திருவெண் காட்டு நங்கையும், சீராளனும் சந்தனத் தாதியும் சிவனைக் கண்ணாரக் கண்டு வணங்கிப்பணிகின்றனர். சிவபெருமான் அவர்களது திருத் தொண்டைவியந்து எப்போதும் அவர்கள் தம்மைப் பிரியாதிருக்க உடன் அழைத்துச் செல்கிறார். சேக்கிழார் இதனை

நின்ற தொண்டர் மனைவியார்
நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி
இருக்க உடன் கொண்டு ஏகினார்

எனப் பாடியுள்ளார். சிறுத்தொண்டருடைய அன்பு நெறியின் பெருஞ் சிறப்பு இதனால் பெரிதும் உணரப்படுகிறது. அடியார்க்கு அமுது செய்யும் பணியில் அவர் ஈடு இணையற்றவராக விளங்குகிறார்.

**4. சிறுத்தொண்டர் அன்புநெறி ஒப்பீடு**

பெரிய புராணத்தில் சிவனடியார்க்கு அமுதளித்தல் ஒரு வழிபாட்டு நடைமுறையாக விளக்கப்பட்டுள்ளது. அதிலும் சிவனடியார் வீட்டிற்கு வந்து அமுது செய்யும் நடைமுறை இருந்துள்ளது. இளையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமாறன், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள் மூவரும் குடும்பமாக இணைந்து சிவனடியாரைத் திருவமுது செய்விக்கின்றனர். காரைக் காலம்மையார் கணவன் வணிகப் பணியில் ஈடுபட்டிருந்தமையால் தனியாக திருவமுது செய்விக்கநேர்ந்தது. சிறுத்தொண்டர் வீட்டிற்கு வந்த சிவனடியார் வையிரவவேடத்தராய் வருகிறார். அவருடைய உருவத்தோற்றத்தைப் பத்துப் பாடல்களிலே சேக்கிழார் விளக்கி யுள்ளார். ஒரு பாடல் குறிப்பாகத் தோற்றத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

"அயன் கபாலம் தரித்த இடத்திருக்கையால் அணைத்த
வயங்கு ஒலி மூவிலைச் சூலம் மணித்திரு தோள் மிசைப் பொலியத்
தயங்கு சுடர் வலத்திருக்கை தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன் தவத்தால் பெறும் புவியும் பாததாமரை சூட"

இக்கோலம் மட்டுமன்றி அவருடைய குணமும் வேறுபட்டிருந்தது. அவரது பயிரவர் தோற்றம் திருவெண்காட்டு நங்கை கூற்றாகச் சிறுத்தொண்டருக்கு அறிவிக்கப்படுகிறது. சிறுத்தொண்டர் அதனை மனத்துள் வாங்கி பயிரவ அடியாரைத் தேடிச் செல்கிறார். அவரைக் கண்டவுடன் பயிரவ அடியார் 'நீரோ பெரிய சிறுத்தொண்டர்' எனக் கேட்கிறார். சிறுத்தொண்டர் பற்றி முன்னரே தான் அறிந்திருப்பதை இக்கேள்வியின் மூலம் காட்டிவிடுகிறார். சேக்கிழார் சிறுத்தொண்டராக அவர் அழைக்கப்பட்டதை வருமாறு பாடலில் விளக்கியுள்ளார்.

"சீதமதி அரவின் உடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதன் அடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையர் அவர்முன்பு மிகச் சிறியராய் அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார் அவனியின் மேல்"

இத்தகைய தன்னைத் தாழ்த்தும் அன்பு நெறியிலே நின்ற சிறுத் தொண்டரிடம் திருவமுது செய்வதற்கு பயிரவ அடியார் சில நிபந் தனைகளை விதிக்கிறார். ஆறுமாத்திற்கு ஒரு முறை உண்ணும் தான் நரபசு உண்பதாகவும் அன்றுதான் அந்த நாளெனவும் கூறுகிறார். அத்தகைய உணவை உன்னால் ஊட்ட முடியாது எனவும் மொழிகிறார். சிறுத்தொண்டர் எத்தகைய பசுவானாலும் தான் உணவாக்க முடியுமெனப் பைரவ அடியார் உறுப்புகளில் மறுவில்லாத ஐந்து பிராயத்துள்ள நரபசு என விளக்கி அதையும் ஒரு குடிக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனாக தாய்பிடிக்கத் தந்தை அரிந்து கறியமுதாக்க வேண்டும் எனக் கடும் நிபந்தனை விதிக்கிறார். இவ்வாறு வேறு எந்த சிவனடி யாரும் கறி சமைத்துத்தரும்படி கேட்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தச் சோதனை கண்டு சிறுத்தொண்டர் மனம் தளரவில்லை. தனது மகனையே கறியமுது ஆக்குகிறார். பயிரவ அடியவரைத் திருவமுது செய்விப்பதற்காக எதையும் செய்யக்கூடிய மனவுறுதி அவருக்கிருந்துள்ளது.

அப்பூதியடிகளுடைய சிவனடியாருக்கு அமுதளிக்கும் அன்பு நெறியோடு சிறுத்தொண்டரின் அன்பு நெறியை ஒப்பிடும் போது வேறுபாடு விளக்கமாகத் தெரிகிறது. அப்பூதியடிகள் மகன் வாழை யிலை அரியச் சென்ற இடத்தில் விஷம் தீண்டி இறக்கிறான். ஆனால் சிறுத்தொண்டர் மகனோ கறியமுதுக்கு இறைச்சியாக அரியப்பட்டு இறக்கிறான். அவனைப் பெற்றோரே உடன்பட்டுக் கொலை செய்கின்றனர். திருவமுது செய்யும் வேளையில் அப்பூதியடிகளிடம் சிவனடியார் மகனை அழைக்கும்படி கேட்க அப்பூதி அடிகள் 'அவன் இங்கு உதவான்' எனக் கூறுகிறார். சிறுத்தொண்டரிடம் பயிரவ சிவனடியார் சீராளனை அழைக்கும்படி கேட்பதைச் சேக்கிழார் வருமாறு காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார்.

"ஆறுதிங்கள் ஒழிந்து உண்போம் உண்ணும் அளவும் தரியாது
சோறு நாளும் உண்பீர் முன் உண்பது என் நம் உடன் துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும் என
ஈறும் முதலும் இல்லாதார்க்கு இப்போது உதவான்
அவன் என்றார்."

இப்பாடலில் சிறுத்தொண்டர் மனதிலே கறியமுதான மகன் திரும்பி வரமாட்டான் என்ற எண்ணமே இருந்ததாகச் சேக்கிழார் காட்டியுள்ளார். அப்பூதியடிகள் மகனின் இறந்த உடலை மறைத்து வைத்து விட்டுத் திருவமுது செய்விக்க எண்ணியவர். ஆனால் சிறுத்தொண்டரோ மகனுடைய உடலை அரிந்து கறியமுதாக்கி வைத்திருப்பவர். எனவே அவருடைய அன்புநெறியின் வலியை அனைவரும் அறிய பையிரவ அடியார் 'நாம் இங்கு உண்பது அவன் வந்தால் நாடி அழையும்' என நிறுதிட்டமாகக் கூறிவிடுகிறார். சிறுத்தொண்டர் உள்ளத்தில் இதுவரை நிலைத்திருந்த இறையன்பு இப்போது வெளிப்படுகிறது. உடனே மனைவியாரோடு வாசலுக்குச் சென்று வருமாறு அழைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையம் நிகழும் சிறுத்தொண்டர் மைந்தா வருவாய் என அழைத்தார்
தையலாரும் தலைவர் பணி தலைநிற்பாராய்த் தாம் அழைப்பார்
செய்ய மணியே சீராளா வாராய் சிவனார் அடியார் யாம்
உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றார் என்று ஓலமிட"

தம்மைத் தொண்டர் முன்னிலையிலே தாழ்த்தி வாழும் சிறுத் தொண்டர் இந்நிலையில் தாம் ஒரு சிவனடியார் என்பதை மறந்து விடவில்லை. தனது தொண்டர் துன்புறுவதை இறைவன் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. உடனடியாக அதனை நிறைவேற்றிவைப்பான். சிவனடியார் பசி தீர்க்கும் தொண்டைச் செய்யும் அன்பு நெறி நின்ற சிறுதொண்டருடைய மனவுரம் எல்லோரையும் விடமேன்மையானது. அவரை அன்பின் வென்ற தொண்டர் எனச் சேக்கிழார் புகழ்கிறார்.

"அன்பின் வென்ற தொண்டர் அவர்க்கு அமைந்த மனைவியார்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுவதும் கண்டு பரவசமாய்
என்பும் மனமும் கரைந்து உருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
பின்பு பரமர் தகுதியினால் பெரியோர் அவர்க்கு அருள் புரிவார்"

இறைவன் மீது கொண்ட அன்பின் மூலம் தமக்கு வரும் எல்லாத் துன்பங்களையும் தொண்டர்கள் வென்றுவிடுவர்.

இளையான் குடிமாறன் நாயனாருடன் ஒப்பிடும்போதும் சிறுத் தொண்டர் தனித்துவமானவராகவே விளங்குகிறார். இளையான் குடிமாறன் வறுமைநிலை எய்திய போதும் அடியார் பசிதீர்ப்பது என்னும் தொண்டுப்பணியில் உறுதியுடையவராக இருந்தார். அவருக்கு உயிரைக்கொடுத்து விருந்தோம்பும் நிலை ஏற்பட வில்லை.

காரைக்காலம்மையாரது திருவமுதூட்டும் பணியோடு ஒப்பிட்டு நோக்கும் போதும் சிறுத்தொண்டரின் செயற்பாடு உயர்ந்து நிற்கிறது. ஆனால் மாங்கனியைப் பெற அம்மையார் இறைவனை வேண்டு கிறார். சிறுத்தொண்டரிடம் சிவனடியார் அவரையே சீராளனை அழைக்கும்படி கூறுகிறார். சிவனடியார் ஆகிய தாம் உய்யும்படி வரும்படி சீராளனை அழைக்கிறார். அடியவர்களுடைய இறை நம்பிக்கை என்றும் பொய்த்துவிடக் கூடாதே என்பதே அவருடைய எண்ணமாக இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. விருந்தோம்பலில் அன்புநெறி

பெரிய புராணத்தில் விருந்தோம்பல் ஒரு முக்கியமான செயற்பாடாகக் கணிக்கப்பட்டுள்ளது. சேக்கிழாருக்கு முன்னர் வள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் 'விருந்தோம்பல் என ஒரு பகுதியை அமைத்து அதன் சிறப்பை விளக்கியுள்ளார். வள்ளுவர் விருந்தோம்பல் பற்றிக் கூறுவதற்கு முன்னர் அன்புடைமை பற்றிய கருத்துக்களைக் கூறி யுள்ளார். சேக்கிழார் வள்ளுவர் கருத்துக்களை நன்கு உள்வாங்கிய மையால் விருந்தோம்பலை ஓர் அன்புநெறியாகக் காட்டுகிறார். மனித வாழ்க்கையில் பசி என்பது ஒரு பிணியாகும். இப்பிணியை நீக்குபவர் மருத்துவராகக் கருதப்பட்டனர். அத்தகைய ஒருசிறப்பான பணியை மேற் கொள்வதற்குச் சிறுத்தொண்டர் போன்றோர் வழிகாட்டி யுள்ளனர்.

சிறுத்தொண்டர் இப்பணியை மேற்கொள்ள அவருடைய முற்கால வாழ்க்கையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஏனினில் சேக்கிழார் தாம் பாடவந்த சிறுத்தொண்டர் புராணத்தில் அவருடைய முன்னைய வாழ்க்கை பற்றியும் விளக்கமாகப் பாடியுள்ளார். பரஞ்சோதியார் என்ற பெயருடன் ஆயுள்வேதக்கலை, வடநூல்கலை தூயபடைக்கலத் தொழில்துறை என்பவற்றை நிரம்பப் பயின்றிருந்தார். யானையையும் குதிரையையும் நடத்துவதில் வல்லவராயிருந்தார். எனினும் சிவன் கழல் தொழும் இயல்புடையவராயிருந்தார். பல்வேறு போர்க்களங் களை வென்ற வீரர். வாதாபியை வென்று மன்னவனுக்கும் புகழ்தேடிக் கொடுத்தவர். இவருடைய வெற்றிக் கெல்லாம் இறைபக்தியே காரணம் என அறிந்த மன்னன் அவரைப்போர்முனைக்குத் தான் அனுப்பியதையிட்டு மிகவும் வருந்தினான். அவரை இறைபணியையே தொடரும்படி விடுத்தான்.

> "உம்முடைய நிலைமையினை அறியாமை கொண்டு உய்த்தீர்
> எம்முடைய மனக் கருத்துக்கு இனிதாக இசைந்து உமது
> மெய்ம்மைபுரி செயல் விளங்க வேண்டியவாறே சரித்துச்
> செம்மை நெறி திருத்தொண்டு செய்யும் எனவிடை கொடுத்
> தான்."

எனவே போர்க்களத்திலே பலர் வெட்டுண்டு மடிவதை நேரில் கண்ட சிறுத்தொண்டருக்கு வாழ்க்கையில் அமைதி தேவைப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் தமது வாழ்நாட் செயற்பாட்டில் ஒரு வரையறையைச் செய்து கொண்டார். அவருடைய வரையறையைச் சேக்கிழார் பாடலில் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

> நறை இதழித் திருமுடியார் அடியாரை நாள்தோறும்
> முறைமையினில் திரு அமுது முன் ஊட்டிப்பின் உண்ணும்
> நிறையுடைய பெருவிருப்பில் நியதி ஆகக் கொள்ளும்
> துறை வழுவா வகை ஒழுகும் தூயதொழில் தலைநின்றார்.

அடியாருக்கு உணவளித்த பின்பே அன்றைய உணவை உண்பதாக ஒரு நியதி வாழ்க்கையை மேற்கொள்கிறார். அன்று தொட்டு அடியாரை வழிபடும் சிறுத்தொண்டராகிவிட்டார். அடியாரை வழிபடும் அன்பு நெறியையும் மேற்கொள்கிறார். விருந்தோம்பலுக்கு ஒரு புதிய நோக்கத்தைக் காட்டுகிறார். குடும்பவாழ்க்கையின் நோக்கமே விருந் தோம்பலின் பொருட்டென வள்ளுவர் கூறியதைச் சிறுத்தொண்டர் தமது வாழ்வியலாக்கினார்.

> "இருந்தோம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு"

என வள்ளுவர் விருந்தோம்பல் பற்றிக் கூறும்போது முதலாவது கருத்தாக அமைத்துள்ளார். ஆனால் பெரியபுராணம் அதனைத் திருத் தொண்டர் வாழ்வியலாகக் காட்டுகிறது. விருந்தினரை உபசரித்து உணவளித்துச் சிறப்பளித்து மீதியை உண்கின்றவனுடைய வீட்டில் எந்தக் குறையும் இருக்காது. இதனைச் சிறுத்தொண்டர் தனது வாழ்வியலாக் கொண்டார்.

மேலும் பெரியபுராணம் எழுந்தகாலம் இத்தகைய அடியார் வழிபாட்டை மக்களிடையே பரப்பவேண்டிய காலமாகவும் இருந்தது. இதனைப் பேராசிரியர் அ.மு. அயூப்கான் கருத்தும் வருமாறு விளக்கு கிறது.

"தமிழிலக்கிய உலகில் சமயக் காழ்ப்பு - சமணசமயக் காழ்ப்பு நன்கு கால்கொண்டதொரு சூழ்நிலையில் பெரியபுராணம் இயற்றப் பட்டது என அறிகிறோம். அகச்சான்றுகளைக் கொண்டு பார்க்கும் போது புறச்சமயங்களை மட்டுமன்றி அகச்சமயங்களில் ஒன்றாகிய வைணவ சமயத்தையும் ஒரேவழி இழித்துப்பேசும் நிலையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணத்தில் காண்கிறோம். எனவே இத்தகைய சமூக, அரசியல், இலக்கியச் சூழலில் பெரிய புராணம் இயற்றப்பட்டது என்பது தெளிவாகிறது."

சமணமத அடியார்களைப் பேணுவதைப் போலவே சைவ அடியார் களையும் பேணவேண்டிய காலமாக இருந்துள்ளது. சமணசமயத்தவர் புலால் உணவை வெறுக்கவேண்டும் என்ற பிரசாரத்தை மேற்கொள்ளும் வேளையில் விருந்தோம்பல் நிலையில் அவ்வுணவை அநுமதிக்கும் நிலையும் இருந்துள்ளது. அடியார்கள் ஒருநாள் உணவைப் பொறுப் பேற்கும் உணவுக்கொடை பேணப்பட்டுள்ளது. ஆனால் சிறுத் தொண்டர் அதை ஒரு நியதியாகக் கொண்டு வாழ்கிறார். புலால் உண்ணல் சமண சமயத்தவரால் வெளிப்படையாகவே பிரசார மூலம் வெறுக்கப்பட்டிருந்தது. அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளத்தயங்கும் நிலையில் இறைவன் விரும்பும் உணவாகப் புலால் உணவு ஏற்கப் பட்டால் அதை மக்கள் ஏற்றுக் கொள்வர் என்ற கருத்தும் இதன் மூலம் வெளிப்படுகிறது. உணவுநிலையில் இளையான்குடிமாறன் வீட்டில் வித்தரிசியும் வேலிக் கீரையும் அடியாருக்கு உணவாக அளிக்கப்பட காரைக்காலம்மையார் வீட்டில் சோற்றமுதும் மாங்கனியும் அடியாருக்கு அமுதாகக் கொடுக்கப்படுகிறது. சிறுத்தொண்டர் வீட்டிலே நரமாமிசம் படைக்கப்படுகிறது. விருந்தோம்பல் நிலைக்கு மேல் விருப்பமான உணவைக் கேட்டுப்பெறும் நிலை இருந்ததை இது நன்கு புலப்படுத்துகின்றது. ஆனால் இக்கருத்தினை சேக்கிழார் சிறுத்தொண்டரின் முன்னைய வாழ்வியலில் மாறுபடக்காட்டி யுள்ளார்.

தூய திரு அமுது கனி கன்னல் அறுசுவைக்கறிநெய்
பாயதயிர் பால் இனிய பண்ணியம் உண்நீர் அமுதம்
மேயபடியால் அமுது செய்விக்க இசைந்து அடியார்
மாயிரு ஞாலம் போற்றவரும் இவர் பால் மனம் மகிழ்ந்தார்.

முறைப்படி உணவுதயாரித்து விருந்தோம்பும் சிறுத்தொண்டர் வாழ்வியலில் பைரவ அடியார்க்கு விருந்தோம்பும் நாள் வேறுபட்ட மைந்தது. பிள்ளைக்கறி சமைத்து உணவளிக்கவேண்டிய தர்மசங் கடமான நிலை ஏற்பட்டது. வீட்டுக்கு வருகின்ற விருந்தினர்களை முகந்திரியாமல் அனுப்புவதே விருந்தோம்பலின் முக்கிய பண்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பண்புநிலையே சிறுத்தொண்டர் புராணத்திலும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய புதிய அன்பு நெறியைப் பெரிய புராணம் வாழ்வியலாக விளக்கியுள்ளது.

## 6. தொகுப்பு நிலையில்

பெரிய புராணத்தில் சிறுத்தொண்டர் புராணம் 87 பாடல்களில் பாடப் பட்டுள்ளது. பரஞ்சோதி என்ற படைத்தளபதி சிறுத்தொண்டராக மாறியமை விளக்கப்பட்டுள்ளது. திருவெண் காட்டு நங்கையும் சீராளனும் மனைவியும் மகனுமாகச் சிறுத்தொண்டர் நடத்திய அன்பு நெறி வயப்பட்ட வாழ்வியல் வெகுநுட்பமாக விளக்கப்பட்டுள்ளது. அரசவாழ்விலிருந்து அடியாரைப்பேணும் புதிய அன்பு நெறிவயப் பட்ட வாழ்வியலை, சிறுத்தொண்டர் மேற்கொண்டபோது ஏற்பட்ட ஒரு தர்ம சங்கட நிலையிலிருந்து எவ்வாறு மீளுகிறார் என்பதைச் சேக்கிழார் தனது புனைதிறனால் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். அன்பு நெறியில் வழுவாமல் நின்று இறைவன் இருப்பிடம் சென்றவர் சிறுத்தொண்டர். அவருடைய பெருமை அறிந்து அந்த நெறியில் செல்லவேண்டும் என்பதே சேக்கிழார் கருத்தாகும். அதனை சிறுத் தொண்டர் புராணத்தின் நிறைவுப் பாடலில் கூறியுள்ளார்.

ஆறு முடிமேல் அணிந்தவருக்கு அடியார் என்று கறி அமுதா
ஊறு இலாத தனிப் புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுதூட்டப்
பேறு பெற்றார் சே அடிகள் தலைமேல் கொண்டு பிறஉயிர்கள்
வேறு கழறிற்று அறிவார் தம் பெருமையும் தொழுது விளம்புவார்

## உசாத்துணை


திருத்தொண்டர் புராணம் (பதிப்பு: ம. சுப்பிரமணியபிள்ளை), ஸ்ரீ வைகுண்டம், 1970.

சுப்பிரமணிய முதலியார், உ.ம., சேக்கிழார், சென்னை, 1933.

ஆறுமுகம் செட்டியார், எம், சேக்கிழார் விருந்து, சென்னை, 1958.

சீதாலக்குமி. இரா. பெரியபுராணத்தில் உவமைகள், சென்னை, 1988.

கிருஷ்ணன், நாகர்கோயில், அருள் பெற்ற நாயன்மார்கள், சென்னை, 1999.

பெரிய புராண ஆய்வுநூல் (பதிப்பு: புதுவை வயி. நாராயணசாமி) விஜயா பதிப்பகம், புதுச்சேரி, 2010.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# கண்ணப்ப நாயனார் புராணக் கட்டமைப்பு

ச. மார்க்கண்டு M.A.

'உலகெலாம்' என்று, அவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகி வியாபித்துறைகின்ற 'அலகில்சோதியன்' அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பெற்ற பக்தி நூல் பெரியபுராணம் ஆகும். இஃது நாயன்மார் அறுபத்து மூவரது பக்தி நெறியினையும் தொகையடியார் ஒன்பதின்மரது வாழ்முறைகளையும் 'பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட'ப் பேசுகின்றது என்பர். தமிழ் இலக்கிய வரலாறு 'பக்திநெறிக்காலம் எனச்சுட்டும் பல்லவராட்சிக்காலத்தில் அவதரித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பதினொரு பாக்களான 'திருத்தொண்டர் தொகையே இதன் முதன் நூல்' என்று கூறப்படு கின்றது. இதன் பின் சோழராட்சியை எழுச்சியுறச் செய்த முதலாம் இராஜராஜசிங்கன் காலத்தில் திருமுறைகளைத் தொகுத்தவரான நம்பியாண்டார் நம்பிகளின் - எண்பத்தொன்பது பாடல்களான - 'திருத்தொண்டர் திருவந்தாதி'யே இதன் 'வழிநூல்' ஆக அமைந்த தென்றும் கூறுவர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதாகக் கொள்ளப்படும் பெரியபுராணப் பனுவல் இருபத்தோராம் நூற்றாண்டாகிய இன்றுவரை போற்றப் பெறுவதற்குக் காரணங்கள் பற்பல. 'திருநீற்றுச்சோழன்' என்று விபரிக்கப்பெறும் சைவசமய அபிமானியாகிய இரண்டாம் குலோத்துக்கனின் அமைச்சராக இருந்த சேக்கிழார் சுவாமிகளால் இது இயற்றப்பெற்றதாகக் கூறப்பெறினும் எம்மனிதரும் பின்பற்றக்கூடிய வகையில் அவரவர்க்குப் பொருத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளில் நின்று அனுட்டிக்கத்தக்க பக்தி மார்க்கங்கள் பற்றிப் பேசுவதாலும், காப்பியச் செழுமையுடன் நற்றமிழில் அமைந்திருப் பதாலும், மானிட வாழ்முறைக்கான உலகப் பொதுமைகள் பல பொதியப் பெற்றிருப்பதாலும் ஆயள் பலத்துடன் வாழ்கின்றதெனலாம். சென்ற நூற்றாண்டின் அறிஞர் பலரும் இதுபற்றிச் சிலாகித்துப் பேசி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணம் முழுமைக்கும் விரிவுரைத்துத் தொகுத்த, தமிழ் நாடு, கோவை வழக்கறிஞர் சி.கே.சுப்பிரமணியமுதலியார் அவர்கள், முதற்பகுதியின் முகவுரைக்கு முன்னுரை, எழுதுகையில்" இவ்வாறு அருளப்பட்ட நூல்களிலே பெரியபுராணம் தலைசிறந்து விளங்குவ தாகும். அஃது இறைவன் தானே அருளியதும், ஆசிரியர் சேக்கிழார் வாக்கினின்று அருளியதுமாகிய அருள்வாக்கம். இதுஃதுண்மை. ஞானநூல் ஞானிகளைப் பற்றிய நூல். தமிழ்சுவை வேண்டுவோருக்குக் கதையுமாம். உலகநூல் பயில்வோர்க்கஃதேயாம். வேறுபல சொல்வ தென்" யார் யார் எதனை வேண்டுமானாலும் இதன்பாற் பெறலாம். *(பக் : 17, 18)*

என்றவாறு குறிப்பிடுகின்றார். 'சேக்கிழார் தந்த செல்வம்' என்ற நூலின் முன்னுரையில் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள்,

> பெரியபுராணத்தில் பக்தியும் உண்டு சமயமும் உண்டு. என்றாலும் இவை அனைத்தையும் தாண்டி மனிதன் மனிதனாக வாழவேண்டுமேயானால் குறிக்கோள், இறையுணர்வு, தொண்டு என்ற மூன்றும் வாழ்வில் தலைதூக்கினாலன்றி ஓரினம் சிறந்த வாழ்வைப் பெறமுடியாது. என்பதே பெரியபுராணத்தின் உயிர் நாடி ....................................... *(பக் : V)*

எனக் கருத்துரை செய்கின்றார். 'சிவனருட் செல்வர்' என்று தலைப்பிட்டு, வாரியார் சுவாமிகள் செய்த நூலின் முன்னுரையில்,

> பலபிறவிகளில் செய்த மாபெரும் புண்ணியத்துணைசெய்தால் மட்டும் பெரியபுராணத்தைப் படிக்கும் பெருவாய்ப்பு ஒருவனுக்குக் கிட்டும். *(பக்கம் V)*

என்று இதன் பெருமையுரைக்கின்றார். ஈழத்தறிஞர் பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் 'அரியவும் பெரியவும் -' என்ற நூலில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எத்தொண்டர் எத்தொண்டு நிலையில் நிற்கின்றாரோ அத் தொண்டரை அத்தொண்டு நிலையில் வைத்து நன்கு பரிசோதித்துக் கண்டு, அவ்வகையில் அவ்வவர்தம் ஆத்மிக உத்வேக அழகை அறிந்து ரசித்து அவரவர்க்குப் பேறுவழங்குதல் சிவபெருமானுக்குப் பரதீகரமான ஒரு செயல் என்பது பெரியபுராணம் தரும் புதிராகும். (பக்கம் : 62)

என்றவாறு விரிப்புச் செய்கிறார். வாழும் கலைஞரான கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் 'உலகெலாம்' என்ற கட்டுரையில்.

> அடியார் கதை என்னும் அருளமுதப் பெருங்கடலை சேக்கிழார் வடிவில் அச்சிவனே பிரசவித்தார். பெரிய புராணம் எனும் பேரின்ப நெறிநூலாய் சிவன் கருணை பாய்ந்து சிவர்களைச் சேர்கிறது. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவன், தன்னைத் தன்னடியார் தான்பற்றி உயர்தற்கும், வாழ்த்தி வணங்குதற்கும் வழியொன்று திறக்கின்றான். (ஜெயராஜ்ஜியம்; பக்கம். 92)

என்று, தம்கவித்துவ நடையில் கருத்துரைத்துச் செல்கிறார். இவர்கள் மட்டுமன்றித் தமிழறிந்த பல தகைமையாளர்களும் பெரியபுராணச் சிறப்புரைத்து நிற்கின்றனர் என்பதை நோக்க முடியும்.

நான்காயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று (4253) விருத்தப்பாக் களான இப்பெரியபுராணம், திருமலைச் சுருக்கத்தை முதலிலும் "வெள்ளானைச் சருக்கத்தை நிறைவிலும் கொண்ட பதின்மூன்று சருக்கங்களாக வகுக்கப் பெற்றுள்ளது. இடையில் உள்ள பதினொரு பாக்களினதும் முதலடிகளைச் செப்பனிட்டுத் தலைப்பை பெற்றுள்ளன. அதாவது தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திரு நின்ற சருக்கம், வம்பறா வரிவண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார்கள் சருக்கம், மன்னியசீர்ச் சருக்கம் என்பவை அப்பதினொன்றுமாகும். இவை பதினொன்றும் தனித்தனி ஐந்து முதல் ஏழுவரையான சிவனடியார்களின் புராணங் களைப் பேசுகின்றன. இதில் இலைமலிந்த சருக்கத்தின் மூன்றாவது புராணமாக, நூற்றெண்பத்தொரு (181) பாக்களால் புனையப் பெற்றி ருப்பதே இங்கு நோக்கப்படவுள்ள கண்ணப்பநாயனார் புராண மாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டமைப்பு நோக்கில் கண்ணப்பர் புராணம்.**

எந்தவொரு இலக்கியத்தின் கட்டமைப்பும் வடிவுசார்ந்தும் பொருள் சார்ந்தும் பல்கூட்டுக் கலவைதன்மை கொண்டதாகவே அமைந் திருக்கும். இங்கு கண்ணப்ப நாயனார் புராணக் கட்டமைப்பு 'வடிவமும் நேர்ப்பொருளும்' சார்ந்த ஒரு கூறாகவும் 'குறிப்புப் பொருள்களும் பயனும்' சார்ந்து மற்றொரு கூறாகவும் அமைத்து நோக்கப்படுகிறது.

**வடிவமும் நேர்ப்பொருளும்**

இலக்கியம் ஒன்றின் வடிவம் பொருளோடு பொருத்தமுற அமையும் போதுதான் அது சுவையுடன் கற்கப் பெறும். இதற்காகவே எந்த எந்தச் செய்திகளுக்கு எந்த எந்தப் பாவகை பொருத்தமுறும் என்று இலக்கணம் வகுத்திருந்தனர் பழந்தமிழ் அறிஞர்கள். அறக்கருத் துக்களைச் செப்புவதற்கு வெண்பாவும், முக்கியமான ஒரு விடயத்தை எந்த அளவிலேனும் வெளிப்படுத்துவதற்கு அகவற்பாவும் அமைந் துள்ள முறைகள் இதற்கான உதாரணங்களாம். இந்த வகையில் பக்தியின் பல்பரிமாணத் தன்மைகளை உணர்த்துவதற்கு பெரிதும் கைகொடுத்து நின்ற பாவகை பல்லவர் காலத்தின் விருத்தப்பா எனலாம். இது மன எண்ணங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி பலவகை நெழிவு சுழிவுகளோடு வெளிப்படக்கூடிய தன்மை வாய்ந்த தாகும். புலமை வாய்ந்த கவிஞன் ஒருவனுக்கு பொருட்கூறச் சரியாகக் கைகொடுத்து நிற்கும் பட்சத்தில் விருத்தப்பாப்போல் சித்துக்கள் செய்யக்கூடியது வேறெந்தப் பாவுமல்ல என்று கூறலாம். கம்பரும், சேக்கிழாரும் கற்போரைக் களிப்புறுத்துவதற்கு இவ்விருத்தப் பாவடிவை எவ்வாறெவ்வாறெல்லாம் கையாண்டுள்ளனர் என்பது அதிசயிக்கத் தக்கதாகும்.

கண்ணப்ப நாயனார் புராணமும் சேக்கிழாரின் விருத்தப்பாவால் கவினுறுகிறது என்பதும் பக்தியுணர்வைப் பாய்ச்சுகிறது என்பதும் கற்போர் அறியக்கூடியதேயாம். கதையின் ஓரிடத்தில் வேட்டை மேற்சென்ற வேடுவர்கள் காட்டைச்சுற்றி வளைக்கிறார்கள். விலங்கு களைக் கிளப்புவதற்காக ஊது வாத்தியங்களையும் தோல்வாத்தியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இசைக்கிறார்கள். இச்சந்தர்ப்பம் சேக்கிழார் மொழியில் இவ்வாறு அமைகிறது.

கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணா குளிக்குலம்
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்மை கொட்டவும்
சேடுகொண்ட கைவிளிச் சிறந்த ஓசை செல்லவும்
காடுகொண் டெழுந்தவேடு கைவளைந்து சென்றதே.

*(பாடல் : பக்கம். 721)*

கொம்பு வாத்தியம் முன்னால் முழங்க, பறைகள் பக்கலில் ஒலிக்க, சல்லாரிகள் சென்று சென்று இசைக்க வேடர்கூட்டம் பல பக்கங் களிலும் வளைந்து சென்றது என்பது இதன் திரண்ட பொருள். இங்கு பொருளைவிட பாடலின் சந்த ஓசை வேகத்தை, திறன்களை உசுப்பி நிற்பதுபோல் அமைந்திருக்கும் தன்மை காட்சியை மனதில் விம்பப் படுத்த உதவுகிறதெனலாம். கம்பன் கும்பர்கர்ணனைப் போருக் கெழுப்புவதற்குப் பயன்படுத்தும் “உறங்குகின்ற கும்பகர்ண உங்கள் மாய வாழ்வெலாம் இறங்குகின்ற தின்றுகாண எழுந்திராய்” என்ற சந்த நயமும் இதனுடன் ஒப்பிட்டுச் சுவைக்கக் கூடியதேயாம்.

வேடர்கள் விலங்குகளின்மேல் ஆயுதங்களை வீசுகின்றார்கள். கால் அறுபட்டும் இடை துண்டுபட்டும் தலைசீவப்பட்டும் குடல் வெளியே தள்ளியும் உடல் துளைபட்டும் பல்வகை விலங்குகளும் வீழ்கின்றன. அதற்கேற்றபடி

தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமா
வாளிகளொடு குடல்சொரிதர மறிவன சில மரைமா
நீளுடல்விடு சரம்உருவிட நிமிர்வனமிடை கடமா
மீளிகொள்கணை படும் உடலெழ விழுவனபல உழையே

*(பாடல் : பெ. பு 728)*

என்று சந்தமாற்றம் செய்து புலக்காட்சித் தெளிவை மெருகூட்டுகிறார் சேக்கிழார். இன்னோரிடம், காளத்தியப்பருக்குக் கண்ணப்பர் பூசை செய்து மகிழ்கிறார். அதனைச் சேக்கிழார்

இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியில் ஒழுகுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் மேன்மேல்வந் தெழுமன்பால் காளத்தி
அப்பரெதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை ஆடுவார்.
(பாடல் பெ. பு. 800)

என்று புனைகின்றார். இங்கு எதுகையும், இரண்டாம் நான்காம் அடிகளில் வரும் இறுதிச்சீர்களும் பாடலின் சுவையைப் பதிய வைக்கின்றன. இன்னொன்று எதுகையாக வரும் பகரம் வல்லெழுத்து. ஆனால் செய்தி சாந்தமானது. வல்லினத்தைக்கூட சந்தத்தைக்குழப்பா வகையில் பாப்புனைந்த சேக்கிழாரின் கவித்திறத்தைப் போற்ற முடிகிறது.

இவ்வாறு உணர்வுக்கும், இடம், காலம் செயல் என்பவற்றுக்கு பொருந்தும்படியான வடிவுகளில் அமைந்த பாக்களை, கண்ணப்ப நாயனார் புராணத்தின் பல்வேறு இடங்களிலும் கற்றுச் சுவைக்கலாம்.

இன்னொன்று இப்புராணக் கதை செல்முறையும், அணிகள் போன்றவற்றின் தொடுப்பும் ஒருவகையான காப்பிய வடிவத்தன்மை கொண்டதாக அமைகின்றதெனலாம். 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத்தொடங்கும் தண்டியலரங்காரச் சூத்திரம்.

வாழ்ந்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி முன்வரவு இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகித்
தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய். (சூத்திரம் : 8)

என்று தொடர்கின்றது. மேற்காட்டிய சூத்திரக்கூறுகள் கண்ணப்ப நாயனார் புராணச் செல்நெறியோடு பல இடங்களில் ஒட்டி உறவாடுவதை அறியமுடிகிறது. இல்லறத்தில் புகுந்து 'புலவியல் புலத்தல் கலவியில் களித்தல்' போன்றவை இங்கு இடம்பெறும் கதைத்தலைவன் திண்ணனுக்குப் பொருந்து மாறில்லை என்பதனால் பெருங்காப்பிய மரபுடன் சேர்க்கமுடியாது. ஆயினும் தலைவனின் பிறப்புத்தொடக்கம் வீடடைதல் வரை அழகிய போக்கில் கதை நடத்தப்படுதலை இங்கு சுட்டுதல் முடியும்.

அடுத்து கண்ணப்ப நாயனார் புராண நேர்ப்பொருள் கட்டமைப்பை நோக்குவோம். இதனை மூன்று சிறுபகுதிகளாகப் பிரித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வேட்டுவர் சேரியும் கண்ணப்பர் பிறப்பும்.

2. வில்வித்தை பயிலலும் வேட்டைக்குக் கிளம்பலும்

3. காளத்தி மலையும் கண்ணப்பர் முத்தியும்.

என்றவாறு நோக்கமுடியும்.

பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரினை வேடுவர்குலத் தலைவனான நாகன் என்பவன் - மனைவி தத்தையுடன் இல்லறம் நடத்தியபடி - காவல் செய்து வருகின்றான். ஆயினும்

பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப்பேறே
அரியதென்றவருங் கூற அதற்படுகாதலாலே
முருகலர் அலங்கற்செவ்வேல் முருகவேள் முன்னிற்சென்று
பரவுதல் செய்து நாளும் பாராய்க்கடன் நெறியில் நிற்பார்.

(பெ. பு. 659)

அதாவது குழந்தையின்மை மனத்தை வருத்த முருகவேள்கோவில் சென்று வேண்டுதல் செய்து நிற்கின்றார்கள்.

மயிலுடைக் கொற்றவூர்தி வரைபுரங்கிளித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வெற்றி அண்ணலார் அருளினாலே

(பெ.பு.661)

கானவர் குலவிளங்கத் தத்தை கருப்பம் நீடுகிறாள். நிறைமதியை உவர்க்கடல் ஈன்றதுபோல் மகவைப் பயக்கிறாள். இதன் நற்சகுனமாக 'வானின் மலர்மழை பொழிந்ததெங்கும்' 'அமரர் துந்துபியும் ஆர்த்தது' என்கிறார் சேக்கிழார். இதனை மலைக்குறவர்கள் விழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். நாகன் குழந்தையைக் கையில் எடுக் கிறான்.

அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப்பேரும்
திண்ணன் என்றியம்பும் என்னத்திண்சிலை வேடர் ஆர்த்தார்.

(பெ. பு. 666)

குழந்தையின் கனதிநோக்கித் திண்ணன் என்று பெயர் சூட்டினான். சிறு வயதிலே திண்ணனின் வலிமையுடைய வளர்ச்சியை எடுத்துக் காட்டுவார் சேக்கிழார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாய் ஓடும் முயற்குட்டியையும் காட்டுப்பன்றிக்குட்டியையும் வேகமாய்ச் சென்று பற்றிக் கொண்டுவந்து முற்றத்தில் கட்டி வளர்க்கின்றான் திண்ணன். இதனை

கடுமுயற் பறழினோடும் கான ஏனத்தின் குட்டி,
கொடுவரிக்குருளை செந்நாய் கொடுஞ்செவிச்
சாபமான, முடுகிய விசையிலோடித்
தொடர்ந்துடன் பற்றி முற்றத்திடுமரத் திரனில்
கட்டி வளர்ப்பன எண்ணில்லாத *(பெ. பு. 675)*

என்கிறார் சேக்கிழார். சில ஆண்டுகள் செல்ல சிலைத்தொழில் (வில்வித்தை) பயிற்ற வேண்டி அத்துறையில் மிக்க முதியவரை அழைத்து

அவர்களுடன் ஆராய்ந்து நாட்குறித்து, அதனை எல்லோர்க்கும் அறிவித்தான் நாகன். வந்தவர்கள் "வாழ்த்தெடுத்து இயம்பினர்கள் ஆரவாரித்தபடி ஊரைவலம் வந்தார்கள்."

தங்கள்' தொல்மரபின் விஞ்சைத் தனுத்தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கருப்போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித்தார்கள்.
*(பெ. பு. 696)*

அதாவது விற்கலை பயிற்றும் வல்லவர் மூலம் போர்செய்யும் வில்லைப் பிடிக்கச் செய்தனர்.

இவ்வாறாகப் பதினாறாண்டுகள் வரை வில்வித்தை பயின்றவர், அதனோடுமற்றப் படைக்கலப் பயிற்சிகளையும் பெற்று 'புண்ணியம் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு பெற்றார்.

இவ்வண்ணம் திண்ணனார் நிரம்புநாளில், நாகன் மெய்வண்ணம் தளர் மூப்பின் பருவம் எய்தி வில்லுழவின் பெருமுயற்சி மெலிவான் ஆனான். இந்நிலையில் காட்டு விலங்குகளினை வேட்டையாடல் குன்றிவிட அவை அதிகரித்தன. இதனை வேடுவர்சிலர் வந்து நாகனிடம் முறையிட்டனர்.

"சொன்னவுரை கேட்டலுமே நாகன் தானும்
சூழ்ந்துவரும் தன்மூப்பின் தொடர்வுநோக்கி
முன்னவர்கட்டு உரைசெய்வான் மூப்பினாலே
முன்புபோல் வேட்டையினில் முயல்கில்லேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்மகனை உங்களுக்கு நாதனாக
எல்லீருங் கைக்கொண்மின்" (பெ.பு : 694)

என்று கூறுவதாகச் சேக்கிழார் பாடல் அமைகிறது.

தேவராட்டியை அழைத்து திண்ணனார்க்கு ஆசீர்வாதம் இயம்பச் செய்கின்றனர். அவள் சென்றபின் திண்ணன் நாகனிடம் தாள்பணிகின்றான். 'உன்னுடைய மரபுரிமை தாங்குவாய்' என்று உடைதோலையும், சுரிகையையும் (வாள்) திண்ணனிடம் நாகன் ஒப்புவித்தான்: 'வேட்டைக் கெழுக' என விடையும் கொடுத்தான்.

வேட்டைத் தலைவனுக்குகரிய ஆடை அணிகலன் எல்லாம் அணியப்பட்டிருப்பின் பெரியவில்லொன்றைக் கையில் எடுத்துக் கொண்டு வேடர்கள், நாய்கள் சூழ்ந்துவர காட்டை வளைக்கின்றான் திண்ணன். பலவிலங்குகளும் ஆயுதங்களால் மாண்டுவிழ, பெரிய பன்றியொன்றுமட்டும் வலையைப் பிரித்துக்கொண்டு ஓடுகிறது. அதைத்துரத்திச் சென்று மலையடிவாரம் ஒன்றில் குத்திவீழ்த்துகிறார் திண்ணனார். கூடச்சென்ற நாணனும் காடனும் தீயில் பன்றியை வாட்டித் தின்ற நீரருந்திப் பசிதணிவோம் என்கின்றனர். நீர்நிலை எங்குண்டென்ற திண்ணனுக்கு முன்னாலுள்ள தேக்கமரங்களின் அப்புறம் சென்றால் பொன்முகலி நீர் பெறலாம் என்று நாணன் கூற 'அங்கது நோக்கிச் சென்றார்' சென்றவர் திருக்காளத்தி மலைச்சாரலைப் பார்த்தனர். மலையில் ஏறுவோம் என்றுகூறிய திண்ணனுக்கு மலையில் 'கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்' என்று நாணன் பதில் கூறினான்.

பொன்முகலியின் குளிர்ந்த நீரைக்கடந்து மலையடிவாரம் அடையும் நிலையில் கதைக்கட்டமைப்பின் மூன்றாவது பகுதி தொடங்குகின்றதெனலாம். அதாவது மத்தியானம் இசைக்கப்ப பெறும் தேவதந்துபியின் ஓசை திண்ணன் காதுகளில் அது விழவில்லை. என்பதை இங்குநோக்க வேண்டும். ஆகவேதான் 'இது என்கொல் நாணா?' என்ன 'இம்மலைப்பெருந்தேன் சூழ்ந்து மதுமலர் ஈக்கள் பொய்த்து மருங்கெழும் ஒலி என்று நாணன் பதிலளிக்கின்றான்.

இவ்வாறு மலையேறிச் சென்ற திண்ணனார் காளத்தி நாதரைக் காணும் முன்னரேயே அழகிய கண்களையுடைய கருணைமிக்க அருள் நோக்கினால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன்புருவம் ஆனார்."
(பெ.பு. : 753)

என்கிறார் சேக்கிழார். ஆகவே மலையெழு கொழுந்தாய் உள்ள ஏகநாயகரைக் கண்டவுடன், எழுந்த பேருவகை அன்பின் வேகமானது மேற்செல்ல மிக்கதோர் விரைவினோடும் வேகமாய் ஓடிச் சென்றார்: தழுவினார்: மோந்து நின்றார். அதுவுமின்றி மயிர்ப்புளகம் எய்தி, மலர்க்கண்ணீர் சொரிந்து, 'உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக்கெட்டேன்' என்று காளத்தி நாதரின் தனிமைக்காய் அழுகின்றார். இங்கு கல்லைக்காணமால் அதில் காளத்தி அப்பனைக் காணும் கண்ணப்பரின் அன்பு நிலையைத் தரிசிக்கலாம்.

இதன்பின் காளத்தி அப்பர் பசிபோக்க வெந்த ஊன் அமுது படைப்பதும், கிரியாபூசை மேற்கொள்ளும் சிவகோசாரியார் அவற்றின் கழிவுகளைக் கண்டு துடைப்பதும் ஐந்து நாள்கள் நடைபெறுகின்றன. சிவகோசாரியின் மனநோதல் போக்கக் கருதிய சிவன் கனவிற் தோன்றி மறைந்திருந்து பார்" என்று பணிக்கின்றார். கோசாரியார் மறைந்திருந்த வேளை ஊனமுதல் சகிதமாய் வரும் திண்ணனார் காளத்தி நாதரின் கண்ணில் வடியும் குருதிகண்டு திடுக்கிட்டு அதை நிறுத்த, தன் கண் அகழ்ந்து அப்புகிறார். இறைவன் சோதனை தொடர்கிறது: மறுகண் உதிரம் இறைக்கிறது. தயங்காத கண்ணப்பர் இடது கால் பெருவிரலால் கண் இருக்குமிடத்தை உறுதி செய்துகொண்டு தமது மற்றக்கண் ணையும் அகழ விழைகின்றார். தடுத்தாட்கொண்டு வலப்பக்கத்தில் இருக்கும் பரமுத்தி கொடுக்கிறார் காளத்திநாதர். நேர்ப்பொருளாலான கதைக் கட்டமைப்பு நிறைகிறது.

## குறிப் பொருள்களும் பயன்களும்

கலைவெளிப்பாடுகளில் ஆகட்டும், வாழ்க்கையின் செயற்பாட்டுக் கூறுகளிலாகட்டும் நேர்ப் பொருளைவிட, குறிப்புப் பொருள்கள் (சிலவேளை எதிர்மறைப் பொருள்களும்) தரும் உணர்வுத் தாக்கம் அலாதியானது. சங்கச் செய்யுட்கள் இதற்குப் பெரிதும் சான்றுபகரும். கண்ணப்ப நாயனார் புராணத்திலும் இவை செறிந்திருப்பதை அறிஞர் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில், கண்ணப்பரைப் பற்றிச் சுந்தரர் குறிப்பிடும்போது 'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பதற்கு அடியேன்' என்கிறார். சேக்கிழாரும் 'பான்மதி உவரி ஈன்றாலென மகப் பயந்த போது' என்று இவரின் பிறப்பினையும், 'கலைவளர் திங்களேபோல் எண்ணிரண்டாண்டின் செவ்வி எய்தினார்' என்று இவரின் விற்பயிற்சியினையும் உபமிக்கிறார். ஆகவே சேக்கிழாரின் குறிப்பிலும் மதிக்குக் 'கலை' உண்டு என்ற முடிப்பால் அக்கலை என்ற சொல் கண்ணப்பரையும் அடை செய்கிறது எனலாம். 'கலை' என்றால் நேர்ப்பொருளில் அது பெரும்பாலும் கல்வியையே சுட்டி நிற்கும். கலைத்தாயான சரஸ்வதி கல்வித் தாய் என அழைக்கப்பெறுவதை அறியமுடியும். ஆனால் இங்கு வேடிக்கை என்னவென்றால் வேட்டுவர் குலத்துதித்த கண்ணப்பருக்கும் கல்விக்கும் தொடர்பு மிகக்குறைவு. வில்வித்தை பயின்றாரே தவிர ஆராய்ச்சி செய்யும் அறிவுக் கல்வி யைப் பெற்றதாகக் கூற இடமில்லை. மருணீக்கியாராக இருப்பின் சமணருடன் சேர்ந்து ஆராய்ச்சிக் கல்வியில் வாழ்நாளில் பெருநாளைக் கழித்துத் தருமசேனர் என அழைக்கப்பெற்ற அப்பர் சுவாமிகளுக்கு, திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் கொடுக்கும் அடையாளம் திரு நின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்' என்பதாகும். 'ஓட்டையும் பொன்னையும் ஒக்கநோக்கும்' இயல்பினராம் அப்பரை திருநின்ற செம்மையாளர்' என அழைத்தது எவ்வளவு வேடிக்கையானதோ அதேபோன்றதே கண்ணப்பருக்கும் கலை மலிந்த சீர்நம்பி' என்ற அடைகொடுத்து சிறப்பிப்பதும் அமைகின்றது எனலாம். நேர்ப்பொருளில் இவை வேடிக்கையாக அமைந்தாலும் குறிப்புப் பொருளில் அற்புதச் செய்தி களைத் தருகின்றன என்பதே இங்கு நோக்கற்பாலதாம். அதாவது.

> கற்றதனால் ஆய பயன்னென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழஅர் எனின் (குறள் : 2)

என்கிறார் வள்ளுவர். இதன்படி கல்வியின் பயன் கடவுளை அடைதல் என்பது தெளிவுறுத்தப்பெறுகிறது. கல்வி அறிவைத்தர, அறிவு ஒழுக்கம் தர, ஒழுக்கம் அன்பைத்தர (இல்லறம்), அன்பு அருளைத்தர (துறவறம்), அருள் துறவுநெறியாகி வீடடையச் செய்தலே, கல்வியின் இறுதிப் பயனென விதந்துரைப்பர் சான்றோர். கண்ணப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லிலேயே (காளத்தி லிங்கம்) அன்பு வைக்கும் அருள்நிலையை அடைந்து வீடடைகிறார். ஆக, கல்வியின் பயனாம் முடிவு நிலையில் வரும் முத்தியின்பத்தைப் பெருந்தாவலில் கடந்தடைகிறார். இதனால் தான் சுந்தரர் கலைமலிந்த சீர்நம்பி' என்று குறிப்பு வைத்தார் என்பதும் அதையே சேக்கிழார் மேலும் நுணக்கமாக்கிச் சுவை செய்கிறார் என்பதும் குறிப்புப் பொருளால் விளைந்தவை எனலாம்.

அடுத்த முக்கியமான அம்சம் அறிவால் கடவுளை அடைதலை விட அன்பால் அடைதல் விரைவானது என்பதைப் பூடகமாகச் சொல்வதும் கண்ணப்ப நாயனார் புராணம் எனலாம். காளத்தி மலையில் ஏறி, ஆறே நாட்களில் பரமனுக்கு வலமிருக்கும் பரமுத்தி பெற்று விடுகிறார் கண்ணப்பர். ஆனால் அதே காளத்தி நாதருக்குப் பலநாளும் ஆகமப்படி பூசை இயற்றிய சிவகோசாரியார் அவ்வாறு அப்போது வீடடைந்தார் என்று சொல்லுதற்கில்லை. கண்ணப்பருக் காகவே சிவகோசாரியார் கனவில் காட்சியளிக்கின்றான் இறைவன், பின்பும் கண்ணப்பரின் இரண்டாம் கண் அப்புதலைத் தவிர்ப்பதற்குத் திருக்கரம் நீட்டி 'நில்லு கண்ணப்ப' என்று தடுக்கின்றபோதுதான் சிவகோசாரியார் இறையை உணர்கின்ற வாய்ப்புக் கிடைக்கின்றது. மறுதலையாக இதனைக் கூறினால் கண்ணப்பர் செயல்கள் நிகழா விடத்து சிவகோசாரியார் இந்தளவிற்கேனும் இறையனுபவம் பெற வாய்ப்பிருந்திருக்குமா? என்பதும் சிந்திக்கவேண்டியதாகவே அமைகிறது. ஏனெனில் ஒவ்வொருநாளும் திருமஞ்சனமாட்டித் திருவமுது படைத்து வந்த அவருக்குக் காட்சி கொடுத்ததாகப் புராணச் செய்தியால் அறிய முடியவில்லை. இதற்குக் காரணமென்ன? சிவகோசாரியார் இறைவன் மேல் அன்பில்லாதவரா அப்படியெனில் நாள்தோறும் தன் கிரியைத் தவறாமல் மேற்கொண்டிருப்பாரா? அல்லது கண்ணப்பர் படைத்த ஊன் அமுதுக் கழிவுகளினைக் கண்டு கவன்றிருப்பாரா? உண்மையில் கிரியாமுறைகளில் அல்லது அறிவாராய்ச்சியில் சிறிதளவேனம் கலந்திருக்கும் 'நான்' என்ற அகங்காரத்தின் கூறே கோசாரியார் அன்பிலும் கலந்திருந்தது போலும் ஏனெனில் கண்ணப்பர் படைத்த அனுசிதங்களைக் கண்டு கோசாரி யார் கொள்ளும் கோபம் அகங்காரத்தின் வழிவிளைந்த தெனலாம். 'தேவதேவேசனே! திருமுன்பு இதுசெய்து போவதே இவ்வண்ணம்!' எனக் கேட்டதால் அப்படிச் செய்தவரைத் தண்டித்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமோ? என்னும் காழ்ப்புணர்ச்சியும் கொப்பளிக்கிறது. ஆனால் திண்ணனார் காளத்தி நாதரைக் கண்டபோதிருந்த கோசாரி யாரின் பூக்கள் போன்றவற்றை அறியாமல், என்ன என்று நாணனைக் கேட்க அவன், "ஒன்றிய இலைப்பூச்சூட்டி முன்பறைந்தோர் பார்ப்பான் அன்றிது செய்தான். இன்றும் அவன் செய்ததாகும்" என்று கூற, திண்ணனார் அதைவிரும்புகிறார். "திருக்காளத்தி நாயனார்க்கினிய செய்கை எண்ணிய இவைகெல்லாம் என்றது கடைப்பிடித்துக் கொண்டு" தன் பங்கிற்காம் அபிடேகம் முதலியவற்றை வசதிக் கேற்றபடி செய்தாரேயன்றி அகந்தை கொண்டோ, காழ்ப்புணர்ச்சி யுடனோ கோசாரியார் பூசையை அவர் வெறுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே தான் "தன்பரிசும் வினையிரண்டும சாரும் மலம் மூன்றும் அற, அன்புப் பிழப்பாய்த்திரிந்த அவருக்கு ஆறே நாளில் ஆண்டவன்" அடிசேரும் வாய்ப்புக் கிடைத்ததெனலாம். ஆக, ஆகம வழிபாட்டை விட அன்பு வழிபாடே உயர்ந்தது என்பது இங்கு குறிப்புப் பொருளாய் நின்கின்றது எனலாம்.

அடுத்து கண்ணப்பரின் முற்பிறப்பு சேக்கிழார் சொல்வழி குறிப் பாகவே காட்டப்படுகிறது. காளத்தி மலை நோக்கிச் செல்லும் திண்ணனின் என்பு நெக்குருரகி, உள்ளத் தெழுவேட்கை உந்தித் தள்ளுகிறது. நாணனுக்கு ஏற்படாத ஏன் சிவகோசரியாருக்கே ஏற்படாத இவ்வுணர்வு திண்ணனுக்கு ஏற்படக் காரணமென்ன. பாடலில் முதலாம் அடி இதன் விளக்கத்தைக் குறிப்பாய்த் தருகின்ற தென்பர்.

"முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையைநோக்கி
என்பு நெக்குருகி உள்ளத் தெழுபெருவேட்கையோடும்."

(பெ. பு. 751)

பாடலில் 'முன்பு செய் தவத்தின் ஈட்டம்' என்பதற்கு திண்ணனார் முற்பிறப்பில் அருச்சுனனாக இருந்த செய்தியை எடுத்துரைப்பார் பெரியோர். பாசுபதாஸ்திரம் வேண்டி ஒரு காலில் நின்று தவம் முயன்ற அர்ச்சுனன் முன் பன்றியொன்று துன்பஞ்செய்யவர அர்ச்சுனன் பாணம் பெய்கிறான். அதேவேளை வேடுவனாய் வந்த சிறுவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்கின்றான். யார் பாணத்தால் பன்றி இறந்ததென்ற சர்ச்சையில் வேடுவனை இகழ்கிறான் அர்ச்சுனன். பின் வந்திருப்பது இறை யொன்றுணர்ந்து தெளிவு பெற்றுச் சரணடைகிறான். உடனே முத்தி வேண்டும் என்கிறான். இறைவன் அவன் பக்தியை மெச்சினாரேனும் முதலில் விரும்பித் தவம் செய்தது அஸ்திரம். அதனை இப்போது அடைவாய் அடுத்துக்கேட்ட முத்தியை அடைய வேண்டும் என்றும் அருள்கிறார். பன்றிச் சம்பவமே என்னை உனக்கு உணர்த்தியதால் அங்கும் அது தொடரும் என்கிறார். இப்படியான இந்தப் பெரிய செய்தி 'முன்பு செய்தவத்தின் ஈட்டம்' என்ற சிறுதொடருடன் அடக்கப்பட்டு குறிப்புப் பொருள் காட்டி நிற்கின்றது எனலாம்.

அடுத்து சேக்கிழாரை அறியாமலே இறைக்கருணையின் வசமாக கட்டமைந்திருக்கிற ஒரு பாடலைப் பார்க்கலாம். திண்ணனார் காளத்தி மலை ஏறும்போது பாரம் குறைவாக உணரும் பாடல்.

ஆவதென் இதனைக் கண்டிங் கணைதொறும் என்மேற்பாரம்
போவதொன்றுள்ளது போலும் ஆசையும் பொங்கிமேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விரும்புற விரையா நிற்கும்
தேவாரங் கிருப்பதெங்கே போகென்றார் திண்ணனார்தாம்.

(பெ. பு. 746)

இவ்வாறு அமைகிறது. பாரம் குறைதலென்பது ஆன்மாவானது தத்துவ தாத்துவிதங்களாகிய சுமைகளில் இருந்து விடுபடுதல் எனலாம். உள்நிலைத் தத்துவங்களான சிவதத்துவங்கள் ஐந்து, வித்தியாதத்துவங்கள் ஏழு, ஆன்மா தத்துவங்கள் இருபத்து நான்கு இதைவிட புறநிலைத் தத்துவங்கள் அறுபது எனவகுப்பர் சித்தாந்திகள். ஆக மொத்தமாக தொண்ணூற்றாறு (96) தாத்துவிகங்கள் உண்டு. இவற்றிற் பற்றுக்கொண்டிருந்த உயிர் இவற்றைச்சுகமென்றுகருதிச் சுமந்திருக்கும். ஆனால் விடுபடும்போது இப்பாரம் நீங்குதலை உணரும். ஆக கண்ணப்பர் இவ்வகைத் தொண்ணூற்றாறிலிருந்தும் விடுபடுகிறார் என்பதுணரப்படுகிறது. இங்கு குறிப்பின் சிறப்பென்ன வெனின் கண்ணப்ப நாயனார் புராணத்தில் இப்பாடல் தொண்ணூற் றேழாவதாக (97) அமைந்திருக்கின்றது என்பதேயாகும். அதாவது 96ஐக் கடந்துள்ளது என்ற குறிப்பு அற்புதமாகப் பொருந்து குறிப்பால் பொருள் தருவதை ஆன்றோர் எடுத்துரைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர காட்டப்பட்டுள்ள உவமைகள் போன்றவற்றிலும் குறிப்புப் பொருள்கள் பல பேசப்பட்டுள்ள என்பதையும் காணமுடியும். எனினும் விரிவஞ்சி அவை விடப்படுகின்றன.

நிறைவாக இப்புராண பயனாக; அன்பே சிவம் என்பதும், அன்பின் வழியினாலேயே இறையை அடைதல் சுலபம்மென்பதும், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க் கென்பதும் தத்துவ ஆராய்ச்சியாளர்களின் உச்சியம் இறுதியில் அன்பையே வழியாகக் கொண்டு இறைவனை அணுகுகின்றது என்பதும், ஆகவே அன்பின் வழி நின்று ஆண்டவனை அடைக என்பதும் இப்புராணம் கற்பிக்கும் செய்திகள் எனலாம்.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# கண்ணப்ப நாயனார் புராணம் காட்டும் அன்புநெறி

ஈஸ்வரநாதபிள்ளை குமரன் M.Phil.

## 1. அன்பு

அன்பு என்பது உயிர்களின் உடன்பிறப்பு. உயிர் உடம்போடு கூடிப் பிறந்ததே அன்புடன் இப் பூமியையும் பூமியிலுள்ள பொருள்களையும் உயிர்களையும் காதலித்து வாழ்வதற்காம் என வள்ளுவனார் குறிப் பிடுகின்றார்.

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"[1]

அன்பானது குடத்துள் விளக்கு போலவும் உறையுள் வாள் போலவும் ஒருவரிடத்து மறைந்து கிடக்கும். ஆனால் யாதேனும் ஒரு தூண்டல் ஏற்பட்ட வழி அது ஒருவரின் மெய்ப்பாடுகளின் வழி வெளிப்பட்டு நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசர் தரும்"[2]

### i. புறமுக அன்பு

இங்ஙனம் உயிருடனும் உடம்புடனும் கூடி நிற்கும் அன்பானது, முதலில் உயிர் தனக்குக் கிடைத்த உடலையே காதல் செய்யத் தூண்டு கின்றது. பின்னர் படிப்படியாகப் படர்ந்து இவ் உடல் வாழ்வுக்கு எவையெவை அவசியமோ அவற்றையெல்லாம் அன்பு செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றது. தாய், தந்தை, சகோதரர், உற்றார், உறவினர், நாடு, மதம், இனம், மொழி என லௌகீக பந்தங்கள் உயிர்களிடத்தில் ஏற்படுவதற்கு இந்த அன்பு விதைக்கும் பாசப் படர்ச்சியே காரணமாகும்.

இங்ஙனம் உலகியல் பொருள்களிலும், இன்பங்களிலும் உயிர் கொள்ளும் அன்புநிலை 'புறமுக அன்பு' எனப்படுகின்றது. இப் புறமுக அன்பு நிலையற்றது. ஆன்மாக்களின் நிலையற்ற கருவியாகிய மனவழிப் பிறக்கும் இது; உலகியல் பற்றுக்கள் பாசங்களுக்கெல்லாம் அடிப்படையாகி ஆன்மாக்களைத் தீமை செய்யத் தூண்டுகின்றது. இதனால் துன்பச் சுழற்சிக்குக் காரணமாகி ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கக் காரணமாயமைகின்றது. ஆதலால் நீர்க்குமிழி போல் நிலையற்றதாய் கணநேர பிரீதியை (சிற்றின்பத்தை) மட்டும் தரும் இப்புறமுக அன்பினைப் 'பொய்யன்பு' என ஆன்றோர் குறித்தனர்.[3] அசத்தை அசத்தாலறியும் அன்பு என இதனைக் கூறினும் ஒக்கும்.

### ii. அகமுக அன்பு

இதற்கு எதிர்மாறாய் ஆன்மா தன்னையும் தனக்கு உயிர்க்குயிராயுள்ள சிவத்தையும் விரும்பி அவற்றின்பால் அன்புசெலுத்தும் நிலை மற்றொரு வகையானது. துன்பக் கலப்புடையதும், சிற்றின்பத்தை மட்டும் தருவனாகிய புறமுக அன்பினைக் காலங்காலமாக அநுப வித்துக் களைப்பும் அந்தரங்க அலுப்புமடைந்த ஆன்மா துன்பக் கலப்பற்றதாய், நீடுநின்று நிலைப்பதாய் நிறைவுள்ளதாய் உள்ள அமரத்துவ அன்பொன்றினைத் தேடும் நிலையில் இவ் அன்பு பிறக்கும் எனக் கூறுவர்.[4] புறமுக நாட்டம் முற்றாகக் கெட்டொழிந்து அகமுக நோக்குடன் ஆன்மா தன்னையும் தனது தலைவனாகிய சிவத்தையும் பேராமற் பிரியாமல் நிற்கும் அன்புநிலை இதுவாகும். இதனை 'அகமுக' அன்பு எனக் குறித்தனர்.

சத்தினைச் சத்தினால் அறியக் கிடைக்கும் இவ் அன்பே மெய்யன்பு எனப்பட்டது. இறைவனின் திருவருள் வழிப்பிறக்கும் "இந்த அன்பே நீடித்து நிலைக்கக் கூடியதாகும். அடைதற்கரியதாகிய இந்த அன்பு நிலை சித்திக்குமாயின் ஆன்மாக்களுக்குச் சிவமின்றி எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படாது நிற்கும். அதன் உள்ளத்திலும் உடலிலும் இனம்புரியாத மாற்றங்கள் ஏற்படும் இதனை,

> சிவனிடத்து அன்புடைமைக்கு அடையாளம் அச்சிவனுடைய உண்மையை நினைத்தல் கேட்டல், காண்டல் செய்தபோது தன் வசமழிதலும், மயிர்க்கால் தோறும் திவலை உண்டாகப் புளகங் கொள்ளலும், ஆனந்த அருவி பொழிதலும், விம்மலும் நாத்தழு தழுத்தலும், உரை தடுமாறலும், ஆடலும் பாடலும் அவர் உவப்பன செய்தலும் வெறுப்பன ஒழித்தலும் பிறவுமாம்

எனக் குறிப்பிடுவதால் உணர்க.[5] ஆன்மாக்களுக்கு நிலைத்த இன்பத் தினை அதாவது பேரின்பத்தினை தரும் இவ் அன்புநிலையை அடைய முயற்சிப்பதே ஆன்மாவின் வாழ்வியல் இலட்சியம் எனலாம்.

பேரின்பப் பொருளான ஆண்டவனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு அகமுக அன்பு அல்லது மெய்யன்பு சித்திக்கப் பெற்றவர்களே மெய்யாடியார்கள் எனப்பட்டனர். இத்தகைய மெய்யடியார்களின் வரலாற்றினையும் அவர்களை ஆண்டவன் ஆட்கொண்ட திறத் தினையும் பாட விளைந்ததே பெரியபுராணமாகும்.

## 2. பெரியபுராணம்

இறைவன் மாட்டு நீங்காத அன்பு கொண்டு நிலையான பேரின்பப் பெருவாழ்வைத் தேடிக்கொண்ட அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை உரைக்கும் திவ்விய சரிதம் பெரியபுராணமாகும். இவர்களுள் ஐம்பத்து நான்கு பேர் வகையடியார்கள் ஒன்பது பேர் தொகையடியார்கள். மூன்றாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராக இருந்தவரும் 'சேக்கிழார்' எனப் பிற்காலங்களில் சிறப்புடன் அழைக் கப்பட்டவருமான அருண்மொழித் தேவர் இதனை எழுதினார். சோழர் காலத்தில் மீண்டும் தலைதூக்கிய அவைதிக மதச் செல்வாக்கிலிருந்து சைவ சமயத்தை மீட்டெடுக்கவும், சைவசமயிகள் பால் தமது மதம் பற்றிய உயர்வான மனப்பதிவை ஏற்படுத்துதற்கும், சைவசமயம் பற்றிய நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கும் என இந்நூல் செய்யப் பட்டதாக அறியமுடிகின்றது. சமகாலத்தில் முனைப்புற்று நின்ற சமூகத்தேவையை மனங்கொண்டு சேக்கிழார் படைத்த இந்நூலுக்கு சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டர் திருவந்தாதியும் முறையே முதனூலாகவும் வழி நூலாகவும் அமைந்தன.

தமிழ்நாட்டிலேயே வாழ்ந்து இறைவனின் அன்புக்குப் பாத்திரமான அடியவர்களின் வரலாறுகளை வெறுங் கற்பனையாக அன்றி அவர வர்கள் வாழ்ந்த இடங்களுக்கெல்லாம் சென்று, தேடித்தொகுத்து சேக்கிழார் இந்நூலைச் செய்திருப்பதை நோக்கும்போது அவரின் திறமையையும், முயற்சியையும் வியவாதிருக்க முடியாது. முதனூல் வழிநூல்களிலுள்ள தகவல்கள் மட்டுமன்றி கல்வெட்டுக்கள், அரச ஆவணங்கள், ஐதீகங்கள், வரலாற்றுக்குறிப்புகள், கர்ணபரம்பரைச் செய்திகள் எனப் பலவும் அவரின் நூலுக்கு மூலாதாரங்களாக அமைந்துள்ளன.

இந்நூலில் விதந்துரைக்கப்படும் மெய்யடியார்கள் யாவரும் ஒரே காலப்பகுதிக்குரியவர்கள் அல்லர். பல்லவர் காலத்திலும் அதற்கு முன்னரும் பின்னரும் வாழ்ந்தவர்கள். இயன்றவரை அவர்களது வரலாறுகளை நம்பிக்கைத்தன்மையுடனும் வரலாற்றுணர்வுடனும் சேக்கிழார் தரமுற்பட்டிருக்கின்றார். சேக்கிழார் இதனைப் புராணமாகப் பாட முற்பட்டபோதும் தனது சமகாலத்தில் செல்வாக்குச் செலுத்திய காவிய நடையின் தாக்கத்துக்குத் தாராளமாக உள்ளாகியுள்ளார் என்பது தெரிகின்றது. இதனாலேதான் மெய்யடியார்களில் அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் இவ்வுலகில் முறையாக அனுப வித்து வாழ்ந்த சுந்தரரின் வரலாற்றை முதலிலும், இடையிலும், கடையிலும் செருகி இப்புராணத்தைப் பாடியுள்ளார். காவியநடையின் பெருமிதமும், செந்தமிழின் சிறப்பும், பக்திரசமும் ஒருங்கே வெளிப் பட்டு நிற்கும் உன்னத படைப்பாகப் பெரிய புராணத்தைக் கொள்ள முடியும். இறை அன்பில் ஊறித்திளைத்த மெய்யாடியார்களின் வரலாற்றைக் கூறுதலால் இது ‘அன்புநூல்’ எனவும் சுட்டப்படு கின்றது.

### 3. கண்ணப்ப நாயனார் புராணம்

பெரிய புராணத்தின் முதற் காண்டத்தில் மூன்றாவது சருக்கமாகிய இலைமலிந்த சருக்கத்தில் பத்தாவதாக கண்ணப்பநாயனார் புராணம் அமைந்துள்ளது. நூற்று எண்பத்தொரு திருவிருத்தங்களில் கண்ணப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனாரின் வரலாற்றினைப் பக்திரசம் சொட்டச் சொட்டச் சேக்கிழார் பாடியுள்ளார். தற்காலத்தில் மேலதிகமாகக் கண்ணப்ப நாயனார் புராணத்துக்குரியதெனக் கருதப்படும் ஐந்து உதிரியான பாடல்களும் அனுபந்தமாகச் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்த உதிரிப் பாடல்கள் பிற்காலங்களில் ஏடெழுதியோரின் சேர்க்கைகள் எனக் கொள்வதே பொருத்தமானதாகும்.

## ௪. கண்ணப்பரின் அன்பின் திறம்

கண்ணப்பரின் அன்பின் திறத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

> கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
> என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
> சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ [6]

எனப்பாடுகின்றார். கண்ணப்பரின் அன்பு ஒப்பு நோக்கப்படமுடியாதது; ஈடிணையற்றது; தனித்துவமானது என்பது மாணிக்கவாசகரின் கருத்து. அன்பின் மேலெல்லைக்கு இவர்தான் என மாணிக்கவாசகர் கண்ணப்பர் பற்றித் தரும் ஆர்வ மதிப்பீடு அன்புநிலை மதிப்பீட்டில் ஒருமலையிலக்கு என்கிறார் பண்டிதர் மு.கந்தையா.[7] மாணிக்கவாசகர் மட்டுமன்றிச் சம்பந்தரும் அப்பரும், பட்டினத்துப்பிள்ளையும் கண்ணப்பரின் அன்புக்கு நெக்குருகிக் கவி செய்ததைக் காணும் போது அந்த அன்பு சொல்லுந்தரமல்ல என்பது புலப்படும். திருக்களிற்றுப்படியாரும்.

> கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை என்றமையாற்
> கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் - கண்ணப்பர்
> தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
> றாரறியு மன்பன்றது.[8]

எனக் கூறிக் கண்ணப்பரின் அன்பின் உச்சத்தை வெளிப்படுத்தியிருத்தல் காண்க.

University of Peradeniya
27 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i. காணமுன் காதல்**

கண்ணப்பரின் அன்பின் திறத்தினை "கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலினரான" மெய்யடியார்களே வியந் தமைக்கான காரணத்தினைக் காண்பதற்கு முன்னதாக அன்பின் மூன்று நிலைகளை அடையாளங் காண்பது அவசியமானதாகும்.

1) ஒருவரைப் பற்றிக் கேட்டமாத்திரத்தே அவர்மாட்டு அன்புபெருகி நிலையழிதல் தலையன்பு எனப்படும்.

2) ஒருவரைக் கண்டமாட்டு அவரிடத்து நிகழும் அன்பு இடையன்பு எனச் சுட்டப்பட்டது.

3) இவ்வாறன்றி ஒருவரோடு கூடிப்பழகிய பின் உண்டான அன்பு கடையன்பு எனப்பட்டது.

கண்ணப்பர் மேலே சுட்டப்பட்ட அன்புநிலைகளுள் தலையன்பின் வழி நின்றவர். 'கொல்லெறி குத்தென்று ஆர்த்துக் குழுமிய ஓசை யன்றி'[9] வேறெதுவும் அறியாத வேட்டுவ குலத்திலே பிறந்து வளர்ந்த கல்வியறிவேயற்ற கண்ணப்பருக்குள்ளும் "இந்தச் சேணுயர் திருக் காளத்தி மலைமிசை எழுந்து செவ்வே கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்"[10] என நாணன் கூறக்கேட்டதுமே அன்பு சுரக்கத் தொடங்கிவிட்டது. உலக பந்த பாசங்களில் மூழ்கித் தன் பெற்றோர் தன் சுற்றம், தன் உலக நன்மைகள் என வாழ்ந்தவருக்குள் திருவருள் செறிவு ஏற்படுவதற்கான திருப்புமுனை இதுதான். குடுமித்தேவரின் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தே கண்ணப்பரின் உள்ளத்தில் அகமுக மாகப் பாயத்தொடங்கும் அன்பின் பெருக்கத்தை.

"ஆவதென் இதனைக் கண்டிங்கு அணைதொறும் என்மேல்பாரம்
போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்.
தேவரங்கு இருப்பது எங்கே போ" என்றார் திண்ணனார் தாம்[11]

எனக் குறிக்கின்றார் சேக்கிழார். கண்ணப்பரின் உள்ளத்தில் கிளர்ந் தெழும் அகமுகப் பாய்ச்சலான அன்பினால் அவர் உள்ளத்தில் ஏற்படும் மாற்ற நிலையை "அணைதோறும் என்மேல் பாரம் போவதொன்றுளது போலும்" எனும் தொடரால் சேக்கிழார் எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் நயம் நோக்கத்தக்கதாகும். பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆண்டவன் தடுத்தாட்கொண்டு தன்வயப்படுத்துவதற்கு முன்னதாக அவ் ஆன்மாக்களில் மூன்று முக்கியமான நிலை மாற்றங்கள் ஏற்படும் எனச் சைவசித்தாந்திகள் குறிப்பிடுவர்.

1) இருவினையொப்பு
2) மலபரிபாகம்
3) சத்தினிபாதம்

என்பனவே அவையாகும். நல்வினை தீவினை இரண்டையும் ஒரே தன்மையினதாக எண்ணி உவந்து விடும்நிலை 'இருவினையொப்பு' எனப்படுகிறது. 'மலபரிபாகம்' என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ஆன்மாவில் நின்றும் நீங்குதற்குரிய நிலை யாகும் இருவினையொப்பும், மலபரிபாகமும் சித்திக்கும் ஆன்மாக் களின் மேல் இறைவனின் திருவருட்சக்தி படிந்து அவற்றைத் தன்வயப்படுத்தி நிற்கும் நிலையே 'சத்தினிபாதமாகும்.' திருவருளை நாடிச் செல்லும் கண்ணப்பருக்குச் சத்தினிபாதம் சாத்தியப்படுவதற்கு முன்னதாக இருவினையொப்பும், மலபரிபாகமும் நடைபெறும் நிலைதான் இப் 'பாரஇறக்கம்' கல்வியறிவோ வேத, ஆகம பரிச்சயமோ அற்ற கண்ணப்பருக்குத் தனக்குள் ஏற்பட்ட இருவினையொப்பு, மலபரிபாக மாற்றங்களை உணர்வதற்கோ அல்லது விளங்கிக் கொள்வதற்கோ முடியவில்லை. தனக்குள் ஏதோ வினோதமான அல்லது வித்தியாசமான அநுபவம் ஒன்றுமட்டும் ஏற்படுவதை அவரால் உணரமுடிகின்றது. நாணனுடன் மலையை நெருங்க, நெருங்க இவ் உணர்வின் அதிகரிப்பும் குடுமித்தேவரைக் காணுதல் வேண்டும் என்ற அந்தரிப்பும் வளர்ந்து செல்வதைப் பின்வரும் செய்யுள் வரிகளில் சேக்கிழார் நயம்படக் காட்டியுள்ளார்.

"தெளிபுனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார்"[12]

முன்பு செய்த தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத்தெழு பெருவேட் கையோடும்.[13]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணனும் அன்பும் முன்புதளிர் வரைஏறத் தாமும்
பேணு தத்துவங் களென்னும் பெருகுசோப னமேறி
ஆணையாம் சிவத்தைச் சாரஅணைபவர் போலஐயர்
நீள்நிலை மலையை ஏறிநேர்படச் செல்லும் போதில்.[14]

முனிவர்களும், யோகிகளும், தவசிகளும் பலகாலம் முயன்று அடையத்தக்க மலபரிபாக நிகழ்வு கண்ணப்பருக்கும் சித்திக்கின்றது. அதுவும் பிரயாசைப்படாமல் இலகுவாகச் சித்திக்கிறது. இதற்குக் காரணம் 'முன்பு செய்த தவத்தின் ஈட்டம்' என்கிறார் சேக்கிழார். கண்ணப்பருக்குக் கிடைத்த இப்பேறு முன்வினைப் பயனாக வந்தது என்பது சேக்கிழார் கருத்து. பிறப்புக்கும் பிறப்பில் அடையும் இன்ப துன்பங்களுக்கும் அடிப்படை முற்பிறப்பிலே செய்த வினைகளே யாகும். வினைகள்.

1) நல்வினை
2) தீவினை

என இரண்டு வகைப்படும். இரண்டுமே பிறப்புச் சுழற்சிக்குக் காரணமாகி விடுகின்றன. இதனால் தான் ஆத்ம ஈடேற்றத்துக்கு இவையிரண்டும் விலங்குகள் போலத் தடையாகவுள்ளன எனச் சைவசித்தாந்திகள் குறிப்பிடுவர். தீவினையை இரும்பு விலங்கு எனக் குறிப்பிட்டால் நல்வினையைப் பொன்விலங்கு எனச் சுட்டலாம். விலங்குகளைச் செய்த பொருள் நல்வினையைப் பொன்விலங்கு எனச் சுட்டலாம். விலங்குகளைச் செய்த பொருள் வேறுபட்டாலும் அவற்றின் பணி ஒன்றுதான். என்றைக்கு ஆத்மா நல்வினை, தீவினை இரண்டும் பிறப்புச் சுழற்சிக்குக் காரணம் என உணர்ந்து அவற்றைச் சிவார்ப்பிதம் செய்யமுயல்கின்றதோ அன்றே அதற்குத் திருவருள் கிட்டுகின்றது.

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் துவா ஸர்வ பாபேப்பியோ மோகஷ்யிஷ்யாமி"[15]

எனப் பகவான் கண்ணன் கீதையிலே உபதேசம் செய்கின்றார். ஓர் ஆத்மா அநுபவித்ததும் அநுபவிக்கப் போகின்றதுமான வினைத் தொகுதி மூன்று வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) சஞ்சிதம்

2) பிராப்தம்

3) ஆகம்யம்

ஆத்மா முற்பிறப்புத் தொடர்ச்சியில் சேர்த்துக்கொண்ட வினைத் தொகுதியே 'சஞ்சிதம்' எனப்படுகிறது. இப்பிறப்பிலே அநுபவிப்ப தற்கென அதற்கு நியமிக்கப்பட்டுள்ள பழவினைத் தொகுப்பின் ஒருபகுதி 'பிராப்தம்' எனப்படுகின்றது. பிராப்தவினையை அநுப விக்கும் போது ஆத்மா புதிதாக இப்பிறப்பில் ஈட்டிக் கொண்ட வினைத்தொகுதி 'ஆகம்யம்' என வழங்கப்படுகின்றது. கண்ணப்பர் முன்பு செய்த தவம், புண்ணியம், யோகம் இவற்றினால் இப்பிறப்பில் பிராப்தமாகக் கிடைத்த பெரும் பாக்கியமே இம் 'மலபரிபாக நிலை' எக் குறிப்பிடினும் தவறில்லை. சேக்கிழார் 'முன்பு செய்த தவத் தினீட்டம்' என வாயாரப் புகழ்வது இதனைத்தான்.

இதனடிப்படையிலும் கண்ணப்பர் பற்றிய சில ஐதீகக் கதைகளை மையமாகக் கொண்டும் 'காளத்திபுராணம்' கண்ணப்பரின் பூர்வ ஜென்மக் கதையொன்றினைப் புனைந்துரைப்பது இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும். மஹாபாரத இதிஹாசக் கதாபாத்திரமான அருச்சு ணனுடன் கண்ணப்பரைத் தொடுத்துக் காட்டும் இத்தலபுராணம் அருச்சுனனின் மறுபிறப்பே கண்ணப்பர் எனக் குறிப்பிட்டு அது தொடர்பான கலையொன்றினையும் பக்திரசம் பொங்க விரித்துரைத்துச் செல்கின்றது.

காளத்திநாதரின் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தே கண்ணப்பரிடத்து ஏற்பட்ட உள்ளுணர்வு மாற்றங்களை இயன்றவரையில் வார்த்தையில் வடித்துவிட வேண்டும் எனச் சேக்கிழார் திணறுவது 'அளவிலா ஆர்வம் பொங்கி', 'மன்பெருங்காதல் கூர', 'என்பு நெக்குருகி உள்ளத்தெழும் பெரு வேட்கையோடு' எனும் பாடல்வரிகளால் புலனாகும். கண்ணப்பர் காளத்திமலையை நோக்கிச் செல்வதை 'நீள் நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்' எனக் குறிப்பிடுகின்றார். இதுவரை புலன்களின் வழி போக்கற்று ஊசலாடிய ஆத்மா இப்போ சிவத்தினை நோக்கி நேர் வழியில் செல்லத் தொடங்குவதை சேக்கிழார் நயம்பட பாடலில் பொதிந்துள்ளமை நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ii. கண்டவுடன் காதல்**

குடுமித்தேவர் திருக்காளத்திமலையில் இருக்கிறார் எனக் கேள்விப் பட்டது முதற்கொண்டே இனம்புரியாத இன்பப் பெருக்கிலும் அன்புப் பெருக்கிலும் அகப்பட்டுத் திணறிய கண்ணப்பர் சிவலிங்கத் திருமேனி வடிவினராய் குடுமித்தேவர் வீற்றிருப்பதைக் கண்டவுடன் மேலும் புளகாங்கிதம் கொள்கின்றார். மலபரிபாகம் அடைந்து சுத்தாத்மாவாக வந்திருக்கும் கண்ணப்பர் மீது குடுமித்தேவரின் அருட்பார்வை படுகின்றது: நயன தீட்சை நடைபெறுகின்றது: திருவருள் கண்ணப் பருக்குச் சித்திக்கின்றது. முன்பு மலைமிசை ஏறுங்கால் மனதில் இருந்த உலக விவகாரங்களாகிய பாரங்கள் இறங்க, இறங்க திருவருள் ஏற்றமும் படிப்படியாக நிகழ்ந்ததைச் சுட்டிக் காட்டிய சேக்கிழார் இங்கே இறைவனின் அருட்பார்வைக்குட்பட்டவுடனே திருவருள் கண்ணப்பரில் முழுமையாக நிறைந்தது என்கிறார். சத்தினிபாத நிலையைக் கடந்த கண்ணப்பர் திருவருள் வடிவமேயானார்.

". . . . .அங்கணர் கருணை கூர்ந்த அருள் திருநோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவிலன் புருவம் ஆனார்" [16]

எனக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார். திருவருள் வடிவாய் நிற்கும் கண்ணப்பருக்கு குடுமித்தேவரைக் கண்ட மாத்திரத்தே அன்பு தாரை தாரையாகக் கொட்டத் தொடங்குகின்றது. காந்தத்தைக் கண்டதும் இரும்பு வேகமாய் அதனை நோக்கிச் சென்று அதனுடன் இணைந்து கொள்வதைப் போலக் குடுமித்தேவரை நோக்கி ஓடிச் சென்று அப்படியே அவரை ஆலிங்கனம் செய்து கொள்கின்றார்.

"மாகமார் திருக்காளத்தி மலையெழு கொழுந்தாயுள்ள
ஏகநாயகரைக் கண்டார் எழுந்த பேருவகை அன்பின்
வேகமானது மேற்செல்ல மிக்கதோர் விரைவினோடு
மோகமாய் ஓடிச்சென்றார் தழுவினார் மோந்துநின்றார்" [17]

எனும் பாடல்வரிகளில் கண்ணப்பரின் அன்பின் விகசிப்பினை அடையாளங் காட்டுகின்றார் சேக்கிழார். திருத்தாண்டகத்திலே அப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" [18]

என அப்பர் காட்டும் நாயக - நாயகி பாவம் கண்ணப்பரின் அன்புப் பெருக்கிலும் ஏற்படுகின்றது. தலைவனின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே பிச்சித்துத் தலையன்பின் எல்லைக்குச் சென்றுவிடும் ஆத்மாவுக்கு, பின் அந்தலைவனைக் காணவும், கூடவும் நேர்ந்தால் அவ் அன்பின் பெருக்கம் எவ்வாறு எல்லை கடந்து விடுமோ அந்நிலையைக் கண்ணப்பர் அடைந்தார். அவ்வன்பின் எல்லை கடந்த வெளிப்பாடாக அவர் உரோமங்கள் சிலிர்க்கின்றன. பெருமூச்சு வெளியேறுகின்றது. கண்களால் கண்ணீர் அருவிபோலப் பாய்கிறது என அந்நிலையைப் பின்வரும் கவிதை வரிகளில் வர்ணிக்கின்றார் சேக்கிழார்.

"நெடிது போதுயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவிபாய" [19]

என வருதல் காண்க.

"மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே" [20]

என மாணிக்க வாசகர் விபரிக்கும் பக்திப் பரவசநிலையுடன் கண்ணப்பரின் நிலை ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும். அவ்வேளையில் கண்ணப்பர் வாயிலிருந்து வரும் 'அடியனேற்கு இவர் தாம் இங்கு அகப்பட்டார் அச்சோ' எனும் வார்த்தை ஆண்டவனிடத்து அவர் கொண்ட அன்பின் வெளிபாட்டுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு "தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்"[21]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் "யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது இனியே"[22] என்ற தேவார, திருவாசக வரிகள் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கன. ஆத்மா ஆண்டவனுடன் கொள்ளும் அத்யந்த தொடர்பினை இரண்டு வகைப்படுத்திக் கூறுவர்.

1) மக்கட சம்பந்தம்

2) மார்ச்சார சம்பந்தம்

'மக்கடம்' என்பது குரங்கு. குரங்குக் குட்டி தாயைப் பற்றிக் கொள்வது போல ஆத்மா ஆண்டவனை 'நீயே கதி' எனப் பற்றிக் கொள்வது மக்கட சம்பந்தமாகும். மார்ச்சாரம் என்றால் பூனை. பூனை தனது குட்டியைத் தான் செல்லும் இடங்களெல்லாம் காவிச் சென்று பாதுகாப்பதுபோல ஆண்டவனே 'புறம் புறந் திரிந்து' ஆன்மாவைக் காத்து ரட்சிப்பான். இவற்றுள் கண்ணப்பர் மக்கட சம்பந்தமாக நிற்கிறார். ஆண்டவனை விட்டுப் பிரியக் கூட அவருக்கு விருப்ப மில்லை. அந்தளவுக்கு அன்பின் பெருக்கில் அவர் மூழ்கிவிடுகிறார். அன்பே வடிவாகி விடுகின்றார். இதனைச் சேக்கிழார் 'படியிலாப் பரிவுதானோர் படிவமாம் பரிசு தோன்ற'[23] எனக்குறிப்பிடுதல் நயக்கத் தக்கதாகும். இதனையே இன்னுமோர் இடத்தில்,

"முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறு வேதகத் திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற
அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர்கருத்தின் அளவினரோ"[24]

என்கிறார். கண்ணப்பரிடத்திலுள்ள அன்பு அவருள் மறைந்து கிடக்க வில்லை. அது பிழம்பு போல வெளிப்பட்டுப் பிரகாசித்தது என்கிறார் சேக்கிழார்.

### iii. கண்டபின் காதல்

இறைவன் மாட்டு ஆன்மா கொள்ளும் அன்பு அல்லது பக்தி அதன் நிலையைப் பொறுத்து மந்தரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்படும். அரக்கானது வெய்யிலின் முன் இருந்து வெதும்புதல் போல்வது மந்தரபக்தி. மெழுகானது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல் போல்வது மந்தபக்தி. நெய்யானது சூட்டுக்கு இளகுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்வது தீவிரபக்தி. தைவத்தாரையானது சிறிதும் இடையறாது ஒழுகுதல் போல்வது தீவிரதரபக்தி எனப்படும்.[25] கண்ணப்பர் குடுமித் தேவரைக் - கண்டமுதல்நாள் தொட்டு தொடர்ந்து வந்த ஆறுநாட்களும் தீவிரதர பக்தி நிலையிலேயே தன்னை நிலைநிறுத்தியிருந்தார். இறைவனிடத்து இடையறாத அன்பினைச் சொரிபவராக தன் பசிமறந்து, தூக்கம் மறந்து, சுற்றத்தை மறந்து, உடல் அலுப்பினை மறந்து காளத்தி நாதருக்கே தன்னை அர்ப்பணித்தவராக விளங்கினார். காளத்திநாதரை விட்டுப் பிரிவதற்கு அவர் மனம் ஒட்டவில்லை. மாறாக வனவிலங்குகள் சூழ இருக்கும் இக்காட்டில் 'பெருமான் துணையின்றி எங்ஙனம் தனித்திருப்பார்' எனக் கலங்குகின்றார். 'காட்டிடை கவனிப்பாரின்றியிருக்கும் அண்ணலுக்கு யார்தான் உணவிட வல்லார்' என மனக் கிலேசமுறுகின்றார். சிவகோசரியார் முன்னே செய்துவிட்டுப் போன பூசனைகளில் அவருக்குத் திருப்தியே வரவில்லை. சிவனுக்கு நல்லுணவும், பாதுகாப்பும் தன்னால் மட்டுமே தரமுடியும் என்பது கண்ணப்பரின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. கண்ணப்பரின் உள்ளத்தில் விளைந்த உண்மையான அன்பின் வெளிப்பாடுகளே இவ்வுணர்வுகள் எனலாம்.

> "உள்நிறைந்து எழுந்ததேனும் ஒழிவின்றி ஆராஅன்பில்
> திண்ணனார் திருக்களத்தி நாயனார்க்கு இனிய செய்கை
> எண்ணிய இவைகொலாம்' என்றிது கடைப்பிடித்துக் கொண்டவ்
> அண்ணலைப் பிரியமாட்டா அளவிலாதரவு நீட"[26]

என்கிறார் சேக்கிழார். கண்ணப்பர் சிவன்மீது கொண்ட அன்பினை 'ஆரா அன்பு' எனச் சேக்கிழார் சுட்டியிருப்பது காண்க. 'ஆரா அமுதாய் அளவிலாப் பெம்மானாய்' அருள்பாலிக்கும் ஆண்டவனிடத்திலேயே 'ஆரா அன்பனாய்' அவர் பாதங்களைச் சிக்கெனப் பற்றி நிற்கிறார் கண்ணப்பர். இந்நிலையை நாணனின் வார்த்தைகளால் மிக அழகாகச் செதுக்கியுள்ளார் சேக்கிழார்:

> "அங்கிவன் மலையில் தேவர்தம்மைக் கண்டணைத்துக் கொண்டு
> வங்கினைப் பற்றிப்போகா வல்லுடும்பென்ன நீங்கான்...."[27]

என வருதல் காண்க. உடும்பு வளைந்த உள்ளிடமுள்ள மரக்கொம்பரினை அசையாமல் உறுதியாகப் பற்றிப்பிடித்து நிற்பது போன்று கண்ணப்பர் சிவனை விட்டுப் பிரிய மனமின்றி நின்றார். எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுக்குப் பசி ஏற்படுமே என்ற எண்ணம் அவரைச் சற்றுப் பிரிந்து செல்லத் தூண்டினாலும் அச் சிறிதுநேரப் பிரிவுதானும் அவருக்குப் பெருவேதனையைத் தந்ததை,

"போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப்போவர்
காதலின் நோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்
'நாதனே! அமுது செய்ய நல்ல மெல்இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறுகொண்டிங்கு வருவேன்' என்பார்"[28]

எனச் சுட்டுகின்றார் சேக்கிழார். சிவனைப் பிரிகையில் கண்ணப்பரிடத்து எழுந்த அந்த நிலையை மேலே காட்டிய திருவிருத்தம் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளது. தன்னைத் தசரதச் சக்கரவர்த்தியாகவும் எல்லாம் வல்ல விஷ்ணு பரம்பொருளை இராமனாகவும் கற்பனை செய்து வாத்சல்ய பாவநிலையில் நின்று பாடல்களைப் பாடிய குலசேகர ஆழ்வாரின் 'வா போகுவா இன்னம் வந்து ஒருகால் கண்டு போ.....'[29] எனத் தொடங்கும் - தசரதன் புலம்பலாயமையும் - திருப் பாடல் வரிகள் இதனுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கன. இராமனைப் பிரிகையில் குலசேகர ஆழ்வாருக்கு ஏற்பட்ட துன்பமும் வேதனையும் கண்ணப்பரிடத்தும் காணப்படுகின்றன. அன்பின் நெருக்கத்தால் வந்த நிலை இது.

சிவனுக்கு உணவு கொணரப் போந்தவர் வேட்டையாடிய விலங்கின் மென்மையான இறைச்சிப் பகுதிகளை மட்டும் தேர்ந் தெடுத்து அவற்றை எரியில் வாட்டி, தானும் சுவைத்துப் பார்த்து நன்றாக இருக்கிறது எனக் கருதியவற்றை மட்டும் கல்லையில் வைத்துக்கொண்டு வருகின்றார். உணவுண்பதற்கு முன் சிவன் திருமஞ்சனமாட வேண்டுமே அதனால் வாயில் நீர் கொண்டு வருகின்றார். திருமஞ்சனமாட்டியபின் இறைவனை அலங்கரிக்க வேண்டுமே; பூக்களைக் கொய்து தன் குடுமி மிசை செருகிக் கொண்டு வருகின்றார். சிவகோசரியார் செய்து விட்ட பூசனைகளையெல்லாம் தன் காற் செருப்பினால் அகற்றுகின்றார். வாயில் மொண்டு வந்த நீரால் மஞ்சனமாட்டி, குடுமியில் செருகி வந்த மலரால் அலங்காரம் செய்கின்றார். கண்ணப்பரின் இச் செய்கைகள் சாதாரண நிலை நின்று பார்க்கும்போது அபத்தமாகவே தெரிகின்றன. இறைச்சியுணவைப் படைப்பதா? அதுவும் எச்சில்படுத்திய உணவைப் படைப்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் மொண்ட நீரால் சிவனை அசூசிப்படுத்தலாமா? ஏலவே சூடிக் களங்கப்படுத்திய பூக்களை இறைவனுக்குச் சார்த்தலாமா? காலடியால் இறைவனை, அவன் முன்னாலுள்ள பீடங்களைச் சுத்தம் செய்யலாமா? இவையெல்லாம் சிவ தூஷணைகள் அல்லவா? என்ற கேள்வி எழ நியாயமுள்ளது. ஆனால் இவையெல்லாம் திருவருள் நிறைந்து சிவமே வடிவாகி நிற்கும் ஆத்மா ஒன்றின் உச்சமான அன்பின் வெளிப்பாடுகள். ஆதலால் ஆண்டவன் அவற்றை ஏற்றுக் கொண்டான். குழந்தை தாயை உதைகிறது; அவள் மீது சலம் கழிக்கிறது; தன் கைகளால் விறாண்டுகிறது; அதற்காகத் தாய் அக் குழந்தையைக் கோவிப்பதில்லை. ஏனெனில் குழந்தை எதனையும் புரிந்து செய்வதில்லை. தான் தாய்க்கு ஏதோ சந்தோஷம் செய்வதாகவே குழந்தை எண்ணுகிறது. குழந்தையின் செயல்கள் தாய்க்கு அன்பினை மென்மேலும் மிகுவிக்கின்றனவேயன்றி அக்குழந்தை மீது ஆத்திரத்தை வருவிப்பதில்லை. கண்ணப்பரின் அன்பினால் விளைந்த இச் செயல்களும் சிவனுக்குக் குழந்தையின் செயல்கள் போலவே ஆயின. சிவகோசரியாரின் கனவிலே தோன்றி சிவன் கூறியதாக வரும் செய்திகளடங்கிய ஆறுதிருவிருத்தங்களும் கண்ணப்பரின் பக்தியின் அல்லது அன்பின் உச்சநிலையை எமக்குக் காட்டுகின்றன.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய நிலை இவ்வாறறிநீ' என்றருள் செய்தார்" [30]

என்கிறார் சேக்கிழார். கண்ணப்பரின் அன்பின் உச்சத்தை வேத, ஆகம விற்பனரான சிவகோசரியாரின் பூசனையோடு அருகருகே வைத்துக் காணும்போது, அதன் சிறப்பு மேலும் புலனாகின்றது. கல்வியறிவேயற்ற வேடனின் - காளத்தி வேடனின் - அன்பு கல்லையும் நெக்குருக வைப்பதை சேக்கிழார் மிக அழகாகக் கூறுகின்றார். சிவானால் பாராட்டப்படக் கூடிய அளவுக்கு உச்சமான அன்புநெறி கண்ணப்பருடையது. இதனாலேதான் மாணிக்கவாசகர் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை' என வாயாரப் புகழ்ந்து பாடினார்.

கண்ணப்பரின் அன்பின் மற்றொரு பரிமாணம் ஆறாம் நாளில் நிகழ்ந்தது. அவரின் அன்பின் திறத்தை உலகறியச் செய்ய விரும்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தன் வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்கிறார். இதனைக் கண்டதும் கண்ணப்பரிடத்துக் கொப்பளிக்கும் துன்பம், வேதனை, மனக்கிலேசம், பரிவு, பாசம், 'யார் இதைச் செய்தார்?' என அடையும் கோபம் முதலான உணர்வுகள் சுட்டிக்காட்டத்தக்கவை. தன் உயிருக்குயிராயுள்ள குடுமித்தேவரின் இந்நிலை அவருக்குப் பெரும் வேதனையாக அமைகின்றது.

"பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க் கடுத்ததென்னோ
ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க் கடுத்ததென்னோ
மேவினார் பிரியமாட்டா விமலனார்க் கடுத்ததென்னோ
ஆவதொன்ற றிகிலேன் யான் என்செய்வேன். . . . "[31]

என்று அலமந்து திரிகின்றார். எதைச் செய்து? எப்படிச் செய்து? கண்களிலிருந்து குருதி வடிவதைத் தடுக்கலாம் என எண்ணுகிறார். முடிவில் தன் கண்ணை இடந்தப்புகிறார். குருதி சிந்துவது தடைப் படுகிறது. அதைக் கண்டவுடன் கண்ணப்பர் அடையும் மகிழ்ச்சி அளவிடுதற்கரியதாகும்.

"நின்ற செங்குருதி கண்டார் நிலத்தினின் றேறப்பாய்ந்தார்.
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்துமாடி
'நன்று நான் செய்த இந்தமதி' எனநகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போலமிக்கார்."[32]

என்கிறார் சேக்கிழார். சந்தோஷத்தினால் 'பைத்தியக்காரன் போல' கண்ணப்பர் மாறிவிட்டார் என்கிறார் சேக்கிழார். ஆனால் இடக் கண்ணிலிருந்து இரத்தம் வடியத் தொடங்குகிறது. கண்ணப்பர் கலங்கவில்லை. ஏனெனில் குருதிப் பெருக்கைக் கட்டுப்படுத்த மருந்தினை அவர் ஏலவே கண்டு கொண்டார். தனது மறுகண் ணையும் இடந்தப்ப முயல்கிறார். இறைவர் தரித்திலர். 'நில்லு கண்ணப்ப', எனத் தடுக்கின்றார். ஒரு தடவையல்ல மூன்று தடவை கள் கண்ணப்பரின் பெயரை உச்சரித்துத் தடுக்கிறார் ஆண்டவன். ஆண்டவனாலேயே பெயர் சுட்டித் தடுத்தாளப்பட்ட தனிப்பெருஞ் சிறப்பு கண்ணப்பருக்குரியது. அது அவரின் உயர்ந்த அன்பின் பேறு. இதனால் சிவனின் மாறிலா வலத்தில் என்றும் நிற்கும் பெரும் பேற்றினை அவர் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. முடிவுரை

கண்ணப்பரின் அன்பின் திறன் அளவிடுவதற்கரியதொன்று. கல்வியறிவற்ற வேடர் குலத்தில் பிறந்தாலும் இறைவனிடத்தில் அன்பு செலுத்துவதில் அவர் உச்சநிலையில் நின்றார். தனது உடல், பொருள், ஆவியனைத்தையும் சிவார்ப்பிதம் செய்து இறைமயமாகி நின்றவர் அவர். தன்னைப் பற்றிச் சிந்திக்காது தடுத்தாட்கொண்ட தலைவனான சிவனையே சிந்தித்தபடி வாழ்ந்தார். தனது பசி, தூக்கம் உடல் களைப்பு எல்லாம் மறந்தார். இறைவன் மீது உன்மத்த அன்பு மேலிட வாழ்ந்தார். இதனாலேதான் ஆறு நாட்களிலேயே சிவப்பேறு கிடைக்குப் பேற்றினைப் பெற்றுக்கொண்டார். கண்ணப்பரின் அன்பினை தம்முடன் ஒப்பிட்டு நோக்கிய நாயன்மார்கள் அந்த அன்பிற்குத் தம் அன்பு எள்ளவும் இணையில்லையெனச் சுட்டுவதை நோக்கும்போது கண்ணப்பரின் அன்பின் தன்மை இன்னும் வெளிப்பட்டுநிற்கிறது. சேக்கிழார் குறிப்பிடுவது போல கண்ணப்பர் ஓர் அன்புப் பிழம்பே.

### அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் : 73.
2. திருக்குறள் : 71.
3. கந்தையா, மு., அரியவும் பெரியவும், துர்க்காதேவி தேவஸ்தான வெளியீடு, தெல்லிப்பழை, 1984, பக். 3.4.
4. கந்தையா, மு., 1984, பக். 2-3.
5. ஆறுமுகநாவலர், பெரியபுராண சூசனம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1949, ப. 85.
6. திருவாசகம், திருக்கோத்தும்பி, 04.
7. கந்தையா, மு., 1984, ப. 67.
8. திருக்களிற்றுப்படியார்: 51.
9. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 05.
10. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 96
11. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 100.
13. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 102.
14. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 103.
15. பகவத்கீதை, அத்தியாயம் 18, சுலோகம் 66.
16. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 104.
17. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 105.
18. ஆறாந் திருமுறை, திருவாரூர்த் திருத்தாண்டகம் 07.
19. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 106.
20. திருவாசகம், திருச்சதகம், 01.
21. திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம், திருவங்கமாலை, 12.
22. திருவாசகம், பிடித்தபத்து, 9.
23. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 106.
24. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 154.
25. ஆறுமுகநாவலர், 1949, ப. 90.
26. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 110.
27. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 116.
28. பெரியபுராணம், கண்ணபநாயனார் புராணம், 112.
29. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், பெருமாள் திருமொழி, 9ஆம் திருமொழி, 04.
30. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 157.
31. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 174.
32. பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம், 179.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# கண்ணப்பநாயனார் புகட்டும் வாழ்வியல் பண்பாடு

கலாநிதி கலைவாணி இராமநாதன்

பக்திநெறி பற்றி எடுத்துக் கூறும் சைவ இலக்கியங்களில் பெரிய புராணம் சிறப்பானது. 'பக்திச் சுவை நனி சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைச் சான்றோரே விதந்து போற்றியுள்ளனர். அத்தகு பெருமைபெற்ற சைவ இலக்கியம் சேக்கிழாரது பெரியபுராணம். அறுபத்து மூவர் மெய்யடியார் வாயிலாக சேக்கிழார்காட்டும் சைவ வாழ்வியற் கலாச்சாரம் இலகுவில் எழுத்தில் அடக்க முடியாதது. அடியார்களது வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளின் வாயிலாக அக்காலத்து சமுதாய விழுமியங்களையும் சைவக் குடும்பங்கள் போற்றும் சைவநெறி சார்ந்த வாழ்வியற் பண்பாட்டுக் கோலங்களை யும் ஒவ்வோர் அடியவரதும் வாழ்வியற் பண்பாடு மூலம் பன்முக பரிணாமக் கோணங்களில் காட்டுவது அருமையான யுத்தியாகும். சேக்கிழார் ஏனைய புலவர்களில் சிலரைப் போல இருந்த இடத்தி லிருந்து பாடியவரல்ல. தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து கல்வெட்டு கள், அரசர், குடிமக்கள் போன்றோரது ஆவணங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்பதனை அன்னார் காட்டும் தமிழ்ச் சமுதாய அமைப்பு முறையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

### அறிமுகம்

எந்தவொரு காப்பியமும் சமூகப் பண்பாட்டு வாழ்வியலைச் சித்தரிப் பதாக அமைய வேண்டும். 'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்பதனை சேக்கிழார் தனது நூலிலே நன்கு படம் பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளார். அக்காப்பியம் எழுதும் காலம் நிலவியிருந்த சமூக அநீதிகளைக் கண்டித்து எதிர்நீச்சல் போடும் துணிவும் திறனும் சேக்கிழாருக்கு இருந்தமையினை அவரது பெரியபுராணக் காவியம் நன்கு புலப்படுத்தியுள்ளது. சாதி பேதம், பொருளியல் ஏற்றத்தாழ்வுகள், ஆண்டான் அடிமைச் சமூக அமைப்புமுறை நிலவியிருந்ததொரு காலமாக சேக்கிழார் வாழ்ந்த காலம் காணப்பட்டது. முடிந்தவரை சைவ வாழ்வியல் மரபுகட்கு மாறுபடாமல் அக்கால சமூகத்தை சைவப் பண்பாட்டில் - வழிபாட்டிலே - பக்தி நெறியிலே நிலைபெறச் செய்வதற்கு அன்னார் மேற்கொண்டிருந்த முயற்சிகளை ஒவ்வோர் அடியாரது வாழ்வியல் கூறும் முறையிலிருந்தும் அறிய முடிகின்றது.

அக்காலத்துச் சமுதாய ஒழுகலாறுகளையும், சமூகத் தொண்டினையும் சைவ நன்னெறியினைக் காத்து நிலைபெறச் செய்ய அடியார்கள் மேற்கொண்ட முயற்சிகளையும், தனித் தன்மையினையும். செயற்கரிய செயல்கள் மூலம் அன்பினால் - பக்தி என்னும் பேரன்பு நெறியினால் அவர்கள் ஆற்றிய செயற்கரிய செயல்களையும், சாதனைகளையும், உள்ளம் நெக்குருகுமாறு எடுத்துக்கூறும் பாங்கு, ஊற்றெடுக்கும் எளிமையும், இனிமையும், கனிவும் பெறுதற்கரிய சைவவாழ்வியலின் அற்புதங்களை அக்கால சமுதாயத்தில் நிலை பெறச் செய்வதாகும். பெரியபுராணத்தின் பணி அளவிடற்கரியது. சமூகத்தின் தகுதிப்பாடு பற்றிக் கூறும் போதும் தமது காலத்தில் தமிழகத்தில் கால்கொண்டு விட்ட சாதிப்பாகுபாடுகளையும், அவற்றினைக் கடிந்து கூறாமல் ஒன்றிலொன்று உள்ளம் கலந்து அன்பு நெறியால் இணைந்து உயர்வற உயர்ந்த ஒழுக்கத்தில் கலக்கச் செய்து சாதி, இன வேற்றுமைகளையும் காட்டும் பாங்கு, அதன்மூலம் சைவ வாழ்வியல் உணர்த்தும் பக்திநெறி சமத்துவமான சமூகக் கட்டமைப்பு என்பதனை நோகாமல் எடுத்துரைக்கும் பாங்கு - என்பவற்றில் சேக்கிழாரின் புலமைநுட்பம் தனித்தன்மை வாய்ந்தது.

இத்தகைய சைவ கலாச்சார மறுமலர்ச்சி ஒன்றினை அடியார்களது வாழ்வியல் நெறிகள் மூலமாக சமுதாயத்தில் எளிதாக மாற்றியமைத்துப் பக்தி நெறி மூலம் பெரும் புரட்சியையும் சமுதாய சீர்திருத்த சிந்தனைகளையும் சூக்குமாக எடுத்து உரைத்தமையினை கண்ணப்பர், இறையனார், திருநீலகண்டர், மெய்ப்பொருள் நாயனார், திருக்குறிப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர், சாக்கிய நாயனார், சிறுத்தொண்டர், என்றிவ்வாறு பல்வேறுபட்ட சாதி, அமைப்புக்கள், குடும்பச் சூழல்கள், அரச நடைமுறைகள் என்றிவ்வாறு பெரியபுராணம் அக்கால சைவ வாழ்வியலில் தனித்துவமான பண்புகளை வெளிச்சம் போட்டு அடையாளப்படுத்தியுள்ளது. ஆன்மீக நாட்டத்திற்கும் தேடலுக்கு உள்ள மார்க்கங்களில் பக்தி என்னும் 'செயல்திறனை' வெளிப்படுத்தும் நிலையில் யோகமாகின்றது என்பதனை அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். தனது இஷ்ட தெய்வத்திடம் உண்மையான ஆழமான தூய்மையான விஸ்வாசத்துடன் அன்பு செலுத்தும் போது எவரும் விடுதலை அல்லது பேரானந்த நிலையினை அடையலாம். தத்துவம் - தர்க்க வாதங்களில் சிக்கிக்கொள்ளத் தேவையில்லை. உடலையும் மனதையும் கருவியாகக் கொண்டு கடும் பயிற்சிகளின்றியே இறைவனது உலகினை அடைய முடியும். இவ்வழிமுறையிலேயே கண்ணப்பரும் கையாண்டு எல்லையில்லாத ஆனந்தப் பேற்றினைப் பெற்றார்.

**திண்ணனாரின் பக்தியும் அன்புடைமையும்**

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்' என்ற கூற்று - 'அன்பே சிவமாவது அன்புடையார் நெறி' என்பதை திருமந்திரம் எடுத்துக் காட்டியது. கண்ணப்பநாயனார் அன்பு - அறிவு என்பனவற்றின் வடிவமானவர். பொத்தப்பி நாட்டிலுள்ள வேடுவ அரசன் நாகன் - தத்தை என்போரின் அருமருந்தன்ன புதல்வர். திண்மையான உடலும் மனமும் பெற்றிருந்ததனால் 'திண்ணனார்' என்னும் இயற்பெயர் பெற்றார் ஆகலாம். திண்ணார் நாகன், காடன் என்னும் நண்பர்கள் குழு வேடுவ சேனைகளுடன் வேட்டைக்குப் புறப்படுவார். வேட்டை யாடுவதிலும் சில ஒழுங்கு நியதிகள் உள்ளன. கர்ப்பமுற்றிருக்கும் பிராணிகளையும். குட்டிகளுடன் இருக்கும் விலங்குகளையும் கொல்லக்கூடாது என்னும் யுத்ததருமம் சார்ந்த வாழ்வியலை சேக்கிழார் கண்ணப்ப நாயனார் வாழ்க்கைநெறி மூலம் கூறுவது இங்கு மனம் கொள்ளத்தக்கது. இவ்வாறு வேட்டையாடச் செல்லும் நாட்களில் ஐந்தாம் நாள் காட்டுப் பன்றி ஒன்று திண்ணனார் வழியில் குறுக்கிட்டது. அதனை இலக்கு வைத்து அடிக்க முயலும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணனார்க்கு அகப்படாது இலக்குக் கடந்து தப்பிச் சென்றது. இராமனுக்கு அகப்படாது தப்பிச் சென்ற மானைப் போல நீண்டதூரம் காட்டுவழியே ஓடி குடுமித் தேவர் இருக்கும் மலைச்சாரலை அடைந்து களைத்துப் போய் நின்றதை பின், அதனுடன் போராடித் திண்ணனார் வென்றார்.

உச்சிவேளையில் பசியும் தாகமும் அலைக்கழித்த போது பொன்முகலியாறு அவர்களது தாகம் தீர்த்து உதவியது. திருக்காளத்தி மலையில் உள்ள குடுமித் தேவரை தரிசிப்பதற்கு திண்ணனாரின் உள்ளம் அவரை அறியாமலே ஈர்ப்பினை ஏற்படுத்தியது. தன்னைத் தரிசிக்க வரும் அன்பரை தேவதூதர்கள், துந்துபிகள் முழங்கி வரவேற்றனர். மனதிற்கினிய இயற்கை காட்சிகளும் மலைக்குன்றும் அங்கு நிழல் தரும் மரத்தடியில் சிவலிங்க வடிவிலே எழுந்தருளி யிருக்கும் இறைவனைக் கண்ணுற்றதும் கண்களில் நீர் பெருகி ஓடிவந்து நீண்டநாள் பிரிந்து விட்ட உறவினைச் சந்திப்பது போன்ற உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டு திண்ணனார் இறைவனைக் கட்டித் தழுவி ஆனந்தம் அடைந்தார். மகாதேவனை அணுகுமுன்னரே அவரது உடல் அன்புமயமான உணர்வினால் ஈர்க்கப்பட்டது. இறைவனையும் மனித உணர்வுகட்கு உட்பட்டவராக அன்பினால் நினைந்து அவரது பசியாற்ற வேண்டும். அவருக்குத் துணையிருக்க வேண்டும். அவரது திருவடிக்கு சேவை செய்வதே பக்திநெறி என்பதனைக் கண்ணப்பர் தமது அன்புநிலையால் பிறருக்கும் உணர்த் தினார். பேரன்பு தலைப்பட்ட நிலையிலே திண்ணனார் பதம் செய்து தான் சுவைத்து எடுத்த உணவினை இலையிலும், சூடுவதற்கான மலர்களைத் தம் தலையிலும், திருமஞ்சனத்திற்கான நீரைத் தனது வாயிலும் கொண்டு சென்று குடுமித் தேவரை நீராட்டியும், அபிஷேகித்தும், மலர் சூட்டி மாமிச அமுது படைத்தும் பூசித்து வந்தார்.

அதேசமயம் மறுநாள் காலை திண்ணனார் பெருமானுக்கு உணவு எடுத்து வரச் செல்லும் போது சிவகோசாச்சாரியார் என்ற அந்தணரும் வழமைபோல தமது பூசையினை நிறைவேற்றும் பொருட்டு மலைக்குச் சென்றார். அவரது பார்வையில் இறைவன் சன்னிதானம் அனாசாரத்திற்கிடமானதாக எண்ணி மனம் வருந்தினார். காட்டுப் பூக்களையும் மாமிசத்தையும் அகற்றிவிட்டு இறைவனுக்கு வேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களை உச்சரித்துப் புனித நீராட்டி அர்ச்சித்து நைவேத்தியமும் படைத்து வழிபட்டுச் சென்றார். மறுநாள் சென்ற போதும் திண்ணனாரின் பூசை முறையால் மீண்டும் வருந்தி இறைவா! இவ் அலங்கோலந்தை எவ்வாறு சகிக்கின்றாய்? யார் இப்படி சன்னி தானத்தை அசுத்தம் செய்கின்றார்கள்? எனக் கதறி அழுது வேண்டினார். அவனை நீ நேரில் கண்டால்தான் அவனது அன்பினை உணர முடியும். அவன் உறிஞ்சி வந்து என்மீது உமிழும் பொன்முகலியாற்று நீர் வேதமந்திர அபிஷேகத்துக்கும் மேலான குளிர்ச்சியாயுள்ளது, தலையில் வைத்து எடுத்து வந்து எனக்குச் சொரியும் காட்டுப் பூக்கள் ரத்தின மணிகட்கும் மேலானவை, அவன் உண்ட பின்பு எனக்குப் படைக்கும் மாமிசமோ எத்தனையோ யாகங்களில் இடப்படும் ஹவிஸைக் காட்டிலும் உன்னதமானதாக இருக்கின்றது. நான் வேறு - தான் வேறு என்ற எண்ணமின்றி என்னையும் தானாகப் பாவித்து காட்டு விலங்குகளால் எனக்குத் தீங்கு நேருமென எண்ணி கண்ணு றங்காது இரவிலே காவல் செய்கிறான். அவன் என்னுடன் பேசும் வார்த்தைகளோ வேதமந்திரங்களை விட எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நாளை உன் வழிபாட்டின் பின் ஒளிந்திருந்து கவனித் தாயானால் அவன் என்னிடம் கொண்டிருக்கும் அன்பின் ஆழத்தினை உணர்ந்து கொள்வாய்?" எனக் கனவிலே அந்தணருக்குக் கூறி மறைந்தார்.

"அவனுடைய வடிவெலாம் நம்பகல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறியென்றருளினார்."

(பெரியபுராணம், கண்ணப்பநாயனார் புராணம்)

ஐந்துநாள் பூசைகள் முடித்து ஆறாம் நாள் பகல்நேரம் வந்ததும் சிவகோரியார் தமது பூசையை முடித்து விட்டு ஒரு பக்கத்தில் மறைந்து கொண்டார். வேட்டையை முடித்துக் கொண்டு மாமிசத் துடன், பூக்களையும் கொண்டு திண்ணனார் புறப்பட்டார். வழியில் அபச குனங்களைக் கண்டார். ஐயனுக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ என பதறிய படி வேகமாக வந்தார். இறைவனது வலக்கண்ணிலிருந்து குருதி வடிவதைக் கண்டதும் பதறி துடித்துப் பதைபதைத்து அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிங்கும் ஓடி மூலிகை தேடி மருந்தாக்கி கண்களில் அப்பியும் குருதி நிற்கவில்லை. 'வந்தவர் குருதி கண்டார் மயங்கினார்' 'மீண்டும் கட்டிக் கொண்டு கதறினார்' மருந்து வேலை செய்யவில்லை என்றறிந்ததும்

"உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு - ஊனென்றும்
உரை கண்டார்" என

(பெரியபுராணம் கண் - புராணம்)

முன்னோர் மொழிந்தது கண்டு ஊனுக்கு ஊன்தான் மருந்து என்றறிந்தபின் சற்றும் தயங்காது தனது வலது கண்ணை இடந்தப்பியதும் குருதி வழிதல் நின்றது. ஆனால் ஈசனின் இடது கண்ணிலிருந்து குருதி பொங்கியது.

மற்றைக் கண்ணும் குருதி பொங்க - மீண்டும்
மற்று அதனுக்கஞ்சேன் மருந்துகைக் கண்டேன்
இன்னும் உண்டொருகண் இடந்தப்பி
ஒழிவேன்...............

(பெரியபுராணம் கண் - புராணம்)

என்று தனது இடதுகாலை திருக்காளத்திநாதர் திருக்கண்ணில் ஊன்றி தனது இடது கண்ணனைத் தோண்ட முற்பட்டதும் ஈசன் தனது திருக்கரத்தால் பிடித்துத் தடுத்து தமக்கு வலப்பக்கத்தில் இருக்குமாறு அருள்புரிந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இது கண்ட சிவகோசரி யாரும் திண்ணனாரது அன்பின் ஆழத்தையும் பெருமையையும் ஈச னாரது பெரும் கருணையையும் தமது நெஞ்சில் இருத்தி இனிதே ஆழ்ந்து போனார். இந்த நிகழ்விலிருந்து உலகிலே முதல் முதன் கண்தானம் (First Eye Doner) செய்து காட்டியவர் கண்ணப்பர் என்பதும் பெறப்படும்.

### வாழ்வியற் பண்பாடு

மேற்குறித்த கண்ணப்பரது வரலாற்றிலே சைவமக்கட்கான அருமையான வாழ்வியற் செய்திகள் புதையுண்டு கிடக்கின்றன. சைவவாழ்விலே அனைவரும் இறைவனை நம்பி அவனது திருவருளில் நம்பிக்கை பூண்டு ஒழுகுதல், அன்புநெறி - பக்தி நெறி; இறைவனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் செய்யும் பூசை வழிபாடு, தொண்டு நெறி, அக்கால சமுதாய வாழ்விலே காணப்பட்ட சாதிமுறைமைகள், வழிபாட்டு நெறிகளிலும் ஆகமம் சார்ந்த வழிபாட்டு நெறி - ஆகமம் சாராத வழிபாட்டு நெறி கள், எனப் பல்வேறு 'வாழ்வியல் பண்பாடுகள் பெரியபுராணத்தில் கண்ணப்பர் வரலாற்றினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன. அதிலும் வேடுவச் சாதியினரின் வழிபாட்டு முறைகள், அரசியல் நீதிகள், அந்தணக் குலத்தவரின் ஆகம விதிக்கமைந்த பூசைக்கிரமங்கள் யாவும் சேக்கிழாரால் நோகாமல் எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பானது. அன்பு நெறியிலே விதிமார்க்கம், பக்தி மார்க்கம் என்னும், வழிகளில் தொன்றுதொட்டே இறைவனை வழிபடும் மார்க்கம் உண்டென்பது இவற்றால் பெறப்படும். விதிமார்க்கம் அல்லது ஆகம மார்க்கம் அர்ச்சனை அபிஷேகம், அலங்காரம், வழிபாடு அவ்வவ் மந்திர முறைகட்கேற்ப ஆகமங்களில் விதிமுறை ஆகமவிதிப்படி அமையும் வழிபாட்டு நெறியாகும். "எய்தரிய சீர் ஆகமத்தில் இயம்பிய பூச னைக்கேற்ப வழிபாடு செய்து வரும் அடியவர் - அந்தணர் தவமுடைய முனிவர்" சிவகோசரியார் எனவும் திண்ணனார் பூசையினை

"தீமையென அதுநீக்கி செப்பரிய ஆகம விதியால்
ஆமுறையில் அர்ச்சனை செய்து இந்நெறி ஒழுகுவார்"

என அந்தணரது ஆகமம்சார் வழிபாட்டு நெறியினை காட்டியதும் பெரியபுராணம்.

திண்ணனாரின் அன்பிலான பூசையை விளக்க வரும்போது

அந்தணர் பூசையினை முன்போலகற்றியபின்
முந்தை முறை தம்முடைய பூசையின் செயல் முடிப்பான்

எனவும்

"இறைச்சியமுது அடியேனுக்குச் சுவை கண்டேன்
தேனும் உடன் கலந்து இது தித்திக்கும் என மொழிந்தார்."
(பெரியபுராணம் கண் - புராணம்)

என வரும் பெரிய புராண வரிகளிலும் கண்ணப்பரின் ஆகமம் சாரா வழிபாட்டு நெறியினைப் போற்றும் செய்தி இடம்பெற்றுள்ளது.

அந்தணனார் திண்ணனாரின் ஆகமவிதிக்குப் புறம்பான பூசையை விலக்க வேண்டுமென வேண்டுவதும் இறைவனோ அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையினை உணர்த்துவதுடன் அவரது குலமரபின்படி அவரது வழிபாடு செய்யப்பட்டமையினையும் அறிவிப்பதாயுள்ளது. திண்ணனாரின் மனதிலே சிவமணம் பூத்திருந்தது. 'பூவினிற் கந்தம் பொருந்தியவாறு சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' போல பக்தியில் உயர்ந்து நின்றமை புலனாகின்றது. 'கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல - சிறந்தடியார் சிந்தனையில் தேனூறி நின்ற' நிலையினை கண்ணப்பர் காட்டும் ஆகமம் சாரா வாழ்வியல் வழிபாடு தெளிவாக்கியது. கண்ணப்பரின் அன்புநெறி என்னும் பக்தி நிலைக்கு எவரும் இணையாக முடியாது என்ற செய்தியையும் அவரது பக்தி மாண்பினை எடுத்துக் காட்டும் அடியவர்கள் செய்திகள் பதிவு செய்துள்ளனர். 'கண்ணப்ப நிற்க' என மூன்று தடவை இறைவனால் அவர் ஆட்கொள்ளப்பட்டதனை,

மற்றைக் கண்ணிலும் வருவக்கணை மடுத்தலும்
நில்லுகண்ணப்ப, நில்லு கண்ணப்ப என
அன்புடைத் தோன்றல் 'நில்ல கண்ணப்ப' - என்று
இன்னுரை அதனொடும் ........................ (11ம் திருமுறை)

என நக்கீரர் தேவநாயனார் சிறப்பித்துள்ளமை எடுத்துக் காட்டியது.

ஆதிசங்கர பகவானும் நாயன்மார்களில் சம்பந்தர், சண்டேசுரர், சாக்யநாயனார், சிறுத்தொண்டர், கண்ணப்பர், சுந்தரர், அப்பர் சுவாமிகள் போன்றோரின் பாடல்களையும், பக்தித் திறனையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது சிவானந்த லகரி, சௌந்தர்ய லகரி என்னும் நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனத்திற்குரியது. இவற்றிலிருந்து சாதிபேதமற்ற சைவநெறி பக்தி இயக்கத்தினால் தமிழகமெங்கும் பெருவழக்கான தகவலையும் பெரியபுராணத்தில் காணமுடியும். 'சாத்திரம் பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்' என சாடியுள்ளமையும் சமத்துவமான சமூக நீதியாக தேவையை உணர்த்தியது. திருநீலகண்ட யாழ்ப்பாணரை வைத்தும், நந்தனார் என்னும் திருநாளைப் போவோரை அழைத்தும் சேக்கிழார் ஆலயப் பிரவேச நிகழ்வினை அன்றே ஏற்படுத்திய தன்மூலம் பக்தி நெறியினாலும் சமதாய சீர்திருத்தம் மேற்கொள்ள முடியும் என நிரூபணம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடைமையினால் மிகப் பெரும் சமத்துவத்தை நிலை நாட்டலாம் என்பதனை வேடுவ குலத்து கண்ணப்பர் வாழ்வியல் மூலமும் பெரியபுராணம் சாதித்தமை சிறப்பான அம்சமாகும்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
.......................... வான எனற வான் கருணை"

(திருக்கோத்தும்பி - 4)

என்னும் மணிவாசகரின் வேடுவர் என விலக்காது கண்ணப்பரின் அன்பு நிலையினை போற்றத் தவறில்லை. கண்ணப்பர், நந்தனார் போன்ற கீழ் குலப் பிறப்பாளர்களையும் அந்தண குலத்திற்கும் மேலானவர்களாகக் காட்டிய சேக்கிழாரின் சமூகச் சீர்திருத்தம் காந்தியடிகள் காட்டிய, தீண்டாமை ஒழிப்பிற்கு முன்னோடியாக விளங்கும் வாழ்வியற் செய்தியாகும். எனவே பக்திநெறி சேவை நெறியாக - அன்பு நெறியாக விளங்கவும் சைவ மெய்யடியார்கள் பாடுபட்டுள்ளனர். அதனால்தான் 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி - வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என அவர்களைச் சேக்கிழார் போற்றிப் பரவினார்.

"தொண்டு செய்து நாஃறில் கண்ணிடந்து
அப்ப வல்லேன் அல்லேன்"

எனப் பட்டினத்தடிகளும் கண்ணப்பரது அன்புநெறி தொண்டு நெறியின் மாண்பெனச் சாற்றியமையும் காணலாம்.

**கண்ணப்பரும் அர்ச்சுனனும்**

அன்பின் வடிவமாக விளங்கும் கண்ணப்பநாயனார் முற்பிறப்பில் அர்ச்சுனனாக இருந்தவர் எனவும் சில மரபுச் செய்திகள் கூறியுள்ளன. சிவபக்தனான அர்ச்சுனன் பாரதப் போரிலே துரியோதனாதியரை வெல்லுவதற்குப் பாசுபதாஸ்த்திரம் வேண்டிக் காட்டிலே ஒற்றைக் காலில் நின்று கரங்களை உயர்த்திக் கடும் தவம் மேற்கொண்டவன். இதனை அறிந்த துரியோதனன் இராட்சதன் ஒருவனைப் பன்றி வடிவிலே ஏவினான். இதனை அறிந்த சிவனும் உமையும் வேடுவன் வேடுவிச்சியாக வேடம் பூண்டு அவ்விடம் வந்தனர். பன்றியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வதில் சிவனுக்கும் அர்ச்சுனனுக்கும் போர் ஏற்பட்டது. இறுதியில் இறைவன் தன்னை வெளிப்படுத்தி அர்ச்சுனனின் விரத்தைப் பாராட்டி பாசுபத அஸ்த்திரத்தை வழங்கிச் சென்றார் என்பது பாரதக் கதையாகும். 'வேடுவனாக வந்த என்னை இகழ்ந்தமையால் அடுத்த பிறப்பில் வேடுவனாகப் பிறந்து என்னை அடைவாய்' என இறைவன் வரமளித்தார் எனவும் அவ்வாறே அர்ச்சுனன் கண்ணப்பராக வேடுவ குலத்தில் பிறந்து ஈசனை அடைந்து மோட்சநிலை எய்தினான் ஒரு மறைவான வரலாற்றுச் செய்தியாக பேசப்படுகின்றது.

ஏனெனில் கோணமி குடுமித் தேவர் இருப்பார் கும்பிடலாம் என நாணன் உரைத்ததும்

"முன்செய்த தவத்தின் ஈட்டம் - முடிவிலா
இன்பமாக அன்பினை எடுத்துக் காட்ட............"

(பெரியபுராணம் - 753)

என்ற இறைவனைக் காணும் வேட்டை திண்ணாரிடத்தில் பெருகியது. திண்ணாராகப் பிறந்த பின்னும் முற்பிறப்பின் தொடர்ச்சியோ யாதோ - அவரையும் பன்றி ஒன்றுதான் இறைவனிடம் அழைத்துச் செல்லக் காரணமானது. இறைதரிசனம் பெற்றதும் இருவினைகள் விலக - சஞ்சித வினை முழுவதும் முன்செய்த தவப் பயனாய் மாற - பேரன்பு பூண்டு நிற்றலில் 'பொருவில் அன்புருவமாயினர்' என்கிறார் சேக்கிழார்.

ஏகநாயகனைக் கண்டார் எழுந்த பேருவகை
அன்பின் வேகமானது மேற் செல்ல.........
வேகமாய் ஓடிச் சென்று தழுவினார்
மோந்து நின்றார். (பெரியபுராணம் - 754)

என்ற பாடலிலும் அர்ச்சுனனாக இருந்து செய்த தவத்தின் பயனாக திண்ணார் என்னும் வேடுவப் பிறப்பில் இறைவனது வரத்தின்படி மிகச் சுலபமாக அன்புநெறி ஒன்றினாலேயே ஆறுநாட்களில் பேரின்ப வீட்டுநிலை அடைந்தார் என்ற செய்தியும் மறைமுகமாகச் சுட்டப் பட்டிருக்கிறதெனலாம். எனவே பக்தி வழியிலே கிரியா மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கிடையாது என்பதும் இதனாற் பெறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணப்பர் வாழ்வியல் உணர்த்தும் 'சைவநெறி'**

கண்ணப்பர் காட்டும் வாழ்வியற் பண்பாடு சைவநெறிக்கு உகந்ததா என்ற சர்ச்சைகள் அறிஞர் மத்தியில் ஆஸ்திக மட்டங்களிலும் பேசப்படுகின்றது. 'சைவம்' என்பதனை பொருள் இன்று உணவுப் பாகுபாடு மட்டத்திலே மட்டும் கைக்கொள்ளப் படுவதனால்தான் இந்த சந்தேகம் எழுகின்றது. திருமணம், கொண்டாட்டங்கள். பிறந்தநாள் விழா, கல்விச்சாலைகளதும் பொது நிறுவனங்களதும் விருந்துபசார நிகழ்விலே கலந்து கொள்ளச் செல்வோர் சிலர் சைவ உணவு உண்பவராகவும் சிலர் அசைவ உணவு உண்பவராகவு மிருப்பதால் அழைப்பார்கள். அவர்களை நோக்கி நீங்கள் (Veg or Non Veg) சைவமா? அசைவமா, எனக் கேட்கும் போது மட்டும் 'சைவம்' என்ற சொல் பாவனைக்குவரும். அவ்விடத்தில் உணவு பற்றிய எண்ணம் இருக்குமே தவிர ஆன்மீக சிந்தனை எழுவதாகக் கூறுவது கடினம். 'சைவம்' என்பது உணவில் மட்டுமல்ல சகல துறைகளை யும் அதன் பொருள் ஊடுருவி நிற்கின்றது. திருமூலர் 'சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்' என மொழிந்து சைவம் என்றால் சிவ வழிபாட்டினை உடையவர் என விளக்கினார். அத்துடன் நில்லாது 'சிவம் என்பது அன்பு நெறி' எனவும் அதனால் அறிவு குறைந்தோரே 'அன்பும் சிவமும் வேறு' எனச் சிந்திப்பர் எனவும் தெளிவுபடுத் தினார்.

கண்ணப்பர் அசைவ உணவு படைத்ததினால் இது இறைவனுக்குப் படைக்கலாமா? அவரது வாழ்வியலைச் 'சைவம் நெறி எனலாமா? என்ற தர்க்கங்கள் பலவிதம். அன்புநெறிதான் 'சைவம்' என்று திருமந்திரம் கூறுவதை ஏற்பதனால் இத்தகைய தர்க்கவாதங்கட்கு இடமிருக்காது. ஏனெனில் உணவிலே மட்டும் சைவமாக இருந்து கொண்டு சிவசின்னங்கள், சைவ ஒழுக்க விழுமியங்களைப் புறக்கணிப்போரும் பலருள்ளனர். கண்ணப்பர் காட்டிய வழிபாட்டு நெறி சைவநெறி கூறும் அன்புடமையின் பாற்பட்டது என்பதனை இறைவனே தமது திருவாயால் மொழிந்தமையினை சேக்கிழார் காட்டுவர். அதுமட்டுன்றி கண்ணப்பர் மாமிச உணவை மட்டும் படைக்கவில்லை. கண்ணையும் கொடுத்தார், தன்னையும் கொடுத்த பேரன்பு நெறி கொண்டவர். இறைவனும் ஒரு சமயம் சிறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டதாகப் பெரிய புராணத்தில் காண்கின்றோம். இறைவனும் சைவமா, அசைவமா? என்ற சர்ச்சைகள் அங்கும் ஆய்விலே எழத்தான் செய்கின்றன. இது போன்ற பல அடியார்களது அன்புப் பணிகள் 'வன்பக்தி நெறியைக்' காட்டுவன என சில பிறநாட்டார் ஆய்வுகளும் கூறியிருந்தாலும் பெரிய புராணம் காட்டும் சைவம் - அன்புடமை சார்ந்த 'மென்பக்திநெறி' என்ற ஆய்வுகளும் வளர்ந்து வந்துள்ளன. இது அனுபூதிமார்களுடன் தொடர்புபட்ட விடயமாதலின் அவரவர் வாழ்வியல் அனுபவங்களைப் பொறுத்தே விளக்க விருத்திகள் அமையும்.

அன்பு நெறியாகிய - பக்தி மார்க்கத்தில் மனநிலை - உணர்வு நிலை மட்டுமே முக்கியம் என்பதனை காரைக்கால் அம்மையாரின் அன்புநிலையிலும் வைத்துச் சேக்கிழார் காட்டியுள்ளார். "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் - காதல் சிறந்து நின் திருவடியே சேர்ந்தேன்" என்னும் அம்மையாரின் பேரன்பு நிலையும் "இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்........... அறவா நீ ஆடும்போது நான் மகிழ்ந்து பாடி - உன் அடியின் கீழ் இருக்க" என்னும் அற்புதத் திருவந்தாதி அடிகள் அற்புதமான அன்பின் அற்புதத்தை விளக்குகின்றன. அன்பில்லாமல் செய்யும் கிரியைகள் பயன்தராது என நாயன்மார்களும் எடுத்துக்கூறினர்.

"பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் நாயகர் அவர் தமைநாணியே" *(அப்பர், 5.99.9)*

என்பதிலும்

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்
ஓதி அங்கம் ஆறும் உணரில் என்" ................ *(அப்பர் 5.99.4)*

என்பதிலும் கூறியது போலப் பெரியபுராண அடியார்கள் அன்பு மார்க்கம் ஒன்றினையே அழுத்தி உள்ளன்பிற்கே முக்கியத்துவமளித்துள்ள பண்புடமை இதனாற் புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

திருக்கோலங்களையும் திருவேடங்களையும் சிவனடியார் எனவே கண்டு தொழும் பண்பாடும் பெரிய புராணத்திலே உண்டு. வேடுவ குலத்திற்குரிய நடை, உடை, பாவனையில் மட்டும் அடியவர்க்கேயுரிய அன்புருவான செயல்கள் அவரை பக்தியிலும் உயர்வான பேரன்பு நிலைக்கு இட்டுச் சென்றன. மேலும் சிவ வேடம் தாங்கியவரிடம் ஏமாந்த மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாயனாரும் தமது உயிரையே சிவ வேடத்துக்காகப் பயணம் வைத்தனர். தொண்டராக - அடியவராக - அன்பராக வாழ்வது முக்கியமே தவிர வெளிவேட மல்ல. எனினும் இவர்கள் வேடத்திற்கு முக்கியமளித்தமையினையும் கண்ணப்பரும் சாக்கியரும் வேடத்திற்கு மதிப்பளிப்பதனை விட வேடத்தைப் பற்றிக் கவலைப்படாத மனப்பாங்கினராக வாழ்ந்தமையும் சைவ வாழ்வியல் பண்பாடு புலப்படுத்தும் அன்புநெறியின் ஓர் அம்சமாக இருக்கிறது.

"எந்தநெறியில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர் சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே"

(சாக்கியநாயனார் புராணம், 6)

என்ற இந்தநிலை சாக்கியநாயனார் வாழ்வினை வைத்தும் பேசப் பட்டுள்ளது. அறுபத்து மூவர் வரலாற்றினூடாகவும் சைவவாழ்வியலின் ஒவ்வோர் சிறப்பம்சங்களையும் கூறச் சேக்கிழார் தவறவில்லை. மகேஸ்வர பூசையின் சிறப்பினை இளையான்குடி நாயனாரிடத்திலும், சிவனடியார்க்கு துன்பம் செய்யலாகாது என்பதனை எறிபத்த நாயனாரிடத்தும், திருநீற்றுப் பக்திக்கு ஏனாதியும், சிவசின்னங்களில் ஒன்றான உருத்திராட்ச மகிமைக்கு உருத்திர பசுபதிநாயனாரையும், சிவனடியார் சேவைக்கு திருக்குறிப்புத் தொண்டரையும், குருபக்திக்கு குறும்பநாயனாரையும், இவ்வாறு பல்வேறு பரிமாணங்களில் வைத்து சைவப் பண்பாட்டு ஒழுக்கவியலை வாழ்ந்து காட்டிய நாயனார் மார்க்க மூலமாக உலகிலே நிலைபெறச் செய்தவர் சேக்கிழார் அடிகள். சேக்கிழாரது பாடல்களிலிருந்து கண்ணப்பரது வாழ்வியற் செய்திகட்கே இங்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளது.

"சைவ நெறியினை ஒரு நிறுவப்பட்ட சமயமாகவே (Eastabeshed) அன்றி உலகம் தழுவிய சமயநெறியாக்குவது சேக்கிழாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமாகும் என அ.ச.ஞானசம்பந்தன் கூறியிருப்பதும் மிகப் பொருத்தமானதாகும்.

"உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்"

எனத் தொடங்கினார். அவ்வாறே

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

என்று உலகம் தழுவியதாகவே சேக்கிழார் தமது பாடலின் தொடக் கத்திலும் முடிவிலும் நிறுவியுள்ளார். சைவப்பண்பாடு அறநீதி சார்ந்த ஒழுக்கவியல் பண்பாடு என்பதனை நிலைபெறச் செய்ய விரும்பும் நோக்கமும் அவர் கூறும் சைவவாழ்வியலின் மேன்மையினை மேலும் பெருமையுறச் செய்யுமாறு அமைந்துள்ளது.

**உசாவிய நூல்கள்**

பெரியபுராணம் மூலமும் உரையும், உரையாசிரியர் வி.ரி.இராமசுப்பிர மணியம்.

பெரியபுராணம் - ஓர் ஆய்வு, அ.ச. ஞானசம்பந்தன்.

பெரியபுராணம் சூசனம், (வசனம்), ஆறுமுகநாவலர்.

சேக்கிழார் இலக்கியத் திறன், டாக்டர்.சொ.பரமசிவம்.

அரியவும் பெரியவும் - (பெரியபுராணச் சிந்தனைகள்) மு. கந்தையா.

பெரியபுராணம் - அறுபத்து மூன்று நாயன்மார் சரிதம், கார்த்திகேயன்.

பதினொராம் திருமுறை, ஆறுமுகநாவலர் (பதிப்பு).

648883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், ச. லலீசன்**

சேக்கிழாரது கருத்துகளை அறியவும் உணரவும் உதவும் இத்தொகுப்பில் 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சுந்தரர், காரைக்காலம்மையார், திருநீல கண்டர், சிறுதொண்டர், கண்ணப்பர் என்னும் ஐவருடைய அன்புநெறி பற்றிக் கட்டுரையாளர்களின் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. 'பெரிய புராணம் காட்டும் இளமை' என்ற கட்டுரை பெரியபுராணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இளமை பற்றிய கருத்துக்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. புராணங்களின் கட்டமைப்புகள் பற்றிய அறிமுகம் ஏனைய கட்டுரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்யுள் நடையில் அமைந்த சேக்கிழாரின் பெரிய புராணம் என்னும் பேரிலக்கியத்தைக் கற்க இளம்தலைமுறைக்கு இத்தொகுப்பு நூல் ஒரு திறவுகோலாக அமையும்.



மனோன்மணி சண்முகதாஸ்: முன்னாள் ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஆய்வாளரும் விரிவுரையாளருமாகிய இவர் பல நூல்களை எழுதியுள்ளார். பெருந்தொகையான உலக மாநாடுகள், கருத்தரங்குகள், பணியவைகள் ஆகியனவற்றில் ஆய்வுக் கட்டுரைகள் படித்துள்ளார். 'இத்திமரத்தள்', 'ஆற்றங் கரையான்', 'சி.வை.தா. ஓர் ஆய்வு', 'குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு', 'காலம் தந்த கைவிளக்கு', 'தமிழ்த்தோணி', 'சாதியும் துடக்கும்', 'காலத்தை வென்ற பெண்கள்', 'செவிநுகர் கனிகள்' எனப் பல நூல்களை எழுதியுள்ளார்.



சந்திரமௌலீசன் லலீசன்: இவர் இலங்கைக் கல்வியாளர் சேவையைச் சேர்ந்தவர். தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணி யாற்றுகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கல்வியியல் முதுமாணி, தமிழில் முதுமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். சிறுவயது முதல் சொற்பொழிவுத்துறையில் நாட்டங் கொண்டு சமய, தமிழிலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றி வருகின்றார். இதன் பயனாய் தமிழில் முதுமாணிக் கற்கை நெறியில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் வழிகாட்டலில் 'தமிழில் பிரசங்க மரபு' என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டார். தமிழகத்தின் கோவையில் அண்மையில் இடம்பெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிலும் 'தமிழில் சொற்பொழிவு: தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆய்வேட்டைச் சமர்ப்பித்துப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

குமரன் புத்தக இல்லம்

ISBN 978-955-659-248-1

9 789556 592481

விலை ரூபா 400.00

#434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org